V44 ஓ7
N47

# பாகிஸ்தான்

## விளக்கம்

ஆசிரியர் :

எப். கே. கான் துர்ரானி

தமிழாக்கம் :

வ. மி. ஷம்சுத்தீன்

ஸ்ரீ. ரா. ஆத்மகிருஷ்ணன்

(மாஜி உதவி ஆசிரியர், "ஸைபுல் இஸ்லாம்")

வெளியிடுவோர் :

வ. மி. ஷம்சுத்தீன்

பெரிய மசூதி தெரு,

ஸ்ரீவைகுண்டம்.

# பாகிஸ்தான்

## விளக்கம்

ஆசிரியர் :

எப். கே. கான் துர்ரானி

தமிழாக்கம் :

வ. மி. ஷம்சுத்தீன்

ஸ்ரீ. ரா. ஆத்மகிருஷ்ணன்

(மாஜி உதவி ஆசிரியர், ''ஸைபுல் இஸ்லாம்'')

வெளியிடுவோர் :

**வ. மி. ஷம்சுத்தீன்**

பெரிய மசூதி தெரு,

ஸ்ரீவைகுண்டம்.

கொழும்பில் கிடைக்குமிடம் :

வ. மி. ஷம்சுத்தீன்
85, பழைய மூர் தெரு,
கொழும்பு

Printed at the Adal Padal Press, 82, Wallajah Road, Mount Road, Madras, for T. P. 207/46. D/20: 12. 1946.
1000 Copies.—7-47

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | v |
| | நான்முகம் | vii |
| 1. | தேசிய தத்துவம் | 1 |
| 2. | அன்புள்ள அண்டை வீட்டுக்காரர் | 35 |
| 3. | வேற்றுமை வித்துகள் | 60 |
| 4. | தனித் தொகுதிகள் | 104 |
| 5. | ஹிந்து தேசிய சமுதாயம் | 118 |
| 6. | காங்கிரசின் தேசியம் | 148 |
| 7. | பாகிஸ்தான் விளக்கம் | 190 |
| 8. | சாதக பாதக விளக்கவுரை | 218 |
| 9. | ஆட்சேபங்கள் | 244 |
| | அனுபந்தம் | 263 |

உங்கள் அழகை அழகு செய்ய எல். கே. எஸ்.
சுத்தப் பவுன் நகைகளையே உபயோகியுங்கள்.

NEWAND NOVEL DESIGN JEWELS
LOW MAKING CHARGES.

எல். கே. எஸ். பிரதர்ஸ்,
"மரைக்கார் ஜுவலரிமார்ட்"
(பூக்குளம் பார்க்கிற்கு எதிர்)
திருச்சினுப்பள்ளி.
தந்தி "NARAJKKAR" திருச்சி.

இலங்கைக் கிளைகள்:—

63 கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.
137 இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு.
டெலிபோன் :— 161, யாழ்ப்பாணம்.
தந்தி விலாசம்:— "JEWELLERS" யாழ்ப்பாணம்.

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள் :—

எல். கே. எஸ். பிரதர்ஸ்,
நகை வியாபாரிகள், பெரியகடை தெரு,
திருச்சினுப்பள்ளி.

எல். கே. பிரதர்ஸ்,
63, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

எல். கே. பிரதர்ஸ்,
137 இரண்டாம் குறுக்கு தெரு, கொழும்பு.

வி. எம். ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகர் தெரு, கொழும்பு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 AUG 1947
MADRAS

# முன்னுரை

**எல்லாம் வல்ல இறைவன் திருநாமத்தால்
இதனை ஆரம்பிக்கிறோம்.**

எந்த ஒரு நூல் இயற்றப்படினும், அதற்குரிய காரணங்களை விளக்கிக் கூறுமுகத்தான் முன்னுரை ஒன்று வரைவது சம்பிரதாயமாக ஆகிவிட்டது. அந்த முறையிலே "பாகிஸ்தான் விளக்கம்" என்ற இச்சிற்றேட்டின் தோற்றத்திற்குக் காரணம் என்னவென்பதை இதன் மூலாசிரியர் ஜனுப் எப். கே. துர்ரானி, தம் முகவுரையில் நன்கு விளக்கியிருக்கிறார். ஆதலால், அதைப்பற்றி மீண்டும் இங்கு விவரிக்க நாம் விரும்பவில்லை.

இன்றைய அரசியல் நிலைமையில் ஹிந்துக்களுக்குமட்டுமின்றி, முஸ்லிம்களில் சிலருக்கும்கூட பாகிஸ்தான் கோரப்படுவதேன்? கண்டனக்காரர்கள் எதிர்ப்பதன் காரணம் என்ன? என்பனபோன்ற பல விஷயங்கள் தெரியா. அவைகளை மூலநூலாசிரியர் இப்புத்தகத்தில் தெளிவுபட விளக்கியிருக்கிறார். பாகிஸ்தான் என்னும் வார்த்தைக்கு ஆங்கில வல்லோர்களும், மற்றும் பலரும் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனரெனினும், அவைகளுக்கு ஆதாரமேதுமிருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாகக் கூறுமிடத்து இந்தியாவில் முஸ்லிம் பெருமக்கள் அரசுரிமை பாராட்டும் பிரதேசமே பாகிஸ்தான் எனக் கூறுதல் பொருந்தும். எந்த ஒரு சமூகமோ, சமுதாயமோ, தனக்கென ஒரு வீடு, பிரதேசம், இருப்பிடம் எதுவுமின்றி, தனது கலை, நாகரிகம், கல்வி, விவசாயம், பொருளாதாரம் முதலிய எந்தத் துறையிலும் முன்னேற்றமடைவதென்பது முடியாத காரியம். இதன் காரணமாகவே தான் முஸ்லிம்கள் இன்று பாகிஸ்தான் வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஹிந்துப் பொதுமக்கள், தங்கள் இனத்தார்களெனக் கூறிக் கொள்ளும் தாழ்த்தப்பட்டோருக்கு ஒவ்வொரு ஊரிலும்

சேரிகள் என்னும் பெயரால் தனிப் பிரதேசத்தை ஒதுக்கி வைத்திருக்கின்றனர். இந்த நிலைமையில் 10 கோடி முஸ்லிம்களுக்கு மட்டும் ஏன் தனிப் பிரதேசம் கொடுக்க மறுக்கின்றனரென்பதுதான் விளங்கவில்லை. தாழ்த்தப்பட்டோருக்கும், முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் பன்னெடுங்காலமாக ஹிந்துப்பெரும்பான்மையினர் இழைத்து வரும் கொடுமைகளை பிர்பூர் யாதாஸ்துபோன்று பல தஸ்தாவேஜுகளில் தெளிவாகக் காணலாம். இவ்விதக் கொடுமைகளை சகித்துக்கொண்டு, பிறருக்கடிமைப்பட்டு இருக்க முஸ்லிம்கள் விரும்பவில்லை. சுதந்தரம் வேண்டுமென்பதுதான் முஸ்லிம்களின் ஒரே இலட்சியம். பாகிஸ்தான் கோரப்படுவதற்கும் இதுவே காரணம். மனிதத்தன்மையும், பட்சபாதமு மற்ற மனப்பான்மையும் கொண்ட எந்த பகுத்தறிவாளனும் இதனை மறுப்பதற்கில்லை.

இவைகளையெல்லாம் ஹிந்துப் பொதுமக்களுக்கு உணர்த்தி, நம் இலட்சியத்தில் வெற்றி காணவேண்டுமென்பதுதான் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்ட தன் இலட்சியம். நமது இம்முயற்சிக்கு இன்னும் ஊக்கமளித்து, மென்மேலும் இவ்வித நூல்களை வெளியிட நம்மை ஊக்குவிப்பது முஸ்லிம் இந்தியாவின்—குறிப்பாக தமிழ்நாட்டு முஸ்லிம்களின்—கடமையாமென்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம், தமிழாக்கத்தினர்:

| | |
|---|---|
| "டீன்ஸ் மன்ஸில்"<br>ஸ்ரீவை குண்டம்,<br>10-7-1947. | வ. மி. ஷம்சுத்தீன் சாஹிப்.<br>ஸ்ரீ ராஜ ஆத்மகிருஷ்ணன்.<br>சென்னை. |

# நான்முகம்

பாகிஸ்தான் கோரப்படுவதேன்? இதற்கான காரணங்களை—நானறிந்தமட்டில்—விளக்குவதே இப்புத்தகத்தின் இலட்சியம். இங்கு என் முஸ்லிம் வாசகர்களுக்கு மட்டும் இரண்டொரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

சுதந்தரமும், அரசாதிபத்தியமும் விடுதலைபெற்ற மக்களுக்கு ஒரு சொத்து போன்றது அடிமை மக்களுக்கோ அவை ஒரு வரப் பிரசாதம். அவர்களுக்கு மட்டுமல்ல, மானிட வர்க்கத்துக்கே இது மிகமிக அத்தியாவசியமானது. நாம் ஒரு சுதந்தர, அரசாதிபத்திய மக்களாக ஆக முயற்சி செய்யவேண்டும். இல்லாவிடில், இந்நிலவுலகில் நாம் ஒரு விஷ வட்டமாகவே இருந்துவிட நேரிடும். சுதந்தரம், அரசாதிபத்தியம் இவைகளின் கடமைகளை இஸ்லாம் மதம் நம்மீது ஏற்படுத்தியிருக்கிறது நாம் ஒரு சுதந்தர, அரசாதிபத்திய மக்களாக ஆகாதிருக்கும் வரை நாம் உண்மை முஸ்லிம்களாக முடியாது; உண்மையான முஸ்லிம் வாழ்க்கையை நாம் மேற்கொள்ள முடியாது; நம்மீது இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள கடமைகளை நிறைவேற்ற முடியாது.

நமது நம்பிக்கைகள், நம் அபிலாஷைகள் இவைகளின் திரட்சிதான் பாகிஸ்தான். நம் சமுதாய வளர்ச்சிக்கு ஒரு சந்தர்ப்பத்தையும், ஒரு மார்க்கத்தையும் அது நமக்கு அளிக்கும். இந்த சமுதாய வளர்ச்சியை, அரசியலிலும் சரி, பொருளாதாரத்திலும்சரி ஒரு பொதுவான அகில இந்திய சம்மேளனத்தில் நாம் ஒருக்காலும் பெற்றுவிடமுடியாது. இந்தப் பரிசு மகத்தானது. ஆம்......மனிதன் இன்று கண்டு வரும் கனவைவிட மகத்தானதுதான். நம்மில் ஒவ்வொருவரும் அதற்காக மாபெரும் சேவைகளையும், தியாகங்களையும் செய்யவேண்டும். இதைத்தான் அப்பரிசு நம்மிடமிருந்து கோரி நிற்கிறது. அடிமை நிலையிலுள்ள மக்

களுக்கு சுதந்தரம் பெறுவதைவிடச் சிறந்த பரிசு வேறொன்றில்லை. விடுதலை, அரசாதிபத்தியம் இவற்றைப் பெறுவதற்காக நாம் செய்யவேண்டிய தியாகங்களைப்போல் அவ்வளவு பெரிய தியாகங்கள் வேறெதற்கும் தேவையில்லை. இந்த தியாகத்துக்குத்தான் நம்மில் ஒவ்வொருவரும் தயாராயிருக்கவேண்டும்.

இந்திய முஸ்லிம்கள், எதிர்காலத்தில் பெரும் சிக்கலான போரில் ஈடுபட வேண்டியிருக்கிறது. ஆனால், மனௌ உறுதிவாய்ந்த எந்த சமுதாயத்திற்கும் எந்த போரும் அவ்வளவு பிரமாதமானதல்ல. ஒரு கூட்டத்தினரான மக்கள் ஒரு சமுதாயமாக ஆகியபின், சமுதாய அந்தஸ்திற்கவசியமான தகுதிகளைப் பெருக்கிக்கொண்டு விடுவார்களாயின், அதற்குப்பின் அவர்களுக்கு அழிவே கிடையாது. நம் இலட்சியத்தை அடைவதில் இன்று தோல்வியடைந்துவிட்டால், நாளையே வெற்றி பெற்றுவிடலாம். அப்படியே நாளையும் நாம் வெற்றி பெறவில்லையென்றாலுங்கூட நாளை மறுதினம் வெற்றிபெறலாம். நாம் ஒரு சமுதாயத்தினரென்பதை யுணர்ந்து, அதன்படி வாழ்ந்து, அதன்படியே நடப்போமாயின், எப்படியும் இறுதியில் நாம் வெற்றியடைந்தே தீருவோம். ஏனெனில், ஒரு மக்களுக்குச் சமுதாய உணர்ச்சி ஏற்பட்டுவிட்டால், அதுவே அவர்களுக்கு மகத்தான சக்தியை அளித்து விடுகிறது. இந்த சக்தி எந்த தனிப்பட்டோருக்கும் சரி, எல்லா மக்களுக்கும் சரி ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. இந்த உத்வேகம், தன்னைத்தடுக்கும் எந்த முட்டுக்கட்டையையும் இலட்சியம் செய்வதில்லை. மக்கள் முன் எதிர்படும் எல்லாத் தடங்கலையும் அழித்துவிடும்படி இந்த உத்வேகம் தூண்டிவிடுகிறது. உலகின் இதர பகுதிகளிலுள்ள முஸ்லிம்களைப் போலவே இந்திய முஸ்லிம்களும் உம்மயத்துக்கள் காலம்முதல் பல நூற்றாண்டுகளாக இலட்சிய மற்ற, சுயநலமே பெரிதாகக் கொண்ட வாழ்க்கையை நடாத்தி வந்துள்ளனர். இவையெல்லாம் இப்போது மாறவேண்டும். சுயநல இலட்சியங்களுக்குப் பதிலாக பொதுமக்களின் சேவையே மேலோங்கி

கிற்கவேண்டும். "முதலில் இஸ்லாமும், முஸ்லிம் சமுதாயமுமே. இதர விஷயங்களெல்லாம் இதற்கு அப்பாற்பட்டதுதான்". இதுதான் இன்று இங்நாட்டில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமுடையவும் சொல்லாயிருக்கவேண்டும்; செயலாக இருக்கவேண்டும்.

இந்திய முஸ்லிம்கள், ஹிந்துக்களைப்போன்றே தாங்களும் ஒரு சமுதாயத்தினரே என்பதை இப்போது உணர்ந்திருக்கிறார்களென்பது உண்மையே. பாகிஸ்தானின் உயரிய கருத்தை உணரக்கூடிய தேசிய உணர்ச்சியைப் பெற்றோர் நம்மிடையே அநேகர் இருக்கின்றனரென்பதும் உண்மைதான். இவர்கள் பெயர்கள் சரித்திரப் பிரசித்தமாகிவிடும். பாகிஸ்தானின் கருத்தை மக்கள் உணருமாறு செய்வதில் இவர்கள் வெகுவாக முயன்று வருகின்றனர். என்றாலும் இந்திய முஸ்லிம்களின் தேசியத்தன்மை பொதுவாக இன்னும் தற்காப்பின் போக்கிலேயே இருக்கிறது. முஸ்லிம்கள், தங்கள் எதிரில் ஏதோ பெரும் அழிவு காணப்படுவதாகக் கருதும்படி செய்யப்பட்டுள்ளனர். அவர்களையெல்லாம் ஒன்றாகப் பிணைத்து வைத்திருப்பது ஒருவித பயம்தான். ஆனால், என்னைப் பொறுத்த வரையில், அவர்களைப் பிடித்திருப்பது பயமுமல்ல; பாதுகாப்புவிருப்பமுமல்லவென்று கூறுவேன். ஏனெனில் பாதுகாப்பும், பயமும் நிரந்தரத்தன்மை வாய்ந்தவையல்ல. உலக வாழ்விற்கு முஸ்லிம்கள் செய்யக்கூடிய சேவைகள் ஒன்றுமில்லையா? முஸ்லிம்கள், புனித குர்ஆனின் ஆணைகளைச் சிரமேல் தாங்கி, உயரிய இலட்சியங்களின் மீதே தங்கள் தேசியத்தை நிர்மாணித்திருக்கின்றனரென்பதை நான் கூறவிரும்புகிறேன். எல்லாம்வல்ல இறைவன், இந்த மக்களை, முஸ்லிம்களை ஓர் உயரிய இலட்சியத்திற்காகவே படைத்தான். நாம் அந்த உயரிய இலட்சியம் என்னவென்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். அந்த இலட்சியத்தை மனத்துள் கொண்டு, நாம் நமது தனிப்பட்ட வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்துக் கொள்ள

வேண்டும். அதையே நம் தேசியத்தின் அஸ்திவாரமாக வும், குறிக்கோளாகவும் கொள்ளவேண்டும்.

மேற்குறிப்பிட்டவைகளில் நான் "தேசீயம்" என்னும் வார்த்தையை விஷய விளக்கத்தை முன்னிட்டே கையாண்டிருக்கிறேன். எனது முஸ்லிம் வாசகர்கள் இதைப்பற்றித் தவருகக் கருதிவிடமாட்டார்களெனக் கருதுகிறேன். இஸ்லாமிய தேசியம், இதர சமுதாய மக்களின் தேசியத்தைக் காட்டிலும் வேருனதென்பதை இந்திய முஸ்லிம்கள் இப்போது பூரணமாக உணர்ந்து விட்டனர். காலஞ்சென்ற அல்லாமா சர் முஹம்மத் இக்பால் மர்ஹூம் அவர்களின் சேவைகளே இவ்விதப் புணர்ச்சிக்குக் காரணமாகும். இதர சமுதாய மக்களிடையே தேசியமென்பது உலகின் இதர எல்லா மக்களுக்கும் எதிராக உள்ள ஒரு மக்கள் கூட்டம் என்ற பொருளில் நிலவிவருகிறது. ஒரு பிரதேசத்தினுடையவோ அல்லது ஜாதீய முறைப்படியானவோ உள்ள சமுதாயம், தன் சமுதாய எல்லையை விஸ்தரிக்கின்றதென்ருல், அது இதரர்களை அரசியலில் அடிமைப் படுத்தி, தன் சொந்த நன்மைக்காகவே அவர்களின் பொருளாதாரத்தைப் பயன் படுத்திக்கொள்வதற்கே அவ்வாறு செய்கிறது. உதாரணமாக ஹிந்துக்களின் தேசியம் என்ருல் என்ன? இந்நாட்டின் செல்வத்தைத் தங்களுக்காகவே பயன்படுத்திக் கொள்ளும் சுதந்திரமும், இதர எல்லோரையும் புறக்கணித்துவிட்டு, தங்கள் நன்மைகளுக்காகவே செலவிட்டுக் கொள்ளும் உரிமையுமிருப்பதற்காக ஹிந்துக்கள் ஒரு சுதந்தர அரசாதிபத்திய மக்களாக ஆகவேண்டும். இது தான் அவர்கள் கூறும் தேசியம். இஸ்லாமிய தேசியமோ அப்படிப்பட்டதன்று. ஒரு கூட்ட மக்கள், ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையை அனுஷ்டிக்கவேண்டும்; ஒரு குறிப்பிட்ட தெய்வீக இலட்சியங்களைப் பின்பற்றவேண்டும். அதன் (அச்சமுதாயத்தின்) எல்லைகள் விரிவுபடுத்தப்படுவதானது, இதரர்களை அரசியல் அடிமைகளாகக் குறைத்துவிடவேண்டுமென்பதல்ல; இதரர்களின் பொரு

ளாதாரத்தைத் தங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதல்ல. ஆனால், இஸ்லாமிய தேசியம் அளிக்கும் எல்லா வசதிகளுடனும், சலுகைகளுடனும் தங்களில் ஒரு பகுதியினராக வாழ அனுமதிக்கவேண்டும். இதுதான் இஸ்லாமிய தேசியமென்பது.

சமீபகாலம் வரை பாகிஸ்தான் ஆட்சிமுறை வேண்டுமென முஸ்லிம் மக்களால் வற்புறுத்தப்பட்டு வந்தது. இப்போது அதன் பொருளாதார முறைகள் விளக்கப் பட்டுவிட்டன. இந்த மக்கள் பன்னெடுங்காலமாக முதலாளித்துவ முறையான ஒரு கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்து வந்துள்ளனர். எனவே பாகிஸ்தானைத் தவிர வேறெந்த மாற்றுத் திட்டத்தையும் வகுப்பது அவர்களுக்குச் சாத்தியம் இல்லாது போய்விட்டது. ஏகாதிபத்தியமோ, தன்னை ஊன்றிக்கொள்வதற்காக பல்வேறு நலன்களைப் உற்பத்தி செய்துவிட்டது. இதையெல்லாம் வீழ்த்துவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. போல்ஷ்விக் ரஷ்யா, சம்பந்தப்பட்ட நலன்களைப் பலாத்காரத்தின்மூலம் நிர்மூலமாக்கி இப்பிரச்னையைப் தீர்த்து வைத்தது. அதே முறையை இங்கு கையாள முயற்சி செய்யப்பட்டால், ஒரு எதிர்ப்புப் புரட்சியை ஏற்படுத்திவிடும். இந்த எதிர்ப்புப் புரட்சிக்கு வெளியார்களின் ஆதரவு பெறப்படும். இவைகளால் பாகிஸ்தான் வெகு சீக்கிரத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும். மேலும் பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட ஓர் அரசாங்கம், இஸ்லாமிய அரசாங்கத்தின் அடிப்படை இலட்சியங்களையெல்லாம் வீழ்த்திவிடும். ஆதலால், பாகிஸ்தானில் பலாத்காரம் இருப்பதை நாம் விரும்பவில்லை. பாகிஸ்தான் அரசாங்கம் ஒரு புதிய உன்னதமான பொருளாதார முறையை நிர்மாணிக்க முயற்சிக்கும். ஆனல், அது பலாத்காரத்தின்மூலம் நிர்மாணிக்கப்பட முடியாது. பாகிஸ்தானில் பொருளாதார சமூக ஒழுங்கில் நாம் விரும்பும் புரட்சிகரமான மாறுதல் இதுதான். முதலாளித்துவமும், பிறரை அடக்கியாளக் கருதும் மனப்பான்மையும் அரசாங்

கத்துக்குமட்டுமின்றி, அவ்வாறு நடந்துகொள்ளும் தனிப் பட்டவர்களுக்கும், அவர்களின் மக்களுக்கும், மக்களின் மக்களுக்கும், வமிச பரம்பரைக்கும், தலைமுறை தலை முறைக்கும் தீங்கானவை யென்பதை உணரக்கூடிய அள வுக்கு பொதுமக்களுக்கு கல்வி போதிக்கப்படவேண்டும். இதுதான் நம் பாகிஸ்தானின் பிரதான புரட்சியாக இருக்க வேண்டும். இம்மாதிரியான புரட்சி நிறைவேற இன்னும் நூறு ஆண்டுகள் ஆகலாம். ஆனால், அது அமைதியான புரட்சியாக இருக்கவேண்டும். பொருளாதார முறையில் ஏதேனும் பலாத்காரப் புரட்சிக்கு முயற்சிக்கப்படுமானால், அதனால் அரசாங்கத்துக்கே பெரும் ஹானி ஏற்படும். மக்கள் மனதில் இதனால் ஏற்படும் நலன்கள் பதியாதவரை இவ்விதப் புரட்சி முயற்சி கூடாது. தனிப்பட்டோரின் வாழ்க்கை முறைக்காக இஸ்லாம் அடிகோலியுள்ள விஷயங் களும், இஸ்லாமிய அரசாங்க இலட்சியங்களும், அதன் தன்மைகளும் மக்களுக்குப் பூரணமாக போதிக்கப்பட்ட பின்னரே மேற்குறிப்பிட்ட விதமான மனமாறுதல் மக் களுக்கு ஏற்படும். இத்தகைய போதனை இப்போது முதலே ஆரம்பிக்கப்படவேண்டும். நாமனைவரும் எதிர்நோக்கி ஆவலோடு எதிர்பார்த்து நிற்கும் அந்தப் புதிய நாளின் உதயத்திற்காக மக்களை ஆயத்தப்படுவதில் காலதாமதம் ஏற் படக்கூடாது. தனிப்பட்டோர் விஷயத்திலும், அரசாங்க சம்பந்தமாகவும், இஸ்லாம் கூறும் கட்டளைகளை நம்மில் உணர்ந்தவர்கள் அனைவரும், இப்போதே அகில இந்திய முஸ்லிம் லீக் உட்பட எல்லா முஸ்லிம் ஸ்தாபனங் களுக்கும் இந்த அறிவைப் பரவச் செய்ய ஆரம்பிக்க வேண்டும்; இது விஷயமாக விரிவான, தீவிரம்வாய்ந்த பிரசாரம் செய்யவேண்டும். அமைதியும், சுமுகமும்வாய்ந்த பொருளாதாரப் புரட்சிக்கு அடிகோலுவதற்காக—புரட்சி யின் பாதையை ஏற்படுத்துவதற்காக பிரஜைகளுக்குக் கல்வியைப் போதிப்பது பாகிஸ்தான் அரசாங்கத்தின் கடமையாகி விடுமென்பது உண்மையே. ஆனால், விவாதத் திற்காக நமக்கு உடனே பாகிஸ்தான் கிடைக்கத் தவறி

விட்டதென்று வைத்துக்கொள்வோம். நாமனைவரும் ஏதோ ஒருவகையான அகில இந்திய சமஷ்டியின்கீழ் வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாக அனுமானித்துக் கொள்வோம். அவ்வாறேற்பட்டால், முஸ்லிம் மக்களின் கல்விமுறை, அதன் ஆதிக்கம் முதலியவைகள் எல்லாம் முஸ்லிம்கள் வசமே பூரணமாக இருக்கவேண்டுமென்பதே நம் குறைந்தபட்ச கோரிக்கையாக இருக்கவேண்டும். இது தான் நான் கூறும் யோசனை.

அடுத்தபடியாக பாகிஸ்தான் தனி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுவிடுமாயின், ஹிந்துஸ்தானில் முஸ்லிம்கள் இருப்பார்களல்லவா? அந்த முஸ்லிம்களுக்குப் பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டாலுங்கூட அவர்கள் ஹிந்துஸ்தானிலேயே இருக்கவேண்டும். பாகிஸ்தானின் நல்வாழ்விற்கும், பாதுகாப்புக்கும் அவர்கள் அங்கு இருக்க வேண்டுவது அத்தியாவசியமாகிறது. ஹிந்துஸ்தானிலுள்ள முஸ்லிம்களையும், பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்களையும் பரிவர்த்தனை செய்துகொள்வது பாகிஸ்தானுக்கு மட்டுமின்றி இஸ்லாத்தின் இறுதி இலட்சியத்திற்குங்கூட இடையூறு விளைவிப்பதாகும். எல்லா இந்திய முஸ்லிம் களும், அவர்கள் பாகிஸ்தானில் வசித்தாலும் சரி, ஹிந்துஸ்தானில் வசித்தாலும் சரி ஒரே சமுதாயத்தினராவர். பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்களாகிய நாம், ஹிந்துஸ்தானிலுள்ள நம் மதத்தினரை நம் உடல் உறுப்புகளில் ஒரு பாகமாகக் கருதுதல் வேண்டும்.

இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள எல்லா விஷயங்களின் பொறுப்பும் என் ஒருவனையே சாருமென்பதை இங்கு உணர வேண்டுகிறேன். இந்தப் பொறுப்பை நான் ஒருவனே ஏற்கிறேன் என்பதை உறுதிப் படுத்துவதற்காக மற்றொரு விஷயத்தையும் இங்கே கூறிவிட விரும்புகிறேன். பல்லாண்டுகளாக முஸ்லிம்லீக்கின் இலட்சியத்தைப் பலப் படுத்த என்னாலான எல்லா வகையிலும் முயன்று வந்

திருக்கிறேன். அவ்வாறே இனியும் முயன்று வருவேன். என்றாலும் நான் எந்த லீக் ஸ்தாபனத்திலும் பெயரளவில் கூட எந்த அங்கமும் வகிக்க வில்லை.

ஹிந்து மகாசபையின் இலட்சியம் "இந்தியா ஹிந்துக்களுக்கே'' என்பதே. "இந்தியா ஹிந்துக்களுக்குச் சொந்தமே யொழிய பிறரெவருடையவும் பிதுரார்ஜித சொத்தல்ல என்பதுதான் அவர்களின் இலட்சியக் கோஷம். என்னுடைய நம்பிக்கையோ அதற்கு நேர் மாறானது. இந்தியா, இஸ்லாத்தின் மூலமாக அல்லாமல் எப்போதும் ஒரு சுதந்திர நாடாக ஆகமுடியாது. இதுதான் என் மன உறுதியான நம்பிக்கை. ஹிந்து மதத்திற்கு சுமுகமான, தெளிவான அரசியல் இலட்சியங்களோ, அடிப்படைகளோ கிடையா. நவீன ஹிந்து அரசியல் இலட்சியமும், அடிப்படையும் அடியோடு தவறான வழியிலேயே வளர்ச்சி யடைந்துள்ளன. அவர்கள் ஐரோப்பிய முறையில் ஒரு அடக்கு முறையான ஜாதீய தேசியத்தையே வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் தலைவர்களும் இதன் மீதே பலமாக ஊன்றி நிற்கின்றனர். இதனால் ஜாதிப் பூசல்கள்தான் ஏற்படும். இத்தகைய மனோபாவம் ஹிந்துக்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் வரை, இந்தியாவில் உள் நாட்டு அமைதியோ, ஒற்றுமையோ ஏற்படாது. இஸ்லாத்தைத் தடை செய்ய ஹிந்துக்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் இந்தியாவின் வறுமையை அதிகரிக்கும். ஆனால் நான் ஹிந்துக்களுக்கு வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப் போவதில்லை. அவர்கள் அதை செவி கொடுத்துக் கேட்கும் நிலையில் இல்லை. என் பிரார்த்தனை யெல்லாம் என் மதத்தினரிடமே செய்யப் படுகிறது. அவர்கள்—என் மதத்தினரான முஸ்லிம்கள் எப்போதும் இந்தியாவை மறந்து விடக்கூடாது. இதுதான் என் பிரார்த்தனை.

இந்தியாவின் பூகோள ஒற்றுமை சமீப வருஷங்களாக அதிகமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. இது ஆதார

மற்ற ஒரு வாதம். ஏனெனில் அரசியல் சக்தி மாறும் போதெல்லாம் பூகோளப் படங்கள் மாற்றி மாற்றி அமைக் கப்படுகின்றன. சமுதாய எல்லைகளை மலைகளும் ஆறு களும் பிரிப்பதற்குப் பதிலாக மனிதனின் மனமே பிரித்து விடுகின்றன. ஆனால் இந்தியாவும் ஒரு பூகோள ஐக்கியமான நாடுதான் என்ற உண்மையை முஸ்லிம்கள் ஒரு நாளும் மறக்கக் கூடாது. நம் மூதாதையர்கள் தங்கள் இரத்தங்களைக் கொண்டு வாங்காத ஒரு அங்குல நிலங் கூட இந்தியாவில் கிடையாது. நம் தந்தையரின் இரத்தங் களுக்கு நாம் ஒரு நாளும் துரோகம் செய்யக் கூடாது. ஆதலால் இந்தியா முழுவதும் நம் பரம்பரைச் சொத்து. இஸ்லாத்திற்காக அது மீண்டும் ஆக்கிரமிக்கப்பட வேண் டும். இந்த ஆக்கிரமிப்பு ஆத்மார்த்த முறையில் இருக்க வேண்டும். இதனால், ஹிந்துக்கள் மீது துவேஷமோ பகைமையோ பாராட்டப் பட மாட்டாது. இந்தியாவை ஆத்மார்த்திகமாகவும், அரசியல் பூர்வமாகவும் ஐக்கியப் படுத்துவது தான் நம் இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும். இது இஸ்லாத்தின் கொடியின் கிழ் நடைபெற வேண்டும். இந்தியாவின் இறுதி அரசியல் கதிமோட்சம் இதைத் தவிர வேறு வகையில் சாத்திய மில்லை.

இது ஒரு மாபெரும் மகத்தான இலட்சியம்தான். ஆனால், மனோ உறுதி வாய்ந்த எந்த மக்களுக்கும், எத் தகைய காரியமும் கடினமானதல்ல. சுதந்திர அரசாதி பத்திய இந்தியாவின் அஸ்திவாரங்கள் ஒவ்வொரு முஸ்லி மின் ஹிருதயத்திலும் இப்போது ஊன்றப்பட வேண்டும். அநேக சமூக, ஆத்மார்த்திகப் பிணிகளுக்கு நம்மவர்களே பரம்பரை வாரிஸ்களாக இருந்து வந்துள்ளனர். இவை களை யெல்லாம் அகற்றி, முதலில் நம்முடைய வீடுகளை ஒழுங்கு படுத்திக் கொண்டு, தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் உண்மையான இஸ்லாமிய வாழ்வை நிர் மாணித்துக் கொள்ள தீவிரமாகவும், ஒழுங்காகவும் வேலை செய்ய வேண்டும். ஓர் உறுதியான பாகிஸ்தானில் அமுத

மான அரசியல் வாழ்வுக்கு இதுதான் பூர்வாங்க நிபந்தனை. இவ்வாறு செய்தால்தான் சரியான காலத்தில் ஒரு பெரிய இஸ்லாமிஸ்தானை நிர்மாணிப்பது சாத்தியமாகும்.

லாகூர்,
1943ஞு நவம்பர், 12. } எப். கே. கான் துர்ரானி.

# பாகிஸ்தான் விளக்கம்

## அத்தியாயம்—1

## தேசிய தத்துவம்

இந்திய உபகண்டத்தில் காணப்படும் பூகோள வேறு பாடு சம்பந்தமாகப் பல முறைகளில் அநேக ஆதாரங்கள் கூறப்பட்டுள்ளன. "பாகிஸ்தான்: ஒரு சமுதாயம்" என்னும் நூலாசிரியர், வடமேற் கெல்லைபுற மாகாணம், பஞ்சாப், காஷ்மீர், வட மேற்கு மாகாணங்கள், சிந்து, பலுச்சிஸ்தான் ஆகிய மாகாணங்கள் இந்தியாவின் இதர பாகங்களிலிருந்து வேறு படுத்தப் பட்டிருக்கும் பூகோள நூதன அமைப்பைத் தமது வாதத்துக்கு ஆதாரங்களாகக் காட்டுகிறார். சில மாகாணங்களில் மற்ற மாகாணங்களை விட அதிகமாக மழை பெய்கிறது. சில மாகாணங்களில் கோதுமை உணவாகக் கொள்ளப் படுகிறது. மாரிக் காற்று வீசும் பிரதேசங்களில் பயிர்கள் (விவசாயம்) அதிகரித்து மண்டி வளர்கின்றன. இதர பிரதேசங்களில் வரட்சி யாக இருக்கின்றது. வட மேற்கிலுள்ள வரண்ட பிரதே சங்கள் ஒட்டகங்களின் இயற்கையான வாசஸ்தலங்களா கும். தென்னாடு, அஸ்ஸாம், வங்காளம் முதலிய தேசங்

களின் நீர்வளம் மிக்க பூமி யானைகள் வாழத் தகுதி வாய்ந்த பிரதேசமாக விளங்குகிறது.* வட மேற்கில் வசிக்கும் ஜாதி யார் அந்த வரண்ட பிரதேசத்திற் கேற்ப வேறுபட்டே காணப்படுகின்றனர். இதர பகுதிகளில் வசிக்கும் மிருது வான கறுப்பு நிறமுள்ள மக்களுக்கு மாருக அவர்கள் இருக்கின்றனர். இந்தியாவில் அநேக ஜாதியினர் வசிக் கின்றனர். அவரவர்கள்வதியும் கடல், மலே, வனம், வனுந் திரத்திற்கேற்ப வேறுபட்டே யிருக்கின்றனர். இவை யனைத் தும் இயற்கையானவை; தவிர்க்கப்பட முடியாதவை. முஸ்லிம் இந்தியாவின் அரசியலுக்கு இவைக ளெல்லாம் அவசியமில்லே. ஏனெனில்: நாம் வட மேற்கில் வசிக்கி ரேம். பாகிஸ்தானல்லாத இதர பிரதேசங்களிலும் இந் திய முஸ்லிம்கள் வசிக்கின்றனர். அவர்கள் உடையிலும், உண்ணும் உணவிலும் நம்மிலும் வேறுபட்டே காணப் படுகின்றனர். இங்கு இந்தியாவின் இயற்கை வேறுபாடு களே முஸ்லிம் இந்தியாவின் அரசியலுக்குள் நுழைப்போ மாயின், மேற் கூறப்பட்ட பாகிஸ்தானல்லாத இதர பிரதே சங்களில் வதியும் முஸ்லிம்களே நாம் கை கழுவிவிட வேண்டி ஏற்படும். அந்த முஸ்லிம் மக்களேயும் நம்முடன் இணைந்திருப்போராகவே நாம் நடத்த வேண்டும்.

டாக்டர் பேனி பிரசாத், "கடலாலும், மலேகளாலும் இந்தியாவைப்போல் தெளிவாக தனித்து பிரிக்கப்பட்ட

---

* இந்த வாதம் ஏதோ குறைபாடுடையதாகக காணப் படு கிறது. அக்பர் மன்னர், ஒரு சமயம், மாண்டுவிலிருந்து ஆக்ரா வுக்கு திரும்பி வரும்போது, 18 யானைகளேப் பிடித்திருக்கிருர். இதிலிருந்து 16-ம்நூற்ருண்டிலேயே யானைகள் மத்திய இந்தியா வில் இருந்ததாகத் தெரிகிறது.

நாடு வேறு ஒன்றுமில்லை'' என்று கூறுகிறார்.* நான் இதை ஒப்புக் கொள்ளுகிறேன். சுலைமான் மலைகளிலிருந்து அஸ்ஸாம் குன்றுகள் வரையிலும், இமயமலை முதல் தென் கடல் வரையிலும் அநேக ஜாதிகள், சீதோஷ்ணங்கள், நீர்வளம் நிலவளம் முதலிய பலவித வேறுபாடுகளிருப்பினும், பூகோள ஐக்கியப்படி இந்தியா ஒன்றாகவே விளங்குகிறது. ஆனால், அவர் (டாக்டர் பேனி பிரசாத்), "இந்தியாவில் ஓரே ஒரு அரசியல் முறைக்குத்தான் இடமிருக்கிற தென்பதற்கு எல்லா சரித்திர ஆதாரங்களும் சான்று கூறுகின்றன'' என்று கூறுவதை மட்டும் நான் ஒப்புக் கொள்ள முடியாது. இந்தியாவின் வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி எப்பகுதியிலேனும் ஒரு பலம் வாய்ந்த அரசாங்கம் தோன்றுமாயின், அவ்வரசாங்கம் இவ்வுபகண்டத்தின் முழுப் பிரதேசத்திலும் தன் பலத்தை விஸ்தரித்துக் கொள்ள முயற்சித்தது என்பதில் சந்தேக மில்லை. மௌரியர்களும், குப்தர்களும், தங்கள் ஆதிக்கத்தை தென் திசை வரை பரவச் செய்ய முயற்சித்தனர். ஆந்திரர்களும், சோழர்களும் வடதிசையில் தங்கள் ஆட்சியை பரப்ப முயற்சித்தனர். முஸ்லிம்கள் இந்நாட்டில் பிரவேசிக்கும் வரை இவ்விருதரப்பாரும், பொங்கியெழுந்து அடங்கி விடும் கடலலைகள் போன்று மாறி மாறி முன்னேறுவதும் மீண்டும் தங்கள் நிலைகளுக்கு மீள்வதுமாக இருந்தனர். முஸ்லிம்கள் வட திசையில் பாதுகாப்பாக நிலை பெறுவதற்கு ஒரு நூற்றாண்டு ஆயிற்று. இவ்வாறு நிலை பெற்றவுடன் அவர்கள் தென்னோக்கி தங்கள் ஆயுதங்களைப் பிரயோகித்தனர். கில்ஜியர்கள் தக்காணத்தைக் கைப்பற்றினர்.

---

* டாக்டர் பேனி பிரசாத்தின் "ஹிந்து—முஸ்லிம் பிரச்னைகள்'' என்ற புத்தகம்; பக்கம்: 33.

சுல்தான் முஹம்மது துக்ளக் அதனை இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் சேர்த்தார். அக்பர் மன்னர், வட-திசையில், தம் நிலை உறுதியாகி விட்டதை அறிந்து கொண்ட பின், தம் சாம்ராஜ்யத்தை தக்காணத்தில் புகுத்த ஒரு நாள்கூட தாமதிக்கவில்லை. பிரிட்டிஷார், தங்கள் படை யெடுப்பை கீழ்த்திசையிலிருந்து ஆரம்பித்தனர். அவர்கள் ஒரு நூற்றுண்டு காலம் (1757-ம் ஆண்டு முதல் 1857-ம் ஆண்டு வரை) இடையறுத போர் செய்ய வேண்டி நேரிட்டது. இந்நாடு முழுவதும் கொஞ்சங் கொஞ்சமாக அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர்தான் நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்பட்டது.

இவைகள்தான் சரித்திரப் பூர்வமான உண்மைகள். ஆனல், டாக்டர் பேனி பிரசாத்தைப்போல, அரசியல் ஐக்கிய வாதம் செய்வது, மேற்கண்ட சரித்திர உண்மைகளை மறைப்பதாகும்.

இந்தியாவின் சரித்திரத்திலேயே அது என்றைக்கும் உண்மையான அரசியல் ஐக்கியத்தை அடைந்தது கிடையாது. சிற்சில சமயங்களில் நிர்வாக ஐக்கியம் இந்நாட்டில் ஏற்பட்டதுண்டு. ஆனல், அது அற்பாயுளாகவே இருந்து மறைந் தொழிந்தது. ஐக்கியம்—நாம் இதற்கு எவ்வகை வியாக்கியானம் செய்யினும் .சரி—என்பது இந்நாட்டு மக்களின் போக்கிலும், மனப் பான்மையிலும் எப்போதும் ஏற்பட்டதே இல்லை. இதற்குப் பதிலாக ஒவ்வொரு சமயத்திலும் ஐக்கியம் என்பது ஆக்கிரமிப்பு சக்திகளால் ஏதேனுமொரு ஏகாதிபத்திய நோக்குடன் திணிக்கப்பட்டதாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த சக்தி

தளர்ந்து விட்டால், நாட்டின் ஐக்கியமும் தானாகவே குன்றிவிடும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன், இவ்வுபகண்டத்தில் வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாக வாழ வேண்டுமென்றோ, ஒரே மனப்பட்டிருக்க வேண்டுமென்றோ கருதிய காலம் இந்தியாவின் சரித்திரத்திலேயே கிடையாது. இந்நாட்டில் உள்ள வேறுபாடான மனோபாவங்கள், நாடு முழுமையிலும் ஒரே அரசியல் சக்தி வளர்ந்தோங்குவதை எப்போதும் அனுமதித்ததில்லை. இப்போது இந்நாட்டில் நிர்வாக ஐக்கியம் ஏற்பட்டு நூற்றைம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த சுமார் அரை நூற்றாண்டுக்குமேல் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இன்றுங்கூட, முஸ்லிம்களின் பாகிஸ்தான் கோரிக்கை ஒரு பக்கமிருக்கட்டும்; அந்த வேறுபாடான மனோபாவங்கள் பலம் வாய்ந்தனவாகவே இருந்து வருகின்றன. பிரிட்டிஷார், இந்நாட்டை விட்டு வாபஸாகி விட்டால், இந்நாடு மேற்குறிப்பிட்ட பலத்தின் மிகுதியால், உடனே துண்டு துண்டாகப் பிரிந்து, அநேக சுயேச்சை அரசுள்ள நாடுகளாக ஆகிவிடும். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தாரும், தங்களைப் பிரிட்டனிலிருந்து பிரித்துக்கொண்டு இந்நாட்டின் தேசீய மக்களாக மாறி, ஒரு தேசீய அரசாங்கத்தை நிர்மாணிக்க முயற்சித்தாலும் இதே நிலைமைதான் ஏற்படும். இதற்குக் காரணம் என்ன? இந்தியா பூகோள ரீதியாக ஐக்கியமாக இருப்பினும், அந்நாட்டின் மக்கள் ஐக்கியமாக இல்லை. அரசாங்கங்களையும், சமுதாயங்களையும் நிர்மாணிப்பதற்கு மக்கள்தான் அஸ்திவாரமேயன்றி, பூகோளம் ஆதாரமாக முடியாது.

பாகிஸ்தானை எதிர்க்கும் ஹிந்து வாதிகளெல்லாரும், தங்கள் வாதத்திற்குக் கூறும் ஆதாரங்களில் இந்தியாவின்

பூகோள ஐக்கியத்தையும் ஒன்ருகக் கூறுகின்றனர். ஆனல் மிஸ்டர் ரெனன்* கூறுகிறபடி ஆறுகளின் போக்கினுலோ, மலைத் தொடர்கள் செல்லும் திக்கினுலோ மனிதன் ஜீவ உணர்ச்சியை அடிமைப்படுத்தி விட முடியாது என்பதை இது பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவரும் தெளிவாக உணர்வர். மேலும் மிஸ்டர் ரெனன் கூறுவதாவது:— "பூமி, உழைப்புக்கும், போருக்கும் இடத்தையளிக்கிறது; மனிதன் ஆன்மாவை அளிக்கிருன். மக்கள் என்றழைக்கப் படும் புனிதமான பொருளுக்கு மனிதன்தான் ஜீவநாடியாகிருன். இவையன்றி உயிரற்ற இயற்கைப் பொருள்கள் இவைகளுக்குச் சம்பந்தமில்லை."

உண்மையிலேயே ஒரு சமுதாயத்தை நிர்மாணிப்பதில் பூகோளம் எப்போதாவது நிர்ணயக்கருவியாக இருந்திருக்கிறதா என்பது சந்தேகமே. அவ்வாறு பூகோளம், நிர்ணயக் கருவியாக இருந்திருக்குமாயின், ஐரோப்பாவில் ஒரு சில நாடுகள் கூட தாங்கள் தனி நாடுகள் என்ற உரிமை பாராட்டிக் கொள்ள இயலாது. ஜெர்மனி, போலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே எவ்வித இயற்கை எல்லைகளையும் பூகோளம் அமைத்து விட வில்லை. ரஷ்யா—பின்லாந்து நாடுகளுக்கிடையே ஒரு இயற்கை எல்லையும் காணப் படவில்லை. ஸ்வீடனுக்கும் நார்வேக்கு மிடையே பூகோள இயற்கையான எல்லை எதுவுமில்லை. ஜெர்மனி, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம்...........ஏன்? பிரான்சும் கூடத்தான்........ஆகிய நாடுகளுக்கிடையே இயற்கை எல்லை

---

* "பல வித ஜாதிகள் முதலியவை பற்றிய கவிதைகள்" என்ற புத்தகத்தில் சமுதாய சம்பந்தமாக வரையப் பட்ட வியாசத்தைக் காண்க. (The poetry of Celic Races and other studies)

கள் எவையும் கிடையா. ஜெர்மனி, ஹங்கேரி, ஆஸ்திரியா, ஜெக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளுக்கிடையே பூகோளம் எவ்வகை எல்லைகளையும் ஏற்படுத்திவிடவில்லை. ரஷ்யாவுக்கும், ருமேனியாவுக்குமிடையில் ஒரு எல்லையும் இயற்கையில் அமையவில்லை. பால்கன் நாடுகளையோ அல்லது ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளையோ எந்த எல்லையும் பிரித்து வைக்கவில்லை. வட அமெரிக்காவிலுள்ள பல நாடுகளின் நிலைமையும் இவ்வாறு தான் இருக்கிறது. என்றாலும், இந்த நாடுகளெல்லாம், தனித்தனி அரசாதிபத்திய சமுதாயங்களுடையவையென்பதையும், அவ்வாறே உலகமனைத்தும் ஒப்புக் கொண்டுள்ள தென்பதையும் யாரால் மறுக்க முடியும்? உதாரணமாக டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், ஹங்கேரி, ஆஸ்திரியா, போலந்து முதலிய நாடுகளெல்லாம் பூகோள ஐக்கியப்படி ஜெர்மனியுடன் இணைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டால், அது பொருத்தமற்றதாகவே இருக்கும். இது போன்றே பின்லந்து, போலந்து, ருமேனியா நாடுகளை ரஷ்யா விழுங்க உரிமையுண்டென்பதும், போர்ச்சுகல், தன் சுதந்திரத்தையும், அரசாதிபத்தியத்தையும் ஸ்பெயின் காலடியில் சமர்ப்பித்து அதனுடன் இரண்டறக் கலந்துவிட வேண்டுமெனக் கூறுவதும் பொருத்தமற்றவைகளே.

பிரிவினைக்கு எதிர்ப்பாகக் கூறப்படும் இரண்டாவது பெரிய ஆதாரம் இனம். முஸ்லிம்களனைவரும் ஹிந்துக்களின் இனத்தவர்களேயென்றும், இக்காரணத்தால் அவர்கள் ஹிந்துக்களுடன் ஒரே சமுதாயத்தினராகச் சேர்ந்து கொண்டு, பிரிவினை கோராமல் இருக்க வேண்டுமென்றும் முஸ்லிம்களுக்குப் போதிப்பதில் திரு. காந்தி, திரு. சவர்க்

கார், டாக்டர் மூன்ஜே, பாய் பரமானந்தர், பண்டித ஜவஹர் லால் நேஹ்ரூ முதலியவர்கள் எப்போதும் ஒப்ந்தது கிடையாது ஹிந்துத்தலைவர்கள் இவ்வாறு வாதிப்பது பெரும் ஆச்சரியத்தையே தருகிறது. இந்திய முஸ்லிம்கள், அநேக இனங்களிலிருந்து ஒன்று சேர்ந்து இணைந்தவர்கள். எனவே, இன உணர்ச்சியென்பதே அவர்களிடம் கிடையாது. ஆதலால், இன ஒற்றுமையைக் காரணமாகக் கொண்ட எந்த வாதமும் அவர்களை வசப்படுத்திவிட முடியாது. உண்மையில் முஸ்லிம்களுக்கு அது மூடக் கொள்கையாகவே படுகிறது. எந்த ஹிந்துத் தலைவரும் இன்னும் இதனை உணராமலிருப்பது பெரும் ஆச்சரியமாகவே இருக்கிறது. உண்மையில், சமுதாயங்களை அமைப்பதற்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ ஆதாரங் காட்டுவதில் பூகோளத்தைப் போன்றே இனமும் பயனற்றது. மிஸ்டர் ரெனன் கூறுகிறபடி இனம் என்பது ஐயறிவுடைய பொருள்களுக்கும், பிராணிகளுக்கும் பொருத்தமாயிருக்கலாம். மனிதர்கள் பூனைகளோ அல்லது சுண்டெலிகளோ அல்ல. ஹிந்துத் தலைவர்கள் நம்புகிறபடி இனம் ஒரு முக்கிய ஆதாரமாயிருந்தால், ஜெர்மானியர், ஆஸ்திரியர், பெல்ஜியர்கள், டச்சுமக்கள், டேனியர், நார்வேக்காரர்கள் ஸ்வீடர்கள், பின்லந்து மக்கள் முதலியோரெல்லாம் ஒரே சமுதாயத்தினராக ஆகி விடவேண்டும். ஸ்பெயின் மக்களும் போர்த்துகேசியரும் ஒரே சமுதாயமாகக் கலந்து விடவேண்டும். ஆனால் ஸ்வீட மக்கள் தனிச் சமுதாயமாயிருக்க முடியாது; இங்கிலீஷ், வேல்ஸ், ஸ்காட் மக்கள் முதலியோர் தனித்தனிச்சமுதாயத்தினராக ஆகி விட வேண்டும். ஏனெனில் இவர்களனைவரும் வெவ்வேறான இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மதம் அரசியலுடன் கலக்கப்படக் கூடாதென்றும், அரசியலை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு ஐக்கிய சமுதாயம் அமைக்கப்பட வேண்டு மென்றும் ஹிந்துத் தலைவர்கள் இரண்டு தலை முறைகளாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். இப்போது அரசியலை மட்டும் அடிப்படை யாகக் கொண்டு ஒரு சமுதாயத்தை சிருஷ்டித்து விட முடி யுமா என்பதைக் கவனிப்போம். ஒரு சமுதாயத்தை நிர் மாணிப்பதற்கு வெறும் அரசியல் பந்தங்கள் மட்டுமே போது மானவையல்ல வென்று அரசியல் தத்துவ ஞானிகள் கருது கின்றனர். இக்கோட்பாட்டிற்கு 1ப்ரைஸ் பிரபு (Lord-Bryce) ஆஸ்திரியா, ஹங்கேரி, நாடுகளை உதாரணங்காட் டிப் பின் வருமாறு கூறுகிறார்:— "ஆஸ்திரியா—ஹங்கேரி நாடுகள் ஓரே முடியாட்சியின் கீழ் இருக்கின்றன. ஒரு வகையான சமுதாயம் என இந்நாடுகள் பிணைக்கப் பட்டுள் ளன. எனினும் இவை ஒரே சமுதாய நாடுகளல்ல; பல முரண் பட்ட நாடுகளின் ஒரு முடிச்சேயாகும். ஆகவே ஜெக்கோஸ்லோவாகியாவும், யூகோஸ்லாவியாவும் இன்று (மிஸ்டர் ப்ரைஸ் இதை 1921-ம் ஆண்டில் எழுதியிருக் கிறார்) தனித்தனி அரசியல் நாடுகளாகவிளங்குகின்றன இந் நாடுகளின் மக்கள் இதர பந்தங்களால் போதுமான அளவு ஐக்கியமடையவில்லை. காலக்கிரமத்தில் அவர்கள் ஒன்று படலாம்."

இந்த பிரச்னையில் அரசியல் தததுவ ஞானிகளெல் லோரும் ஒருமனதான அபிப்பிராயமே கொண்டிருக்கின் றனர். மிஸ்டர் சித்க்விக்2 பின் வருமாறு எழுதுகிறார்:—

1 "சர்வதேச உறவுகள்" (International Relations) பக்கம்: 118

2 "அரசியலின் அம்சங்கள்" (Elements of Politics) பக்கம்: 222.

"ஒரு அரசியல் கோஷ்டி எனப்படுவது திருப்தியும், உறுதியும் அற்ற நிலைமையிலிருந்து வருகிறது. அக்கோஷ்டியிலுள்ளவர்களோ, ஓரே சர்க்காருக்குக் கீழ்ப்படிந்திருப்பதைத் தவிர, தங்களுக்கிடையே வேறெவ்வித ஐக்கிய பந்த உணர்ச்சியில்லாமலேயே இருக்கின்றனர். காலா காலங்களில் ஏற்படக்கூடிய அயல் நாட்டுப் போர்களாலும், உள் நாட்டுத் தகராறுகளாலும் விளையும் கட்டுப்பாட்டுக் குலைவையும், அமைதியின்மையையும் எதிர்த்து சமாளிக்கும் சக்தி இக்கோஷ்டியினருக்கு இருப்பதில்லை. ஆதலால், ஒரு அரசாங்கத்தின் கீழுள்ள மக்கள், சமுதாயம் என்ற ஒரு வித பந்தத்தால் ஐக்கியமடைய வேண்டுவது அவசியம் என்பது தெளிவாக விளங்கக் கிடக்கின்றது." எனவே, ஹிந்து மகாசபை விரும்புவது போன்ற ஐக்கிய ரீதியான இந்திய அரசாங்கமோ, அல்லது காங்கிரஸின் நோக்கப்படியான ஒரு சமஷ்டி முறை இந்திய அரசாங்கமோ ஏற்படுமாயின், அது உறுதியற்றதாகவே இருக்கும். இத்தகைய அரசாங்கத்தில் ஒரு சமுதாய அமைப்புக்கு அவசியமான இதர பந்தங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக, அயல் நாட்டுப் போர்களாலும், உள்நாட்டுத் தகராறுகளாலும் அரசாங்கத்துக்கு ஏற்படக் கூடிய கட்டுப்பாட்டுக் குலைவையும், திடுக்கத்தையும் சமாளித்து நிற்க முடியாது.

சமுதாய உணர்ச்சியை உண்டு பண்ணுவதற்குதவியாக இருக்கும் பந்தங்கள் எவை? ப்ரைஸ் பிரபு, சமுதாயமென்பது பற்றி வியாக்கியானம் செய்கையில், "சமுதாயம் என்பது ஒரு சில உணர்ச்சிகளால் ஒன்றாகத் திரட்டி இணைக்கப் பட்ட மனிதர்களின் கோஷ்டியாகும்" என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:—" இவ்வுணர்ச்சிகளில் முக்கியமானவை இன உணர்ச்சியும், மத

உணர்ச்சியுமாம். இவையன்றி ஒரு பொதுமொழி வழங்கப்படுவதாலும், ஒரு பொதுவான எழுத்தறிவைப் பெற்றிருப்பதாலும், இதற்கு முந்திய நாட்களில் ஏற்பட்ட பொது வெற்றி, பொதுக்கஷ்டங்கள் முதலியவைகளின் ஞாபகார்த்தங்களாலும், பொதுவான பழக்க வழக்கங்களாலும், பொதுவான இலட்சியங்களாலும், கொள்கைகளாலும், இயற்கையாகவே உண்டாகக் கூடிய சமூக உணர்ச்சி என்னும் மற்றோர் உணர்வும் இருந்து வருகிறது. சிற்சில சமயங்களில் இந்த உணர்ச்சிகள் எல்லாம் ஒருங்கே பொருந்தியிருந்தது மக்களை ஒன்றுபடுத்தி வைத்திருக்கும். சிற்சில சமயங்களில் இவ்வுணர்ச்சிகளில் ஒன்றிரண்டு இல்லாமலும் போய் விடும். எவ்வளக்கெவ்வளவு அதிகமாக உணர்ச்சிகள் காணப்படுகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு சமுதாய ஐக்கிய உணர்ச்சியும் அதிகமாக இருக்கும். எனினும் இங்கு அறியப்பட வேண்டுவது இணைப்புகளின் எண்ணிக்கையல்ல; ஒவ்வொரு இணைப்பின் பலம் எத்தகையது என்பதேயாகும்" ஸ்விஸ் மக்களை மிஸ்டர் ப்ரைஸ் உதாரணமாகக் கூறுகையில், "அவர்கள், தங்களின் பண்டைய சரித்திரப் பெருமைகளிலுள்ள ஒரு பொதுப் புகழ் ஒரு பொதுவான எழுத்தறிவு, ஒரே பொதுவான அரசியல் இலட்சியங்கள், நம்பிக்கைகள் முதலியவைகளிலிருந்து தங்கள் சமுதாயக் கட்டுப்பாட்டைப் பெற்றிருக்கின்றன" ரெனக் குறிப்பிடுகிறார். இந்த சமுதாயத்தினர் மூன்று அல்லது நான்கு வெவ்வேறு மொழிகளைப் பேசுவோராயும், பலவகை இனத்தவராயுமிருந்து இக்கட்டுப்பாட்டை அடைந்திருக்கின்றனர்" என்று அவர் கூறுகிறார். அமெரிக்க நாடுகளைப் பற்றி விவரிக்கையில் அவர் கூறுவதாவது:—"சில நாடுகள் படிப்படியாக சமுதாயங்கள் ஆக

உயர்ந்தன. அதாவது: முதலில் ஒருவித அரசியல் ஐக்கிய உணர்ச்சியால் சமூகங்கள் ஒன்று பட்டன. பின்னர், அவை உண்மையான சமுதாய அந்தஸ்துக்கு அவசியமாக பண்டைச் சரித்திரப் பெருமை, வீரர்களின் ஞாபகங்கள் முதலியவைகளை கொஞ்சங் கொஞ்சமாகப் பெற்று வளர்ந்தோங்கின." 1

மிஸ்டர் சித்க்விக் 2பின்வருமாறு கூறுகிறார்:—"ஒரு சமுதாயத்தின் அரசாங்க அமைப்புக்கு முக்கியமாக வேண்டப்படுவது என்னவெனில்: பொதுவாக நோக்குமிடத்து அவ்வரசாங்க மக்கள், ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள்தான் என்றும், தாங்களனைவரும் ஒரே ஸ்தாபனத்தின் உறுப்பினர் என்றும், தாங்கள் ஒரே நிர்வாகக் கட்டுப்பாட்டுக் குட்பட்டவர்களென்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வித உணர்ச்சி ஏற்பட்டு விடுமாயின், யுத்தத்தாலோ, உணர்ச்சியாலோ அவர்களுடைய சர்க்கார் நசிக்கப்பட்டு விட்டால், அவர்களுக்கிடையே இன்னும் அதிகமான கட்டுப்பட்டுணர்ச்சி ஏற்படும். இத்தகைய ஒரு கட்டுப் பாட்டுணர்ச்சியை அவர்கள் பெற்று விடுவார்களாயின், வேறு எந்த பந்தம் குறைவாயிருப்பினும், அவர்களை ஒரு 'சமுதாய' அந்தஸ்துடையவர்களாக நாம் மதிக்கிறோம்."

மிஸ்டர் சோபீ பிரியண்ட் பின்வருமாறு எழுதுகிறார் :—"மனித வாழ்வு வளர வளர, ஒவ்வொரு சமுதாயத்துடையவும் மனோ உணர்ச்சியும் வளர ஆரம்பிக்கிறது.

---

1 "சர்வதேச உறவுகள்", பக்கம் : 116, 119, 121.

2 " அரசியலின் அம்சங்கள்", பக்கம்: 224.

தேசீய (சமுதாய) சரித்திரத்தின் ஒவ்வொரு சம்பவமும், தேசீய எழுத்தறிவில் ஒவ்வொரு முன்னேற்ற அம்சமும், தேசீய ஸ்தாபனங்கள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் முதலிய ஒவ்வொன்றில் ஏற்படும் ஒவ்வொரு சீர்திருத்தமும் தேசீய ஐக்கிய உணர்ச்சிக்கு உபகாரணங்களாக உதவி செய்கின்றன. ஒவ்வொரு பிரஜையும், அவனது இளமை தொட்டே, நாட்டின் பொதுவாழ்வில் காணப்படும் அம்சங்களை நேசிக்கவும், நாளடைவில் அவைகளை தனக்குச் சொந்தமானவை யெனக் கருதவும் கற்றுக் கொள்ளுகிறான். அவன், தன் நாட்டின் கௌரவத்தை மட்டும் பற்றிக் கொள்வதுடன் நின்று போவதில்லை; தன் நாட்டின் சரித்திரம், எழுத்தறிவு, தன் சமுதாயத்தின் கீர்த்தி, சமுதாயத்தின் தியாகங்கள்,........ஏன்? அவமானமும், குற்றங்களும் நிரம்பிய செயல்களும் கூட ...............முதலிய ஒவ்வொன்றும் அவனது ஆன்ம உணர்ச்சியைப் போய் தொடுகின்றன." *

மிஸ்டர் ரெனன் பின்வருமாறு எழுதுகிறார்:—"சமுதாயமென்பது ஒரு ஜீவாத்மா; இதுதான் ஆத்மார்த்த தத்துவம். இந்த ஆத்மார்த்த தத்துவமான ஜீவாத்மாவில் இரண்டு விஷயங்கள் பொதிந்திருப்பினும் அவை யிரண்டும் ஒன்றே. ஒன்று கடந்த காலத்தைப் பற்றியது; மற்றொன்று நிகழ் காலத்தைப் பற்றியது. ஒன்று பழைய ஞாபகச் செல்வங்களைப் பொதுவாகச் சொந்தப்படுத்தி வைத்திருப்பது; மற்றொன்று இயற்கையான சம்பந்தம், ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற விருப்பம், பிரிக்கப்பட முடியாத பரம்பரைப் பெருமையைப் பாதுகாப்பது ஆகியவைகளாம்.

---

* **Encyclopedia of Religion and Ethics, Art, Nationality.**

தனிப்பட்ட ஒரு மனிதனைப் போன்றே ஒரு சமுதாயம், அதன் நீண்ட கால முயற்சிகள், தியாகங்கள், சேவைகள் முதலியவைகளின் பலனாக தீர்மானிக்கப் படுவதேயாகும்.... ஒரு பண்டைய வீரம், பெரியார்கள், பண்டையப் பெருமை —உண்மையான பெருமையைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்—இவைதான் சமூகத்தின் மூலதனம். இந்த மூலதனத்தின் அடிப்படையின் மீதுதான் சமுதாய இலட்சியம் நிர்மாணிக்கப்பட முடியும். பண்டைய காலத்தில் ஒரு பொதுப் பெருமை யிருப்பது, தற்காலத்துப் பொது சாஸனமாயிருக்கும். பல விஷயங்களில் ஒன்றுபட்டு மகத்தான காரியங்களைச் சாதித்திருப்பது, இவைகளை மீண்டும் நிறைவேற்றுவதில் விருப்பம் ஆகிய இவைகளே மக்கள் வளர்ச்சிக்குப் பிரதானமானவை களாகும். ஒரு பொருளைப் பெறுவதற்காக எவ்வளவு தியாகங்கள் செய்திருக்கிறோமோ, எவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்திருக்கிறோமோ அதைப் பொறுத்தே அதன் மீது நாம் அன்பு செலுத்துகிறோம்...........''

கடைசியாக, தனிமனிதனின் தேசீய உணர்ச்சியைப் பற்றி கவியரசர் இகபால் கூறுவதைக் கவனியுங்கள். அவர் கூறுவதாவது:—“நான் வகுப்புவாதக் கோஷ்டியின் மீது அன்பு செலுத்துகிறேன். அதுவே என் வாழ்க்கையின் வழிகாட்டி, என் நடத்தையின் முன் மாதிரி அது, தன்னுடைய மதம், தன் எழுத்தறிவு, கருத்து, கலை முதலிய எல்லாவற்றையும் எனக்களித்து, என்னை ஒரு மனிதனாகச் செய்தது. அதுவே என் தற்போதைய மனசாட்சியில்,

பகுத்தறிவில், தனது பழமையைப் புதுமையாகப் புகுத்தி விட்டது.'' *

இதுபோன்ற இன்னும் அநேக கோட்பாடுகளைக் கூறிக் கொண்டே போகலாம்; ஆனால், இவ்வளவு போதுமானது. பூகோளம், இனம், மொழி ஆகியவைகளெல்லாம் சமுதாயங்களை நிர்மாணிக்கும் உபகரணங்களாகவோ, அல்லது அழித்து விடுவதற்குரிய காரணங்களாகவோ ஆக மாட்டா என்பதை நாம் இப்போது கண்டு கொண்டோம். ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியத்தின் சில பகுதிகள், ஆஸ்திரியாவின் சில பகுதிகள் ஆகிய நாடுகளில் வதியும் மக்களெல்லாம் ஜெர்மன் மொழியையோ, அல்லது ஜெர்மனியிலிருந்து உண்டான மொழிகளையோதான் பேசுகின்றனர் ஆதலால் உண்மையில் அந்நாட்டினரனைவரும் ஜெர்மானியைச் சார்ந்தவராகவே கருதப்படுதல் வேண்டும். அவ்வாறிருந்தும் அவையனைத்தும் தனித்தனி சமுதாய நாடுகளாகவே இருக்கின்றன. உலகமும் இவைகளைத் தனித்தனி சமுதாய நாடுகளாகவே ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்த நாடுகளில் எதுவும் பூகோளத்தின் காரணத்தாலோ, பொதுவான இனம், அல்லது மொழியின் காரணத்தாலோ ஜெர்மனியுடன் இணைந்திருக்க வில்லை. உண்மையில் சமுதாயம் என்பது பகுத்தறிவைப் பொருத்த விஷயம். மனிதனுக்கு மனிதன் இவ்விஷயம் வேறுபட்டிருக்கக் கூடும். எனினும் ஒவ்வொரு தனிமனிதன் அல்லது கூட்டத்தினரிடம் இந்த

---

* 1930 ஆ டிசம்பர் மாதத்தில் அல்லாஹாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

விருப்பம் இருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. இது அக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரையும், தாங்களனைவரும் ஒரே வழி வந்தவர்கள் என்பதை, உணரச் செயகிறது. நன்மை, தீமைகளிலும், வெற்றி தோல்விகளிலும், சுக துக்கங்களிலும் அவர்களனைவரையும் ஒன்று படுத்தி இணைத்து வைத்திருப்பதும் இதுவே. மேலும், இதே விருப்பம்தான் அவர்களை இதர கூட்டத்தினரிலிருந்து தாங்கள் வேறு பட்டவர்கள் என்பதையும் உணரச் செய்கிறது. தவிர இது உயிரோடியிருக்கும் வரை வேறு கூட்டத்தினருடன் அவர்கள் இணைவதைத் தடை செய்துவிடும். இவ்வித முயற்சி ஏதேனும் செய்யப்பட்டால், அதை எதிர்த்து புரட்சி செய்வதும் இந்த விருப்புணர்ச்சியேதான்.

"சமுதாயத்துவமென்பது ஒன்று பட்டிருக்கும் ஓர் உணர்ச்சியே. இந்த உணர்ச்சியே ஒரு கூட்டத்தினரை, தாங்களனைவரும் ஒரேவழி வந்த மக்கள் என்பதை உணரும்படி செய்து வருகிறது. இந்த தேசீய உணர்ச்சி இருவகையில் வெளிப்படுகிறது. தன்னைச் சேர்ந்த மக்களைத் தன்னுடன் சேர்ந்தோரெனக் கருதுவது ஒருவகை; தன்னைச் சேராதவர்களைப் பிறரெனக் கருதுவது மற்றொரு வகை. இதை ஒரு நூதன மனோ உணர்ச்சியென்று கூறலாம். இந்த மனோ உணர்ச்சி ஒருபுறம் ஒரு சமுதாயத்தை, அவர்களிடையே எவ்வளவு வேறுபாடுக ளிருப்பினும், உயர்வு தாழ்வுகளிருப்பினும் அவைகளை யெல்லாம் களைந்துவிட்டு, ஒன்றுபடுத்திப் பிணைத்துவிடுகிறது. ஆனால், மற்றொருபுறமோ, தங்களுடன் சேராமலிருப்போரை விட்டும் பிரித்து விடுகிறது. இதுதான் சமுதாயத்துவம், சமுதாய உணர்ச்சி என்று கூறப்படும்'' என்று டாக்டர்

அம்பேத்கார் கூறியிருக்கிறார்.* "ஒரு சமுதாயம் என்பது இதர உலகெல்லா வற்றுக்கும் எதிராக இணைந்திருப்பதே யாகு" மென யாரோ கூறி யிருப்பதாக ஞாபகம் இருக் கிறது.

நாம் மேலே காட்டியுள்ள ஆதாரங்களிலிருந்து, சமுதாய உணர்வோ, மனோ உணர்ச்சியோ உண்டாவதற்கு ஒரே பொதுவான பண்டைப் பெருமை, பொதுவான இலட்சி யங்கள், நம்பிக்கைகள், பொதுவான எழுத்தறிவு, கலை, பொதுமதம், பொது வீரர்கள் பற்றிய நினைவுகள் ஆகிய உபகரணங்கள் எல்லாம் அத்தியாவசியமானவை; இவை களின் திரட்சியின் காரணமாக ஏற்படும் உணர்ச்சியே தேசீய உணர்ச்சி எனப்படுவது; இதர கூட்டத்தினரி லிருந்து ஒரு கூட்டத்தவரை தனித்து வைத்திருப்பதும் இவ்வுணர்ச்சியே-என்பன போன்ற விஷயங்கள் தெளிவாக விளங்கக் கிடக்கின்றன. இப்போது, சமுதாய உற்பத் திக்கு உபகரணங்களான இவைகளில் ஒன்றேனும் ஹிந்துக் களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவானதாக இருக்கின் றதா? இவ்விரு சமூகங்களுடையவும் பழக்க வழக்கங்கள் வேறானவை; பண்டைப் பெருமைகள் வேறானவை; இலட் சியங்கள் வேறானவை; மத நம்பிக்கைகளோ ஒன்றுக் கொன்று நேர் முரணானவை ஒரு கூட்டத்தாரின் சரித் திரத்தில் சந்தோஷம் காணப்பட்ட அதே சமயத்தில் மற்ற கூட்டத்தாரின் சரித்திரத்தில் வருத்தம் காணப்படுகிறது. ஒரு கூட்டத்தவருக்கு வருத்தம் நேரிடும் காலத்து மற்ற கூட்டத்தவருக்கு சந்தோஷம் ஏற்படுகிறது. இந்த இரு

* டாக்டர் அம்பேத்காரின் "பாகிஸ்தான் பற்றிய நினைவு கள்;" பக்கம் 25.

சமுதாயத்தினருடையவும் உணர்ச்சிகளும், கலாசார வாழ்க்கையும் மாறுபாடானவை. ஒரு சமூகத்தின் வீரர்கள் மற்றொரு சமூகத்தின் எதிரிகளாகக் கருதப் படுகின்றனர். பண்டைய மொகலாய மன்னர் அவ்ரங்கஜேபின் பெருமையை முஸ்லிம் கொண்டாடுகிறான். ஆனால் ஹிந்துவோ அவ்ரங்கஜேபை வெறுத்து, அவருக்கு எதிரியாக இருந்த சிவாஜியைக் கொண்டாடுகிறான். ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே ஒன்று பட்ட கூட்டுணர்வோ, ஒற்றுமையுணர்ச்சியோ கிடையாது. இந்த இரு கூட்டத்தினரும் ஒன்றாக ஒரே பந்தியில் உட்கார்ந்து உணவருந்த முடியாது. அது போன்றே இருவருக்குள் விவாகசம்பந்தமும் செய்து கொள்ளப்படுவதில்லை. ஒருவருடைய உணவு மற்றவருக்கு ஆகாததாக இருக்கிறது. முஸ்லிம் தன்னைத் தீண்டி விட்டால், விழுப்பு ஏற்பட்டு விட்டதாக ஹிந்து கருதுகிறான். ஒரு பொதுவான கூட்டுணர்ச்சியை அவர்களுக்கிடையே ஏற்படுத்தி வைக்கக் கூடிய எவ்வித சமூகத் தொடர்பும் அவ்விருவருக்கும் இல்லை. ஆதலால், இவ்விரு கூட்டத்தாரும் ஒரே கட்டுப்பாடுடைய தனி சமுதாயமாக இணைவது அசாத்தியமே.

முஸ்லிம்கள் என்றைக்கும் தங்களைத் தனிச்சமுதாயத்தினரெனக் கூறிக் கொண்டதில்லை யென்றும், சமீப காலத்தில்தான் அவ்வாறு கூற ஆரம்பித்திருப்பதாகவும், அவர்களின் தனிச் சமுதாயக் கோட்பாடு ஜனப் ஜின்னாவின் தூண்டுதலால் ஏற்பட்ட செயலே யன்றி வேறில்லை யென்றும் ஹிந்துக்கள் கூறுகின்றனர். இரு சமுதாயங்களின் வளர்ச்சியைப்பற்றி சரித்திர ஆதாரங்களுடன் பின்னால் கூறுவோம். சமுதாய நிர்மாணத்தின் சில நூதன குணானுபவங்களை மட்டும் விவரித்தல் போதுமானது. அரசியல்

தத்துவ ஞானிகள் சமுதாயத்திற்கும், தேசியத்திற்கு மிடையே வேறுபாட்டைக் கண்டிருக்கின்றனர். இந்த வேறுபாட்டினுல், சமுதாயங்களின் வாழ்வே மிகப் பிரமாத மாகி விடுகிறது. ஒரு சமுதாயக் கூட்டம் எப்போதுமே தேசிய உணர்ச்சியை வளர்க்க முடியாமல் போய் விடலாம் இது போலவே ஒரு காலத்தில் சமுதாய அந்தஸ்திலிருந்த கூட்டத்தார், தேசிய உணர்ச்சியை அடியோடு மறந்து, வெறும் இன உணர்ச்சியுடையோராக மாறி விடலாம். ஹிந்துக்கள் இந்தியாவில் சுமார் மூவாயிரத்திற்கும் அதிக மான ஆண்டுகள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனுல் அவர் களின் தேசிய மென்பது நேற்று முளைத்த விஷயம். நெதர் லாண்ட்ஸில் வாழும் மக்கள் இதற்குமுன் ஒரு சமுதாயத் தினராயிருந்தது கிடையாது; ஆனுல், இப்போது அவர்கள் ஒரு சமுதாயத்தினராகஇருக்கிறுர்கள் வேல்ஸ், ஸ்காட்லந்து நாடுகளின் மக்கள் சுயேச்சை அரசுரிமையுடைய சமுதாயத தினராக இருந்தனர். அன்று அவர்களுக்கு சமுதாய அந்தஸ்துக்கான யோக்கியதாம்ஸங்கள் எல்லாம் நிரம்பி யிருந்தன. இன்றோ, அவர்கள் தங்கள் சமுதாய உணர்ச்சி களை யெல்லாம் மறந்து, பெரும் பிரிட்டிஷ் சமுதாயத்தின் பகுதியினரென்று நினைத்துக் கொள்வதுடன் திருப்தியுற்று விடுகிறுர்கள். இது போன்றே பல நூற்றுண்டுகளாக சமு தாய அறிகுறியே காணப்படாதிருந்த ஒரு கூட்டத்தார், பல காரணங்களால், திடீரென்று தேசிய உணர்ச்சி பெற்று விடுவர். இவ்வாறு ஒரு முறை உணர்ச்சி பெற்று விடும் அச்சமுதாயம், தனது தனி அரசுரிமையை வற்புறுத்த முனைந்து விடும். எனவே, தேசிய உணர்ச்சியின் உதயமும் தனிச்சுதந்திர அரசுரிமையுடைய வாழ்வை நடத்த வேண்டு மென்ற விருப்பமும் ஒன்றை யொன்று அடுத்தடுத்து வரு

வனவாகும். உண்மையில், அவை யிரண்டும் தனித்தனித் தன்மை வாய்ந்தவையே. ஒரு சமுதாயம் என்பது பல உறுப்புகள் கொண்ட உடல் போன்றதாகும். இதன் அர்த்த மென்ன? சமுதாய மென்னும் உடலுக்கு ஒரு ஆன்மா, ஒரு விருப்பம், தன்னுணர்வு முதலிய எல்லா உறுப்புணர்ச்சிகளும் உண்டு. ஒரு தனிப்பட்ட ஆன்மா செயலாற்றுவதைப் போன்றே இக்கூட்ட ஆன்மாவும் செயலாற்றுகிறது. இந்த ஆன்மா, வேறு ஆன்மாவுடன் இரண்டறக் கலக்க உடன் படுவதில்லை. உதாரணமாக ஒரு பால் குடி குழந்தை, தன் தாயுடன் இணைந்திருக்கிறது. அக் குழவி அதன தாயின் உடலிலிருந்துதான் தோன்றியது. தாய்க்கும், சேய்க்கும் இருப்பது போன்ற அவ்வளவு நெருங்கிய உறவு வேறொன்றிலும் காணப்பட முடியாது. உண்மையில், அந்த சேய்க்கு, நாம் தனிப்பட்ட ஒரு ஆன்மா என்ற தன்னுணர்வு கிடையாது. ஆனால், அந்தக் குழந்தை பெரிதாகிறது; தன் சொந்த கால்களால் நிற்கிறது; இப்படியும் அப்படியும் ஓடியாடுகிறது; பின்னர் என்றேனும் ஒரு நாள் தனக்கும் தனி ஆன்மா, தனக்கு சொந்தமான ஓா உயிர் இருப்பதாகக் கண்டு பிடித்து விடுகிறது. இதையே கவியரசர் இக்பால்:

> "குறு குறுப்பான பார்வையுடைய அவன் கண்கள். தன்னையே நோக்குகின்றன. அப்போது அவன், தன் சின்னஞ்சிறு கையை மார்பின் மீது வைத்து, "நான் ஒரு மனிதன்" என்று இரைகிறான்.

என்று வர்ணிக்கிறார். அந்த க்ஷணம் முதல் அவன் தன் தாயை விட்டுத் தனியே பிரிந்து விடுகிறான்; தான் தனி மனிதன் என்ற உணர்ச்சியே அவனுக்கு மேலோங்கி நின்று

விடுகிறது. சமுதாயங்களின் நிலைமையும் இதுதான். சமுதாயம் என்னும் ஆன்மா, தன்னுணர்வு பெற்றவுடன், வேறொரு ஆன்மாவுடன் இணைய மறுத்து விடுகிறது. இரண்டு வித விருப்பங்களை ஓர் உடலில் நீங்கள் புகுத்த முடியாது. அவ்வாறு புகுத்தினால் மோதல் ஏற்படுவது நிச்சயம். நெடுங்காலத்திற்கு முன் கவிஞர் ஸாதி கூறியது போல இண்டு பரதேசிகள் ஓரே விரிப்பில் அமைதியாக உறங்கலாம்; ஆனால், இரண்டு சுல்தான்கள் ஓரே அரச போகத்திலிருக்க முடியாது. இதுதான் இந்திய முஸ்லிம் களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை. அவர்கள் தாங்களாகவே தங்களுக்கென உணர்ச்சிகளைப் பெற்று விட்டனர். இதற்குரிய காரணங்களை பின்னர் விவரிப்போம்.

ஒரு சமுதாயம், தானகவே மனமுவந்து, தனது அரசுரிமையைப் பிறரிடம் ஒப்புவித்து விடாது. அல்லது வேறொரு சமுதாயத்துடன் இணைந்து ஒரு பெரும் தனிச் சமுதாயமாகக் கலந்து விடவும் அது சம்மதியாது. ஆனல் இந்தியாவின் பூர்வீகக் குடிகளை ஆரியர் மாற்றியது போல ஒரு கட்டுப்பாடான அடக்கு முறை மூலமோ அல்லது வேல்ஸ் மக்கள், ஸ்காட் மக்கள், பிரெஞ்சு கனேடிய மக்கள் முதலியோரைப் போன்று படை யெடுப்பு ஆக்கிரமிப்புக்குப் பிறகு தாராளமாக நடத்துவதன் மூலமோ ஒரு சமுதாயத்தின் தேசிய உணர்ச்சியையும், விருப்பத்தையும் நாசமாக்குவது சாத்தியமேயாகும். ஒரு ஜெர்மன் எழுத்தாளர் கூறுவதாவது:—"ஒரு அரசாங்கம் என்பதன் சரித்திர பூர்வமான அர்த்தம் என்ன வெனில்: பல்வேறு கோஷ்டியினருக்கிடையே யுத்தம் ஏற்பட்டு, அந்த யுத்தத்தின் இறுதியில் வெற்றி பெற்ற கோஷ்டி, தோல்வியுற்றக் கூட்டத்

தாரைத் தன் வழிப்படுத்தி, அவர்கள் மீது அரசு செலுத்தும் ஓர் அங்கம் ஆகிவிடுகிறது. இதுதான் அரசாங்கம் என்பது......................அரசாங்கத்தின் ஆரம்பம் சட்ட பூர்வமான உறவுகள் கொண்டதல்ல; ஆனால், அதிகாரம், செல்வ மிகைப்பு முதலியவைகளைக் கொண்டதாகும். சமத்துவப் பிறவிகள் எப்போதும் ஒன்றாக இணைந்து ஒரு அரசாங்கமாகியது கிடையாது. அரசாங்கம் தோன்றுவது ஒப்பந்தங்கள் மூலமாகவல்ல; ஒரு கோஷ்டி இன்னொரு கோஷ்டியை அடிமைப்படுத்தி, அதன் மீது ஆதிக்கம் கொண்டுவிடுவதன் மூலமே அரசாங்கம் தோன்றுகிறது. * இக் கூற்றின் கருததென்ன? இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோஷ்டிகளோ, சமூகங்களோ, ஒரு ஒப்பந்த உடன் பாட்டின் மூலம் ஒரே ஐக்கிய சமுதாயமாக ஒன்று பட்டு விடாது என்பதுதான். இவ்வாறு எந்த சமுதாயமும் ஒன்று பட்டதாக சரித்திரத்தில் காணப்பட வில்லை. ஜெக்கோஸ்லோவாகியாவின் நிலைமை மிக மிகச் சமீப காலத்தியது. அதை நாம் பொருட் படுத்து வதற்கில்லை. எவ்வாறிருப்பினும் அரசாங்கங் களெல்லாம் அதிகார பலத்தின் மூலம் நிர்மாணிக்கப் பட்டவைகளே யன்றி, ஒப்பந்

---

* டாக்டர் ஜோஹன்னஸ் ஷூபர்ட் எழுதிய "Machiavelli unddie politischen Probleme unserer Leit" என்ற புத்தகம் பக்கம்: 54, 55. ப்ரைஸ் பிரபு இதே விஷயத்தை வேறு விதமாகப் பின்வருமாறு கூறுகிறார்:— "ஒவ்வொரு அரசியல் சமூகக் கோஷ்டியும் அதன் அமைப்பு எத்தகையதா யிருப்பினும் சரி அது குடியாட்சியா யிருப்பினும் சரி, முடியாட்சியா யிருப்பினும் சரி, இதர ஒவ்வொரு சமூகங்களுக்கும் ஒரு அரசு ஆதிக்கத் தன்மையினதாக தோன்றுமே யல்லாது வேறு வகையாகத் தோன்றாது." ("சர்வ தேச உறவுகள்" பக்கம் 3)

தங்கள் மூலம் நிர்மாணிக்கப் பட்டனவல்ல வென்பதே உண்மை. ஒரே கருத்தும், உள் நாட்டு ஒற்றுமையும் உள்ள மக்களால் கிரகிக்கப்பட்ட அதிகார பலமே ஒரு அரசாங்கத்தின் உண்மையான அஸ்திவாரமாகும். ஒரே ஆட்சியில் இரண்டுவித கோஷ்டியார் அருகருகே சம பங்காளிகளாக வாழ முடியாது. இதர ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறே நடைபெற்று வந்திருக்கிறது. இந்தியா மட்டும் இதற்கு விலக்கல்ல. சமூக அமைப்புகளெல்லாம் அதன தன் தேசியக் கோட்பாட்டிற்குப் பொருந்தாத தனி விஷயங்களாகும். இவை இரண்டும் நேர் முரண்பாடானவை.

இந்த தேசீய சமூதாய அமைப்பு, ஹிந்து இந்தியா இத்தனை ஆண்டுகளாகப் பின் பற்றி வரும் அரசியல் இலட்சியங்களின் உட்புற நோக்கத்தைத் தெளிவாக விளக்குகிறது. சமுதாய மென்பது திட்டமான ஒரு அமைப்பு வாய்ந்ததல்ல வென்பதை நான் மீண்டும் கூறுகிறேன். இனம், பூகோளம் என்று தனித்துக் கூறுவது போல் சமுதாயத்தைக் கூறிவிட முடியாது. சமுதாயமென்பது மனோ உணர்ச்சியின் திரட்டால் ஏற்படுவது. நாம் ஏற்கெனவே இதற்கு முன் கூறியதுபோல் இந்த உணர்ச்சியை நாசமாக்கி விடுவது எளிதேயாகும். ஒரு முறை இந்த உணர்ச்சி ஒழிந்த மக்களை அடிமைகளாக அடக்கி, ஒடுக்கி, நசுக்கி, எவ்வித புரட்சி பயமும், ஆட்சேப எதிர்ப்பு அபாயமும் இல்லாமல் இந் நாட்டில் வதியும் தீண்டாதாரைப் போன்று அடிமைப் படுத்தி விடலாம். மானிட உரிமை ஒவ்வொன்றும் அந்த தீண்டாத மக்களுக்கு மறுக்கப் பட்டு, அஃறிணைப் பிராணிகள் போன்று

நடத்தப் படுகின்றனர். ஆரிய ஆக்கிரமிப்பாளர்கள், இத் திண்டாதாரின் தேசீய உணர்ச்சியைக் கொன்று விட்டனர். ஆதலால், இத்துணை நூற்றாண்டுகளாக அவர்கள் அடிமைகளாக நடத்தப் பட்டும், அவர்கள் இதை ஒரு சமயத்தில் கூட ஆட்சேபித்தது கிடையாது. ஒரு மக்களின் கௌரவம், தன்மதிப்பு, வாழ்வு முதலியன வெல்லாம் அவர்களின் தேசீய உணர்ச்சியைப் பொறுத்தே இருக்கின்றன. இதைத் தவிர மக்கள், தங்களைத் தற்காத்துக் கொள்ள வேறு வழி கிடையாது. ஆனால். ஹிந்து அரசியல் இலட்சியமோ வெனில், முஸ்லிம்களிடையே தீவிரமாக வளர்ந்தோங்கி வரும் இந்த தேசீய உணர்ச்சியை நசுக்குவதாகவே இருந்து வந்துள்ளது. இதைப் பற்றி பின்னொரு முறை விவரிப்போம்.

சமுதாயங்கள் ஒன்று சேருவது சாத்திய மில்லாது போய் விடுகின்றமையால், ஒவ்வொரு சமுதாயமும் தனி சுதந்திர வாழ்வு நடத்த சாத்தியமாகுமாறு செய்ப வேண்டும். ஆதலால்தான் அரசியல் தத்துவ ஞானிகளும், ராஜ தந்திரிகளும் சரி, "ஒரு அரசாங்கம் ஓரே தனிப்பட்ட சமுதாயத்துடையதாயிருப்பது"* எனக்கூறி யிருக்கின்றனர். ஆனால், ஒரு காலத்தில் பெரிய முழுச் சமுதாயத்தின் ஒரு பகுதியினராக இருந்த மக்கள் பிரிந்து வாழ வேண்டுமென வற்புறுத்தலாமா? அவர்கள் பிரிந்து கொள்ள வேண்டுமெனக் கூறுவது எவ்வாறு நியாயமாகும்? என்பன போன்ற கேள்விகள் எழக்கூடும். மிஸ்டர் சித்க்

* மிஸ்டர் சித்க்விக் எழுதிய "அரசியலின் அம்சங்கள்;" பக்கம்: 224.

வித்* கூறுவதை கவனியுங்கள்: "ஒரு புதிய சுதந்திர அரசாங்கம் ஏற்படுத்தத் தகுதி வாய்ந்த ஒரு பிரதேசத்திலோ, அல்லது ஒரு தனி அரசாங்கத்துடன் இணைக்கப்பட தகுதிவாய்ந்த பிரதேசத்திலோ, அங்கு வாழும் மக்களில் பெரும் பான்மையோர் தனிப் பிரிவினையை ஆதரித்து முடிவு செய்தால், இந்தப் பெரும் பான்மையினரின் பிரிவினைக் கோட்பாடு சட்ட பூர்வமானதா என்பதைக் கவனிக்க வேண்டும். மாற்றத்தால் சமுதாய உணர்ச்சி ஏற்படுமென்ற அனுமானத்தின் மூலம் பிரிவினை கோரப்படுவது தவறு. பிரிவினைக்கு பொருத்தமான காரணம் ஏற்படவில்லையாயின், பலாத்காரமாக அதை அடக்குவதைப் பெரும்பான்மையினர் ஆதரிப்பர்." அதாவது கொடுமையும், தகுதியின்மையும் இருக்குமானால், பிரிவினை அனுமதிக்கப்படலாம் என்பதே இதன் அர்த்தம். மேற் குறிப்பிட்ட கோட்பாடு அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தைக் குறிப்பிடுவதாகும். முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கை பற்றி இந்நாட்டில் அடிக்கடி இந்த உள் நாட்டு யுத்தம் உதாரணமாகக் கூறப்படுகிறது. அமெரிக்க யூனியனிலிருந்து தென் மாகாணங்கள் பிரிந்து விடாமல் ஆயுத பலத்தின் மூலம் வட மாகாணங்கள் தடுத்து விட்டது நியாயமேயென்றும், இது போன்றே பாகிஸ்தான் பிரிவினையை ஹிந்து இந்தியா தடுப்பதும் நியாயமே யென்றும் உதாரணம் காட்டப்படுகிறது. இந்நாட்டின் ஹிந்து—முஸ்லிம் பிரச்னையில் ஏற்பட்டுள்ள தகராறையும், அமெரிக்க வடக்கு, தெற்கு மாகாணங்களிடையே ஏற்பட்டிருந்த தகராறையும் பூரணமாக அறிந்தவர்கள், இவ்விரண்டு விஷயங்களை

---

* "இபித்" (Ibid) பக்கம்: 226.

யும் ஒன்றுக் கொன்று உதாரணமாகக் கூறுவது பொருத்த மற்ற தென்பதைத் தெளிவாக உணர்வர். அமெரிக்கா வின் வட மாகாணங்களின் மக்களும், தென் மாகாண மக் களும் ஒரே இனத்தவர்கள்; ஒரே மதத்தினர்கள்; ஒரே மொழியைப் பேசுபவர்கள்; ஒரே சரித்திர, கலாசாரப் பண் டைப் பெருமையுடையவர்கள் ஆவர். இவ்விருவருக்கு மிடையே ஏற்பட்ட தகராறு சமுதாய மோதலால் ஏற்பட் டதல்ல; ஒரே தனிப் பொருளாதாரப் பிரச்னையால் ஏற்பட் டதாகும். அதாவது நீக்ரோ அடிமைகள் அகற்றப்பட வேண்டுமென்பதுதான் இவர்களுக்கிடையே ஏற்பட்ட தக ராறுக் குரிய விஷயம். இது ஒன்றே தனிப் பிரிவினைக்குப் போதுமான காரணமாக மாட்டாது. இப் பிரச்னையை நாம் வேறு வகையில் நோக்கினல், இந்த வேறுபாடு தெளிவாக விளங்கும்.

அரசியல் தத்துவ ஞானிகள் ஒரு சமூகத்திற்கும், ஒரு சமுதாயத்திற்கு மிடையே தெளிவான வேறுபாட்டை எடுத்துக் காண்பிக்கின்றனர். இந்த வேறுபாடு அடிப்படை யான தன்மை வாய்ந்தது. ஒரு சமூகத்திற்கு அனுமதிக்கப் பட்டுள்ள அரசியல் உரிமைகள் எவை, ஒரு சமுதாயத்திற்கு அனுமதிக்கப் பட்டுள்ள அரசியல் உரிமைகள் எவை என்ற இரு விஷயங்களிடையே வேறுபாடு காண்பிக்கப் பட்டிருக் கிறது. ஒரு சமூகத்திற்கு நிர்வாக மாற்றத்தைக் கோர மட்டுமே உரிமையுண்டென்றும், ஆனல் ஒரு சமுதாயத் திற்கு பிரஜா உரிமைகள் மட்டுமின்றி பிரிவினை உரிமையும்

கோர உரிமையுண்டென்றும் இந்த அரசியல் தத்துவ ஞானிகள் கூறுகின்றனர் *

இதன் அர்த்தமென்ன? டாக்டர் அம்பேத்கார் கூறுகிறபடி "ஒரு சமூகம் பாதுகாப்புகளைக் கோர உரிமை பெற்றிருக்கிறது; ஒரு சமுதாயத்துக்கோ பிரிவினை கோர உரிமையுண்டு" என்பதுதான் இதன் அர்த்தம். ஆனால், இவ்விருசாராரின் உரிமைகளில் இந்த வேறுபாடு என்

---

* மிஸ்டர் சித்க்விக் பின்வருமாறு எழுதுகிறார்:—............ "ஒரு சர்க்கார் சட்ட பூர்வமானதாக இருக்க வேண்டுமானால், ஆளப்படும் மக்களின் சம்மதத்தைப் பெற்றதாகவே இருக்க வேண்டுமெனக் கருதுவோர், பின் வரும் முறையில் அனுமானிப்பதாகக் காணப் படுகிறது: ஒரு அரசாங்கத்தின் கீழ் உள்ள சிறுபான்மையினரின் பிரிவினையை அவ்வரசாங்கத்தின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் ஆதரிப்பரென அவர்கள் கருதுகின்றனர்... .........ஆனல், பிரிவினையின் மூலம் எல்லோருடைய நலன்களும் வளர்ச்சியடையுமாறு செய்யப்பட்ட சம்பவங்களுமிருக்கின்றன வென நான் கருதுகிறேன். உதாரணமாக, ஒரு அரசாங்கத்தின் இரு பகுதிகள் கடல் மூலமோ, அல்லது இதர தடைகளாலோ பிரிக்கப்பட்டு, அவைகளிடையே போக்கு வரத்து வசதிகள் இல்லாது போய் விட்டாலும் சரி, அல்லது இனம், மதம், சரித்திரம், தற்போதைய சமூக நிலைமைகள் முதலியவைகளின் வேறுபாடுகளால் அவ்விரு பிரதேசத்தினரும் சட்டங்களியற்றப் படுவதிலோ நிர்வாக முறைகளிலோ வெவ்வேறு தேவைகளிருக்கக் கூடியவர்களாயிருப்பினும் சரி, அப்போது அந்நாடுகளின் உள் நாட்டு விவகார நிர்வாகங்களுக்கு ஒரு பொதுவான சர்க்கார் இருப்பது பொருத்தமாகி விடும். ஆனல், அதே சமயத்தில் அவற்றின் வெளி நாட்டு விவகாரங்கள் மாற்றமானவைகளாயிருக்குமாயின், அதனல் ஒவ்வொரு பகுதிக்கும் அதிகமான நஷ்டமே எற்படும்." — "அரசியலின் அம்சங்கள்" பக்கம்: 648—649.

இருக்க வேண்டும்? ஒரு சமூகத்திற்கும், ஒரு சமுதாயத் திற்குமிடையே எவ்விடத்தில் வேறுபாடு காணப்படுகிறது? இதற்குக் காரணம் என்ன? டாக்டர் அம்பேத்கார் இதற் குப் பதில் கூறுகிறார். அவர் கூறுவதாவது:—"இந்த வேறு பாட்டிற்கான காரணங்கள் இறுதிக் கதிமோட்சப் பிரச்னை கள் சம்பந்த முடையனவாகு மென்று தான் என் மன திற்கு காணப்படுகிறது. ஒரு அரசாங்கத்தில் அநேக சமூ கங்களிருக்கும் அல்லது அநேக சமுதாயங்கள் இருக்கும். பல சமூகங்கள் வாழும் ஒரு அரசாங்கத்தில் ஒரு சமூகம், மற்றொரு சமூகத்தின்மீது விரோதமாக எழலாம். இவை யிரண்டும் ஒன்றை யொன்று மோதிக் கொள்ளலாம். ஆனால், அந்த இரு சமூகங்களின் கதிமோட்ச விஷயத்தில் அவை ஒன்று பட்ட கருத்துடையனவாக இருக்கின்றன. ஆனால், பல சமுதாயங்கள் அடங்கிய ஒரு அரசாங்கத் திலோ, ஒரு சமுதாயம் வேறொரு சமுதாயத்தின் மீது கொதித்தெழுமானால், இந்த விரோதம் அவைகளின் இறு திக் கதிமோட்சத்திலும் இருந்தே தீரும். சமூகங்களுக் கும், சமுதாயங்களுக்கு மிடையே உள்ள வித்தியாசம் இதுதான். இந்த வித்தியசாம்தான் அவையிரண்டின் அரசி யல் உரிமைகளிலும் வேறுபாட்டைக் காண்பிக்கின்றன.... ....ஒரு சமூகம் அரசாங்க மாற்றத்தை மட்டும் கோருகிறது; ஏனெனில் அந்த உரிமையோடு அது திருப்தியடைந்து விடு கிறது. அது வேண்டுவதெல்லாம் சர்க்கார் போக்கிலும், அமைப்பிலும் மாறுதல் ஏற்பட வேண்டுமென்பதே. இறுதி இலட்சியத்தில் எவ்வித மாறுதலும் வேண்டுமென அது வழக்காட வில்லை. ஒரு சமுதாயத்திற்கோ வெனில், பிரி வினை உரிமை அளிக்கப்பட வேண்டும். ஏனெனில், வெறும் சர்க்கார் மாற்றத்தால் மட்டும் அதற்குத் திருப்தி ஏற்பட்டு

விடாது. அது வழக்காடுவ தெல்லாம் இறுதி கதிமோட் சத்தைப்பற்றியதேயாகும்''* மேலும் அவர் பின் வருமாறு கூறுகிறார் :—''......................ஒரு சமூகம், அது பெரிய தாயிருப்பினும் சரி, சிறியதாயிருப்பினும் சரி, இதர சமூ கங்களைப் பார்க்கிலும் எத்துணை வேறுபாடுகளுடையதா யிருப்பினும் அதன் இறுதி இலட்சியமும் இதர சமூகங் களின் இறுதி இலட்சியங்களும் ஒன்றுகவே இருக்கும். ஆனல், ஒரு சமுதாயமோ அதன் அரசாங்கத்தின் இதர சமுதாயங்களைக் காட்டிலும் வேறு பட்ட அமைப்புடைய தாக இருக்கும். இதுமாத்திரமல்ல; அச்சமுதாயங்கள் கொண்டுள்ள இறுதி இலட்சிய நோக்கங்களுக்கு நேர் மாருன இறுதி இலட்சியத்தைக் கொண்டதாகவும் இருக் கும். என்னைப் பொறுத்தவரையில், ஒரு சமூகத்திற்கும், ஒரு சமுதாயத்திற்கு மிடையே வேறுபாட்டைக் கண்டு பிடிப்பதற்கு இதனையே சோதனையாக மேற்கொள்ளுவதி னின்றும் நான் கொஞ்சமும் தயங்கமாட்டேன். தங்களுக் கும், பிறருக்குமிடையே எவ்வளவு வித்தியாசம் வேறுபாடு களிருப்பினும் அவைகளைப்பொருட்படுத்தாமல் தங்களுக்கு மட்டுமின்றி தங்கள் எதிரிகளுக்கும் ஒரே இறுதி இலட்சி யந்தானிருக்கிறதென ஒப்புக் கொள்பவர்களே ஒரு சமூகத் தினராவர். தங்களுக்கும், பிறருக்குமிடையே உள்ள வேறு பாட்டு வித்தியாசங்களை மதிப்பதுடன், தங்களின் இறுதி இலட்சியமும் வெவ்வேறுனவை எனக் கருது வோரே ஒரு சமுதாயத்தினராவர். ஒரு பொதுவான இறுதி இலட்சியத்தை ஒப்புக்கொள்வதும், ஒப்புக் கொள்ளா மலிருப்பதுமான இந்த வித்தியாசமே ஓர் உண்மையை

---

* ''பாகிஸ்தான் பற்றிய நினைவுகள்:'' பக்கம் 329.

தெளிவு படுத்துகிறது. ஹிந்துக்களுடன் தொடர்புள்ள தீண்டாதார், கிறிஸ்துவர், பார்ஸிகள் முதலிய மக்கள் எல்லாம் ஹிந்துக்களின் இறுதி இலட்சியத்தைப் போன்ற தொரு பொது இறுதி இலட்சியமுடையை சமூகத்தினர் களாவரென்பதையும், முஸ்லிம்கள் ஒருசமுதாயத்தினரே யென்பதையும் தெளிவு படுத்திக் காட்டுகிறது. அடிப் படை விஷயமான இறுதி இலட்சியத்திலேயே அரசியலில் வேறுபாடு களிருப்பதால் இவ்வேறுபாடு மிக மிக முக்கி யாம்சமானது. இந்த வேறுபாட்டின் முக்கியாம்சம் மறுக் கப்பட முடியாது. இவ்வேறுபாடு அசட்டை செய்யப் பட்டால், அரசாங்கம் பல தகராறுகள் உடையதாக ஆகி விடும். ஆனால், பாதுகாப்புகளைப் பொறுத்தவரை பெரிய சமுதாயமும், சிறிய சமுதாயமும் ஒரே தனி அரசியலின் கீழ் வாழத் தையாராக இருப்பதால், எவ்வித வேறு பாடுங் காணப்பட முடியாது''*

நான் மேலே கூறிய இறுதி இலட்சியம் என்ற வார்த்தை, வாழ்க்கையின இறுதி இலட்சியம் என்ற அர்த் தத்தில் கொள்ளப் படக்கூடாது. நான் "தேசிய உணர்ச்சி" என்று குறிப்பிட்டிருப்பதன் மற்றொரு பெயரே "இறுதி இலட்சியம்'' எனப்படுவது. ஒரு கூட்ட மக்களின் மதம், சரித்திரம், பண்டையப் பெருமை, எழுத்தறிவு, கலாசாரம் முதலியவைகளிலிருந்துதான் இந்த இறுதி இலட்சியம் அல்லது தேசிய உணர்ச்சி எற்படுகின்றது வகுப்பு உணர்ச் சியும், தேசிய உணர்ச்சியும் வெவ்வேறானவை. அவற்றின்

* "பாகிஸ்தான் பற்றிய நினைவுகள்", பக்கம் 338. இதே கொள்கையை 1937 ஆம் நவம்பர்மீ 16உ வெளியான "ட்ரூத்" பக்கம் 4-ல் நான் விவரித்திருக்கிறேன்.

அமைப்புகள், தன்மைகள், இலட்சியங்கள் ஆகியன வெல்லாம் வெவ்வேறானவைகளே. அமெரிக்காவின் தென் மாகாணங்களில் வசிக்கும் மக்களுக்குக் குறைகளிருந்தனவே யன்றி, தனிச் சமுதாய உணர்ச்சி எதுவுமில்லை. ஆதலால், அவர்கள் ஒரு "சமூகத்தினர்" மட்டுமேயாவர். தனது குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டுமெனக் கோர மட்டும் அதற்குரிமை யுண்டே யொழிய, தனிப் பிரிவினையைக் கோர உரிமை கிடையாது. வட மாகாணங்கள், அந்தத் தென் மாகாணங்களைத் தங்கள் யூனியனிலேயே இருக்க வேண்டுமென நிர்ப்பந்தித்ததும் நியாயமே. தென் மாகாணத்தவர்கள் எந்த வகையிலேனும் தாங்கள் தனிச் சமுத்தாய உணர்ச்சியை அடைந்திருப் பார்களாயின், அவர்களின் தனிப் பிரிவினைக் கோரிக்கை நியாயமுள்ளதா யிருக்கும். இந்தியாவிலுள்ள பார்ஸிகளும், கிறிஸ்துவர்களும் மிக மிகச் சொற்பமாக இருக்கின்றனர். அவர்கள் இந்தியா வெங்கும் சிதறி வசிக்கிறார்கள். அவர்களில் கிறிஸ்துவர்கள், தங்களுக் குள்ளேயே அநேக பிரிவினர்களாக வாழுகின்றனர். தீண்டப் படாதார், எண்ணிக்கையில் அதிகமானவர்களா யிருப்பினும், சிதறுண்டே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு சொந்தமான கலாசாரமோ, பண்டையப் பெருமைகளோ கிடையா. ஆகவே, பார்ஸிகள், கிறிஸ்துவர்கள், தீண்டாதார் ஆகிய மூன்று வகையான மக்களும் வெறும் சமூகத்தினர்களாக மட்டுமே இருக்க வேண்டியவர்கள்; இவர்கள் ஒருக்காலும் சமுதாயங்களாக முடியாது. முஸ்லிம்களின் பிரச்னையோ இவைகளை விடச் சற்று அதிக பலம் வாய்ந்த தன்மையுடையது. முஸ்லிம் கூட்டம் எங்கெங்கு வசிக்கிறதோ, அங்கெல்லாம் அது சிறியதா யிருப்பினும் சரி, பெரியதா யிருப்பினும் சரி,

உலக சகோதரத்துவத்தில் தானும் ஒரு பகுதி என்ற உணர்வு அதற்கிருக்கிறது. முஸ்லிம்களின் இந்த உணர்ச்சிப் பெருக்கை மறுப்பது சாத்திய மில்லை. கல்வி யின்மையும், போக்குவரத்து சாதனங்களில்லாமையும், வெகு நாட்களாக இருந்துவரும் ஏகாந்தமும் அவர்களை உறக்கத்திலாழ்த்தி யிருக்கலாம். ஆனால், இந்த நிலைமை நீங்கி விட்டால், அவர்களின் உறக்க மொழிந்து மீண்டும் உயிர் உணர்வு ஏற்பட்டு விடும். உலக சமுதாயத்தில் தாங்களும் ஒருவர் என்ற உணர்ச்சி அதிக பலம் வாய்ந்தது. ஒரு சாதாரண சமூகத்தினருடைய அந்தஸ்திற்கு முஸ்லிம்களின் அரசியல் உணர்வைக் குறைத்து விடுவது என்பது சாத்தியமல்ல. (இந்திய முஸ்லிம்களின் இந்த உணர்ச்சியை அழித்து விடுவதற்காகவே வார்தா கல்வித் திட்டம் ஏற்படுத்தப் பட்ட தென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.)

ஆனால், இந்த உணர்ச்சி எத்துணை பலம் வாய்ந்ததாக இருப்பினும ஒரு சிறு பான்மைக் கோஷ்டிக்குப் பிரிவினை உரிமையைக் கொடுத்து விடாது. ஒரு முஸ்லிமல்லா சர்க்காரின் கீழ் வாழும் ஒரு முஸ்லிம் சிறு பான்மைக் கூட்டம் அதன் இயற்கை வளர்ச்சியால், ஒரு காலத்தில், அதன் முந்திய அரசு வர்க்கத்தினருக்குப் பதிலாகத் தன் சொந்த சர்க்காரை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்ததாக ஆகிவிடலாம். மேலும் முஸ்லிம் கோஷ்டியின் இஸ்லாமிய உணர்ச்சி, போதிய பலம் உள்ளதா யிருக்குமாயின் தன் பலத்தை வளர்ச்சி யடையுமாறு செய்ய முயல்வது இயற்கையே. ஆனால், அந்த நாள் வரும் வரை அது ஒரு சிறு பான்மை அந்தஸ்தையே ஒப்புக்கொண்டு, தனக்குக்

கிடைக்கக் கூடிய பாதுகாப்பு உரிமைகளுடன் திருப்தி யடைந்து விட வேண்டும். உதாரணமாக ஜனுப் ஜின்ஞ விவரித்துக் கூறி யிருப்பதுபோல் ஐக்கிய மாகாணத்தில் வதியும் முஸ்லிம்கள் ஒரு சிறுபான்மைச் சமூகத்தினராக இருப்பதுடன், பெரிய பிரதேச மொன்றில் சிதறுண்டு வாழ் கின்றனர். ஆதலால், பிரிவினை உரிமையைக் கோர அவர் களுக்கு அதிகாரமில்லை. அவர்கள், தங்கள் நியாயமான உரிமைகளுக்காகவும், தங்கள் வளர்ச்சியை முன்னிட்டும் புரட்சியும், கிளர்ச்சியும் செய்ய மட்டும் உரிமை யிருக்கி றதே யொழிய பிரிவினை உரிமையை வற்புறுத்த அதிகார மில்லை. இது போன்றே ஒரு சிறிய சமூகத்தினராக, பெரிய தொரு பிரதேசத்தில் சிதறுண்டு வாழ்ந்து வரும் சீக்கியர் களுக்கும் பாதுகாப்புரிமைகளுக்காகப் புரட்சியும், கிளர்ச்சி யும் செய்ய மட்டும் உரிமையுண்டே யொழிய பிரிவினை கோரவோ, சுயநிர்ணயத்தை வற்புறுத்தவோ உரிமை கிடையாது. தெளிவும், உறுதியும் வாய்ந்த பெரும் பான்மையாக வசிக்கும் ஒரு சொந்தமான பிரதேசத்தை யுடைய மக்களுக்கு மட்டுமே பிரிவினை உரிமை யிருக்கிறது. இந்த மக்கள் "பிரமாதமான அடக்கு முறைகளுக்கு" உள் ளாவதாகவோ, "தங்கள் சட்ட பூர்வமான அபிலாஷைகள் கடுமையாக எதிர்க்கப் படுவதாகவோ" உணர்ந்தாலும், அல்லது ஜாதி, மதம், பண்டைய சரித்திரப் பெருமை, தற் போதைய சமூக நிலைமைகள் ஆகியவைகளின் வேறுபாட் டால், இதரர்கள் தங்களுடைய விஷயங்களில் தலையிடக் கூடாதென்ற நிலைமை ஏற்பட்டாலும், அத்தகைய சந்தர்ப் பங்களில் அவர்களின் தனிப் பிரிவினை உரிமை மறுக்கப்பட முடியாததாகி விடுகிறது. இந்தியாவின் வட மேற்கிலும், சில கீழ்ப்பகுதிகளிலும் உள்ள முஸ்லிம்கள் தனியாகப்

பிரிக்கப்பட வேண்டுமென முஸ்லிம்லீக் கோரி வருவதும் இந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே யாகும். இதே இலட்சியம் ரஷ்ய அரசாங்கம் நிர்மாணிக்கப்பட்டது முதல் ரஷ்ய நாட்டினரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. ரஷ்யாவில் சுமார் 60 பெரிய சமுதாயக் கோஷ்டிகள் இருக்கின்றன. ரஷ்யாவின் வியாக்கியானப்படி ஒரு சமுதாயம் என்பது "சரித்திரப் பூர்வமாகத் தனி மொழி, தனிப் பிரதேசம், தனி அந்தஸ்து" முதலியவைகளை யுடைய ஒரு கோஷ்டியாகும். இந்த அம்சங்களை யெல்லாம் ஒருங்கே பெற்றுள்ள ஒரு கூட்டமே ரஷ்யாவின் சட்டப்படி ஒரு சமுதாயமெனக் கூறப்படும். அதற்கு அரசியல் பிரிவினை உரிமையும் உண்டு. நாம் ஏற்கனவே கூறியுள்ள இலட்சியங்களைக் காட்டிலும் ரஷ்யாவின் கோட்பாடு தாராளத்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. நமது இலட்சியத்தின்படி ஒரு கூட்ட மக்கள், அடக்குமுறை அச்சங் கொண்டிருந்தாலோ, அல்லது தனது சட்டபூர்வமான விருப்பங்களும், நலன்களும் பலமாக எதிர்க்கப் பட்டாலோ, அவர்கள் பிரிந்து போக உரிமையுண்டு. ஆனால், ரஷ்யாவிலோ, குறிப்பிட்ட ஒரு சில அம்சங்கள் ஒரு கூட்டத்திற்கு இருக்குமாயின், அதற்கு சுய நிர்ணய உரிமையும், அரசியல் பிரிவினை உரிமையும் உண்டு. பிரிவினை அபிலாஷை அளவுக் கதிகமாக வளர்ந்தோங்கும் வரை அதன் பிரிவினை உரிமை வற்புறுத்தப்பட முடியாதென்பதில் சந்தேகமில்லை.

---

## அத்தியாயம்—2

# அன்புள்ள அண்டைவீட்டுக்காரர்

நாம் இப்போது ஹிந்து—முஸ்லிம் உறவுகள் பற்றிய பிரச்னையை, அவர்களின் சரித்திர, கலாசார வேறுபாடுகளையும், சென்ற அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட அரசியல் கோட்பாடுகளையும் மனதில் கொண்டு கவனிப்போம். இந்த இரண்டு மக்களுக்கிடையே யுள்ள கலாசார வேறுபாடுகளைப் பற்றி நாம் அதிகமாக விவரித்திருக்கிறோம். இரண்டு மககளையும் வேறுபடுத்தி, அரசியல் வேற்றுமை யுணர்ச்சியை ஏற்படுத்தி வைத்திருப்பது அவர்களின் மத பக்தியே என்று பலர் கூறுகின்றனர். ஆதலால், ஒரு பூரண அரசியல் அடிப்படையில் ஒரு ஐக்கிய இந்திய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்காக மதத்தை அரசியலிலிருந்து தனியே பிரித்துவிட வேண்டுமென அவர்கள் வாதாடுகின்றனர். இதே வாதத்தை தேசீய வாதிகள் என்று கூறப்படுவோர் இன்னும் அதி தீவிரமாக வற்புறுத்துகின்றனர். இவர்களுக்கு ஹிந்து—முஸ்லிம் பிரச்னையின் உண்மையான தன்மை இன்ன தென்றே தெரியாத அயல் நாட்டினரின் ஆதரவும், அனுதாபமும் இருக்கிறது. மத வேறுபாடுகளால் சகிப்புத்தன்மையும், சாந்தமு மற்று ஐரோப்பாவில் நடைபெற்ற பல போர்களை இவர்கள் வாசித்திருக்கின்றனர். இந்திய சரித்திரத்தில் ஐரோப்பிய சரித்திரத்தைப் போன்ற நிலைமை கிடையாது. இதைப்பற்றி நாம் இங்கு விவரிப்போம்.

டாக்டர் அப்துல் லத்தீபின் ஜனப் பரிவர்த்தனைத் திட்டமும், ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் தனித்தனி

கலாசாரப் பிராந்தியங்களில் பிரித்து வைக்கும் யோசனையும் அவர்களின் அரசியல் வேறுபாடுகள், அவர்களுடைய கலா சாரத்திலிருந்தே தோன்றின என்ற அனுமானத்தின் மீது தான் உருவாக்கப்பட்டன. இந்த இரண்டு கலாசாரங் களும் தனித்தனி பிராந்தியங்களில் ஒருவர் விஷயத்தில் மற்றவர் தலையிடாமல் தங்கள் தங்கள் மனப்போக்கின்படி வளர்ச்சியடையுமாறு அனுமதிக்கப்பட்டால், அப்போது அவ்விரு சமூகங்களும் அடுத்தடுத்து அமைதியாக வாழ்ந்து வரும். டாக்டர் அம்பேத்கார் கூறுவதாவது:—"ஹிந் துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே தடையாக நிற்கும் விஷயம் வெறும் வேறுபாடுமட்டுமல்ல வென்பதை இருதாப்பாரும் உணரத் தவறி விட்டனர். இதுவே ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுவதற்குத் தடையாக இருக்கிறது. இதுதான் உண்மைக் காரணம் ஹிந்து—முஸ்லிம் களுக்கிடையே யுள்ள வேறுபாடு வெறும் அபிப்பி ராய வேறு பாடல்ல; அது மத உணர்ச்சித் தன்மை வாய்ந் தது. சரித்திரம், மதம், கலை, சமூகம் முதலியவற்றின் வேறு பாட்டால்தான் ஒற்றுமை ஏற்படுவது தடைபட்டு நிற்கிறது. அரசியல் வேறு பாடென்பது இவற்றின் ஒரு நிழல் போன்றது. இந்த வேறுபாடுகளாலேயே இருதரப் பாருக்கும் மன அதிருப்தி ஏற்படுகிறது."*

முஸ்லிம்கள் கி. பி. 712-ல் சிந்து மாகாணத்தைக் கைப்பற்றினார்கள். இந்த மாகாணத்தை அவர்கள் 19-ம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை அரசு நடத்தி வந்தனர் பிறகு அவர்களிடமிருந்து நிர்வாகம் பிரிட்டிஷார் கைக்கு மாறியது. பஞ்சாப் மாகாணம் 1020-ம் வருஷத்தில் கஜ்ன

* "பாக்கிஸ்தான் பற்றிய நினைவுகள்", பக்கம்: 331.

யர்களால் கைப்பற்றப் பட்டு, முஸ்லிம்களின் ஆட்சியில் இணைக்கப்பட்டு, 18-ம் நூற்றாண்டின் இறுதி வரை முஸ்லிம்களின் ஆட்சியிலேயே இருந்து வந்தது. வங்காளம் உட்பட வட இந்தியா முழுதும் 12-ம் நூற்றாண்டின் முடிவுக்கு முன்பே முஸ்லிம்களின் நிர்வாகத்தின் கீழ் வந்து விட்டது. இதற்குப் பின் தக்காணம் கைப்பற்றப் பட்டது. கி. பி. 1707-ம் ஆண்டில் அவ்ரங்கஜேப் மன்னர் இறக்கும் வரை முஸ்லிம்களின் நிர்வாகம் இந்தியா முழுவதிலும் வியாபித்திருந்தது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் கலை, மதம் முதலிய வேறுபாடுகளில் தீவிரமாக இருந்திருப்பார்களாயின், இத்துணை நீண்டகால ஆட்சியில் நிலைமை மாறுபட்டு விட்டிருக்கவேண்டும். ஒன்று முஸ்லிம்கள், ஹிந்துக்களையும், மதத்தையும் அடியோடழித்து, ஹிந்து மக்கள் எல்லோரையும் இஸ்லாம் மதத்தில் சேர்த்து விட்டிருக்க வேண்டும்; அல்லது ஹிந்துக்கள், முஸ்லிம்களை அடியோடு ஒழித்து விட்டிருக்க வேண்டும். முஸ்லிம்களின் ஆட்சியில், ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றி வாழ்ந்திருந்தது மாதக்கணக்கிலோ, வருஷக்கணக்கிலோ அல்ல; இருவரும் நூற்றாண்டுகள் கணக்கில் ஒன்று பட்டு வாழ்ந்து வந்துள்ளனர். முஸ்லிம்கள் ஆளுவோராகவும், ஹிந்துக்கள் அனுதாவான நிலையில் ஆளப்படுவோராகவு மிருந்த அக்காலத்தில் வேறுபாடுகள் தீவிரமாய் இருந்திருக்குமாயின், இன்று ஒரு ஹிந்து கூட உயிராக வாழ்ந்திருக்க முடியாது. பதினொரு நூற்றாண்டுகள் முஸ்லிம் ஆட்சி நடை பெற்றபின், இன்று சிந்து மாகாணத்தில் மொத்த ஜனத் தொகையில் ஹிந்துக்கள் நான்கிலொருபாகத்தினராக இருந்து வருகின்றனர். பஞ்சாபில் சுமார் 9 நூற்றாண்டுகள் முஸ்லிம் ஆட்சி நடைபெற்றபின், இன்று ஹிந்துக்கள் (சீக்கியர்கள்,

தீண்டாதார் உட்பட) முஸ்லிம்களைப் போன்றே சம தொகையினராக வாழ்ந்து வருகின்றனர். இந்தியா முழுவதிலும் இன்று முஸ்லிம்கள் நான்கிலொரு பாகத்தினராக வாழ்கின்றனர். அறுபதாண்டுகளுக்குமுன் முஸ்லிம்கள் ஐந்திலொரு பாகத்தினராக இருந்தனர். பல நூற்றாண்டுகள் வரை முஸ்லிம்களின் நிர்வாகத்தின் நடு நாயகமாக விளங்கிய டில்லியிலும், ஆக்ராவிலும் முஸ்லிம்கள் இன்று மிக மிகச் சிறு பான்மையினராகத்தான் இருக்கின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் என்ன கூறுகின்றன? இந்த இருமக்களுக்குமிடையே மத, கலாசார வேறுபாடுகளிருந்தும், இவர்கள் ஒன்றி, சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்து வருகின்றன ரென்பதைக் காண்பிக்கிறதா? அல்லது விரோதம், பகைமை, மாச்சரியங்களுடன் வாழ்ந்தனரென்பதைக் குறிக்கிறதா? ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனியே பிரிந்து வாழவேண்டுமென விரும்பும் மேனாட்டு எழுத்தாளர்களின் கட்டுரைப் பிரசாரத்தைவிட இந்தப் புள்ளி விவரங்கள் உண்மையை உள்ளபடி அறிவிக்கும். இப்புள்ளி விவரங்களைப் பற்றி இன்னும் அதிகமாக விவரிப்போம். ஹிந்து—முஸ்லிம்களுக்கிடையே சச்சரவென்பது இந்திய சரித்திரத்தின் ஒரு பகுதியிலும் கிடையாது. இது மறுக்கப்படாத ஓர் உண்மை. 19-ம் நூற்றூண்டில்தான் நாம் முதன் முறையாக ஹிந்து—முஸ்லிம் கலவரங்கள் பற்றிக் கேள்விப்படுகிறோம். அப்போதுங்கூட எங்கோ, எப்போதோ ஒவ்வொன்று நடைபெற்றதாக கேள்விப்பட்டோம். 1923-ம் ஆண்டிற்குப் பிறகுதான் வகுப்புக் கலவரங்கள் என்பது இந்தியவாழ்வில் ஒரு பகுதி

யாகவே போய்விட்டது. ஹிந்துக்கள் இப்போது தீவிர மான ஹிந்து மதத்தினராக ஆகிவிட்டன ரென்றோ, முஸ் லிம்கள் தீவிர முஸ்லிம்களாகி விட்டனரென்றோ விவாதிக் கப்படுவது கொஞ்சமும் பொருத்த மற்றது. இப்போதைய நிலைமை இதற்கு நேர் மாற்றமானது. இன்று ஒரு வித காரணமுமில்லாமல் ஒருவர்மீது ஒருவர் பாயும் ஹிந்து, முஸ்லிம் சமுதாயத்தினர், தங்கள் தினசரி வாழ்விலும், மதக்கடமைகளை நிறைவேற்றுவதிலும் தீவிரமான மதபக்தி கொண்டவர்களாயிருந்தனர். இன்று, பொதுவாழ்வின் பிரதான அம்ஸங்களிலிருந்து புறம்பாக நிற்கும் பட்டிக் காட்டுப் பகுதிகளில் கூட ஹிந்துக்களும், முஸ்லிம் களும் ஒன்றி வாழுகின்றனர்; நண்பர்களைப் போலவும், அக்கம் பக்க இல்லத்தினர்கள் போலவும் வாழ்ந்து, சுக துக்கங்களைச் சமமாக அனுபவிக்கின்றனர்.

இந்த இரண்டு சமுதாயங்களுக் கிடையே யிருந்த உறவுகளைப் பிரித்தது எது? நேற்று இவர்களுக்கிடையே யிருந்த ஒற்றுமை, சகிப்புத்தன்மை, பரஸ்பர அனுதாபம், தன்னம்பிக்கை முதலியவைகள் இன்று வெறுப்பாக மாறிய தன் காரணம் என்ன? இருமக்களின் கலாசார அடிப்படை களை இன்னும் சற்று ஆழ்ந்து கவனிப்போம்.

சமீபகாலத்தில் ஹிந்து—முஸ்லிம் உறவு சம்பந்த மான பல பிரசார கட்டுரைகள் வெளியாகி யிருக்கின்றன. துரதிர்ஷ்ட வசமாக இதனால் பொதுமக்களின் மனதில் பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. பேராசிரியர் ராதா குமுத மூக்கர்ஜீ, தமது இந்தியாவின் ஐக்கியக் கோட் பாட்டை நிரூபிக்கப் பல மத ஆதாரங்களைக் காட்டியிருக் கிறார். இந்த ஐக்கியம் பூகோள பூர்வமானதாயிருப்பின்

அதை எவரும் மறுக்கவில்லை; அதற்கு மத ஆதாரங்களும் தேவையில்லை. இந்த மத நூற்களெல்லாம், இந்து வர்க்கம் இந்த உபகண்டம் முழுவதும் பரவச் செய்யப்பட்டதாக நிரூபிக்கின்றன. இதையும் யாரும் மறுக்கவில்லை. ஆனால், இன்றைய அரசியல் பிரச்னைக்கு இந்த கோட்பாடுகள் எல்லாம் ஆதாரங்களாக மாட்டா. டாக்டர் பேணி பிரசாத், "ஒரு கடலிலிருந்து மற்றொருகடல் வரை ஒரே அரசாங்க இலட்சியம் வேதகாலத்திலிருந்தே தோன்றி வந்திருக்கிறது"1 என்று கூறுகிறார். இவரைப் போன்ற ஒரு விஞ்ஞான ஆசிரியர் இவ்வாறு தவறாகக் கூறுவது மன்னிக்கப்படக் கூடியதல்ல. இவ்வித இலட்சியம் ஒன்றிருந்திருக்குமாயின், அது இன உணர்ச்சியில் எப்போதும் சம்பந்தப்பட்டதில்லை. தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள், கவிஞர்கள் முதலியவர்களின் உள்ளங்களில் குடிகொண்டுவரும் மக்களின் அரசியல் உணர்ச்சியின் ஒருபாகமாக இல்லாத இலட்சியங்களும், கொள்கைகளும் எவ்வித பயனும் தர மாட்டா.

உண்மையில் பண்டைய இந்துக்களுக்கு அரசியல் உணர்ச்சியோ, தேசீய உணர்ச்சியோ இருந்தது கிடையாது. "இந்துக்கள் ஒரு இனத்தாரே யொழிய ஒரு அரசாங்கத்தாரல்ல" என்று மிஸ்டர் ஹெகல் கூறுகிறார். 2 அவர்களின் மத பக்தியும், சமூக அமைப்பும் அவர்களின் தேசீய, அரசியல் உணர்ச்சிகளை வளர விடாது தடை செய்து விட்டன. சமீபகால எழுத்தாளர் ஒருவர் கூறியபடி, 'ஹிந்துவுக்குத் தந்தை நாடென்பது

1 "ஹிந்து—முஸ்லிம் பிரச்னைகள்", பக்கம்: 83.

2 "சரித்திரத்தின் தத்துவம்", பக்கம்: 168.

கிடையாது; அவரது தந்தை நாடு என்பது அவர் இருந்து வரும் ஜாதியேயாகும்"* ஒரு ஹிந்துவுக்கு அக்கம் பக்க வீட்டுக்காரராயிருப்போர், அந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் குடியிருப்பவால்ல. அவருடைய பக்கத்து வீட்டுக்காரர் (ஓராயிரம் மைல் களுக்கப்பால் வசிப்பவராயினும்) அவரது ஜாதிக்காரரேயாவர். அநேக ஜாதிகள், உபஜாதிகள், தீண்டாதார், தீண்டத்தக்கவர் என்று பல வகைகளாகப் பிரிந்துள்ள ஒரு கூட்டத்தார், அரசியல் உணர்ச்சி பெறுவது சாத்தியமில்லை. இதையறிந்து கொள்வதற்கு பெரிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை.

ஆனால், நம் ஹிந்து சகோதரர்கள் பெருமையடித்துக் கொள்ளும் ஹிந்து தத்துவம் இதை இன்னும் அதிக மோசமாக்கி விட்டது. பண்டைய ஹிந்துக்களில் பல பெரிய ஆராய்ச்சிக்காரர்கள் இருந்தனர். அவர்கள் அவ்வக் காலங்களில் தைரியமாகவும், தாராளமாகவும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வந்தனரென்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர்கள், தங்களின் தத்துவ இலட்சியங்களை மத வெறியாக மாற்றியதிலிருந்துதான் கெடுதல்கள் ஆரம்பமாயின. சுதந்தரத்தில் தான் அறிவு வளர்ச்சி யடைகிறது. அதுவே ஒரு வெறியாக மாறிவிட்டால், அறிவுக்கு மரணம் ஏற்பட்டுவிடுகிறது. ஹிந்து தத்துவார்த்தங்கள் எல்லாம் பெரும்பாலும் மறுஉலகத்தையே அடிப்படையாகக் கொண்டவை. ஆதலால், அவை இவ்வுலக மதத்ததிற்குத் தீங்கானவை மனிதன் நிரந்தரமானவன்; பிறப்பும், இறப்புமில்லாதவன். தற்போதைய வாழ்க்கை அவனுடைய ஆன்மாவின்

* M. Winternitz: "Die Frauinden indischen Religionen, p. 110.

ஆயுளில் ஒரு பகுதியேயாம். ஆதலால் இம்மையைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டுவதில்லை. கர்மதத்துவங்கள், ஆன்ம விசாரணை மாற்றங்கள், நித்யமும், பிறப்பு இறப்பும் இல்லாத ஆன்மாவின் ஜன்ம புனர்ஜன்மங்கள் ஆகிய இந்த முக்கிய இலட்சியங்களெல்லாம் இந்தியாவில் பிறந்த எல்லா மக்களுக்கும் பொதுவானவையாக இருக்கின்றன. இவைகளெல்லாம் சமூக உணர்ச்சிகளோ அரசியல் இலட்சியங்களோ உருவாவதற்குத் தடைகளாக நிற்கின்றன.

மௌரியர்கள், குப்தர்கள் ஆகிய இரு ஆட்சி காலங்கள் தவிர மற்ற எக் காலத்திலும் ஹிந்து இன ஒற்றுமையுணர்ச்சியை வளர்ப்பதற் குதவியாக இருக்கக் கூடிய ஒரே சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் இந்தியா முழுவதும் இருந்ததே கிடையாது. அவ்வாறு அவர்களுக்கிடையே ஒற்றுமை ஏதேனும் இருந்திருக்குமானால், அது மத இலட்சியங்கள், கோட்பாடுகள், சடங்குகள், ஜாதீயக் கட்டுப்பாடுகள் முதலியவைகளில் ஏற்பட்ட ஒற்றுமையே யன்றி, அரசியல் ஒற்றுமையில்லை. இந்தியா ஒரு பெரிய நாடு. அத்துடன் இந்திய மக்களுக்கிடையே போக்கு வரத்து நடைபெற வசதிகளும் போதுமான அளவு இல்லாமலிருந்தன. ஆதலால் அவர்களுக் கிடையே ஒரு தேசிய உணர்ச்சி ஏற்படாமலிருந்தது. நாடு அநேக சுதந்திர அரசாங்கங்களாகப் பிரிந்து இருந்தது. இவை ஒன்றுக் கொன்று எப்போதும் சச்சரவிட்டுக் கொண்டே யிருந்தன. இந்த அரசாங்கங்களை ஏற்படுத்துவதிலோ, யுத்தங்களை நடத்துவதிலோ, மக்களுக்கு எவ்வித உரிமையு மில்லாதிருந்தது. யுத்தம் சமாதானம் முதலிய பிரச்னைகள் எல்லாம் ஆளும் வர்க்கத்தாரின் நலன்களைப் பொறுத்தே முடிவு செய்யப் பட்டு வந்

தன. எதேச்சாதிகார மன்னர்களே இவற்றை முடிவு செய்து வந்தனர். இந்த எதேச்சாதிகாரம் பொது மக்க ளின் அரசியல் வளர்ச்சியைத் தருவதாக இல்லை; இருக்க வும் முடியாது. அரசாங்கத்தில் "மக்களுக்கு" இருந்த உரிமையெல்லாம் வரிகள் செலுத்துவதுடன் நின்றுபோய் விட்டது. அரசியல் அறிஞர்கள், பொது மக்களனைவரும் "வண்டுகள் போலவும், தேனீக்கள் போன்றும், கன்றுகள் போன்றும்" இறுதிவரை "வரட்சியாக உறிஞ்சப்" பட வேண்டுமென்றே யோசனை கூறி வந்தனர்.* நான் இவ் வாறு கூறியிருப்பதற்கு ஹிந்து அரசர் ஒவ்வொருவரும் கருணையற்ற மிருகங்கள் போன்று நடந்து கொண்டன ரென்று நான் கூறுவதாக அர்த்தமல்ல. நான் இங்கு கூற முற்பட்டதெல்லாம் பண்டைய இந்தியாவில் சுதந்தர பிர ஜாஉரிமையோ, சமுதாயத் தத்துவமோ இருந்ததில்லை என் பதேயாம். ஹிந்துக்கள் சுதந்தரம், தேசீயம் என்ற ஞாப கமே இல்லாதிருந்தன ரென்பதுதான் என் கோட்பாடு. இவ்வளவு பெரிய நாட்டை ஒரு கைப்பிடியளவான (விரல் விட்டெண்ணி விடக் கூடிய) முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்கள் சொற்ப காலத்தில் கைப் பற்றி, இதனை நெடுங்காலம் வரை நாட்டுச் சுதேச மக்களின் எதிர்ப்போ, புரட்சியோ ஒன்று மில்லாமல் நிர்வகித்து வருவது சாத்தியமாகியதற் குரிய காரணங்களில் இதுவும் ஒன்று. ஹிந்துக்கள் ஒரு சமு தாயத்தினராகவோ, அல்லது தேசீய உணர்ச்சி என்னும் ஒரு பொருளைப் பெற்றவர்களாகவோ இருந்திருப்பாராயின் முஸ்லிம்கள் எப்போதும் இந்நாட்டைக் கைப்பற்றி யிருக்க முடியாது. இதில் மற்றொரு விசேஷம் என்ன

* திரு. பிவய் குமார் சங்கர் எழுதிய "அரசியல் நிலயங்களும் ஹிந்துக்களின் தத்துவங்களும்" என்னும் புத்தகம், பக்கம்: 184.

வெனில், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நடைபெற்ற அத் துணை நீண்ட காலத்தில் இந்நாட்டில் ஒருபோதும் ஒரு சிறு பொதுஜனக் கிளர்ச்சியும் ஏற்பட்டது கிடையாது. ஹிந்துக் களுக்கு தேசிய ஒற்றுமை உணர்ச்சியோ, பொது அபாய உணர்ச்சியோ இருந்ததில்லை. மஹ்மூத் கஜ்னவி போன்ற ஒரு அன்னிய நாட்டுப் படை யெடுப்பாளர் இந்நாட்டின் மீது படை யெடுத்த அபாய காலத்தில் கூட அவர்கள் ஒரே தலைமையின் கீழ் திரண்டு கூடி, படையெடுப்பை எதிர்க்க மனமில்லாமல் போய் விட்டனா. பதினாறும் நூற்றாண் டில் கூட பூண்டி பிரதேச ரஜபுத்திர மன்னன், அக்பரின் அரசை ஏற்றுக்கொண்ட காலத்தில், தானும், தன் ரஜபுத்ர வீரர்களும் ஒரு ஹிந்து உத்தியோகஸ்தரின் தலைமையை ஏற்கப் போவதில்லை என்று திட்டமாக கூறிவிட்டார்.

ஹிந்துக்கள் சரித்திர உணர்ச்சியற்றோரா யிருந்தன ரென்பதும், எவ்வித சரித்திரமும் வரைய வில்லை யென்ப தும் எவரும் அறிந்த உண்மை. ஒரு சமுதாயத்தின் வெற்றி தோல்விகளையும், நம்பிக்கை அபிலாஷைகளையும் என்றென்றும் உணர்த்திக் கொண்டிருப்பது சரித்திரமே. சமுதாயத்தின் வளர்ச்சி, அதன் தன்மை, அதன் கூட்டு அரசியல் வாழ்வு முதலியவைகளுக்குச் சான்றாக விளங்கு வது சரித்திரமே. ஒரு சரித்திரமில்லா மக்கள் ஒரு சமு தாயமல்ல; அவர்களைச் சமுதாயம் எனக் கூறப்படவும் முடியாது. சரித்திரம் ஒன்று வரையப்படாத நிலைமையில் ஒரு மக்களின் கடந்த காலத்தை அவர்களின் எதிர் காலத் துடனோ, அன்றி நிகழ்காலத்துடனோ சம்பந்தப்படுத்துவது ஒன்றும் இல்லை. அச்சமூகத்தின் வாழ்க்கையும், பண் டையப் பெருமைகளும் தொடர்பற்றனவாய் தகர்ந்து

இருக்கின்றன. ஏனெனில், எழுத்து மூலமான ஆதாரங்களின்றி ஞாபக சக்தி பூர்வமான ஆதாரங்கள் இரண்டொரு தலைமுறைகளுக்கு முந்திய கால சம்பவங்கள் வரை எட்டிவிட மாட்டா. ஆகவே இந்திய மக்கள் பண்டைய இலட்சியங்களோ, எதிர்கால அபிலாஷைகளோ ஏதுமின்றி, பல தலைமுறைகளாக ஆயிரக்கணக்கான ஜாதி வேறுபாடுகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்து வந்திருக்கின்றனரென்பது தெளிவாகிறது. இத்தகைய ஒரு சமூகத்தினருக்கு தேசீய உணர்ச்சி யிருப்பதாகக் கூறமுடியாது. பண்டைய ஹிந்துக்கள் ஒரு சமுதாயத்தினரல்ல; அவர்கள் ஒரு இனமக்கள்; ஒரு கூட்டத்தார் அவ்வளவுதான்.

இந்திய முஸ்லிம்கள் மட்டும் பண்டைய காலத்தில் முன்னேற்ற மடைந்திருந்து விடவில்லை. இஸ்லாம், அதன் தோற்றுவாய்க் காலமுதலே ஒரு அரசின் அங்கமாகி விட்டது. இதில் நன்கு விளக்கப்பட்ட அரசியல் தத்துவம் பொதிந்திருக்கிறது.................ஏன்? இஸ்லாமே ஒரு அரசியல் தத்துவந்தான் என்று கூறுகிறேன். ஏனெனில் இஸ்லாத்தின் கடமைகள் எல்லாம் அதன் அரசியல் தத்துவத்திலிருந்தே வகுக்கப் பட்டுள்ளன. ஒரு நல்ல, சுதந்தர தனி இஸ்லாமிய ஆட்சியில்லாவிடில் அக்கடமைகள் நிறைவேற்றப்பட இயலாது. இஸ்லாத்தின் அரசியல் தத்துவங்களின் உட்பொருளையும், உண்மையான தன்மையையும் உணராதவர்கள், இஸ்லாம் ஒரு யதேச்சை ஆட்சியை வற்புறுத்துவதாக அடிக்கடி கூறிவருகின்றனர். நான் மேலே கூறியிருப்பதன் அர்த்தம் இதுவல்ல. இஸ்லாமிய அரசு ஜனநாயகத் தன்மை வாய்ந்தது. இதைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு தனி முஸ்லிமையும் சாரும்.

முஸ்லிமின் மத பக்தியில் இந்தப் பொறுப்புதான் பிரதான பகுதியாக விளங்குகிறது. ஒரு அரசாங்க பிரஜையின் கடமைகளை அந்த முஸ்லிமின் மீது சுமத்துவதும் இந்தப் பொறுப்பேயாகும். "ஒரு கட்டுப்பாடான மக்கள் கூட்டம் இல்லையெனில் இஸ்லாமும் இல்லை" என்று ஹஜரத் உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். துரதிர்ஷ்டவசமாக இஸ்லாமிய அரசாங்கம் நீடித்து நடைபெறாது போய்விட்டது. உமய்யாக்களும், அப்பாஸியரும் அதனை நாசமாக்கி, அல்லது ஏக ஆட்சி, யதேச்சாதிகாரம், பரம்பரை உரிமையான முடியாட்சி முதலிய தன்மையினதாக மாற்றி விட்டனர். அரசியல் வளர்ச்சிக்கும், தேசீய உணர்ச்சி ஏற்படுவதற்கும் யதேச்சாதிகார ஆட்சியே முட்டுக்கட்டை யென்பதை நான் ஏற்கெனவே கூறி யிருக்கிறேன். இந்த இரண்டு யதேச்சாதிகாரங்களின் கீழ்தான், முஸ்லிம் சமூகத்தில் அதன் அரசியல் வாழ்வில் பிளவை ஏற்படுத்த இன்னும் இரண்டு இனங்கள் புகுந்தன. அவை வேதவைதீகமும், சூபிஸமுமாம். இவை யிரண்டும் கிரேக்க தத்துவ செல்வாக்கினால் வளர்ச்சியுற்றவையாகும். இவை யிரண்டும் ஒன்று சேர்ந்தே முஸ்லிம்களின் மனோபாவத்தை மாற்றி விட்டன. தாம சாஸ்திர ரீதியான அரசியல் தத்துவங்களடங்கிய இஸ்லாத்தைஒரு வகை "மதம்" ஆக மாற்றி விட்டன. இதைத் தான் அரசியல் பிரசாரகர்கள் ஆண்டவனுக்கும், தனிப் பட்டவனுக்கு மிடையேயுள்ள ஓர் அந்தரங்கத் தொடர்பு எனக் கூறுகின்றனர். இவ்விஷயங்களை யெல்லாம் கவிஞர் இக்பால் மர்ஹூம் இரத்தினச் சுருக்கமாக ஒரே வார்த்தையில் கூறிவிட்டிருக்கிறார். இந்த வகையில் தான் இஸ்

லாத்தில் மத—அரசியல் வேறுபாடு புகுத்தப் பட்டது. இதை இஸ்லாம் பலமாகஎதிர்க்கிறது. இவ்வேறுபாடு தான் முஸ்லிம்களின் அரசியல் வாழ்வுக்கு மாணத்தை அளித்து விட்டது. இஸ்லாத்தின் மூல இலட்சியமாகிய ஏக தெய்வ வணக்கத்தை இது மறுப்பதாயிருக்கிறது. இந்நாட்டின் அரசியலும், மதமும் தனித் தனியே பிரிந்திருப்பதாக வற்புறுத்தும் உலமாக்கள் "தேசீயம்" என்ற அடையாளச் சீட்டை ஒட்டிக் கொண்டிருப்பவர் களே யாவர்.

முஸ்லிம்கள் இந்தியாவை ஆக்கிரமித்த சமயம், மத மும் அரசியலும் வெவ்வேறானவை யென்ற இலட்சியமும் உலகெங்கும் வதியும் முஸ்லிம்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு கொள்கையாகப் போய்விட்டது. இந்தியாவை ஆக்கிரமித்தவர்கள் ஒரு முஸ்லிம் அரசாங்கத்தின் தேசீய இராணுவத்தினரல்ல; ஒரு ஏகாதிபத்திய அரசின் கூலிக் காரர்களே யாவர் அவர்கள் இந்தியாவில் நிறுவிய அர சாங்கம் ஒரு தேசீய முஸ்லிம் அரசாங்கமாயில்லை ஒரு யதேச்சாதிகார அரசனுக்காகவும், அவனது சகாக்களுக் காகவும் ஏற்பட்ட அரசாங்கமாகவே இருந்தது. இந்தியா வில் முஸ்லிம் சாம்ராஜ்யம் என்பது முஸ்லிம் மன்னரின் ஆட்சிக்குட்பட்ட ஒரு சாம்ராஜ்யம் என்ற அளவில்தான் இருந்தது. அது முஸ்லிம் மன்னரையுடைய ஒரு சாம் ராஜ்யமாக இருந்ததே யல்லாமல், உண்மையில் முஸ்லிம் சாம்ராஜ்யமாக இருக்கவில்லை. முஸ்லிம் ஆட்சி இந்தியா வில் நடைபெற்ற நீண்டகாலத்தில், முஸ்லிம்கள் சமுதாய உணர்ச்சியை ஒருபோதும் வளர்த்துக் கொள்ளவில்லை. முஸலிம் ஆட்சியின் ஆரம்பமுதல் இறுதிவரை இருந்து

வந்த ஏகாதிபத்தியக் கொள்கையே அவர்களின் சமுதாய தேசீய உணர்ச்சியின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. அந்த அரசாங்கம் உண்மையிலேயே ஒரு தேசீய முஸ்லிம் அரசாங்கமாக இருந்திருக்குமானுல், முஸ்லிம்கள் அக் காலத்தில் உண்மையில் தேசீய உணர்ச்சி கொண்டவர் களாக இருந்திருப்பார்களாயின், அவர்கள் ஹிந்து மக்கள் எல்லோரையும் இஸ்லாத்தில் சேர்த்து,—(ஆம், இஸ்லாத் திற்கு இதரர்களை மாற்றும் முறை சம்பந்தமாக இஸ்லாத் தின் எதிரிகள் ஏதேனும் கூறலாம்; ஆனுல், பிரசாரம், போதனை இவைகளின் மூலம் மதமாற்றம் செய்யப்பட வேண்டுமென இஸ்லாம் கட்டளையிடுகிறது)—இஸ்லாமிய சமுதாயத்தை விரிவுபடுத்தியிருப்பர். முஸ்லிம்கள் பல நூற்றுண்டுகள் ஆட்சி நடத்தினர். அவர்கள் சொற்ப அளவு முயன்றிருந்தாலும் போதும்; ஹிந்து இனம் முழு வதையுமே மதம் மாற்றிவிட்டிருக்கலாம். ஆனுல், முஸ்லிம் அரசாங்கத்தாலோ, அல்லது முஸ்லிம் பொதுமக்களாலோ இவ்வித முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. அதுகாலை நடைபெற்ற ஓரளவான பிரசாரங்கூட கட்டுப்பாடற்ற முறையில் தனிப்பட்ட நபர்களின் அசட்டையான முயற்சி யால் தான் நடைபெற்றது.

இப்போது நாம் மேலே விவரித்த விஷயங்களிலிருந்து ஒரு விஷயம் தெளிவாக விளங்கக் கிடக்கின்றது. ஒரு ஏகாதிபத்திய அரசின்கீழ் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் முற்போக்கு எதுவும் இல்லாமல் வாழ்ந்து வந்திருக்கிறுர் கள். இரு சாராரும் தங்கள் தேசீய உணர்ச்சியையோ, சமுதாய அபிலாஷைகளையோ ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்யவேயில்லை. இவ்வாறு இரு சாராருக்கும்

தேசிய உணர்ச்சி இல்லாது போய் விட்டதே அவர்களின் அமைதியான ஒத்துழைப்புக்கும், நல்ல அயலகத்தார்களாக வாழவும் காரணமாக அமைந்து விட்டது.

ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே மதக் கொள்கைகளிலும், நம்பிக்கை, பழக்க வழக்கங்களிலும் உள்ள வேற்றுமை முரண்பாடுகளைப் பற்றி ஏராளமாக வரையப்பட்டு, வெளியாகி யுள்ளன. ஹிந்து ஒரு வேதாந்தி முஸ்லிமோ ஒரு அத்துவைதி (ஏக தெய்வக் கொள்கையுடையவன்) ஹிந்து உருவ வழிபாட்டை உடையவன்; முஸ்லிமோ உருவ வழிபாட்டை வெறுப்பவன். ஹிந்து பசுவை வணங்குபவன்; முஸ்லிமோ அப்பசுவை ஆகாரமாகக் கொள்பவன். ஜாதியிலும், தீண்டாமையிலும் ஹிந்துவுக்கு நம்பிக்கை யிருக்கிறது. மக்கள் எல்லோரும் சமமெனக் கருதுபவன முஸ்லிம். ஜாதி சமூக மேம்பாடுகளையே ஹிந்து பெரிதெனக் கருதுபவன். ஆனால், ஒரு முஸ்லிமோ, ஜாதி வேறுபாடுகளை யெல்லாம் ஒருபுறமாக ஒதுக்கிவிட்டு, மத இலட்சியங்களில் ஒன்றுபடுபவன். ஹிந்துவுக்கு மத மாற்றத்தில் நம்பிக்கை கிடையாது. முஸ்லிமுக்கோ உலக மெல்லாம் தன் மதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற நோக்க மிருக்கிறது. ஏனெனில், பலப்பல மதங்களிருப்பதால் ஒருவர் எப்போதும் தாக்குவோராகவும், மற்றவர் எப்போதும் தாக்கப்படுவோராகவுமே இருப்பரென்பதும், ஒரு ஹிந்து முஸ்லிமாக மாற்றப்பட்டால், ஒருவருக்கு நஷ்டமும், மற்றவருக்கு லாபமும் ஏற்படுகிற தென்பதும் முஸ்லிமின் நோக்கம். இன்னும் இதுபோன்ற கணக்கற்ற வேறுபாடுகளிருக்கின்றன. இத்துணை வேறுபாடுகளிருந்துங்கூட இந்த இரு சாராரும் பல நூற்றாண்டுகள் வரை ஒன்றாக வாழும்படி செய்வதற்கான ஏதோ ஒருவித

சக்தி இரு மதங்களிலும் இருந்தே வந்திருக்கின்றது. பிரிட்டிஷ் சர்க்காரின் கீழ் தாங்களிருந்த வாழ்வையெல் லாம் இருதரப்பாரும் மறந்துவிட்டு, தங்கள் மூதாதையரைப் போன்று பழைய மத மனோபாவத்திற்கு திரும்புவார்களாயின், அப்போது மீண்டும் அவர்களுக்கு அந்த சக்தி ஏற்பட்டு, முன்போல் ஒரே அரசாங்கத்தின் கீழ் ஒன்று பட்டு வாழும் நிலைமையும் உண்டாகிவிடும். இருமதங்களிலும் பொதிந்துள்ள அந்த சக்தி சகிப்புத் தன்மையென்னும் புனித சக்தியே.

ஹிந்து மதம் என்பது ஒரு ஜாதீயக் கலையேயொழிய உண்மையான அர்த்தத்தில் அஃது ஓர் மதமல்ல. மத இலட்சியங்களும் அதில் இல்லை. 'இதோ இதுதான் ஹிந்து மதம்' என்று நீங்கள் உங்கள் விரலை நீட்டிச் சுட்டிக் காட்டக் கூடிய திட்டமான வஸ்து ஒன்றுமில்லை. ஏக தெய்வக் கொள்கையுடையவன், நாஸ்திகன், பல தெய்வ வழிபாடுடையவன், அத்வைதி, வேதாந்தி, கல், கட்டைகளை வணங்குபவன், கல்வியிற் சிறந்த மகாத்மாக்கள் முதலிய எல்லோருமே ஹிந்துக்கள்தான். இவ்வாறு ஹிந்து மதத்தில் திட்டமான ஒரு இலட்சியமில்லாததால், ஹிந்து மதத்தவரல்லா இதரர்களிடையே தங்கள் மதத்தைப் பற்றி பிரசாரம் செய்யும் இலட்சியமே ஏற்படவில்லை. உண்மையில் ஹிந்து மதத்தில், நம்பிக்கையற்றோர் என்ற பகுதி ஒன்றுமில்லாத முறையில் ஹிந்து மதம் நூதனமாக அமைந்திருக்கிறது. ஹிந்துக்கள் குறிப்பிட்ட சமூகப் பழக்க வழக்கங்களும், ஆசார அனுஷ்டானங்களும் உள்ள ஒரு ஜாதீயக் கூட்டத்தினராவர். இந்த ஜாதீய அனுஷ்டானங்களே மதமெனக் கருதப்படுகிறது.

பண்டைய காலத்தில் இந்த ஜாதியில் சில பெரிய சிந்தனையாளர்கள் தோன்றி யிருக்கின்றனர். ஹிந்து தத்துவ ஞானிகளின் ஆராய்ச்சிகள் தங்கு தடையின்றியே நடைபெற்று வந்தன. இந்த ஆராய்ச்சி முடிவுகளில் அரசாங்கமோ, மக்களோ எப்போதும் தலையிட்டதில்லை. அத் தத்துவ ஞானிகளின் முடிவுகள் பகுத்தறிவுக்கு விரோதமாக இருப்பினும் எவரும் அவற்றில் தலையிட்டு, திருத்த முற்பட்டதில்லை. இது போன்ற ஆராய்ச்சியிலீடுபட்ட தத்துவ ஞானிகளும் தாங்கள் முடிவு செய்த கோட்பாடுகளை மக்களிடையே புகுத்த முயற்சிக்காமல், அதற்குப் பதிலாக மக்கள், தங்கள் பழைய அனுஷ்டானங்கள், பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள் முதலியவைகளையே உறுதியாகப் பற்றி நடக்க வேண்டுமெனக் கூறி வந்துள்ளனர் ஆதலால், பண்டைய இந்தியாவில் மடமையும்—பகுத்தறிவும், விவேகமும்—மூட பக்தியும் ஒன்றை யொன்று பாதிக்காமல் கலந்துறவாடின வென்பதை நாம் அறிகிறோம். மத அபிப்பிராயங்களில் சகிப்புத் தன்மையே ஹிந்து இனத்தவரின் பிரதான குணமாக இருந்து வந்துள்ளது. உண்மையைக் கூறுமிடத்து மத இலட்சிய வேறுபாடுகளில் ஹிந்துவின் மனம் சென்றதே இல்லையெனக் கூறலாம். இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைகளும், இலட்சியங்களும் ஹிந்து மதக் கொள்கை, இலட்சியங்களுக்கு நேர்மாறாக இல்லாம லிருந்திருக்குமாயின், அத்வைதத்தைப் போதித்த கிருஷ்ணனை விஷ்ணுவாகவும், பிரம்மாவாகவும் தங்கள் இலட்சியங்களில் ஏற்றுக் கொண்டுள்ள பிராமணர்கள், தங்கள் வேதாந்தத்தில் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் வெகு எளிதில் இடமளித்து விட்டிருப்பர் எவ்வாறிருப்பினும் அவர்கள் இஸ்லாத்தைப் பாராட்டும் அறிகுறி

யாக அல்லாஹ்வை அடிப்படையாக கொண்ட ஒரு உபநிஷத்தை சமஸ்கிருதத்தில் இயற்றியே இருக்கின்றனர்.

முஸ்லிம் மனோபாவமோ அவ்வாறில்லை. இஸ்லாம் ஒரு மதம்; அது ஒரு ஜாதீய கட்டுப்பாடல்ல. ஆதலால், முஸ்லிம் மனோபாவம் அவ்வாறிருக்க முடியாது. ஆனால் பரிசுத்த குர்ஆன் சில கட்டளைகளை விதித்திருக்கிறது. அவைகளை எந்த முஸ்லிமும் புறக்கணிக்க முடியாது.

முதலாவது:-குர்ஆன் ஷரீப், கட்டாய மதமாற்றம் கூடாதென்றும், உண்மையுணர்வின் மீதே மதமாற்ற மிருக்க வேண்டு மென்றும் கட்டளை யிடுகிறது. (2: 256)

இரண்டாவது:-மத விவாதங்கள் (தர்க்கங்கள்) கண்ணிய முறையில், அன்புடனும், மன்னிக்குந் தன்மையுடனும் நடைபெற வேண்டுமெனக் குர் ஆன் ஷரீப் கூறுகிறது.—"அறிவைக் கொண்டும, நல்ல விதமான நற்போதனையாலும் (அவர்களை) உங்களின் ஆண்டவன்பால் அழையுங்கள். நல்ல முறையில் அவர்களுடன் தர்க்கம் (நியாயவாதம்) செய்யுங்கள்." (அல் குர் ஆன், 16: 125)

மூன்றாவது:-பல தெய்வ வழிபாடுடைய நன்னம்பிக்கையற்றோர் வணங்கும் பொய்த் தெய்வங்களை முஸ்லிம்கள் வணங்கக் கூடாது; ஏனெனில் அது சமூக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதாயிருக்கும் (அல் குர் ஆன், 6: 109)

நான்காவது:-அல்லாஹ் ஒவ்வொரு இனத்தாருக்கும் தன் தூதர்களை அனுப்பி இருக்கிறான் (35:24)

அவர்களில் சிலரைப்பற்றி மட்டும் புனித வேதமாம் குர் ஆன் ஷரீபில் குறிப்பிடப் பட்டுள்ளது; இதரர்கள் குறிப்பிடப் படவில்லை (4: 164) ஆனல், ஒரு முஸ்லிம், தெய்வீகத் தூதர்களுக்கும், ஞானசிரியர்களுக்கு மிடையே வேற்றுமை பாராட்டாமல், இருவரையும் சமமாக எண்ணிக் கௌரவிக்க வேண்டும் (2: 285)

பரிசுத்த குர் ஆன் ஷரீபில் எந்த ஹிந்து தீர்க்க தரிசியைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப் படவில்லை. ஆனல், எந்த முஸ்லிமேனும், தன் சுய ஆராய்ச்சியைக் கொண்டும், அறிவைக் கொண்டும், ஒரு குறிப்பிட்ட ஞானசிரியர் (உதாரணமாக கிருஷ்ணன் அல்லது புத்தர் என்று வைத்துக் கொள்ளுங்கள்) ஆண்டவனின் உண்மையான தூதர் என்று உணர்வாராயின், அம்முஸ்லிம், (தன் தனிப்பட்ட ஆராய்ச்சி பிறர்மீது கட்டுப்படுத்தாதெனினும்) மேற்கண்ட புனித குர் ஆன் ஷரீப் கட்டளைகளின்படி அந்த ஞானசிரியரைக் கௌரவிக்கக் கடமைப் பட்டிருக்கிருர். இஸ்லாத்தைப் போன்ற ஒரு சமத்துவ மதத்தில் புறக்கணிக்கப்படக் கூடியது ஒன்றுமில்லை. ஆதலால், ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் மத போதனைகளுக் கிடையே நேர் முரண்பாடிருந்தும், அவர்களின் பண்டைய வழக்கங்களினுலும், மதபோதனைகளின் தன்மையாலும் நல்ல அயலகத்தாராக ஒன்றுபட்டு, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அனுதாபம் மதிப்பு, கௌரவம் காட்டி வாழ்ந்து வந்திருக்கின்றனர். துன்பங்களும், மதயுத்தங்களும் நிரம்பிய சரித்திரத்தையுடைய ஐரோப்பியர்கள், உண்மையை அறிய முடியாது. ஆனல், அவர்கள், மத்திய காலத்தில் இந்தியாவின் "சகிப்புத்தன்மையின்மை" பற்றி அடிக்கடி பேச முற்படுகின்றனர். அறியாமையும், பொய்க்கோட்பாடுமே இக்கூற்றுக்குக்

காரணமாயிருக்க வேண்டும். இந்தியப் பண்டைய மக்களிடையே மதத்தகராறுகளோ, ஒருவருக்கொருவர் மத உணர்ச்சியைப் புண் படுத்தும் இலட்சியங்களோ இருந்தது கிடையாதென்பது மறுக்கப்படமுடியா உண்மையாகும். இத்தகைய மதத்தகராறுகளும், வேறுபாட்டுணர்ச்சிகளும் முதன் முதலாக கிறிஸ்துவப் பிரசாரகாகளால்தான் இந்நாட்டில் புகுத்தப்பட்டது.*

ஹிந்துக்களின் மனதில் இஸ்லாம் மதம் ஏற்படுத்தி விட்ட உணர்ச்சியும், இருமக்களுக்குமிடையே இருந்த நெருங்கிய அனுதாபப் பூர்வமான தொடர்பும் ஆகிய இரண்டும் சேர்ந்து மகத்தான ஆத்மார்த்த தத்துவமான

---

*கிறிஸ்துவ மதம், பகுத்தறிவுக்கொவ்வாத இலட்சியங்களே அடிப்படையாகக் கொண்டது. ஆதலால் இதர அபிப்பிராயங்களை கேட்டு சகித்துக்கொள்ளும் தன்மை அதனிடம் காணப்படவில்லை. ஐரோப்பா, மதத்தைப்பொது வாழ்விலிருந்து அகற்றி, அதனை தேவாலய விஷயமாகச் செய்து விட்டதன் மூலமே, சமூக அமைதியை ஏற்படுத்த முடிந்தது. மேலும் கிறிஸ்துவ மதம் ஒரு அசாதாரணமான இலட்சியத்தைக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவைத் தவிர பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டவர்கள் உட்பட இதரமத ஞானசிரியர்களெல்லாம் "திருடர்களும், கள்வர்களும்" ஆவரென்றும், கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தினராவரென்றும் கிறிஸ்துவ மதம் கூறுகிறது. (ஜான், 10: 8, 12) இதர ஞானசிரியர்களெல்லாம் கள்வரென்றும், திருடரென்றும் 'நிரூபிக்க' கிறிஸ்துவப்பிரசாரகர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். கிறிஸது மேலானவர் என்பதற்கு அவரது போதனைகளும் செயல்களும் ஆதாரமாகக் காட்டப்படுவதில்லை. அற்புதங்களும், பிறந்ததாகக் கூறப்படும் வரலாறும் காட்டப்படுகின்றன. இவை இரண்டும் பகுத்தறிவுக்கொவ்வாத விஷயங்கள்; ஆதலால் சிந்தனை உரிமையை கிறிஸ்துவமதம் மறுக்கிறது.

பக்தி இயக்கத்தை ஏற்படுத்தி விட்டன. சைதன்யர், தாது, கபீர், நானக் முதலியவர்கள் இந்த பக்தி இயக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அக்பர் மன்னர் காலத்தில் அவர் "தாராள மனப்பான்மையோடு" நடந்து கொண்டதாகப் பிரமாதமாகப் பறைசாற்றப் படுகிறது. அவ்வாறிருந்தும் அவரது காலத்தில் இவ்வித பக்தி இயக்கப் பிரதிநிதிகள் எவரும் தோன்றாது போய்விட்டனர். இது பெரும் ஆச்சரியமாகவே இருக்கிறது. அக்பரைப் போற்றும் மேனாட்டினர், தங்கள் பாரம்பரிய வழக்கப்படி இதை அழகாகத் தீட்டி விட்டனர். மன்னர் அக்பரிடமிருந்த அயல் நாட்டு இராணுவமோ வெகு சொற்பம். ஒரு சிறிய நிலச்சுவான் தாரால் இந்தியாவிலிருந்து விரட்டப்பட்டு, 15 ஆண்டுகள் வரை அயல் நாடுகளில் ஒளிந்து திரிந்த தம் தகப்பனாரின் கதி தனக்கும் ஏற்பட அக்பர் விரும்பவில்லை. ஆதலால், நாட்டில் தன் அதிகாரத்தை ஊன்ற வைப்பதற்காக அவர், ஹிந்துக்களை முஸ்லிம் களுக்கு விரோதமாக ஏவி விட்டு, இருதரப்பாரையும் அடக்கி ஆண்டு வரக் கருதினார். அக்பரின் அரண்மனை தர்பாரில் அப்துல் காதிர் பதாயூனி என்ற ஒருவர் இருந்தார். அவரது செயல்கள் தமது கொள்கைகளுக்கு விரோதமாயிருந்தும், அவரை விலக்கும் நிலைமையில் அக்பர் இல்லாமலிருந்தார். அக்பரின் மதக் கொள்கைகளையும் இஸ்லாத்தை நசுக்க அவர் கையாண்ட முறைகளையும் அப்துல் காதிர் பதாயூனி வரைந்திருக்கிறார். அது வருமாறு:—

"ஒயின் (திராட்சரசத்தாலான ஒரு மதுபானம்) சட்ட பூர்வமானதென அறிவிக்கப்பட்டது. ஜிஸியா அல்லது இராணுவ வரி அடியோடு அகற்றப்பட்டது. மாட்டிறைச்சி (உண்பதும், விற்பனை செய்வதும்)

சட்ட விரோதமானதெனப் பிரகடனம் செய்யப்பட்டது. பன்றிகளும், நாய்களும் போற்றப்படும் மிருகங்களாகவும், ஆண்டவனின் பிரதி பிம்பங்களாகவும் கருதப்பட்டன. ஸலாத் அல்லது ஐங்கடமைகளில் ஒன்றான வணக்கமும், நோன்பும், ஹஜ்ஜூ அல்லது மக்கா யாத்திரையும் அடியோடு ஒழிக்கப்பட்டன. இஸ்லாமியப் பஞ்சாங்கம் (மாதம், நாள், தேதி அறிவிக்கும் 'காலண்டர்') அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக புதிதாக இட்டுக் கட்டப்பட்ட இலாஹி மாதங்களும், வருஷங்களும் புகுத்தப் பட்டன. ஓராயிரம் ஆண்டுகளுக்கப்பால் இஸ்லாம் மதம் பொருத்த மற்றதெனப் புறக்கணிக்கப்படக்கூடிய மதமெனக் கருதப்பட்டது. அரபி மொழியைப் பயிலுவது சட்ட விரோதமானதென மதிக்கப்பட்டது. இஸ்லாத்தின் சட்டம் அல்லது பிக்ஹூவும், தப்ஸீர் அல்லது குர்ஆன் ஷரீப் தத்துவங்களும், ஹதீது அல்லது நாயகம் (ஸல்) அவர்களின் திருவாய் மொழிகளும் ஏதோ ஓர் அசங்கிதமான பொருட்களெனக் கருதப் பட்டன. இவைகளைப் படிப்போர்களனைவரும் தண்டனைக்குரியவர்களென்றும், மக்களினத்திலிருந்து அப்பாற்பட்டவர் களென்றும் கருதப்பட்டனர். இஸ்லாத்தின் கட்டளைகள்படி அரசாங்கமண்டபத்தில் தினசரி ஐங்காலமும் வழுவின்றி நடைபெற்று வந்த அஸான் அல்லது தொழுகை அழைப்பும், நமாஸியே ஜமா அத் அல்லது ஜமா அத்தினர் ஒருங்கு சேர்ந்து தொழுகை நிறை வேற்றுவதும் நிறுத்தப்பட்டன. ஆண்டவனின் திருத்தூதர் (ஸல்) அவர்களின் பல் வேறு திருநாமங்களாகிய அஹ்மது, முஹம்மது,

முஸ்தபா முதலிய நாமங்களெல்லாம் மன்னரைத் துவேஷிக்கும் மொழிகளாகக் கருதப்பட்டன. இப் பெயர்களை வாயால் உச்சரிப்பதும் குற்றமெனக் கருதப்பட்டது. மஸ்ஜிது (பள்ளி)களும், பிரார்த்தனாலயங்களும, சாமான்கள் சேகரித்து வைக்கும் அறைகளாகவும், ஹிந்து காவலர்களின் அறைகளாகவும் மாற்றப்பட்டன. இஸ்லாம் பெரும் அவதிக்குள்ளாகியது. இஸ்லாத்தின் மீது நம்பிக்கையற்றோர் இஸ்லாத்தையும், அதைப் பின் பற்றுவோரையும் பகிரங்கமாக இழிவு படுத்த உரிமை பெற்றிருந்தனர். ஹிந்துமத அனுஷ்டானங்களும், கிரியைகளும் ஒவ்வொரு வீதியிலும், சந்தியிலும் நிறைவேற்றப்பட்டன. முஸ்லிம்கள் மட்டும் இஸ்லாத்தின் கடமைகளை நிறைவேற்ற அனுமதிக்கப்பட வில்லை. ஹிந்துக்கள், பட்டினி விரதம் இருக்கும் காலங்களில், அவர்கள் முஸ்லிம்களைப் பகிரங்கமாக உண்ணவும், குடிக்கவும் கூடாதென்றும் நிர்ப்பந்திக்க அனுமதிக்கப் பட்டிருந்தனர். ஆனால், முஸ்லிம்கள் நோன்பை அனுஷ்டிக்கும் ரமலான் காலங்களில் ஹிந்துக்கள் மட்டும் பகிரங்கமாக உண்ணவும், குடிக்கவும் அனுமதி யிருந்தது. பல இடங்களில் முஸ்லிம்கள் ஈதுல் அல்ஹப் பெருநாளின் போது பசுகுர்பானி செய்ததற்காக உயிர் இழக்கவும் நேரிட்டது. அநேக மஸ்ஜிது (பள்ளி)கள் ஹிந்துக்களால் இடித்து நாசமாக்கப் பட்டு, அவை

களுக்குப் பதிலாக ஹிந்துக் கோயில்கள் நிர்மாணிக்பட்டன.''*

அக்பரின் "சகிப்புத்தன்மை'', தாராளத்தன்மை என்று கூறப்பட்டதன் இலட்சணம் இதுதான். ஹிந்து—முஸ்லிம் உறவுக்கு இது ஒரு சாபக்கேடாக ஆகிவிட்டது. முன் நாட்களில் இருந்து வந்த ஒற்றுமையும், அந்யோந்நிய உணர்ச்சியும் மாறி, மாச்சரியமும், விரோதமும் இடம் பெற்றன. இந்த நிலைமை மொகலாய ஆட்சிக்காலம் முழுவதும் நீடித்திருந்தது. அதிர்ஷ்டவசமாக அக்பரின் இஸ்லாமிய விரோதக் கொள்கை, அவருக்குப்பின் தோன்றிய மன்னர்களால் அனுஷ்டிக்கப்படவில்லை. மாச்சரிய, விரோத உணர்ச்சியும் தர்பாருக்கப்பால் பிரவேசிக்கவில்லை. தர்பாருக்கு வெளியே இருந்த சாதாரணப் பொது மக்களிடையே மீண்டும் அந்த பழைய அந்நியோந்நியமும் பரஸ்பர நல்லுணர்வும், சகிப்புத்தன்மையும் தோன்றின. இந்த நிலைமை நம் காலம்வரை நிலவி வருகிறது. ஹிந்து மதத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவிய நவ்முஸ்லிமான மௌலவி உபையதுல்லா என்ற பெரியாரின் "துஹ்பத்—துல்—ஹிந்த்'' என்ற நூல் முதன் முதலாக 185:-ல் வெளியிடப்பட்டது. ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே இருந்து வந்த பரஸ்பர நல்லுறவு பற்றி அதில் அழகாக வருணிக்கப்பட்டிருக்கிறது. அதில் அந்நூலாசிரியர், இஸ்லாத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து, இஸ்லாத்தைத் தழுவியவர்களும், தழுவ இருப்ப

---

*டாக்டர் புர்ஹான் அஹ்மத் எழுதிய "தவ்ஹீத் பற்றி முஜத்தித்தின் அனுமானம்'' (The Mujaddid's Conception of Tawhid''), பக்கம்: 20, 22.

வர்களுமானத் தமது உறவினர், நண்பர்கள் ஆகியவர்களின் ஜாபிதா ஒன்றை வெளியிட்டிருக்கிறார். பரஸ்பர அனு தாபப் பூர்வமான உறவும், அந்நியோந்நியமும், அமைதி யும் இல்லாமல் இவ்வாறு நடைபெறுவது சாத்தியமில்லை. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரது திருவிழா, கலி யாணம் முதலிய வீட்டு விசேஷ காரியங்கள் முதலியவற்றில் மற்றவர் கலந்து கொண்டும், ஒருவருக்கு ஏற்படும் சுகதுக் கங்கள் மற்றவருக்கு ஏற்பட்டதாகக் கருதியும் அந்நியோந் நியமாகக் கலந்து வாழ்ந்து வந்தனர். அது மத பக்தியும், சாந்தமும், சமாதானமும் நிரம்பிய அழகான காலம். இன்று பத்திரிகைகளை வாசித்துக் கொண்டு, நகரங்களில் வசித்து வரும் நாம் அந்த மகோன்னத காலத்தைப்பற்றி மனக்கண்ணால் கூட சிந்தித்துப் பார்க்க முடியாது. முஸ் லிம்களைத் தம் ஜீவியகாலமெல்லாம் கடுமையாக எதிர்த்து வந்த காலஞ்சென்ற லாலா லஜபதிராய், தம் தந்தையாரின் காலத்திலும், தம் வாழ்நாளின் சிறிய பிராயத்திலும் தாங் கள் முஸ்லிம்களுடன் நெருங்கிய உறவு கொண்டு வாழ்ந்து வந்த வரலாற்றை விவரித்திருக்கிறார். பல்லாயிரக்கணக்கான இதர குடும்பங்களும் அந்த நன்னாளில் இவ்வாறுதான் வாழ்ந்து வந்துள்ளன. ஹிந்து—முஸ்லிம் சமூகத்தின ரிடையே யிருந்துவந்த அந்தப் பழைய உறவுகள் இடை யில் பாதிக்கப்படாமல் தொடர்ந்து, உடலிலும், உள்ளத் திலும் ஊறி இருந்திருக்குமாயின், உடலும், உள்ளமும் ஒன்றான ஒரு சமுதாயம் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும். மகோன்னதமான அந்நாளும் வந்திடாதோ?

—:—

## அத்தியாயம் 3

# வேற்றுமை வித்துகள்

பிரிட்டிஷார் இந்நாட்டில் காலடி வைப்பதற்கு முன், ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ தேசிய உணர்ச்சி கொண்டவர்களாக இல்லையென்பதையும், ஆதலால், அவ்விரு சாரரும் நல்ல அயலகத்தினர்களாக ஒன்றி வாழ்ந்து வந்தனரென்பதையும் நாம் அறிந்து கொண்டோம். முஸ்லிம்கள், தங்கள் சமுதாய உணர்ச்சியை வளர்த்திருப்பார் களாயின், அவர்கள் ஹிந்துக்களை அடக்கி, ஹிந்து மதத்தை தீர்த்துக் கட்டியிருப்பார்கள். அதுபோன்றே ஹிந்துக்களும் சமுதாயப் பற்றுக் கொண்டோராக இருந்திருப்பாராயின் முஸ்லிம்களை வெளியேற்றி விட்டிருப்பார்கள். ஆனால், அதறகுப் பதிலாக முஸ்லிம்களின் தலைமையின் கீழ் ஹிந்துக்களும், ஹிந்துக்களின் தலைமையின் கீழ் முஸ்லிம்களும் எவ்விதவித்தியாசமுமின்றி தங்களை எதிர்த்தோரைஎதிர்த்து போரிட்டிருக்கின்றனர். அவர்கள், தங்கள் பரம்பரை வழக்கப்படி போரிலீடுபட்டனரே யன்றி அதற்கு சமுதாய உணர்ச்சியோ, வேறெக் காரணங்களோ இல்லை. தவிர ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சமுதாய உணர்ச்சி பெற்றவர்களாய் இருந்திருப்பாராயின், பிரிட்டிஷார் இந்நாட்டில் காலடி வைத்திருக்கவே முடியாது. பிரிட்டிஷ் கொடியின் கீழ் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவித சமுதாய உணர்ச்சியுமின்றி தங்கள் இனத்தோரான ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் எதிர்த்துப் போரிட்டிருக்கின்றனர். அவர்கள், தங்களுக்குத் தாங்களே தேடிக் கொள்ளும் வினையை அப்போது உணரவில்லை. இதுபோன்று இந்திய சரித்தி

ரத்திலேயே இதற்கு முன் எப்போதும் காணப்பட்டதில்லை. இந்தியா, இந்திய பணத்தைக் கொண்டே இங்கிலாந்துக் காக விலைக்கு வாங்கப்பட்டதென்று கூறப்பட்டது கலப் பற்ற உண்மையே. இந்திய மக்களிடையே மட்டும் கொஞ் சமேனும் சமுதாய உணர்ச்சியோ, தேசியப்பற்றோ இருந் திருக்குமாயின், இவ்வாறு நேரிட்டே இராது.

ஹிந்து—முஸ்லிம் இருவகை மக்களும் ஒன்றி, நல்ல அயலகத்தார்களாக வாழ்ந்தனரெனினும், தங்கள் நெடுங் கால அந்நியோந்நிய வாழ்வில் அவரவர்கள் தங்கள் தங்கள் தனித் தன்மையைக் கடைப்பிடித்து வந்தனர். ஒரு ஹிந்து பல நூற்றாண்டுகளாக அவனுடைய உடம்பில் ஊறிப்போய்விட்ட தனி இனத்தன்மை, தீண்டாமை, ஜாதிக் கட்டுப்பாடுகள் முதலியவைகளால் தன்னைச் சுற்றி லும் ஒரு மதிற் சுவரை எழுப்பிக் கொண்டிருக்கிறார். இதை எவரும் கடந்து செல்ல முடியாது. ஆரியர்கள் 4,000 ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டில் பிரவேசித்தனர். அவர்கள் கூட இன்றைய நாள்வரை இந்தியப் பூர்வீகக் குடிகளுடன் கலக்க முடியாது போய்விட்டது. சைத்தியர் கள், பார்த்தியர்கள், ஹூணமக்கள் முதலியோர் ஹிந்து மதத் தில் கலந்திருக்கின்றனரென்பது உண்மையே. ஆனால், இவர்களனைவரும் படையெடுப்பாளர்களாகவே இங்கு வந்த னர். தங்கள் பரம்பரை உரிமைகளை நிர்மாணித்துக் கொள் வதற்காக பிராமணர்கள், தங்களுக்கிடையே அவர்களுக்கு இடமளித்தனர். ரோமாபுரி, தன் நிலைமையை ஊர்ஜிதப்

படுத்துவதற்காக தன் வைதீகக் கோட்பாடுகளைத் தன் ஆக்கிரமிப்பாளர்கள் மீது சுமத்தியதையே இது ஒக்கும். ரோம மக்கள் இதுவரை ஆக்கிரமிக்கப்பட்ட அடிமைகளாகவே இருந்திருப்பராயின், அவர்களின் நிலைமையும் சூத்திரர்களைப் போன்றதாகவே இருக்கும். சிவாஜி, ஒரு ராஜபுத்திரனு யிருந்தால் காசியிலிருந்து கூட பிராமணர்களை அழைத்துக் கொள்ள வசதி இருந்தது. ஆனால், சாதாரண மராட்டியர்களுக்கோ இந்த கௌரவத்தை ஏற்படுத்திக்கொள்ள இயலாது.

சைத்தியர்கள், பாத்தியர்கள், ஹூன்மக்கள் ஆகிய மக்கள், ஹிந்துக்களின் மேலான கலாசாரத்திற்கு அடிபணிந்து விட்டனர். ஆனால், முஸ்லிம்களோ அதைவிட உயர்ந்த கலாசாரத்துடனும், உயர்ந்த மனோபாவத்துடனும், உயர்ந்த புனிதமதம் தங்களுக் கிருக்கிறதென்ற மனோ உணர்ச்சியுடனும் இந்நாட்டில் பிரவேசித்தனர். ஆதலால், அவர்கள் ஹிந்து மதத்தில் சேர இயலாதுபோய் விட்டது. ஹிந்துக்களின் ஜாதி உணர்ச்சி பலமாயிருந்தது. தீண்டாமையையும், ஜாதிக் கட்டுப்பாட்டையும் அவர்கள் கண்டிப்பான முறையில் அனுசரிக்கிறார்கள். முஸ்லிம்களின் ஜாதி உணர்ச்சியோ ஹீனமானது. இஸ்லாம் மதம் ஜாதி வேறுபாடுகளை அழித்து விடுகிறது. இந்திய முஸ்லிம்கள் பல ஜாதியினரிலிருந்து முஸ்லிம்களானவர்கள்; ஆதலின் அவர்களிடம் எந்த விதமான இன உணர்ச்சிகளும், வேறுபாடுகளும் கிடையா. ஆனால், அவர்களின் மத உணர்ச்சி மட்

டும் மிக மிகப் பலம் வாய்ந்தது.* இந்த இரண்டு மக்களும் தங்கள் உணர்ச்சிகளையும், சமூகக் கோட்பாடுகளையும், வைதீக முறைகளையும் பின்பற்றிய வெவ்வேறான பிரிவினராவர் ஆதலின் அவ்விரு இனத்தவர்களும் பல நூற்றாண்டுகளாக ஒன்றி வாழ்ந்து வந்ததும், தனித் தனி இனத்தோராகவே இருந்து வந்துள்ளனர். இந்த இரண்டு ஓடைகளும் ஒன்று கலக்க முடியாமற் போய்விட்டன இந்த இரு சமூகத்தினரும் சமூக அமைப்பு, இலட்சியங்கள், கோட்பாடுகள், பூர்வீக வரலாறுகள் முதலிய ஒவ்வொரு அம்சத்திலும் முற்றும் வேறுபட்டவர்களாய் இருக்கின்றனர். இவர்களின் உள்ளங்களில் அவரவர்களின் உணர்ச்சிகள் தீவிரமாகத தூண்டி விடப்படுமாயின், அவர்கள் வெவ்

---

*மதத்தை எதிர்த்து இந்தியர்களின் பிரசாரமும், ஐரோப்பியர்களின் பிரசாரமும் பலமாகி விட்டன. ஒரு சிலரின் மதபக்தி மிகவும் தீவிரமாயிருப்பதே அந்த மக்களைக் கண்டனம் செய்வதற்குப் போதுமானதெனக் கருதப்பட்டது. ரெனன் முதலிய அரசியல் தத்துவ ஞானிகள் கூறியபடி சமுதாயத்துவத்திற்கு ஜாதி எப்போதும் ஒரு அடிப்படையாக அமைந்தது கிடையாது. இந்த நிலைமையில் ஜாதீய சமுதாயத்துவத்திற்கும், அல்லது ஒரு கோஷ்டிமக்கள் அமைப்புக்கும் எவ்வாறு ஆதாரமாகக் கூறுவது என்ற கேள்வி எழக்கூடும். ஒருவனுடைய பிறப்பைக்கொண்டே அவனை ஒரு குறிப்பிட்ட குடும்பத்திலும், குறிப்பிட்ட ஜாதியிலும், இனத்திலும் சேர்ப்பது என்ன நியாயம்? பிறப்புக்கும், இரத்தத்துக்கும் மட்டும் மதிப்பும் அவமதிப்பும் தரப்படுவதேன்? மனித உறவுகளுக்கு ஒரு மேலான இலட்சியமே அடிப்படையாக இருக்க வேண்டும். ஆதலால், இஸ்லாம் மதம் இரத்தத்தாலும், பிறப்பாலும் எற்படும் வேறுபாட்டை அடியோடு ஒழித்து, அதற்குப் பதிலாக அவனுடைய நம்பிக்கையையும், தேசீய வாழ்வின் இலட்சியத்தையும் புகுத்தி, அவற்றின்படி பிரிந்திருப்பதே மேலானதாகக் கூறுகிறது.

வேறு முறையில் நடந்துக் கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அவ்விரு சாராரும் தனித் தனிச் சமுதாயத்தினராக வளர்ந்தோங்குவதைத் தவிர வேறு போக்கிடமில்லை. தேசீயம், அல்லது சமுதாய தத்துவ மென்பது தனி மக்களாக வாழவேண்டுமென்ற உணர்ச்சி தீவிரமாகி விடுவதேயாகும். இந்த நிலைமைதான் இப்போது ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஹிந்து முஸ்லிம் இரு மக்களும் இப்போது தேசீய உணர்ச்சி பெற்ற தனிச் சமுதாயத்தினர்களாக ஆகிவிட்டனர். இப்புதிய உணர்ச்சியின்படி அவர்கள் தங்கள் உறவுகளை மாற்றியமைத்துக் கொள்ளாமற் போய் விடுவராயின், அவர்களுக்கிடையே சமாதான மென்பது குதிரைக் கொம்பாகவே முடியும்.

இவ்வித நிலைமை எவ்வாறு ஏற்பட்ட தென்பதைப் பற்றி நாம் இப்போது கவனிப்போம். இரத்தினச் சுருக்கமாக கூறுமிடத்து, ஒருவருக் கொருவர் வேறுபாடு காட்டி ஒருவரை அடக்கி, மற்றவரை உயர்த்தும் பிரிட்டிஷ் கொள்கையின் பயனாகவே இந்த நிலைமை ஏற்பட்டது.

ஹிந்துக்களுடையவும், முஸ்லிம்களுடையவும் தேசீய உணர்ச்சி மிகவும் மந்தமாக வளர்ச்சி யடைந்தது. இந்த உணர்ச்சி எப்போது திட்டமாகத் தீவிரமாகியதென்று உறுதிப்படுத்த முடியவில்லை. முதன் முதலில் இந்த சமுதாய உணர்ச்சி பொருளாதார விரோதத்தில் தோன்றியது. குறிப்பாக சர்க்கார் உத்தியோகங்களில் இவ்விரோதம் அதிகமாகியது. இது பின்னர் அரசியல் விரோதமாக மாறி, கடைசியாக தேசீயப் பகைமையில் வந்து முடிந்தது. பொருளாதாரத் துறையில் முஸ்லிம் ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு

நேர்முரணுக இருந்த தென்பது கவனிக்கத் தக்கது. மௌரியர்கள் அல்லது குப்தர்களின் ஆட்சியைப்போன்றே முஸ்லிம்களின் ஆட்சியும் உள்நாட்டுறப்பத்தியில் தலை சிறந்த தேசீய ஆட்சியாகவே நடைபெற்றது. முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்கள், இந்தியாவைத் தங்கள் சொந்த தாயகமாகச் செய்து கொண்டனர். இன்று காந்திஜீயும், மௌலானு ஆஸாதும் இருப்பதுபோன்றே அன்று முஸ்லிம் மன்னர்களும் பூரண இந்தியர்களாகவே விளங்கினர். அவர்கள் இந்நாட்டில் விதித்து, வசூலித்த வரித் தொகைகள் எல்லாம் இந்நாட்டிலேயே இந்நாட்டிற்காகவே செலவிடப் பட்டன. அவர்கள் இந்தியாவில் வரிவிதித்து வசூலித்த தொகையை எந்த அயல் நாட்டுக்கும் அனுப்பிவிடவில்லை. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சியோ, அன்று முதல் இன்றுவரை இந்நாட்டின் செல்வத்தைத் தொடர்ச்சியாகத் தங்கள் நாட்டிற்கு அனுப்பிவந்துள்ளது. இதன்காரணமாக இங்கிலாந்து செல்வத்தில் தலை சிறந்த நாடுகளில் ஒன்றுகவும், இந்தியா, உலகிலேயே பஞ்சத்தில் தலைமையான நாடாகவும் இன்று விளங்குகின்றன. பிரிட்டிஷ் வர்க்கத்தார் அன்று ஒரு வர்த்தகக் கோஷ்டியாக இருந்தனர். அவர்கள் இந்நாட்டில் ஒரு காலை ஊன்றியவுடன் வங்காளத்தின் கைத்தொழிலையும், வர்த்தகத்தையும் நாசமாக்க ஆரம்பித்தனர். வங்காளத்தின் கடைசி முஸ்லிம் மன்னரான மீர் காசிம் இந்த அநீதியை நிறுத்த பெரும் முயற்சி செய்து, தமது ஏராளமான செல்வத்தைத் தியாகம் செய்தார். இதன் விளைவு என்ன ஆயிற்று? அவர், தம் சிம்மாசனத்தை இழந்தார்; வங்காளமும் அடியோடு முஸ்லிம்கள் வசமிருந்து போய் விட்டது.

முஸ்லிம்களுக்குக் குறிப்பாக ஏற்பட்ட அடுத்த அடி: வங்காள நிரந்தரக் குடியேற்றமே(அக்காலத்தில் இதில் அஸ்ஸாம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களும் சேர்ந்திருந்தன). இந்த குடியேற்றத்தின்படி ஒரே ஒரு எழுதுகோல் கீரலால் நிலங்களின் உண்மையான சொந்தக்காரர்கள் எல்லாம் குடியானவர்களாக மாறிவிட்டனர். வரி வசூலிக்கும் தாழ்ந்த உத்தியோகங்களிலிருந்த ஹிந்துக்களெல்லாம் நிலச்சுவான்தார்களாக மாற்றப்பட்டனர். உயர்தர முஸ்லிம் வரி இலாக்கா உத்தியோகஸ்தர்களெல்லாம் குப்பைக் குவியலில் தள்ளப்பட்டனர். டாக்டர் டபிள்யூ. டபிள்யூ ஹண்டர் பின்வருமாறு வரைந்திருக்கிறார்:—

"(நிரந்தரக்) குடியேற்றத்தின் முழுத் தன்மை (இலட்சியம்) யும் இதுதான். தங்களைப் பராமரித்தவர்களை நேரடியாக எதிர்த்த ஊழியர்களான ஹிந்து உத்தியோகஸ்தர்களை நிலச்சுவான்தார்களென மாற்றுவதே இந்த இலட்சியம்................அது காலம்வரை முக்கியாம்சமில்லாத பதவிகளில் இருந்தவர்களான ஹிந்து வரி வசூலிப்பவர்களையெல்லாம் இக் குடியேற்றம் உயர்த்திவிட்டது. அவர்களுக்கெல்லாம் நிலத்தின் சொந்த ஆர்ஜித உரிமையளிக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு, அவர்களின் ஆட்சியில் கிடைக்க வேண்டியிருந்த செல்வங்களையெல்லாம் இந்த ஹிந்து ஏவலாளர்கள் சேகரித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது."*

முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் முஸ்லிம் உயர்தரக் குடும்பத்தினருக்கு மூன்று வகையான உத்தியோகங்கள்

*"இந்திய முஸ்லிம்கள்", பக்கம்: 159.

ஒதுக்கப்பட்டிருந்தன. அவை: (1) நிதி, நிர்வாகம்; (2) நீதிபரிபாலனம்; (3) இராணுவம் ஆகியவைகளாம். முதன் முதலில் நிதி நிர்வாக விஷயங்களில் முஸ்லிம் உயர்தரக் குடும்பத்தினருக்குப் பதிலாக ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களோ, அல்லது புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட ஹிந்து நிலச்சுவான்தார்களோ நியமனம் செய்யப்பட்டனர் இராணுவத்தில் முஸ்லிம்கள் சேராமல் தடை செய்யப்பட்டு, சமீப காலம்வரை உயர்தர இராணுவ உத்தியோகம் ஒரு இந்தியனுக்குக் கூட அளிக்கப்படாமல் இருந்து வந்தது. பின்னர், நாளடைவில் முஸ்லிம் சட்ட அதிகாரிகளும் அகற்றப்பட்டு அவர்களுக்குப் பதில் வேறு சட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஆதலால் முஸ்லிம்கள் வெகு சீக்கிரமாக க்ஷீண தசையடைய ஆரம்பித்தனர். மிஸ்டர் ஹண்டர் 1871-ம் வருஷத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"சென்ற எழுபத்தைந்து வருஷங்களாக (அதாவது: நிரந்தரக் குடியேற்றம் ஆரம்பமானது முதல்) வங்காளத்தில் இருந்த முஸ்லிம் குடும்பங்கள் எல்லாம் இம்மண்ணிலிருந்து மறைந்தோ, அல்லது நம் ஆட்சி போற்றி வளர்த்த அந்தப் புதிய சமூகத்தின் கீழ் தற்சமயம் புதைக்கப்பட்டோ போய்விட்டன."*

மேற் குறிப்பிடப்பட்ட பெரிய முஸ்லிம் குடும்பங்கள் பற்றி மிஸ்டர் ஹண்டர் வேறோரிடத்தில் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார்:—

"ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏதேனும் ஒரு முஸ்லிம் பழைய அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள், கூரையில்லா அரண்மனைகளிலும், பாசி மண்டிய குளங்களி

* "இந்திய முஸ்லிம்கள்", பக்கம்: 162.

லும் தன்மானத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் ஹிருதயங்களில் குமுறல்கள் நிரம்பியிருக்கின்றன. இவ்வித குடும்பங்களில் பலவற்றை நான் நேர் முகமாக அறிவேன். அத்தகைய குடும்பங்களின் வீடுகளில் அவர்களின் வளர்ந்து வயதெட்டிய புத்திரர்களும், புத்திரிகளும், பேரன் பேத்திமார்களும், மருமகன், மருமகள்மார்களும் நிரம்பியிருக்கின்றனர். இந்த பசிப் பட்டாளத்தில் ஒருவர்கூட தங்கள் வாழ்வில் தங்களுக்கென எதுவும் செய்து கொள்ள வசதியில்லை. ஓடிந்த தாழ்வாரங்களிலும், ஓட்டை வீடுகளிலும் அவர்கள் காலந்தள்ளி வருகின்றனர். அவர்களின் கடன் சுமையோ நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்லுகிறது. முடிவாக அவர்களின் பக்கத்து வீட்டில் வாழும் ஹிந்து முதலாளிகள் (அந்த ஏழை முஸ்லிம்களுக்குக் கடன் கொடுத்தவர்கள்) அந்த ஏழை அப்பாவி முஸ்லிம்களிடம் சச்சர விட்டுக் கொண்டு, ஒரே நொடியில் அநேக அடமானங்கள் பைசல் செய்யப்படுகின்றன. இதனால் பண்டைய முஸ்லிம் குடும்பம் திடீரென்று ஒரு நாள் விழுங்கப்பட்டு நிரந்தரமாக மறைந்து விடுகிறது.''*

வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, சோட்டா நாகபுரி முதலிய இடங்களில் இன்று காணப்படும் அநேக ஹிந்து ராஜாக்களும், மகாராஜாக்களும், (அன்று முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ்) அற்ப வரி வசூலிப்பாளர்களாகவும், பணவேவாதேவி செய்தோராகவும் இருந்தவர்களின் வம்சத்தில் வந்தவர்களேயாவர்.

* ''இபித்'', பக்கம்: 152.

முஸ்லிம்களின் கல்வி முறைகள் எல்லாம், முஸ்லிம் மன்னர்களாலும், அவர்களின் உத்தியோகஸ்தர்களாலும் தானமாக அளிக்கப்பட்ட வாடகையில்லா (சுரோத்திரீயம்) பூமிகளைக் கொண்டே நடைபெற்று வந்தன. இந்த தான பூமிகளெல்லாம் பின்னர் மீண்டும் கைப்பற்றப்பட்டன. மிஸ்டர் ஹண்டர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"(1828-ம் வருஷத்தில்) விசேஷ நீதிமன்றங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. அடுத்த 18 ஆண்டுகளுக்குள் மாகாண முழுவதும் தகவலறிப் போர்களும், பொய் சாட்சி கூறுவோரும், அமைதியாகவும், நிதானமாகவும் தான நிலங்களைச் சர்க்காரிடம் மீண்டும் சேர்க்கும் உத்தியோகஸ்தர்களும் நிரம்பிவிட்டனர்............ நூற்றுக்கணக்கான பண்டைய குடும்பங்கள் நாசமாக்கப்பட்டன. வாடகையில்லா (சுரோத்திரீய) பூமிகளைக் கொண்டு நடத்தப்பட்டுவந்த முஸ்லிம் கல்வி முறைகளெல்லாம் மரண அடி பெற்றுவிட்டன. 18 வருஷகாலமாக அவதிப்பட்டுத் தேறிய முஸ்லிம் பண்டிதர்களும் அடியோடு அழிக்கப்பட்டனர்."1

மேலும், அவர், வேறோரிடத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"தான பூமிகள் மீண்டும் சர்க்காரால் பெறப்பட்ட அந்த நாள் முதல் தான் முஸ்லிம்களின் கல்வி முறை அழிவு கணக்கிடப்படவேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை."2

---

1 "இபித்", பக்கம்: 182.

2 "இபித்", பக்கம்: 184.

ஹூக்ளி தர்ம சொத்து பற்றிய கதைதான் எல்லாவற்றையும்விட மிகமிக வெட்கக் கேடானது. அந்த வெட்கக் கேடு இன்றளவும் நிலைத்திருக்கிறது. இந்த தர்ம சொத்தை ஹாஜி முஹம்மது மொஹ்லின் என்ற பெரியார் ஏற்படுத்தினார். அவர் ஒரு பெரிய சொத்தை கல்வி போதனா சாலை (மதரஸா) உட்பட மதசம்பந்தமான காரியங்களுக்கு எழுதி வைத்துவிட்டு 1806-ம் வருஷத்தில் வபாத்தானார். அதைப் பராமரித்து வந்த இரண்டு தர்மகர்த்தாக்களுக்கிடையே வாக்குவாதமும், தகராறும் ஏற்பட்டன. 1816-ம் வருஷத்தில் சர்க்கார் அவ்விரு தர்மகர்த்தாக்களையும் நீக்கிவிட்டு, ஒரு தர்மகர்த்தாவுக்குப் பதிலாக தன்னையும், மற்றொரு தர்மகர்த்தா ஸ்தானத்தில் வேறொருவரையும் நியமித்துக் கொண்டது. "அடுத்த வருஷத்தில் அந்த சொத்தை, சர்க்கார் துண்டு துண்டாகப் பிரித்து, பலருக்கு நல்ல தொகைக்கு நிரந்தர குத்தகையாக விட்டுவிட்டது. இதனால் கிடைத்த வருமானத் தொகையும், தகராறு நடைபெற்று கொண்டிருந்த காலத்தில் சேர்ந்திருந்த பாக்கித் தொகைகளுமாகச் சேர்ந்து இப்போது மொத்தம் 1,05,700 பவுன்களாகிவிட்டன. இதுவன்றி, அதுமுதல் சொத்திலிருந்து வருஷாந்திர வருமானத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தொகை 12,000 பவுன்." இந்தத் தொகையும், சொத்திலிருந்து கிடைக்கும் வருமானமும் ஒரு கல்லூரியை நிர்மாணிக்கும் வேலையில் சர்க்காரால் செலவிடப்பட்டன. இக் கல்லூரியில் முஸ்லிம்கள் சேராமல் தடுக்கப்பட்டனர். "இவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகத்தை மறைப்பதற்காக, மேற்படி கல்லூரியுடன் சிறிய பள்ளிக்கூடமொன்றை முஸ்லிம்களுக்காக சர்க்கார் இணைத்து விட்டனர்" என்று

டாக்டர் ஹன்டர் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:—

"மேற்கண்ட சேகர நிதியை கல்லூரி கட்டுவதில் துஷ்பிரயோகம் செய்ததுடன், அக்கல்லூரியின் பராமரிப்புக்காக வருஷத்தில் 5,000 பவுனை ஒதுக்கி விட்டது. அதாவது மொத்தம் சொத்திலிருந்து வருஷத்தில் கிடைத்த வருமானமான 5,260 பவுனில், 350 பவுனை மட்டுமே அந்தச் சிறிய முஸ்லிம் பள்ளிக் கூடத்திற்காகச் செல விட்டது. தர்மச் சொத்தின் அசல் இலட்சியத்திற்கு இது ஒன்றுதான் சாட்சியாக விளங்கியது. இந்த துஷ்பிரயோகம் பற்றி இன்னும் அதிகமாக விவரிப்பது வருத்தத்திற்குரியது. ஏனெனில், அது மறுக்கப்படுவது சாத்தியமில்லை."*

கல்வி ஸ்தாபனங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் மொழிகள் மாற்றப் பட்டதால் இன்னும் அதிகமான பேரழிவு ஒன்று ஏற்பட்டது. அரபி, பாரசீகம், உர்து ஆகிய மொழிகளே வங்காளத்தின் கல்வி மொழிகளாக இருந்தன. சர்க்கார் மொழி பாரசீகமாக இருந்தது கனவான்களோ வீடுகளில் உர்து மொழியைப் பேசி வந்தனர். 1835-ம வருஷத்தில் ஆங்கிலப் பள்ளிக் கூடங்கள் நிறுவப் பட்டன. தாய் மொழிப் பள்ளிக் கூடங்களில் (அதாவது சுதேச மொழி போதிக்கப்படும் பள்ளிக் கூடங்களில்) உர்துவுக்குப் பதிலாக வங்காளி மொழி புகுத்தப்பட்டது. வங்காளி மொழி ஹிந்துக்களுக்கு மட்டும் உரித்தான மொழியாக இருந்தது. ஆதலால், அப் பள்ளிக்கூடங்களில்

---

* "இந்திய முஸ்லிம்கள்", பக்கம்: 184 முதல் 186 வரை.

ஹிந்து ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர்.* உத்தியோக வாழ்க்கையிலிருந்து முஸ்லிம்களை அகற்றி விட சர்க்கார் தீர்மானித்திருப்பது போன்று காணப் பட்டது. இந்த மொழிமாறுதல்களை ஏற்றுக் கொள்ளவும், அப்பள்ளிக் கூடங்களுக்குத் தங்கள் சிறுர்களை அனுப்பவும் முஸ்லிம் கள் மறுத்துவிட்டனர். 1850-ம் வருஷத்திற்குப் பிறகு இதன் பலாபலன்கள் ஆரம்பமாயின. முஸ்லிம்களின் கல்வி அஸ்திவாரமே வீழ்ச்சியடைந்து, அவர்களின் மொழி அடியோடு அகற்றப்பட்டு விட்டதால், சர்க்கார் பதவிகளில் தங்களின் ஸ்தாபனங்களை இழப்பதைத்தவிர வேறு விதியில்லாமற் போய்விட்டது. டாக்டர் ஹன்டர், தம் காலத்தில் இருந்த முஸ்லிம் உத்தியோகஸ்தர்களின் இலாக்காவாரியான ஜாபிதாவைப் பற்றிய புள்ளி விவரங் களை வரைந்துவிட்டு, முடிவுரையாகப் பின்வருமாறு கூறு கிறுர்:—

"உண்மையில் ஒரு முஸ்லிம், போர்டா, மெசஞ்சர் (தூதன்), மைபோத்தல் நிரப்புதல், எழுது கோல்களை சீவு தல் முதலிய உத்தியோகங்களுக்கு மேற்பட்ட உயர்ந்த

---

*டாக்டர் ஹன்டர் ("இபித்", பக்கம்: 180) கூறுவதா தாவது :— "எல்லா வகுப்பினரிடமிருந்தும் அரசாங்க கல்விக்காக நாம் சமத்துவமாக வரிகள் மூலம் வசூலிக்கும் நிதிகள், ஹிந் துக்களுக்காக மட்டும் ஏற்படுத்தப் பட்ட ஒரு கல்வி முறைக்குச் செலவிடப் படுகிறதென முஸ்லிம்கள் புகார் கூறுவதற்கு நேர்மை யான ஆதாரங்கள் இருக்கின்றன."

பதவி எதையும் எதிர்பார்க்கக் கூடிய சர்க்கார் காரியாலயம் ஒன்றுகூட கல்கத்தாவில் இப்போது கிடையாது.''*

கல்கத்தாவிலிருந்து பாரசீக மொழியில் வெளியிடப் பட்ட "டோர்பீன்'' என்ற பத்திரிகை, 1867 ஹூ ஜுலை 14உ வெளியான இதழில் பின்வருமாறு வரைந்திருந் தது:—

"பெரியதும், சிறியதுமான எல்லா உத்தியோகங் களும் நாளடைவில் முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப் பட்டு, இதர ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குக் குறிப் பாக ஹிந்துக்களுக்குக் கொடுக்கப்பட்டன. சர்க்கார், தனது பிரஜைகளில் எல்லா வகுப்பாரையும் ஓரே வித மாய் பாவிக்கக் கடமைப்பட்டுள்ளது. அவ்வாறிருக் கும் முஸ்லிம்களை சர்க்கார் பதவிகளிலிருந்து அகற்றி விடுவதற்காகத் தங்கள் கெஜட்டுகளிலிருந்து முஸ் லிம்களைப் பகிரங்கமாக நீக்கி விட்டிருக்கிறது. சமீ பத்தில் சுந்தர் பான்ஸ் கமிஷனர் காரியாலயத்தில் சில உத்தியோகங்கள் காலியாயின. இதைப் பற்றிக் கமிஷனர், சர்க்கார் கெஜட்டில் வெளியிட்ட விளம் பரத்தில், அவ்வுத்தியோகங்கள் ஹிந்துக்களைத் தவிர வேறெவருக்கும் கொடுக்கபட மாட்டாதென அறி வித்திருந்தார். சுருங்கக் கூறுமிடத்து, முஸ்லிம்கள் சர்க்கார் உத்தியோகங்களுக்கு அருகதை யானவர் களாயிருப்பினும், சர்க்கார் அறிக்கையில் அவர்களைப் புறக்கணித்தே வைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்குள் முஸ்லிம்கள் ஆக்கப்பட்டனர்.

* "இந்திய முஸ்லிம்கள்'', பக்கம்: 167.

அவர்களின் அனுதரவான நிலைமைபற்றி எவரும் அக்கரை கொள்வதில்லை. உயர்தர அதிகாரிகளோ முஸ்லிம்கள் என்ற ஓர் குலத்தார் இருப்பதாகக் கூட கவனிப்பதில்லை.''—இக்கட்டுரைக்கு மிஸ்டர் ஹன்டர் வரைந்துள்ள அடிக்குறிப்பில் சுந்தர்பான் கமிஷனரின் விளம்பர சம்பந்தமான அறிக்கை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட தெனினும், சர்க்காரால் மறக்கப்பட வில்லை என்று கூறியிருக்கிறார்.*

இன்னும் சில கோட் பாட்டு உதாரணங்களை இங்கு கூறலாம். டாக்டர் ஹன்டர் (148-ம் பக்கத்தில்) எழுதுவதாவது:—''சர்க்கார் உயர்தர அதிகாரிகள் முதல் தாழ்ந்த உத்தியோகஸ்தர்வரை..............நாம் அரசியாரின் முஸ்லிம் குடி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையில் தவறி விட்டோமென்ற உறுதியான அபிப்பிராயம் நிலவியிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. இந்திய ஜனத்தொகையில் பெரும் பிரிவு ஒன்று—சுமார் 3 கோடி பேர் இருப்பர்—பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தாங்கள் அழிவுற்று வருவதாகக் கருதுகிறார்கள்.'' அதே ஆசிரியர், 150-ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதுகிறார்:— ''அவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கக் கூடிய யோக்கியதாம்சங்களை அவர்கள் இழந்து விட்டார்களென்பது அர்த்த மல்ல. அவர்கள் நாளடைவில் அரசாங்க ஆதரவிலிருந்து அடியோடு அகற்றப்பட்டு வருகின்றனர். வாழ்க்கைப் போட்டியில் அவர்கள் இப்போது ஹிந்துக்களுடன் சமமேவகத்தில் செல்ல வேண்டு மென்பதல்ல. ஆமை வேகத்தில் செல்லக்கூட

* ''இபித்'', பக்கம்: 172.

அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. .... ..........."
"சுமார் 170 வருஷங்களுக்கு முன், வங்காளத்தில் செல்வத்தில் பிறந்த ஒரு முஸ்லிம், ஏழையாவது சாத்தியமில்லாதிருந்தது; இன்றோ, ஒரு முஸ்லிம் செல்வந்தன், செல்வமாகவே இருப்பது சாத்தியமில்லாதிருக்கிறது'' (பக்கம்: 155). முஸ்லிம்கள், எந்தவகையிலேனும் ஹிந்துக்களைவிட தாழ்வாக இருந்தனரா? இதற்கு டாக்டர் ஹண்டர், 167ம் பக்கத்தில் பின் வருமாறு பதிலளித்திருக்கிறார்:— "நாடு நம் ஆட்சிக்கு வந்த சமயம் முஸ்லிம்களே மகோன்னத ஜாதியினராக உயர்ந்திருந்தனர் அவர்கள் மனோதிடத்திலும், ஆயுத பலத்திலும் மட்டுமல்ல, அரசியல் கட்டுப்பாட்டிலும், சர்க்கார் நிர்வாகத்திறமையிலும் உயர்ந்தோராகவே இருந்தனர்.'' பிரிட்டிஷ் ஆட்சி ஒன்றுதான் அவர்கள் மீது சாபக்கேடாக இறங்கி, அவர்களை அனாதரவான கதிக்குள்ளாக்கி விட்டது.

மேற்கூறப்பட்ட கோட்பாடுகளிலிருந்து உத்தியோக விஷயங்களில் ஹிந்து யதேச்சா உரிமை 1870-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு விட்டதென்பது தெளிவாக விளங்கக் கிடக்கின்றது. ஹிந்துக்கள் தங்களின் இந்த யதேச்சா உரிமையை ஸ்திரப் படுத்திக் கொண்டு, சாத்தியமான எல்லா வழிகளிலும் சர்க்கார் உத்தியோகங்களிலிருந்து முஸ்லிம்களை விலக்கி வைக்கத் தீர்மானித்து விட்டனர். முஸ்லிம்கள் அநீதியாக நடத்தப் படுகின்றனரென்பதைச் சில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உணர்ந்து, சர்க்கார் உத்தியோகங்களில் முஸ்லிம்களுக்கும் சிறிது இடமளிக்க முயற்சிகள் செய்தனரென்று தெரிகிறது. கல்கத்தாவிலிருந்து வெளிவந்த "ஹிந்து தேசாபிமானி'' என்ற பத்திரிகை, 1870-ஞூ ஆகஸ்ட்-மீ 2-உ வெளியான இதழில்

மேற்கண்ட முயற்சிகளைப் பலமாக எதிர்த்து, முஸ்லிம்கள் கலகக்காரர் களென்றும், ஆதலால், அவர்களுக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்கப்படக் கூடா தென்றும் எழுதி யது. ஹிந்துக்களின் உத்தியோக பாத்தியதையைத் தகர்க்க முஸ்லிம்கள் பல்லாண்டுகள் வரை போராட வேண்டியிருந்தது. ஹிந்துக்கள், தங்கள் பதவிகளைப் பாது காத்துக் கொள்வதற்கு அநேக தந்திரோபாயங்களைச்செய்து வந்தனர். இத்தந்திரோபாயங்கள் இன்றளவும் செய்யப் பட்டே வருகின்றன. உத்தியோகங்களில் வகுப்புச் சமத் துவமின்மையே இந்திய அரசியலில் பெரும் பகுதியாக இருந்து வந்த தென்பது கவனிக்கத்தக்கது. வகுப்பு உறவுகள் வேறுபட்டு, வேற்றுமை ஏற்பட்டதற்கும் இதுவே காரணமெனக் கூறுதல் பொருந்தும். எவ்வளவோ முயற்சிகள் செய்யப்பட்டும் இந்த வகுப்பு சமத்துவமின்மை நீடித்திருந்து. அதனால் ஏற்பட்ட விரோதமே ஹிந்துக் களுக்கும் நிரந்தரப் பகைமையாக நிலைத்து விட்டது.

நாம் வங்காளத்தை விட்டு அப்பால் செல்வதற்குமுன் வகுப்பு உறவைப் பகைமையாக்குவதற்கு மற்றொரு கார ணமாயமைந்த வந்தே மாதரக் கீதத்தையும் கவனிப்பது அவசிய மில்லாமற் போகவில்லை. 1882-ம் ஆண்டில் வெளி யான ஒரு புத்தகத்தில் இந்த கீதம் வருகிறது. ஹிந்துக் களும், முஸ்லிம்களும் எவ்வளவு தூரம் வேறுபட்டிருந்தன ரென்பதையும், ஹிந்துக்கள், முஸ்லிம்களை இந்நாட்டை விட்டு அகற்றி விடவும், பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் எவ்வாறு முயன்றன

ரென்பதையும் இந்த கீதம் காட்டுகிறது. மேலும் அப் புத்தகம் உண்மையான விஷ்ணு பக்தி என்ன வென்பதை விளக்கிக் கூறுகிறது

"பங்கிம் சந்திர சாட்டர்ஜீயின் 'ஆனந்த மடம்' என்ற நாவலில்தான் (வந்தே மாதரக்) கீதம் வருகிறது. அந்த நாவலுக்கு இக்கீதமே ஜீவநாடியாக விளங்குகிறது. கதாநாயகனுகிய பவானந்தன், வங்காளத்தில் முஸ்லிம் ஆட்சிக்கு விரோதமாக ஓர் (ஆயுதப் படைக்) கலகத்தை ஆரம்பிக்கிருன் இச்சம்பவம் சுமார் 168 ஆண்டுகளுக்கு முன் நடைபெறுகிறது. அவன் அநேகரைத் தன் படைக் குத் திரட்டி வருகிருன் இவ்வாறு தன் படைக்கு ஆள் திரட்டுகையில் அவன் மகேந்திரன் என்பவனைச் சந்திக்கி ருன். இந்த மகேந்திரனுடைய மனைவியையும், குழந்தை யையும் பவானந்தன் முன்னொரு சமயம் கொள்ளைக் கூட் டத்தாரிடமிருந்து காப்பாற்றி யிருக்கிருன். பவானந்தன் மகேந்திரனிடம் வந்தே மாதரக் கீதத்தைப் பாடுகிருன். மகேந்திரனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் கீதத்தின் கருத்தை ஒருவாறுணர்ந்த மகேந்திரன், மீண்டு மொருமுறை கீதத்தைப் பாடுமாறு பவானந்தனைக் கேட்கி ருன். பவானந்தன் மீண்டும் பாடுகிருன். பாடலினிடை இடையே நாட்டை விடுதலை செய்ய வேண்டுவதன் அவசிய மென்ன, எவ்வாறு விடுதலை செய்வது என்பதைப் பற்றி அவன் விளக்குகிருன். நாட்டைப் பற்றி குறிப்பிடும் போதெல்லாம் 'தாய்' என்றே கூறுகிருன். மகேந்திர னுக்கோ இது அச்சத்தைத் தருகிறது. இந்த அசாத்திய மான காரியத்தைக் கைவிடும்படி மகேந்திரன் பவானந்த னுக்குக் கூறுகிருன். பவானந்தனுக்கு உடனே உணர்ச்சி

ஏற்படுகிறது. 'நமது மதம் போய்விட்டது; நமது ஜாதி ஒழிந்து விட்டது; நம் கண்ணியம் அகன்று விட்டது; இப் போது நம் உயிரும் பத்திரமாக இல்லே. இந்தக் குடிகார நெரியர்கள் (முஸ்லிம்களுக்கு வைக்கப்பட்ட துவேஷப் பெயர்) நாட்டை விட்டு விரட்டப்படும் வரை ஹிந்துக்கள், தங்களின் ஹிந்து மதத்தைப் பாதுகாக்க முடியுமா?' என்று கூறுகிறான் அவன். அதற்கு மகேந்திரன், 'நீ தனியாக நின்று அவர்களே விரட்டிவிட முடியுமா?' எனக் கேட்கிறான். இதற்குப் பதிலாக பவானந்தன் வந்தே மாதர கீதத்தின் சில வரிகளேப் பாடுகிறான். அவ்வரிகளின் அர்த்தம் வருமாறு:—'ஏழு கோடி குரல்கள் கோஷமிடும்; அது போன்ற இருமடங்கு தொகையான கைகள் கூரேறிய வாட்களே ஏந்தும்; இங்நிலேமையில் தாய் பலமில்லாதவள் என்று கூற முடியுமா?' வாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. மகேந்திரன் முஸ்லிம்களின் வீரத்தைச் சுட்டிக் காட்டுகிறான்; ஆனல், பவானந்தன், முஸ்லிம்களே 'கோழைகள்' என்று இழித்துக் கூறுகிறான். அவன் கூறுவதாவது:—

> 'ஆங்கிலேயன், அவனது உயிர் அபாய நிலேக்குள்ளாகி விட்டாலும் (போர் முனேயை விட்டு) ஓடி விட மாட்டான். ஆனல், முஸ்லிமோ, தன் உடம்பில் வியர்வைதட்ட ஆரம்பித்தவுடன் ஓட்டம் பிடித்து விடுகிறான்..................முஸ்லிம்களருகில் எங்கேனும் ஒரு வெடிகுண்டு விழுந்தால் போதும், முஸ்லிம் கூட்டமே தங்கள் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடிக்கிறது..................'

"மகேந்திரனுக்கோ இன்னும் திருப்தி ஏற்பட்டபாடில்லே. 'நான் அந்த பிரதிக்ஞையைச் செய்து கொள்ள மாட்டேன்' என்று அவன் கூறுகிறான்.

"மறு நாள் காலை பவானந்தன், மகேந்திரனை 'ஆனந்த மடம்' என்ற கோயிலுக்கு அழைத்துச் செல்லுகிறான். கோயிலின் அதிகாரியான பிரம்மச்சாரி, மகேந்திரனைக் கோவிலுக்குள் அழைத்துச் செல்லுகிறான். கோயிலுக்குள் கொஞ்சம் இருளாக இருக்கிறது. மகேந்திரன் கண்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக பின்வருமை காட்சி தோன்றுகிறது: ஒரு பெரிய விஷ்ணுவின் விக்கிரகம்; அதற்கு நான்கு கரங்கள்; ஒரு கரத்தில் சங்கு; மற்றொரு காதநில் சக்கரம்; வேறொரு கரத்தில் கதை; இன்னுமொரு கரத்தில் தாமரை. விஷ்ணுவின் முன்னிலையில் வெட்டப்பட்ட இரு தலைகள் உருண்டு கிடக்கின்றன. அத்தலைகளிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருககிறது. விஷ்ணுவின் விக்கிரகத்துக்கு இடப் புரத்தில் லட்சுமியின் விக்கிரகம் இருக்கிறது; வலது புறத்தில் சரஸ்வதியின் விக்கிரகம் இருக்கிறது. விஷ்ணுவின் மடியில் மற்றொரு 'அழகிய' விக்ரகம் காணப்படுகிறது. 'விஷ்ணுவின் மடியில் இருக்கும் உருவம் உன் கண்களுக்குத் தெரிகிறதா?' என்று கேட்கிறான் பிரம்மச்சாரி. மகேந்திரன், 'ஆம்; அவள் யார்?' என்று கேட்கிறான். 'அவள்தான் தாய். நாம் அவளுடைய குழந்தைகள்; வந்தே மாதரம் என்று சொல்' என்று கூறுகிறான் பிரம்மச்சாரி. (இங்கு நாம் ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். தாய் என்பது தாய் நாட்டை விக்கிரக ரூபமாக குறிக்கும் ஒரு உருவம். அதைச் சுற்றிலும் இதர ஹிந்து விக்கிரகங்களிருக்கின்றன. இந்த விக்கிரக ரூபமான தாய் நாடு, 'வந்தே மாதரம்' என்னும் வார்த்தைகளால் போற்றப் படுகிறது) பின்னர், மகேந்திரன் கோயிலின் மற்றொரு பகுதிக்கு அழைத்துச் செல்லப் படுகிறான். இங்கு ஜெகதாத்திரி என்னும் தேவதை காணப்படுகிறது. இந்த ஜெகதாத்

திரி உருவத்தைச் சுற்றிலும் ஜோதி ஒளி வீசுகிறது. 'தாய் (நாடு) முதன் முதலில் இவ்வாறுதான் இருந்தாள்' என்று பிரம்மச்சாரி விளக்குகிறான். மகேந்திரன் ஜெகதாதித்ரி ரூபமாக விளங்கும் தாய் நாட்டைப் பக்தி வினயமாக வணங்குகிறான். இதற்கு பின் மகேந்திரன் இருண்ட சுரங்கபாதை வழியாக அழைத்துச் செல்லப்படுகிறான். பாதாள அறையொன்றில் காளியின் உருவம் காணப்படுகிறது. அவ்வுருவம் கரிய நிறமுடையதாகவும், நிர்வாணமாகவும் காணப்படுகிறது. 'தாய் (நாடு) இப்போது உள்ளாயிருக்கும் கதி இதுதான்' என்று பிரம்மச்சாரி கூறுகிறான். 'அவளுடைய கரங்களில் ஏன் ஆயுதங்கள் காணப்படுகின்றன?' என்று மகேந்திரன் கேட்கிறான். 'அவளுடைய குழந்தைகளாகிய நாம் அவளுக்கு ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறோம்' என்று பிரம்மச்சாரி கூறிவிட்டு 'வந்தே மாதரம் என்று சொல்' எனக் கட்டளை யிடுகிறான்.

"பின்னர் மகேந்திரன் வேறொரு அறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அங்கு பத்து கைகளையுடைய துர்க்கையின் உருவம் காணப்படுகிறது. 'தாய் (நாடு), அவளது காலடியில் எதிரிகள் நசுக்கப் பட்டபின் இவ்வாறுதானிருப்பாள்' என்று பிரம்மச்சாரி கூறுகிறான். இங்கும் லட்சுமியும், சரஸ்வதியும் காணப்பட்டனர். பிரம்மாச்சாரி இங்கு வைராக்கிய மனதுடன், வந்தே மாதர கீதத்திலடங்கிய கருத்தைப் போன்ற வார்த்தைகளை கூறுகிறான். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—'தசக்கரங்களுள்ள துர்க்கையும் நீயே; தாமரையிலுறையும் லட்சுமியும் நீயே; விவேகத்தை யளிக்கும் வாணி(சரஸ்வதி)யும் நீயே; நான் உன்னை வணங்குகிறேன்.' (இங்கு மற்றொரு விஷயத்தை

கூறுவது பொருந்தும். தாய் (நாடு), துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவதைகளுக்கு அப்பாற்பட்ட தல்ல வென்றும், எல்லாம் ஒன்ருகக் கருதப்பட்டே வணங்கப் படுவதாகவும் தெரிகிறது.)

"மேற்கண்ட புத்தகத்தின் இரண்டாம் பாகம், ஐந் தாம் அத்தியாயத்தில், கலக 'இராணுவத்'திற்கு ஆள் திரட் டப்படும் போதுள்ள ஆரம்ப வேலைகள் பற்றி விவரிக்கப் பட்டுள்ளன. இதில் சேரும் ஒவ்வொருவனும் 'தாய் விடு தலை யடையாதிருக்கும் வரை' தான் எல்லாக் குடும்ப, உலக பந்தங்களையும் துறந்து, தன் கரங்களிலேயே ஆயுதங் கள் ஏந்தி, சநாதன தர்மத்திற்காகப் போர் புரிவதாகச் சப தம் செய்கிருன். பின்னர், சபதத்திற்கு முத்திரை யிடுவ தற்காக ஒவ்வொருவனும் வந்தே மாதரம் பாடவேண்டு மெனக் கட்டளை யிடப்படுகிறது.

"இவ்வாறு அநேகர் சேர்க்கப்பட்டு, 'இராணுவம்' அமைக்கப்பட்டவுடன், அவர்கள் கூட்டம் கூட்டமாக, முஸ்லிம்களைப் பயமுறுத்துவதற்காக பல்வேறு கிராமங் களுக்கு அனுப்பப் படுகின்றனர். புத்தகாசிரியர் (பாகம் 3, அத்தியாயம் 1-ல்) பின்வருமாறு கூறுகிருர்:—"தூதர் கள் ஒரு கிராமத்திற்குச் செல்லுகின்றனர். அவர்கள் ஹிந் துக்களைக் காணுமிடங்களி லெல்லாம், 'சகோதர, நீ விஷ்ணு வணக்கத்தை நிறைவேற்றுவாயா?' என்று கேட்ட வண்ணம், 20 அல்லது 25 ஹிந்துக்களைச் சேர்த்துக் கொண்டு, முஸ்லிம் கிராமங்களில் புகுந்து, முஸ்லிம் வீடு களுக்குத் தீயிட்டனர். முஸ்லிம்கள், தங்கள் உயிர்களைத் தற்காத்துக் கொள்ள நாலா பக்கங்களிலும் தாறுமாருக ஓடுகின்றனர். (தாயின்) குமாரர்கள், முஸ்லிம்களின்

சொத்துக்களை யெல்லாம் கொள்ளையடித்து, அவைகளை விஷ்ணு பக்தர்களிடையே விநியோகிக்கின்றனர். கொள்ளைப் பொருளில் ஒரு பாகம் கிடைத்தவுடன் (ஹிந்து) கிராம வாசிகள் சந்தோஷ மடைகின்றனர். பின்னர், அவர்கள் விஷ்ணு கோயில்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள விக்கிரகங்களின் பாதங்களைத் தொடும்படி செய்யப்பட்டு, (புதிய குமாரர்களாக) அங்கீகரிக்கப் படுகின்றனர். (இங்கு இன்னொரு குறிப்புரை வரைய விரும்புகிறேன். விஷ்ணு வணக்கமும், தாய் (நாட்டு) சேவையும், முஸ்லிம் கிராமங்களில் புகுந்து, அவர்களின் வீடுகளில் தீயிட்டு அவர்களுடைய சொத்துக்களை கொள்ளை யிடுவதில்தான் இருக்கிறதென்பது கவனிக்கத்தக்கது.)

கொலை, கொள்ளை, தீயிடல் முதலியவை தீவிரமாக நடை பெறுகின்றன. அதே பாகம் (iii) 8-வது அத்தியாயத்தில் இன்னும் ஒரு வர்ணனை காணப்படுகிறது. அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—'............பிறகு கோஷங்கள் அதிகமாகின்றன. சிலர், 'கொல்லுங்கள், கொல்லுங்கள் நெரியர்களைக் கொல்லுங்கள்' என்று கோஷமிடுகின்றனர்; வேறு சிலர், 'சகோதர, நாம் மஸ்ஜிதுகளை உடைத்தெறிந்து, அவைகளிருக்கு மிடத்தில் ராதா—மாதவன் கோயிலைக் கட்டும் நன்னாள் வருமா?' எனக் கோஷம் செய்கின்றனர்......அடிக்கடி வந்தே மாதரக் கோஷம் பேரொலி செய்கிறது........

" இப்போது நாம் மூன்றும் பாகம், ஆறும் அததியாயத்திற்குப போவோம். கலகக் காரர்களை ஆங்கிலேயர் எதிர்க்க முற்படுகின்றனர். புத்தகாசிரியர் அதை பின் வருமாறு வர்ணிக்கிறார்:—'காடுகளிலும் பள்ளத்தாக்கிலும்

வந்தே மாதர கீதம் எதிரொலி செய்கிறது........விஷ்ணு 'வீரர்கள்' உரத்த தொனியில் பின் வருமாறு பாடுகின்றனர்:—'அறிவும நீயே; பக்தியும் நீயே; என்னிரு கரங்களில் சக்தியாய் விளங்குவதும் நீயே; என் உடம்பில் நீயே ஆன்மாவாய் இருக்கிறாய்'........(பாடலின் மூன்றடிகள்)

"புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் ஏமாற்றந் தரும் ஒரு குறிப்பு காணப்படுகிறது. ஒரு 'வைத்தியனும்', கலகத் தலைவன் சத்தியநாதனும் சம்பாஷிக்கிறார்கள். சம்பாஷணை விவரம் வருமாறு:—

சத்தியநாதன்:—'முஸ்லிம் சக்தி நசுக்கப்பட்டு போய் விட்டது. ஆனால், ஹிந்து அதிகாரம் இன்னும் ஏற்படுத்தப் பட்ட பாடில்லையே. ஆங்கிலேயர்தானே கல்கத்தாவை இன்னும் ஆளுகின்றனர்.

வைத்தியன்:—'ஹிந்து அதிகாரத்தை இன்னும் ஏற்படுத்த முடியாது.'

சத்தியநாதன்:—(உரத்த குரலுடன்) 'ஓ, கடவுளே!. அப்படியானால் யார் ஆட்சி நடத்துவார்கள்? முஸ்லிம்களே மீண்டும் ஆட்சி நடத்த வேண்டுமா?'

இவ்வாறே சம்பாஷணை நடை பெற்றுக்கொண்டு போகிறது. கடைசியில் வைத்தியன் (இவனே குரு போன்றவன் என்று இப்போது தெரிகிறது) கலகத் தலைவனுக்கு பின் வருமாறு சமாதானங் கூறுகிறான்:—'இனி ஒரு எதிரியும் கிடையாது. ஆங்கிலேயர்கள் நமது நண்பர்கள்........'

"இந்த கடைசி வார்த்தையை விளக்குவதற்காகவும், நமது கட்டுரையை முடித்துக் கொள்ளவும் நம் சகவர்த்தமானியான ஒரு சஞ்சிகை கூறுவதை இங்கு சுட்டிக் காட்ட

விரும்புகிறோம். "லிபரல்" என்ற பத்திரிகை, 1882ஹு எப்ரல் மீ 8உ இதழில் பின் வருமாறு வரைந்திருக் கிறது:—'வைத்தியன் சொல்லுகிறான்: சத்தியானந்தா, மனச்சோர்வடைந்து விடாதே. ஆரிய மதம் புனருத்தாரணப்படுவதற்கு முன் நாட்டை முதலில் ஆங்கிலேயர் அரசாள வேண்டும் என்று (நம் கிரந்தங்களில்) வரையப் பட்டிருக்கிறது........'*

ஹிந்துக்களிடையே முஸ்லிம்கள் மீது இதே பகைமை உணர்ச்சியும், அவநம்பிக்கையும், அரசியல் விரோதமும் வட இந்தியாவில் வளர்ந்து வருகின்றன. நாம் இப்போது 1857-ம் வருஷத்திய சிப்பாய் கலகத்திலிருந்து பரிசீலனை செய்ய ஆரம்பிப்போம். இப்போதுள்ள ஐக்கிய மாகாணம், (ஆக்ரா, அயோத்தி), டில்லி இவைகளிலும், இவைகளின் நிர்வாகத்திற்குட்பட்ட ஜில்லாக்களிலும் தான் சிப்பாய் கலகம் நடைபெற்றது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இக்கலகத்தில் சமமாக ஈடுபட்டனர். இக்கலகம் ஹிந்துக்களால் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம்களனைவரும் அவ்வியக்கத்தில் பூரணமாகக் கலந்து கொண்டனர். ஒரு சில மாதங்களில் கலகம் அடக்கப்பட்டுவிட்டது. அதுவே ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. ஹிந்துக்கள், தங்களுடன் தோளோடு தோள் சேர்ந்து ஆயுதந் தாங்கிப் போரிட்டவர் (முஸ்லிம்) களுக்குத் துரோகிகளாக மாறி, சர்க்காருக்கு உளவறிவிப்போர்களாக ஆகிவிட்டனர். இதனால் சர்க்காரின் கோபமெல்லாம் முஸ்லிம்கள்மீது விழுந்தது. சிப்பாய் கலகத்தின்

* 1937ஹு செப்டம்பர் மீ 5உ வெளியான "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையில் ஐ-னுல்-முல்க் எழுதிய கட்டுரை.

விளைவாக அதற்கப்பால் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், கலகத்தின் இறுதிகட்டத்தையும் நேரிற் கண்டவரான சர். ஸையத் அஹ்மதுகான், 1887-ம் வருஷத்தில் (அதே ஆண்டில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த பம்பாய் பாரிஸ்டரும், பின்னர் நீதிபதியானவருமான) ஜனுப் பத்ருத்தீன் தையாப்ஜீக்கு வரைந்த கடிதமொன்றில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—"சிப்பாய் கலகத்தின்போது என்ன நேர்ந்தது? ஹிந்துக்கள் அதை ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் அதிக தைரியத்துடன் அதில் ஈடுபட்டனர். (முடிவில்) ஹிந்துக்கள், கங்கையில் முழுகி தங்கள் பாபங்களைப் போக்கிக்கொண்டு முன்போல் நல்ல பிள்ளைகளாகிவிட்டனர். ஆனால், ஆயிரக்கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் நசித்து நாசமடைந்தன" 1 சிப்பாய் கலகத்தின் பயனாக முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பயங்கர நிகழ்ச்சிகளை விவரிப்பதற்கே மிக்க கஷ்டமாயிருக்கிறது. "ஒரு முஸ்லிமை எனக்குக் காட்டுங்கள், நான் ஒரு கலகக்காரனை உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களிடையே சாதாரணமாகப் பேசிக்கொள்ளப்பட்டது. அந்தப் பயங்கர நாட்களின் கொடுமைகள், சேதங்கள் ஆகியவை யெல்லாம் முஸ்லிம்களின் தலைகளிலேயே சுமத்தப்பட்டன2. 1860-ம் ஆண்டில் "இந்தியாவின் ராஜ விஸ்வாசமுள்ள முஸ்லிம்கள்" என்ற தலைப்பில் ஸர் ஸையத் அஹ்மத்கான் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில்

---

1 கவிஞர் ஹாலியின் 'ஹயாத்-இ.ஜாவித் "பாகம் 1, பக்கம் 281, (முதல் பதிப்பு).

2 ஜெனரல் ஜி. எப். ஐ. கிரஹாம் வரைந்த "ஸையத் அஹ்மத்கான் வாழ்க்கையும், அவரது சேவைகளும்" என்ற புத்தகம் (முதல் பதிப்பு), பக்கம் 58:

பின்வருமாறு கூறியிருக்கிறார்:—"அப்போது நடந்த அக்கிரமங்களுக்கு ராமபக்தனும், மாதாபக்தனுமே உண்மையில் குற்றவாளிகளாக இருந்தும், முஸ்லிம்கள் மீது பழி சுமத்தப்படாத அக்கிரமம் ஒன்றுமே யில்லை........நான் பத்திரிகைகளைக் கவனமாகப் படித்து வருபவன். சிப்பாய் கலகம் பற்றி வரையப்பட்ட அநேக புத்தகங்களையும் நான் படித்திருக்கிறேன். எல்லாவற்றிலும் முஸ்லிம்கள் மீதே வசை மாரிகள் அள்ளி வீசப்பட்டிருக்கின்றன. கொடுமை, வஞ்சகம், தீச்செயல் முதலிய எல்லாவகைக் கேடுகளிலும் முஸ்லிம்களே ஈடுபட்டிருந்ததாகப் பழி சாற்றப்பட்டிருக்கின்றன. அந்த பரிதாபகாலத்தில் முஸ்லிம் செய்யாத எந்த தீவினையும் கூறப்படவில்லை. முஸ்லிம் மீது அள்ளி வீசப்படாத வசைப் புயல்மாரி ஒன்றுமே காணப்படவில்லை." * துண்டுப் பிரசுரத்தின் நடை அழகாகதானிருக்கிறது. ஆனால், அது கலப்பற்ற அப்பட்ட உண்மையையே கூறுகிறது. சிப்பாய் கலகம் அடக்கப்பட்டபின் ஆயிரக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்: அவர்களின் சொத்துக்கள் சூரையாடப்பட்டன; அவர்களின் பெற்றோரற்ற அனாதைக் குழந்தைகள் கிறிஸ்துவ பாதிரிகளிடம் (மதப் பிரசாரகர்களிடம்) ஒப்புவிக்கப் பட்டனர்.

இதற்குப் பின் நெடுங் காலம் வரையிலுங்கூட சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சிப்பாய் கலகத் தீ அடங்கி விட்டது. உடனே வட இந்தியா வெங்கும் "வஹாபி கைது" நெடுங்காலம் வரை நடைபெற்றது. இந்தக் கைது செய்யப்படும் சம்பவம் கிழக்கு வங்காளத்திலி

* முன் பக்கம், 2-ம் குறிப்பிலுள்ள புத்தகம்—பக்கம்: 59, 60.

ருந்து, பஞ்சாப் வரை நெடுங்காலம் 1880-வரை வரை நடைபெற்றது. இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் மௌல்வி முஹம்மது ஜாபரும் ஒருவர். அவர் பல வருஷங்கள் அந்தமான் சிறையில் வாடினர். அவர் எழுத்தாளரல்ல. அவர் இந்தச் சம்பவங்களை வீட்டில் பேசப்படும் சாதாரண பாஷையிலேயே அப்படியே எழுதி வைத்திருக்கிறார்.1 அதிலிருந்து கைது செய்யப்பட்டோர் மீது நடைபெற்ற வழக்குகள் நேரியமுறையில் நடைபெற வில்லையென்பது தெளிவாகிறது. உதாரணமாக கர்னலைச் சேர்ந்த ஒரு கனவான், சந்தேகத்தின் மீது கைது செய்யப் பட்டார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, விசாரணை நடந்து, தண்டனையும் விதிக்கப் பட்டார். சுமார் 5 லட்சம் பெறுமான அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப் பட்டன. பின்னர் அக்கனவான் குற்றமற்றவரெனத் தெரிந்து, விடுதலை செய்யப்பட்டார். ஆனால், அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்து மட்டும், அவருக்கு மீண்டும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை! முஸ்லிம்களை வறியர்களாக்கி, அவர்கள் என்றுமே மீண்டும் தலை யெடுக்கஇயலா வண்ணம் அடக்கிவிட வேண்டுமென்றே சர்க்கார் தீர்மானித்து விட்டனரென்பது அக்கால நிகழ்ச்சி விவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது: அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த ஒருவர் பின்வருமாறு கூறினர்:- "சிட்டுக் குருவிகளின் சல சலப்புகளை கழுகு சட்டை செய்வதில்லை. ஆனல், ஒரு இராசாளியோ, அல்லது வல்லூறோ, கழுகு அரசன் முன் தலை தூக்கத் துணியுமாயின், உடனே அரசன் அதன் கழுத்தை உடைத்து விடுகிறது."2 இங்கு

1 "காலா பானி" (கரு நீர்)

2 ஹாலியின் "ஹயாத்—இ—ஜாவித்" பக்கம்: 271-ல் கையாளப் பட்டது.

ஹிந்துக்கள் பகிரங்கமாக மேடைகளில் பிரசங்கம் செய்யவும், பத்திரிகைகளில் தங்கள் அபிப்பிராயங்களை எழுதவும் உரிமை யளிக்கப் பட்டனர். சர்க்காரின் பலத்தகை, முஸ்லிம்களுக்காகவே ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தது. சர் சையத் அஹ்மத்கான், தம் வாழ்க்கையில், தம் கண்ணூரக் கண்ட மேற்கண்ட சம்பவங்களே, அவரது மனதில் ஒரு சமூகாபிமானத்தை ஏற்படுத்தி, வாழ்க்கையின் இறுதி வரை அவர் அனுசரிக்க வேண்டிய அரசியல் கொள்கைகளை நிர்ணயிக்குமாறு செய்து விட்டது. இதுவே அவாது அரசியல் இலட்சியத்தின் முதன்மையாகி விட்டது. இந்த இலட்சியத்தை சர் சையத் அஹ்மத் கான் மனதில் கொண்டு, அரசியல் கிளர்ச்சிகள் எதிலும் முஸ்லிம்கள் கலவாமல் தனித்து விலகி நிற்கச் செய்து, முஸ்லிம்களுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்தினருக்கு மிடையே சமரஸம் ஏற்படுத்தி வைக்கத் தம்மாலான வரை எல்லா முயற்சிகளையும் செய்தார், சர். சையதின் கொள்கையைக் கண்டனம் செய்வதே இப்போது சில முஸ்லிம்களுக்கு இயல்பாகி விட்டது. ஆனால், அன்றைய நாட்களில். முஸ்லிம் சமூகம் நாசமாகி விடுமோ என்று அஞ்சப்பட்ட அக்காலத்தில், அன்றுள்ள நிலைமையில், சர் சையது அஹ்மத் கான் பின்பற்றிய கொள்கையைத் தவிர வேறு எந்த கொள்கையும் சாத்தியமில்லை யென்பதை அக்கண்டனக்காரர்கள் உணர முடியாமற் போய்விட்டது பிரின்ஸிபால் குர்முக் நிஹால் சிங் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-"சர் சையத் அஹ்மத் மிஸ்டர் பெக் ஆகிய இருவருடைய செயல்களும் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே விரோதத்தைக் கிளப்பி விட்டன. சர் சையத் அஹ்மத் கான், பிரின்ஸிபால் பெக்கின் செல்வாக்கில் சிக்கும்வரை இந்திய (ஹிந்து

முஸ்லிம்களடங்கிய) சமுதாயத்திற்காகவும், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் பாரத நோக்குடன் சேவை செய்து வந்தார்.''* இது அறியாமையாலோ, அல்லது சரித்திர ஞானமின்மையாலோ கூறப்பட்ட் கூற்றாக இருக்க வேண்டும்; அல்லது உண்மை சரித்திரத்தை மறைக்கக் கூறப்பட்டதா யிருக்க வேண்டும்; ஏனெனில் மிஸ்டர் பெக் இந்தியாவிற்கு வருவதற்கும், அவர் பிரின்ஸிபாலா யிருந்த எம். ஏ. ஓ. கல்லூரி ஆரம்பமாவதற்கும் வெகு காலத்திற்கு முன்பே ஹிந்து--முஸ்லிம் விரோதம் இருந்தே வந்தது. நான் மேலே ஓரிடத்தில் குறிப்பிட்டபடி சிப்பாய் கலகம் அடக்கப்படடு, ஹிந்துக்கள் துரோகிகளாகவும், காட்டிக் கொடுப்போராகவும் மாறியதன் காரணமாக அது முதலே ஹிந்து—முஸ்லிம் விரோதம் ஏற்பட்டு விட்டது. நாட்கள் செல்லச் செல்ல இவ்விரோதமும் வளர்ந்து கொண்டே வந்தது சிப்பாய் கலகம் பற்றி வெளியாகியுள்ள விவரங்களெல்லாம் இதற்குச் சாட்சியங் கூறுகின்றன. ஹிந்துக்கள் மட்டும் துரோகிகளாகவும், ஆள்காட்டிகளாகவும் மாறாமலிருந்திருப்பார்களாயின், முஸ்லிம்களின் கஷ்டங்கள் அவ்வளவு அதிகமா யிருந்திராது. ஒரு நாள் வயது முதிர்ந்த பெரியார் ஒருவர், என்னை தரீபா கலானுக்கும் (டில்லியிலிருக்கிறது) அங்கிருந்து பிரிந்து செல்லும் கஞரி பஜாருக்கும் அழைத்துச் சென்றார். அங்கு ஒன்றுக் கொன்று நெருக்கமாக நான்கு மஸ்ஜிதுகள் அடுத்தடுத்திருந்ததை நாங்கள் பார்த்தோம். நான்கு பழைய மஸ்

---

* அகில இந்திய அரசியல் விஞ்ஞான மகாநாட்டில் (2—1—1943-ல்) செய்த தலைமைப் பிரசங்கம். இதன் விவரம் "தி இந்தியன் ஜர்னல் ஆப் பொலிடிகல் ஸயன்ஸ்" 1943 ஏப்ரல்-ஜூன் இதழில் காண்க.

ஜிதுகள், ஒன்றையொன்று அடுத்து காணப்படுவதைப் பார்ப்பவர்கள், அந்தப் பிரதேசம் ஒரு காலத்தில் பூரண மாக முஸ்லிம்கள் வசித்த பிரதேசமாக இருந்த தென்பதை எளிதில் அறிந்து கொள்வர். அங்கு இப்போது ஒரு முஸ்லிம் குடும்பங்கூட இல்லை. ஒரு குடும்பம் தவிர மற்றெல்லா குடும்பங்களும், சந்தினி சவுக்கில் தரீபா சேரு மிடத்தில் கூனிதர்வாஜாவில் தூக்கிலிடப் பட்டன. இது ஹிந்து ஆள்காட்டிகளால் நேர்ந்த வினை இந்த துரோகம், அக்காலத்திய கவிதைகளில்கூட பிரதிபலிக்கிறது. ஹிந்துக்களின் அரசியல் கட்பு நம்பத்தக்கதல்லவென முஸ்லிம்கள் கருதினர். ஹிந்துக்களோவெனில் முஸ்லிம்கள் கலகக்காரர்களென்றும், கொந்தளிப்பான ஜாதியினரென்றும் கூரையேறிக் கூவி வந்தனர். முஸ்லிம்கள் அயல் நாட்டு ஏகாதிபத்தியத்தின் நண்பர்கள், கையாட்கள் என்று இப்போது பல தலை முறைகளாகக் கூறப்பட்டு வருவது போன்றே அப்போதும் கூறப்பட்டது. "முஸ்லிம்களின் வகுப்பு வாதம்" எனக்கூறி முதலைக் கண்ணீர் வடிக்கும் ஹிந்து எழுத்தாளர்கள், இந்தச் சம்பவங்களைப் பற்றி மௌனமா யிருந்து தட்டிக் கழித்து விடுகின்றனர்.

சர்சையத் அஹ்மத் கான் ஹிந்துக்களின் கள்ள உள்ளத்தை பூரணமாக அறிந்திருந்தும், அவர் தாராள சிந்தையும், பரந்த நோக்கமும் உடையவராய் இருந்தமையால் தம் மனதை திடப்படுத்திக்கொண்டு, ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் ஒரே மக்களாகப் பாவித்து, ஜாதி, மத வேற்றுமையின்றி எல்லோரும் இன்புற்றிருக்கத் தொண்டாற்றினர். கடைசியில் ஹிந்துக்களின் செயல்களே, அவரைத் தமது சொந்த சமூகத்தை கவனிக்குமாறு

திருப்பி விட்டன. இந்நாட்டில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் வாழ்வதுபோன்று, ஒன்றாக கலந்து வாழும் எந்த இரண்டு வகை மக்களும் ஒரே சமுதாயமாக ஆகவேண்டுமானால் அவர்களிருவரும் ஒரே பொதுமொழியை உடையோராயிருக்க வேண்டுமென்பது அத்தியாவசியம். பல நூற்றாண்டுகளாக இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றி வாழ்ந்து வந்தமையால் உர்தூமொழியே ஹிந்துக்களாலும் முஸ்லிம்களாலும் பொது மொழியாகப் பேசப்பட்டது. ஹிந்துக்களுக்கு இப்போது திடீரென்று, தங்களுக்கு உர்தூமொழி வேண்டாமென்ற ஞானோதயம் ஏற்பட்டு விட்டது. (அந்தோ, மனமாற்றமே!)

காசி ஹிந்துத் தலைவர்கள் சிலர், 1867-ல் ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தனர். எல்லா சர்க்கார் காரியாலயங்களிலும், நீதி மன்றங்களிலும் உர்தூ மொழிக்குப் பதிலாக பிரிஜ் பாஷையும், அரபி எழுத்துக்களுக்குப் பதிலாக தேவநகரி எழுத்துக்களும் புகுத்தப்பட வேண்டுமென அவர்கள் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை நடத்தி வைக்க வட இந்தியா வெங்கும் கமிட்டிகளும், சபைகளும் நிறுவப்பட்டன. இதன் தலைமைக் காரியாலயம் அல்லாஹாபாத்தில் ஏற்படுத்தப் பட்டது. சர் சையதின் வாழ்க்கைச் சரிதையை வரைந்தவர்* பின்வருமாறு கூறியிருக்கிறார்:- "இதற்கு பின் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒரே சமு

---

* ஹாலி, "ஹயாத்—இ—ஜாவித்" (பாகம் 1 பக்கம் 140-ல்) எழுதுவதாவது:-"ஒரு வருஷத்துக்கு முன், வட இந்தியாவில் எங்கேனுமொரு இடத்தில் ஒரு சர்வ கலாசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், அதில் உர்தூ மொழியில் உயர்தரக் கல்வி போதிக்கப்பட வேண்டு மென்றும் சர்க்காருக்கு சையத் யோசனை கூறினர். ஹிந்துக்கள் இதை ஆட்சேபித்தனர். அந்த சர்வகலா

தாயத்தினராக வாழ்வதோ, அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்கு கூட்டாக முயற்சி செய்வதோ சாத்தியமில்லையென்று தாம் அப்போதுதான் முதன் முறையாக அறிந்துகொண்டதாக சர்சையத் கூறுவது வழக்கம். அவர் ஒரு முறை என்னிட பின்வருமாறு கூறினார்:-

'காசியில் இக்கிளர்ச்சி ஆரம்பமானபோது, அப்போது காசியின் கமிஷனராக இருந்த மிஸ்டர் ஷேக்ஸ்பியரை ஒரு நாள் சந்தித்துப் பேசினேன். முஸ்லிம்களின் கல்வியைப் பற்றி நான் பிரஸ்தாபித்தேன். அவர் பெரும் ஆச்சரியத்தோடு என் பேச்சுகளை கேட்டுக் கொண்டிருந்தார். நான் பேசி முடிந்தபின் அவர் என்னைப் பார்த்து, 'எது இன்று புதினமாயிருக்கிறதே! இதுவரை (ஹிந்துக்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடில்லாமல்) இந்தியர்கள் என்று பொதுப்படையாகப் பேசி வருவீர்களே. இப்போதுதான் முஸ்லிம்களைப் பற்றி மட்டும் நீங்கள் பேசுவதை முதன் முறையாகக் கேட்கிறேன்.' என்று கூறினார். அதற்கு நான் அந்த இரண்டு இனத்தவரும் எந்த பொது இலட்சியத்திற்கும் இனி தோளோடு தோள் சேர்ந்து வேலை செய்வரென நான் கருதவில்லை. கல்வி கற்றவர்கள் எனத் தங்களை

---

சாலையில் ஹிந்து மாணவர்களுக்கு ஹிந்தி மொழியே போதிக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறினர். ஹிந்தி மொழி சர்வகலாசாலைப் படிப்பின் போதனு மொழியாக இருப்பதற்கு போதிய அளவு அபிவிருத்தியடையவில்லை யென்று அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அதற்கு ஹிந்துக்கள், ஹிந்தியை உர்துவின் சம அந்தஸ்துக்கு உயர்த்துவதற்காக சர்க்கார் பணம் செலவழிக்க வேண்டுமெனக் கூறினர், சர்க்கார் முதலில் இந்த நோக்கத்தை ஆதரித்தனரெனினும், இறுதியில் சையதின் யோசனையே நிறைவேறியது.

கூறிக் கொள்பவர்களால் இந்த இரண்டு இனத்தவர்களுக்கு மிடையே விரோதம், துவேஷம் அதிகரிக்கின்றன. இதன பலாபலன்களை நமக்குப் பின் வருபவர்கள் காண்பார்கள்' எனப பதில் கூறினேன். 'நீங்கள் கூறுவது உண்மையாகி விட்டால், அது ஒரு துக்க தினமாகவே இருக்கும்' என்று ஷேக்ஸ்பியர் சொன்னார். 'நானும்தான் அதிக வருத் தமடைகிறேன். ஆனால் நான் கூறுவதுபோல் நிச்சயம் நடைபெறு மென்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேக மில்லை' என்று நான் பதிலளித்தேன்'........"

இதற்குப் பின் நடைபெற்ற சம்பவங்கள், அவர் அன்று கூறிய விஷயங்கள் எத்துணை கலப்பற்ற உண்மை யென்பதை நிரூபிக்கின்றன. சுமார் முக்கால் நூற்றாண் டாக ஹிந்துக்கள் உர்துவை யொழித்து, அதற்குப் பதி லாக ஹிந்தியைப் புகுத்த முயன்று வருகின்றனர். ஹிந்துக் களின் மனதைப் பிரதிபலிக்கும் காந்தியார்கூட, முஸ்லிம் கள் ஒரு காலத்தில் இந்நாட்டை ஆண்டனரென்பதை ஹிந்துக்களுக்கு ஞாபகப் படுத்தக்கூடிய ஒரு வார்த்தை யும் ஹிந்துஸ்தானியில் கூடாதென்றும், அவைகளெல் லாம் அடியோடகற்றப்பட வேண்டுமென்றும் வெட்கமில் லாமல் கூறுகிறார்.

'கல்வி கற்றவர்கள் எனத் தங்களைக் கூறிக் கொள்ப வர்கள்' என சையத் கூறியதாக நான் மேலே ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறேனல்லவா? ஹிந்து, முஸ்லிம் சமூகத் தாரிடையே வேற்றுமையை அதிகரிக்க அது இன்னும் ஒரு புதிய அம்சத்தைக் கொண்டு வருவதாக இருக்கிறதாத லால், அதைப்பற்றி சற்று விளக்க வேண்டுவது அவசிய மாகிறது. ஒரு சமுதாய அமைப்புக்கு சரித்திரம் (எழுத்து

ரூபத்தில்) அத்தியாவசியமானதென்பதை முன்ஞெரு அத்தியாயத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். சரித்திர ஆதாரங்களில்லாதவர்கள் ஒரு சமுதாயமாக முடியாதென்பதையும் அதில் தெளிவாக்கி யிருக்கிறேன். ஹிந்துக்களிடம் அவர்களுடைய சரித்திர ஆதாரங்களோ, சரித்திர உணர்ச்சியோ இருக்கவில்லை. எனவே, அவர்கள் தனி மக்களாக இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி பெற்றிருந்தும், தங்கள் தேசிய உணர்ச்சியை வளர்த்துக் கொள்ளவில்லை யாதலால், அவர்கள் ஒரு சமுதாயத்தினரல்ல 1835-ம் ஆண்டில் சர்க்காரால் புகுத்தப்பட்ட புதிய கல்வி முறையில் இந்தக் குறைபாடு ஓரளவு நீக்கப்பட்டது புதிய பள்ளிக்கூடங்களுக்கான சரித்திர வாசக புத்தகங்கள் பிரிட்டிஷ் மக்களாலோ, கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களாலோ வரையப்பட்டன. அப்புத்தகங்கள், ஹிந்துக்களுக்கு முஸ்லிம்கள் மீது விரோதமும், பகைமையும் ஏற்படக் கூடியவாறு விஷத்தை யூட்டும் தன்மை வாய்ந்தனவாக வேண்டுமென்றே தயாரிக்கப் பட்டன. இந்த போக்கின் பலாபலன்கள் 1860-70 வருஷங்களின் ஆரம்பத்திலேயே புலப்பட ஆரம்பித்து விட்டதாக ஹாலி கூறுகிறூர். இவ்வித பள்ளிக்கூடங்களில் கல்வி பயின்ற "ஹிந்து படிப்பாளிகளின்" முஸ்லிம் விரோத மனப் பான்மையைப் பற்றி ஹாலி அடிக்கடி கூறியிருக்கிறூர். அதற்குப் பின்னும் இந்த உணர்ச்சிக்குத் தண்ணீர் பாய்ச்சப் பட்டது. ஒரு நூற்றுண்டுக்கு மேலாக இதே விஷ வமிசம் வமிசமாக வளர்ச்சி பெற்றது. இப்போது இவ்விஷம், வளர்ச்சியின் கனி தோன்றி விட்டது. ஹிந்து இனத்தவருக்கும் சரித்திர ருசி தட்டிவிட்டது. அவர்கள், தங்கள் இனத்தவரின் சரித்திரங்களை அமைத்துக் கொள்வதற்காக பழைய

சம்பவங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டனர். அச்சரித்திரத்தில் அவர்கள் பெருமை கொள்ளவும் கற்றுக்கொண்டு விட்டனர். இந்த வகையில்தான் ஹிந்துக்களின் சரித்திரம்—ஹிந்து இனத்தவர்கள் சமுதாயத்தினராக மாற முடியாமல் தடுத்து கொண்டிருந்த வஸ்து சரித்திர மின்மைதான்—பிறந்தது. பொய்க் கதைகள் கட்டிவிடுவதில்—சரித்திரங்களைத் திரிப்பதில்—அவர்கள் தங்கள் எஜமானர்களையும் மிஞ்சிவிடக் கூடிய அளவுக்கு உயர்ந்து விட்டனர். புதிதாகக் கிளைத் தெழுந்த அவர்களின் தேசிய உணர்ச்சிக்கு இது ஒரு நல்ல உதாரணம்.* பள்ளிக்கூடங்களிலும், கல்

---

* ஹிந்துக்கள் இன்று தங்களைத் தேசியத் தன்மைபொருந்தியவர்கள் எனக்கூறிக் கொள்ளுகின்றன ரெனினும், கல்விஸ்தாபனங்களில் முஸ்லிம்கள் மீது அவர்கள் செய்து வரும் நச்சுப்பிரசார வேலை எப்போதும் போல் இன்றும் நடை பெற்றுதான் வருகிறது. பஞ்சாப் சர்வகலாசாலையின் நிலைமைகள் பற்றி கமால் யார் ஜங் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்ட குறிப் பொன்று பின்வருமாறு கூறுகிறது:—"சரித்திரம் சம்பந்தமான காகிதக் கட்டுகளை பரிசோதித்திருப்பவர்கள், முஸ்லிம் மன்னர்கள் மீதும், நிர்வாகிகள் மீதும் அவர்கள் இரத்தத்தை உறிஞ்சும் அட்டை (ஒருவகை ஜந்து)கள் என்றும், கொடுமையின் பிரதிபிம்பங்க ளென்றும் தூஷணைகள் வீசப்பட்டிருப்பதைக் காணலாம். ஹிந்துக்களையும், அவர்களின் கலாசாரத்தையும் நாசமாக்கி வாள்முனையில் மக்களை இஸ்லாத்திற்கு மாற்றுவதற்கே முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவுக்கு வந்தனரென்ற கெட்ட அபிப்பிராயத்தை இச்சரித்திரங்கள் உண்டாக்கி விடுகின்றன. இந்த அபிப்பிராயங்களில் பெரும்பாலானவற்றை முஸ்லிம்களும்—மாணவர்கள்—ஆதரிக்கின்றனர்' முஸ்லிமல்லாத பரிட்சைக் கேள்விகள் தயாரிப்போருடைய ஆதரவைப் பெற வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் கூறப்படுகிறது. ஒரு எம். ஏ. வகுப்பு ஹிந்து மாணவன் அவ்ரங்கஜேப்பைத் தன் பிரதான பாடமாக

ஹூசிகளிலும், பத்திரிகைகளிலும் தினே தினே முஸ்லிம்கள் மீது அள்ளி வீசப்படும் விஷத் தன்மை வாய்ந்த பிரசாரம் அப்போது சாதாரண விஷயமாகப் போய்விட்டது. அதைப் பற்றி இன்னும் அதிகமாக விளக்க வேண்டிய அவசிய மில்லே. முஸ்லிம்கள் மீது இவ்வித விஷம நச்சுப் பிர சாரங்கள் செய்யும் மக்கள், தங்களே முஸ்லிம்களே விட்டும் தனிப்பட்டவர் களென்றும், முஸ்லிம்களே தங்கள் விரோதி களென்றும் கருதுவது இயல்பென்பதை எவரும் எளிதில் உணரலாம். ஹிந்துக்கள், தாங்களும் முஸ்லிம்களும் ஒரே சமுதாயத்தினர் தானெனக் கருதுவார்களாயின், இத் தகைய பிரசாரம் செய்வது சாத்தியமில்லே. ஏனெனில் அவ்வாறு கருதுவார்களாயின், அவர்களின் பிரசாரம்

---

எடுத்துக் கொண்டான். அம்மாணவன் அவ்ரங்கஜேப்பின் நிர்வா கத்தை ஆதரித்து வரைந்ததால் அவனது பரிசோதகரின் கோபத் திற்கு ஆளாகி, பரிட்சையில் வீழ்த்தப் பட்டான்.''—ரிப்போர்ட்டு பக்கம்: 200. மேற்படி ரிப்போர்ட் பக்கம்: 295-ல் சர் அஜீஸுல் ஹக்கின் குறிப்பொன்று காணப்படுகிறது. பள்ளிக்கூட பாட புத்தகங்கள் மூலம் முஸ்லிம்களே எதிர்த்து பிரசாரம் செய்யப்பட்டு வரும் விபரீத முறைகளேப் பற்றி அக்குறிப்பு விளக்குகிறது. ஒரு மாகாண பாடத்திட்ட கமிட்டியால் ஏழாம் வகுப்புக்கு ஏற்பட்டி ருக்கும் ஒரு பாட புத்தகத்திலிருந்து பின்வரும் வாக்கியத்தை அவர் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்:—''ஹுஸேன் ஷா ஒரு முகம்மதியராயிருந்து சகிப்புத் தன்மையோடிருந்தார்.'' இவ் வார்த்தைகள் முஸ்லிமாயிருப்பவன் சகிப்புத் தன்மை யற்றவ னகவே இருப்பானென்ற கருத்தை மாணவர்களிடையே ஊன்றச் செய்கின்றன. சர் அஜீஸுல் ஹக் மேலும் கூறுவதாவது:— 'அதுமாத்திரமல்ல; இவ்வித சரித்திர புத்தகங்கள் நூற்றுக் கணக் கில் இந்தியாவெங்குமுள்ள பள்ளிக்கூடங்களில் பாடங்களாக வைக் கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களில் சில, முஸ்லிம்களுக்கு விரோத

அவர்களின் ஆசியலேயே தாக்கிச் செய்யப்பட்டதாக முடியும். அறிவீனனும், வஞ்சகனுமே இதற்கு மாருக விவாதிக்க முடியும்.

சர் சையத் அஹ்மத் கான், தம்முடைய இலட்சியங்களை உருப்படுத்தியதற்கும், தம் இனத்தவா காங்கிரஸை விட்டும் புறம்பா யிருக்க வேண்டுமென யோசனை கூறியதற்கும் இவையே காரணங்களாக அமைந்தன. முஸ்லிம்கள் கலகக்காரர்களெனக் கூறித் திரியும் வங்காளத்திலிருந்து வெளியான ஹிந்து பத்திரிகைகள், முஸ்லிம்களைச் சர்க்கார் உத்தியோகங்களில் நியமிக்கப்படாதென எழுதி வந்தன. இந்தப் போக்குத்தான் சர் சையதின் கொள்கைகளை உருவாக்கின வென்று ஹாலி அடிக்கடி கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் ஸ்தாபனம் 1885-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. ஹிந்துமதப் புனருத் தாரணத்தின் உச்ச

---

மான விஷயங்கள் நிரம்பியவையாகவே இருக்கின்றன. சில மொழிபாட புத்தகங்கள் கொடும் கதைகளேயும், சில சமயங்களில் கட்டுக் கதைகளேயும் கூறுகின்றன.

இந்திர பிரகாசர் என்ற ஹிந்து மகா சபை வாதி ஒருவர் இஸ்லாத்தையும், முஸ்லிம்களேயும் ("நாம் எங்கு வேறுபடுகிறோம்" என்ற புத்தகம், பக்கம்:81-ல்) பின்வருமாறு இழிவு படுத்துகிருர்:- "முஸ்லிம் மதம், கொலேயாளர்களே வீரர்களாகப் போற்றி வணக்கம் செலுத்துகிறது. இதர மதத்தினரைக் கொல்லுமாறு இம்மதம், தன்னைப் பின் பற்றுவோர்களைத் தூண்டிவிடுகிறது. இஸ்லாம் மதக் கட்டளைகளின்படி, ஒரு காபிரையோ அல்லது இதர மதத்தைச் சேர்ந்த ஒருவனேயோ கொலே புரிவது, அக்கொலே செய்யும் கொலேயாளியின் அந்தஸ்தை அவன் இனத்தவர்களிடையே உயர்த்தி விடுகிறது. அக்கொலேஞன் ஒரு ஷஹீத் என்று கூறப்பட்டு, மோட்சமடைய தகுதி வாய்ந்தவனெனக் கூறப்படுகி

கிலேயின் உருவாக அமைந்ததுதான் இது1 டாக்டர் பட்டாபி சீத்தாராமையா, 1928-ம் வருஷத்தில் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்2:-"இந்த இயக்கங்கள் எல்லாம் (அதாவது: பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையின் பிரம்மஞான சங்கம்—இந்தியாவின் புனித நகராகிய காசியில் தலைமைக் காரியாலயம்—, ராமகிருஷ்ண மிஷன்) உண்மையில் இந்திய தேசிய மென்னும் கடலில் பல பிரிவுகளாகும. மூட நம்பிக்கைகளையும், தப்பெண்ணத்தையும் போக்கி பழைய மத

றான்." அதே புத்தகம், பக்கம்: 87-ல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:—"ஒவ்வொரு வருஷமும் ஆயிரக் கணக்கான ஹிந்து சிறுவர்களும், சிறுமியர்களும் முஸ்லிம்களால் தூக்கிச் செல்லப்படுகின்றனர்." இந்த விபரீத பிரசாரத்தைவிட இன்னும் அதிகமாக வேறேதேனும் வேண்டுமா?

இந்த விஷமக் குவியலின் சமீபகால உதாரணம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஸ்ரீ. குர்முக் நிஹால் சிங், தன் தலைமைப் பேருரையில்—இந்தப் பிரசங்கக் குறிப்பொன்றை முன்னொரு அடிக்குறிப்பில் கையாண்டிருக்கிறேன்.—"முஸ்லிம்களை காங்கிரஸில் சேராமல் தடுப்பதற்காகவே சர் சையத் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாட்டை நிறுவியதாகக் கூறுகிறார். இந்த பிரசங்கம் ஒரு விஞ்ஞானிகள் கூட்டத்தில் செய்யப்பட்டது! இந்த விதமான விஷம நச்சுப் பிரசங்கங்களை யெல்லாம் முஸ்லிம்கள் அப்படியே விழுங்கி ஜீரணம் செய்துகொண்டு, ஹிந்துக்களுடன் ஒரு பொதுச் சமுதாயமாக ஒன்றுசேர வேண்டுமென இவர்கள் கருதுவார்களாயின், அவர்கள் குருடர்களாகவே இருக்க வேண்டும்."

1 ஸ்ரீ. குர்முக் நிஹால் சிங், மேற் குறிப்பிட்ட தலைமைப் பிரசங்கம்.

2 "காங்கிரஸ் சரித்திரம்", பக்கம்:22.

இலட்சியமாகிய வேதாந்தத்தைப் புதுப்பித்து,புனிதப்படுத்தி அதனைப் புதிய சகாப்த இலட்சியமாகிய தேசியத்துடன் கலந்து விடுவதே நாட்டு மக்களின் கடமை. இந்த மகத்தான வேலையை நிறைவேற்றுவதே இந்திய காங்கிரஸின் இலட்சியம்.'' இதிலிருந்து காங்கிரஸ், பூரண ஹிந்து தேசிய இலட்சியங்களைக்கொண்ட ஹிந்துஸ்தாபனமே என்பது தெளிவாகிறது. இந்த ஹிந்து தேசிய இலட்சியத்தைப்பெற முஸ்லிம்கள் அதில் சேரவேண்டு மென்பது பொருத்தமற்றது. அந்த இலட்சியங்களைப் பற்றி முஸ்லிம்களுக்கு அவசியமுமில்லை. ஸ்ரீ சீதாராமையா ஆரிய சமாஜத்தை வானளாவப் புகழுகிறார். "ஆரிய சமாஜம், நாட்டு மக்களிடையே வீரமிக்க ஆண்மையை உண்டாக்கி விட்டது'' என்று அவர் கூறுகிறார். "தியாகி'' சிரத்தானந்தரையும், "வீரர்'' லஜபதிராயையும் அவர் போற்றுகிறார். இவ்வாறு ஆரிய சமாஜத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ஆண்மையுள்ள சமுதாயத்துடன் முஸ்லிம்கள் சேர இயலாது. இந்த ஸ்தாபனம், தன்னைச் சேர்ந்தோரிடையே முஸ்லிம்கள்பால் பயங்கர விரோதத்தைக் கிளப்பி விட்டு விட்டது. இதனை நிர்மாணித்தவரான தயானந்தர் என்ற சாது, வட இந்தியாவின், குறிப்பாக பஞ்சாபின் சமூக வாழ்வில் நஞ்சூட்டி விட்டார். இதைப்போல் இதற்கு முன்னரும் பின்னரும் எவரும் செய்ததில்லை. அவர் ஊர், ஊராகச் சென்று, விவாதங்கள் நடத்தி, ஒவ்வொரு இடத்திலும் விரோதம், தீய எண்ணம், மாச்சரியம் முதலியவைகளைக் கிளப்பி விட்டார். அவர் 1877-ல் லாகூருக்கு விஜயம் செய்தார். லாகூரில் அவரது பிரசங்கம் விரோத உணர்ச்சியைத் தூண்டிவிடா முன்னரே "கோஹினூர்'' என்ற ஹிந்து பத்திரிகை 1877-ம் வருஷம் மே மீ 19-ந் தேதி

வெளியான இதழில் "கோபமூட்டிவிடப்பட்ட பொதுமக்களுக்கு சாந்தத்தை யளித்து, அமைதியையும், சமாதானத்தையும் நிலவச் செய்ய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக" என்று பிரார்த்தனை செய்தது. "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற புத்தகம் கடைசிப் பதிப்பு—இதை அவரே தயாரித்திருக்கிறார்—அவரது மரணத்திற்கு ஒரு வருஷத்திற்கு முன் வெளி வந்தது. அவர் விரோத உணர்ச்சியைத் தூண்டி பிரசங்கம் செய்வதிலும், நச்சுத் தன்மை வாய்ந்த மாச்சரியத்தை உண்டாக்குவதிலும் எவ்வளவு வல்லவரென்பதை இப்புத்தகம் தெளிவாக எடுத்து காட்டுகிறது. எதிர்கால ஆரியசமாஜ சர்க்கார் தனது கொள்கைகளைப் பின்பற்றாதவர்களை, குறிப்பாக முஸ்லிம்களை இந்நாட்டைவிட்டே விரட்டிவிடுவது அதன் கடமைகளில் ஒன்றென அவர் அப்புத்தகத்தில் கூறியிருக்கிறார். மேலும் அவர் சீக்கிய மதத்தைக் கண்டனம் செய்து குரு நானக்கையும் தாக்கியிருக்கிறார். ஆனால் குரு கோவிந்த சிங்கை மட்டும், அவர் முஸ்லிம்கள் மீது விரோதமாகப் பேசுகிறாரென்பதற்காக அவர் கொஞ்சம் ஆதரித்துப் பேசினார். தயானந்தருக்கு முஸ்லிம்கள்பால் விரோதத்தைத் தவிர வேறொரு எண்ணமுமில்லை யாதலால், பிரம்ம சமாஜத்தையும் அவர் ஆட்சேபித்திருக்கிறார். இந்த இரு ஸ்தாபனங்களும் முஸ்லிம்கள்பால் சகிப்புத் தன்மையைக் காட்டி யிருக்கின்றன. முஸ்லிம்களை எதிர்த்து ஆரிய சமாஜிகள் செய்த பிரசாரம் அதிகமான பயங்கரமும் விரோதமும் நிரம்பியது. ஸ்ரீ காந்தியார் கூட இதைக் கண்டு திடுக்கிட்டு, 1923-ம் வருஷத்தில் ஆரிய சமாஜத்தின் இலட்சியங்களைப் பலமாகக் கண்டனம் செய்திருக்கிறார். இவ்வளவு முஸ்லிம் விரோத சுபாவம் கொண்ட ஒரு ஸ்தா

பனம், முஸ்லிம்கள் அதில் சேருவரென எதிர் பார்த்திருக்க நியாயமில்லை. ஆதலால், இயல்பாகவே முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டும் புறம்பாயிருந்தனர்.

காங்கிரஸ் ஸ்தாபனமும், தனது குறுகிய வகுப்புத் தன்மையை விட்டு பரந்த நோக்கங் கொள்ளவோ, அதன் ஹிந்துத் தன்மையையும், அரசியல் அபிலாஷைகளையும் மாற்றிக் கொள்ளவோ எப்போதும் முயன்றது கிடையாது. உதாரணமாக, அது பிரிவினையை எதிர்த்து வங்க ஹிந்துக்களை ஆதரித்து நின்றது. வங்காளம் அக்காலத்தில் பீஹார் ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் மாகாணங்களுடன் சேர்ந்த ஒரே மாகாணமாயிருந்தது. அது ஒருவர் தனிப்பட்டு நிர்வாகம் நடத்த இயலாத அளவு பெரியதாக இருந்தது. ஆதலால், நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு பிரிட்டிஷார் வங்கப் பிரிவினை செய்ய வேண்டுவது அவசியமாகி விட்டது. வங்க சர்க்கார் இலாக்காக்களிலெல்லாம் ஹிந்துக்களே ஆதிக்கம் செலுத்தி, நிர்வாகத்தை நடத்திவந்தன ரென்பதை நாம் முன்னே ஒரு இடத்தில் விவரித்திருக்கிறோம். இந்த சர்க்காரில் தாழ்ந்த உத்தியோகத்தைத் தவிர உயர்ந்த பதவி எதுவும் முஸ்லிம்களுக்குக் கிடைக்கவில்லை. முஸ்லிம்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென சர்க்கார் முயற்சிக்கும் சமயங்களிலெல்லாம் ஹிந்து பத்திரிகைகள் அதைப் பலமாக ஆட்சேபித்து ஆர்ப்பரிக்கும். இந்த வகையில் பிரிவினை வகுப்புத் தன்மை வாய்ந்ததாக ஆகிவிட்டது.* காங்கி

---

* ஸ்ரீ. இந்திர பிரகாஷ், "நாம் எங்கு வேறுபடுகிறோம்" என்ற புத்தகம், பக்கம் 18-ல் வங்காளப் பிரிவினையைப் பற்றிப் பின் வருமாறு கூறிகிறார் :— "புதிதாக அமைக்கப் பட்ட கிழக்கு வங்காளம்—அஸ்ஸாம் மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மை

ARCHIVES
10906
V4427

ரஸ், தன்னைத் தேசியத் தன்மை வாய்ந்த ஸ்தாபனமெனக் கூறிக்கொண்ட போதிலும், வங்கப் பிரிவினை விஷயத்தில் ஹிந்துக்களை ஆதரிக்க முன்வந்து விட்டது.

இந்த சமயத்தில் நாட்டின் அரசியல் வாழ்வில் மற்றொரு அம்சமும் புகுந்தது. ஹிந்து—முஸ்லிம் உறவுகளை வேறுபடுத்துவதில் இந்த அம்சமும் அற்ப சொற்ப சேவையைச் செய்யவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் இதனை மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ ஆசிகூறி, ஆதரித்து போஷித்து வருகின்றனர்.* அதுதான பசுகுர்பானி எதிர்ப்பு இயக்கம். ஒரு புதிய சிவாஜி கலையை ஸ்தாபித்தவரான பால கங்காதர திலகர் என்ற மகாராஷ்டிர வீரரே

---

யினராயிருப்பராதலின், அவர்கள் இதனை ஆதரித்தனர்.'' ஆனல் டாக்டர் பட்டாபி சீதாராமையா, (தமது காங்கிரஸ் சரித்திரம், பக்கம்: 113 ல்) பொது மக்களின் விருப்பத்துக்கு விரோதமாகப் பிரிவினை நடைபெற்றதெனக் கூறுகிறார். இந்த பிரபல காங்கிரஸ் தலைவரின் கண்களில், முஸ்லிம்கள், "பொது மக்களின்" ஒரு பகுதியினரெனக் காணப்பட வில்லை போலும்.

* ஸ்ரீ காந்தியார், 1924-ல் பெல்காமில் நடைபெற்ற பசு பாதுகாப்பு மகா நாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்:—"பசுவைப் பாதுகாக்க நாம் ஒரு வழியைக் கண்டு பிடிக்காத்திருக்கும் வரை சுயராஜ்யம் கிடைப்பது சாத்தியமில்லை; அதற்கு அர்த்தமுமிராது. ஏனெனில் இந்தியாவில் உண்மையான சுயராஜ்யம் ஏற்படுவதற்குமுன் ஹிந்து மதத்தைச் சோதித்து, நிரூபிக்க இதுவே ஒரு உரைகல்லாகும்.'' ஒரு மிருகத்தைப் பாதுகாப்பது, 40 கோடி மக்களின் சந்தோஷத்தை விட மேலான இலட்சியமாகக் கருவதுவது மகாத்மாவின் மதிப்புணர்ச்சியின் வருத்தமான பிரதிபிம்பத்தைப் படமெடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவர். பசுகுர்பானி எதிர்ப்பு இயக்கமும், சிவாஜி கலை இலட்சியமும் முஸ்லிம்களுக்கு விரோதமாக நடத்தப் பட்டவையாகும். சிவாஜி இலட்சியம், மகாராஷ்டிரப் பிராந்தியத்திற்காக மட்டும் நடத்தப் பட்டது; ஆனால் பசுகுர்பானி இயக்கமோ நாடெங்கும் தீவிரமாகப் பரவி, இதர வகுப்பு வேற்றுமை காரணங்களால் ஏற்பட்டதைவிட அதிகமான இரத்தக் களரிக்குக் காரணமாக அமைந்து விட்டது. இத்தகைய இயக்கத்தை ஆரம்பித்தவரான திலகரோ காங்கிரஸின் முன்னணித் தலைவராவர்!

## அத்தியாயம் — 4

# தனித் தொகுதிகள்

சென்ற அத்தியாயத்தில் வகுப்பு வேற்றுமைபற்றி விவரித்தோமல்லவா? இதற்கு ஹிந்து அல்லது முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் காரணமல்ல; ஹிந்துக்களிடையே வளர்ந்தோங்கி வந்த ஜாதிக் கட்டுப்பாட்டுணர்ச்சியே காரணமாகும். 19-ம் நூற்றாண்டிலோ அல்லது பிற்பகுதியிலோ இந்திய முஸ்லிம்களுக்கு எவ்வித அரசியல் அபிலாஷையும் இருந்ததில்லை. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி பிரிட்டிஷாரின் கோபத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் முஸ்லிம்களைக் காப்பாற்றி, பிரிட்டிஷ் அரசினருடன் சமரஸப் படுத்தி, அவர்கள் பிரிட்டிஷ் எஜமானர்களுக்கு உண்மையில் விசுவாசமுடையவர்களாய் இருக்கின்றனரென்பதை நிரூபிப்பதே சர் ஸையத்தின் பிரதான இலட்சியமாக இருந்தது. ஹிந்துக்கள் முஸ்லிம்களை ராஜ விஸ்வாசமற்றவர்களெனக் கூறி வந்ததைப் பிரிட்டிஷாரும் நம்பிவிட முற்பட்டனர். இந்தப் பழியை அகற்றி முஸ்லிம்களும் விஸ்வாசிகளே என்பதைப் பிரிட்டிஷாருக்குணர்த்த சர் ஸையத் முயன்றார். சர் ஸையத்தின் மரணத்திற்குப் பின்னும் கூட நீண்டகாலம் வரை முஸ்லிம் தலைவர்கள் ராஜ விஸ்வாசமாக இருந்து வந்ததுடன், ராஜ விஸ்வாசத்தைப் பிரசாரம் செய்தும் வந்தனர். இதற்கிடையில் ஹிந்துக்களிடையே ஜாதீய உணர்ச்சியும் வளர்ந்தோங்கியது. இது காலா காலத்தில் வளர்ந்து, இன்றுள்ள நிலைக்கு வளர்ந்தோங்கி விட்டது.

சிப்பாய் கலகத்திற்குப் பின் இரு சமூகத்தினரிடையே மற்றொரு விரோத விஷயம் நேரிட்டது. ஹிந்துக்கள் தாங்கள் அடைந்த சர்க்கார் உத்தியோகங்களை விட்டுவிட விரும்பவில்லை. 1909-ம் வருஷத்தில் மின்டோ—மார்லீ சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டன. இதன்படி தேர்தல்களும், நாட்டின் நிர்வாகத்தில் பொதுஜன பிரதிநிதித்துவமும் புகுத்தப்பட்டன. ஹிந்து முஸ்லிம் விரோத வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாய் அமைந்து விட்டது. சட்ட சபைகளுக்காக தேர்தல்கள் நடத்தப்படுவதால் வகுப்பு உறவுகளுக்கிடையே ஏற்படக்கூடிய விஷமம் பல்லாண்டுகளுக்கு முன்பே சர் சையத் அஹ்மத் கான் அவர்களால் உணரப்பட்டது. 1883-ம் வருஷத்தில் வைசிராய் சட்டசபைக் கூட்டத்தில், மத்திய மாகாண ஸ்தல சுயாட்சி மசோதாவைப் பற்றிப் பேசுகையில் சர் சையத பின்வருமாறு கூறினார்:-

"இந்தியா ஒரு கண்டம். இதில் பல திறப்பட்ட ஜாதிகளும், பல்வகைப்பட்ட கொள்கைகளுமுடைய மக்கள் வசிக்கிறு கள். மதக்கட்டளைகளின் தீவிரம் அக்கம் பக்க வீட்டுக்காரர்களைக்கூட தூரமாக விலக்கி வைத்து விட்டிருக்கிறது. ஜாதீயக் கட்டுப்பாட்டு முறைகளோ தீவிரமாகவும், சக்தி வாய்ந்தனவாகவும் காணப்படுகின்றன. ஒரு ஜில்லாவில் உள்ள மக்கள் பல ஜாதியினராகவும், பல கொள்கையினராகவும் இருக்கின்றனர். ஒரு பிரிவினர் செல்வத்திலும், வர்த்தகத்திலும் மிகைத்திருக்கின்றன ரென்றால், மற்றொரு சமுகத்தினர் கல்வியிலும் செல்வாக்கிலும் மிகைத்திருப்பர். ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகைத்திருக்கலாம். ஒரு பிரிவினர் மற்றெல்லோரைக் காட்டிலும் அறிவு வளர்ச்

சியில் அதிகமா யிருக்கலாம். ஒரு சமூகத்தினர், ஸ்தல ஸ்தாபனங்களிலும், ஜில்லா நிர்வாக சபைகளிலும் பிரதிநிதித்துவம் பெற வேண்டிய முக்கியாம்சத்தையும், அதன் அவசியத்தையும் பூரணமாக உணர்ந்தவர்களா யிருக்கலாம்; மற்றொருவர் அதைப்பற்றி அசட்டையாகக் கருதிக் கொண்டிருக்கலாம் இந்த நிலைமையில், இந்தியாவில் பொதுஜனப் பிரதிநிதித்துவ சபைகளை புகுத்துவது, பெருங் கஷ்டத்தையும், சமூக—அரசியல் சிக்கல்களையும் ஏற்படுத்திவிடக் கூடுமென்பதை மறுப்பது சாத்தியமில்லை. ..........................தேர்தல் மூலமான பிரதிநிதித்துவம் என்பது, பொது மக்களில் பெரும்பாலோருடைய நலன்கள், அபிப்பிராயங்களின் பிரதிநிதித்துவம் என்றே அர்த்தந்தரும். ஒரே ஜாதியும், ஒரே இலட்சியமும் கொண்ட ஒரே இன மக்கள் வாழும் நாடுகளில் இதுதான் சிறந்த முறையென்பதில் சந்தேகமில்லை. ஆனால், என்றுரையே, இந்தியாவில் ஜாதி வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன; பல ஜாதியினர் கலந்துறவாடல் இல்லை; மத வேறுபாடுகளோ இன்னும் அதி மும்முரமாக இருக்கின்றன; கல்வி, எல்லாப் பிரிவினரிடையேயும் இன்னும் சமத்துவமாக வளர்ந்தோங்கவில்லை. ஆதலால் இத்தகைய ஒரு நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களிலும், ஜில்லா நிர்வாக சபைகளிலும் பல்வேறு நலன்களின் பிரதிநிதித்துவ மிருப்பதற்காக தேர்தல் முறையைப் புகுத்துவதானது, பொருளாதார நன்மைகளைக் காட்டிலும் அதிகமான தீமைகளை விளைவிக்கும். ஜாதி இலட்சிய வேறுபாடுகள் நிலைத்திருக்கும் வரையிலும் இந்தியாவின் சமூக—அரசியல் வாழ்வில் ஜாதி வேறுபாடுகள் முக்கியாம்சமாகக் கருதப்படும் வரையிலும், நாட்டின் நன்மை, நிர்வாகம் சம்பந்தபட்ட விஷயங்களில் இந்த

வேறுபாடுகள் மக்கள்மீது ஆதிக்கம் வகிக்கும் வரையிலும் தேர்தல் முறை ஒழுங்கான முறையில் நடத்தப்பட முடியாது. பெரிய சமூகத்தார், சிறிய சமூகத்தாரின் நலன்களை அடியோடு புறக்கணித்து விடுவர். ஜாதி இலட்சிய வேறுபாடுகளை அதி தீவிரமாக மூட்டிவிடக்கூடிய சட்ட முறைகள் எவையேனும் புகுத்தப்படுமாயின், விஷயமறியா அப்பாவிப் பொதுமக்கள் சர்க்காரையே குறைகூறுவர்."

இது அறுபதாண்டுகளுக்கு முன் கூறப்பட்டது. இந்த அறுபதாண்டுகளாக நடைபெற்ற சம்பவங்கள், அன்று சர் சையத் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையின் உண்மையையும் காட்டுகின்றன. பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள், ஒரே வகை இனத்தவரான மக்களடங்கிய நாடுகளுக்கு மட்டுமே பொருத்தமானவை களென்றும், ஆனால் பல பிரிவினங்கள் கொண்ட மக்களடங்கிய இந்தியாவில் சமூக—அரசியல் சிக்கல்களில்லாமல் நடைபெறமாட்டா வென்றும் சர் சையத் அஹ்மத் கான் சர்க்காரையும், பொது மக்களையும் அநேக பிரசங்கங்களில் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அலிகரி சர் சையதின் ஸ்தானத்தில் வந்தவரான நவாப் முஹ்ஸினுல் முல்க், மத்திய இந்தியாவிலும், மாகாணங்களிலும் பொதுஜன நிர்வாக சபைகளை ஸ்தாபிக்கச் சர்க்கார் உத்தேசித்த விஷயம் 1906-லேயே அறிந்தார். இவருடைய தூண்டுதலின் மீது ஒரு முஸ்லிம் தூது கோஷ்டி, 1906 ஹு அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்று வைசிராயைப் பேட்டி கண்டது. அவர்கள், முஸ்லிம் சமூகத்திற்குத் தனிப்பிரதிநிதித்துவ உரிமையை வைசிராயிடம்

கோரிப் பெற்றனர்.* இக்கோஷ்டியின் பேட்டியை "ஒரு அதிகார நாடகம்" என்று அடிக்கடி கூறப்பட்டது. இது அடியோடு பொருத்தமற்றதென்பது சர் ஸையதின் வார்த்தைகளைக் கவனிப்போருக்குத் தெளிவாகப் புலனாகும். விவாதத்திற்கு நாம் இதை "ஒரு அதிகார நாடகம்" என்றே வைத்துக் கொள்வோம். இதை "அதிகார நாடகம்" நடத்தப்படவில்லையென்றால் நிலைமை என்னவாகியிருக்கும்?

1857-ம் வருஷத்திற்குப் பின், ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தாங்கள் ஒரே இனத்தவர்களென எப்போதும் கருதியது கிடையாது; இரு சமுதாயத்தினரும் தனித் தனியே பிரிந்திருக்கின்றனர்; ஹிந்துக்கள் தீவிர ஜாதியபிமான முடையோராகவும், முஸ்லிம்கள்பால் பகைமை கொண்டோராகவும் இருக்கின்றனர்; பசு வணக்கம் இரு சாராரையும் நல்ல அயலகத்தார்களென்ற உறவிலிருந்து பிரித்து விடுகிறது; ஹிந்துக்களிடையே தோன்றியுள்ள தேசீய இயக்கம் ஹிந்துமதப் புனருத்தாரணத்தைத் தவிர வேறல்ல என்பன போன்ற விஷயங்களை யெல்லாம் நாம் இதுகாறும் கவனித்தறிந்தோம். இந்த நிலைமையில் முஸ்லிம்கள் தங்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கோராது போய் விட்டால், அவர்களின் நிலைமை மிக மிகக் கெட்டு விட்டிருக்கும். தனித் தேர்தல்முறை கோரப்படாமலிருந்து

---

* டாக்டர் சீதாராமையா (தனது சரித்திரம் 75-ல்) கூறுவதாவது: "மின்டோ— மார்லி திட்டப்படி வகுப்புப் பிரதிநிதித்துவம் இந்நாட்டின் மீது சுமத்தப்பட்டது. இவ்விஷயத்தில் மக்களிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை." தனிப் பிரதிநிதித்துவத்தைக் கோரிய முஸ்லிம்கள், நாட்டுமக்களின் ஒரு பகுதியினரல்ல போலும்.

விட்டால், இரு சமூகத்தினரும் ஒன்று சேர்ந்து ஒரே சமுதாயமாகி விடுவரெனக் கூறி விடுவதற்கில்லை. இவ் வித நிலைமையால் முஸ்லிம்கள் மீது ஹிந்துக்கள் ஆதிக்கம் வகிக்கும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கும்.

தனிப்பிரதிநிதித்துவ முறையே எதிர்த்து டாக்டர் பேனி பிரசாத் பல காரணங்கள் கூறி விவாதிக்கிறார். இரு சமூகத்தாரிடையேயும் தோன்றிய அரசியல் விழிப்புணர்ச் சிக்குப்பின் மதப் புணருத்தாரணம் ஏற்பட்டதென அவர் குறைபட்டுக் கொள்ளுகிறார். குறைபட்டுக் கொள்வது இவ்வளவு காலங்கடந்து விட்டபின் பயன்படாது. இங்கு உணரப்பட வேண்டுவது ஒரே ஒரு உண்மைதான். மதப் புனருத்தாரணமே அரசியல் எழுச்சிக்கு மூலகாரணமாக யமைந்திருந்தது. இதே சமயத்தில் ஒரு சில மாறுதல் களையும் நாம் கவனிக்க வேண்டுவது அவசியமாகிறது.

முதலாவது: முஸ்லிம் மதப் புனருத்தாரணம், அரசியல் பிரிவினைக்குக் காரணமாயமைந்து விட முடி யாது. மதப்புனருத்தாரணமும், அரசியல் பிரிவினை யும் வெவ்வேறு தன்மை வாய்ந்தவை. இரண்டுக்கும் சம்பந்தமில்லை. முஸ்லிம்கள் எந்த முஸ்லிமல்லாத மக்களிடமும் அரசியல் வேறுபாடு கொள்ளாமலேயே மதபக்தர்களாக இருக்க முடியும். இவ்வித வேறு பாட்டை ஏற்படுத்தக்கூடிய எந்த விஷயமும் மதத்தில் இல்லை. இதற்கு மாறாக இஸ்லாம் மதம் ஜாதி வேற் றுமையை பலமாக எதிர்க்கிறது. இஸ்லாமிய சரித்தி ரம் (அதை இஸ்லாமியப் பகை உணர்ச்சியோடு வாசிக்கா விட்டால்) என்னுடைய கோட்பாட்டை பூரணமாக ஆதரிக்கிறது.

இரண்டாவது:—முஸ்லிம்களிடையே எந்த மதப்புனருத்தாரணம் நடைபெற்றிருப்பினும், அது தற்காப்புத் தன்மை வாய்ந்ததாகவே இருந்தது. முதலில் கிறிஸ்துவ மதப்பிரசாரகர்கள், பின்னர் ஆரியசமாஜிகள், அதற்குப்பின் இஸ்லாத்தைத் தாக்கும் கிறிஸ்துவ வழக்கத்தைப் பின்பற்றும் ஹிந்துக்கள் ஆகியவர்களின் தாக்குதல்களிலிருந்து முஸ்லிம்கள், தங்களைக் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. இன்றுங்கூட கிறிஸ்துவர்கள், பத்திரிகைகள் முலமும், புத்தகங்கள் மூலமும் இஸ்லாத்தைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இந்த புத்தகங்களில் சில, கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் இடம் பெற்று விட்டிருக்கின்றன.

மூன்றாவது:—ஹிந்துமதப் புனருத்தாரணம் கிறிஸ்துவ தாக்குதலைவிட முக்கால் நூற்றாண்டு காலம் முந்திவிட்டது. இந்த ஹிந்துப் புனருத்தாரணம் மதப்பூர்வமான தாகவன்றி, ஜாதி வளர்ச்சிரீதியிலேயே நடைபெற்றது. ஹிந்துக்களிடையே மதஜாதி யுணர்ச்சிகளைத் தனித் தனியே பிரிக்கக்கூடியது ஒன்றுங் காணப்படவில்லை. ஏனெனில் ஹிந்துமதம் ஒரு ஜாதீயக் கலையேயன்றி வேறல்ல முஸ்லீம்கள் வேறுமதத்தினராயிருக்கின்றன ரென்ற கா்ரணத்தால் மட்டும் அவாகள் தனிச்சமுதாயத்தினராக ஆகிவிட முடியாதென விவாதிக்கப்படுகிறது. ஹிந்து எழுத்தாளர்களும், ஹிந்து தலைவர்களும் கூறும் வாதம் வெகு ஆச்சரியகாமானது. ஏனெனில், தனிப் பிரிவினை என்னும் நோய் ஹிந்துக்களின் சமூகஅமைப்பில் வமிசபாரம்பரையாகத் தோன்றிவரும் ஒரு பிணி

யாகும். அவர்களின் மத, கலாசார ஆரம்பங்களெல்லாம் மூவாயிர வருஷங்களாக ஏற்பட்டவை. மானிடவர்க்கத்தினரில் இதர்களை யெல்லாம் அசுத்தமானவர்களென்றும், தீண்டத்தகாதவர்களென்றும், தங்களுடன் சமூக உறவு கொள்ள அருகதையற்றவர்களென்றும் ஹிந்துக்கள் கருதுகின்றனர். ஒருஹிந்து எவ்வளவு உயரிய அந்தஸ்திலிருந்தாலும் சரி, எவ்வளவு உயரிய ஜாதியினனாயிருந்தாலும் சரி, அவன் இஸ்லாம் மதத்தைத் தழுவிவிட்டானானால், உடனே தீண்டப்படாதவனாகக் கருதப்படுகிறான்; ஹிந்து ஜாதியின் கதவுகள் அவனுக்கு என்றென்றும் திறக்கப்படாமல் மூடப்படுகின்றன. ஆதலால், இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் ஹிந்து பரம்பரையிலிருந்து முஸ்லிம்களாக மாறியவர்களாயிருந்தும், அவர்களை ஒரு ஹிந்துவும் தன்னுடைய பழைய உறவாளர்களாக மதிப்பதில்லை. அவர்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்படுவதுடன் ஐரோப்பியர்கள் மதிக்கப்படுவது போன்றே அயல் நாட்டைச் சேர்ந்த அந்நியர்களாகக் கருதப்படுகிறார்கள். சமூக அமைப்பிலும். கலாசாரத்துறையிலும் ஹிந்துக்கள், முஸ்லிம்களை விட்டும் வேறுபட்டோராகவே எப்போதுமிருந்து வந்துள்ளனர். ஹிந்து மதப்புனருத்தாரணத்தால் அவர்களுக்கிடையே எழும்பிய ஜாதீய உணர்ச்சி, ஹிந்து முஸ்லிம் வேறுபாடுகளை அதிகரித்து, முஸ்லிம்களை அரசியலில் அடக்கியாள வேண்டுமென்ற விருப்பத்தையும் அவர்களின் உள்ளங்களில் தூண்டிவிட்டது. சென்ற நூற்றாண்டின் 60-வருஷ காலங்களில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் பால் எவ்வளவு விரோதமும், பகைமையும் பாராட்டி வந்தனரென்பதை நாம் ஏற்கனவே விவரித்திருக்கிறோம். எல்லா சர்க்கார் உத்தி

யோகங்களிலிருந்தும் முஸ்லிம்களை அகற்றி வைத்திருக்க ஹிந்துக்கள் எவ்வளவு தூரம் முயன்றனரென்பதையும் நாம் ஏற்கெனவே அறிந்து கொண்டோம். முஸ்லிம்கள் தற்காப்பு செய்து கொள்ளும் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப் பட்டனர். எனவே, அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொண்டு, நாட்டில் சட்டசபைகளுக்குத் தேர்தல் முறை புகுத்தப்படும் சமயத்தில் தங்கள் உரிமைகளைப் பாது காத்துக் கொள்வதற்காகத் தனிப்பிரதிநிதித்துவம் கோர வேண்டுவதும் அத்தியாவசியமாகப் போய்விட்டன. அவர்கள் (முஸ்லிம்கள்) மட்டும் தனிப்பிரதிநிதித்துவத் தைக் கோராமலிருந்திருப்பார்களாயின், அவர்கள் ஜாதி வெறி கொண்ட பெரும்பான்மையினரால் இதுவரை நாச மாக்கப்பட்டுவிட்டிருப்பர். தனிவாக்காளர் முறை கூட் டத்திற்குத் தீங்கு ஏற்படுத்தி விட்டதென்றால், அதற்கு தனிப்பிரதிநிதித்துவ முறையைக் கோரிய முஸ்லிம் தலை வர்கள் பொறுப்பாக மாட்டார்கள். முஸ்லிம்களின் தனிக்கோரிக்கையை இன்றியமையா அத்தியாவசியக் கோரிக்கையாகச் செய்த ஹிந்து ஜாதீயத் தீவிரமே இதற் குப் பொறுப்பாகும்.

இன்றைய ஹிந்துக்கள் வழக்கமாகக் கூறிக்கொள்ளு வதைப் போல அக்காலத்தில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த இந்த சலுகையைக்கண்டு எவரும் பொறாமையடையவு மில்லை; அல்லது அவர்களுக்குக் கிடைத்த சலுகையால் தேசநாசம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதவுமில்லை. இப் போதிருப்பதைப் போன்ற காந்தீய வகுப்புவாத தேசியம் அன்று மக்களுள்ளத்தில் நுழைந்ததில்லை. பாமர மக் களுக்கு அக்காலத்தில் ஆட்சேபகாரத் துவேஷகோஷங்கள்

எதுவும் போதிக்கப்பட்டதில்லை. ஒவ்வொருவரும் தங்களைத் தெளிவான முறையில் முஸ்லிம்கள் என்றோ, ஹிந்துக்கள் என்றோ கூறிக்கொள்வர். வகுப்புவாதத்தைக் கொண்டு அவர்கள் ஒருவரை யொருவர் தூஷித்துக் கொண்டது கிடையாது. இவையெல்லாம் பிற்காலத்தில் காங்கிரஸ் பிரசாரத்தால் ஏற்பட்டவைகளாகும் உண்மையில் அன்று பொதுமக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி சொற்ப நிலைமையில் தானிருந்தது. அரசியல் விவாதங்கள் எல்லாம் உயரிய கலாசாரமும், கல்வியும் உடையவர்களுடன் நின்றுபோயிருந்தன. இவர்கள் அரசியலைக் கல்வியளவைப் பொறுத்தே கவனித்து வந்தனர். பிற்காலத்தில்தான் கோபமான தேசபக்தியும், சகிப்புத்தன்மையற்ற தேசீயமும் தோன்றின. ஆகலால், அக்கால அரசியல் வாதிகள், தங்கள் அரசியல் எதிரிகளுடன் கண்ணியமாகவும், சகிப்புத்தன்மையுடனும், அனுதாபப் பூர்வமாகவும் நடந்து கொள்வது சாத்தியமாயிற்று. உதாரணமாக, 1907-ல் பஞ்சாப் ஹிந்து மகாசபை நிறுவப்பட்ட காலத்தில் அதன் இலட்சியங்களும், நோக்கங்களும் பின்வருமாறு வகுக்கப்பட்டன:—"இந்த சபை ஒரு வகுப்பு ஸ்தாபனமோ வரையறுப்புக்குட்பட்ட ஸ்தானமோ அல்ல, எல்லோரும் இதில் அங்கத்தினராகச் சேரலாம். ஹிந்து அல்லது ஹிந்து அல்லாதார் எந்த இயக்கத்தினரையும் இச்சபை துவேஷிக்கவில்லை. எல்லா வகையிலும் ஹிந்து சமூகத்தினரின் நலன்களைப் பாதுகாப்பதே இதன் லட்சியமாக இருக்கும். ஒரு சில வருஷங்களுக்குப்பின், இந்த மாகாண சபை ஒரு அகில இந்திய ஸ்தாபனமாக மாறிவிட்டது. 1915-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹரித்துவாரத்தில் அகில இந்திய

ஹிந்து மகாசபையின் முதலாவது மகாநாடு நடைபெற்றது. காஸீம்பஸார் மகாராஜா சர் மோஹேந்திர நந்தி தலைமை வகித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:— "ஆதலால், நம் சமூகத்தை நாம் ஒழுங்குபடுத்திக் கொள்ள முயற்சித்தால், அல்லது நம் மதத்தைச் சேர்ந்தவர்கள் சிதறுண்டிருப்பதை ஒன்று திரட்டினல், அது எந்த சமூகத்திற்கோ, மதத்தினருக்கோ தீங்கை ஏற்படுத்தி விடாது" 1906-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் முஸ்லிம் லீக் தோற்றுவிக்கப்பட்டது. இதர சமூகத்தினருடன் உறவை அபிவிருத்தி செய்வதும் அதன் கொள்கைகளில் ஒன்ருக அதன் கூட்டத்தில் வகுக்கப்பட்டது, சமீபகாலம்வரை இந்த இலட்சியம் முஸ்லிம் லீக் சட்டத்தில் ஒரு அங்கமாகவே இருந்தது. அக்காலத்தில் அரசியல் தலைவர்கள் காட்டிவந்த பரஸ்பர சகிப்புத் தன்மையும், நன்மதிப்பும், பல்வேறு அரசியல் ஸ்தாபனங்களுக் கிடையே அவசியம் நேரிடுங் காலத்து ஒரு ஒத்துழைப்பை ஏற்படுத்தி விட்டன.

சர் சையத் அஹ்மத்கான் தலைமையில் வகுக்கப் பட்டிருந்த முஸ்லிம் கொள்கையானது, பிரிட்டிஷாரின் அடக்குமுறைக்குப் பயந்து வகுக்கப்பட்டதால், ராஜ விஸ்வாச பூர்வமாகவும், எதிர்ப்பு முறைகள் எதுவுமில்லாமலும் வகுக்கப்பட்டது. அக்கொள்கை "அலிகர் வர்க்கக் கொள்கை" என அழைக்கப் பட்டது. இப்போது அந்தப் பழைய நிலைமை மாறிவிட்டதெனினும், அந்தப் பெயர் மட்டும் மாருமலிருந்து வருகிறது. 1911-ம் ஆண்டு, வசந்தத்தின்போது திரிப்போலி மீது இத்தாலி படையெடுத்தது. இதனுடன் பிரிட்டிஷ் சர்க்காரும் சேர்ந்து கொண்டது. அப்போதுதான் முஸ்லிம்களின் அரசியல் விஸ்வாசத்தின்

மீது முதல் அடிவிழுந்தது. இதையடுத்து மற்றொரு இடியும் ஏற்பட்டது. 1911-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வங்கப் பிரிவினையைப் பிரிட்டிஷ் சர்க்கார் ரத்து செய்து விட்டனர். இந்தப் பிரிவினை ரத்துக்கு முதன் முதலாக ஏற்பட்ட பலமான ஆட்சேபம் அந்த முஸ்லிம் ராஜ விஸ்வாச வர்க்கமான "அலிகர் வர்க்கத்" திடமிருந்தே தோன்றிய தென்பது கவனிக்கத் தக்கது. நவ்வாப் முஹ்ஸினுல் முல்க்கிற்குப் பின் அவரது பதவிக்கு வந்தவரான நவ்வாப் விகாருல் முல்க், வங்கப் பிரிவினை ரத்தை ஆட்சேபித்து அநேக கடிதங்கள் அடுக்கடுக்காய் வரைந்தார்.

முஸ்லிம்களின் விஸ்வாசத்தின் மீது இந்த இரண்டு அடிகளுடன் மூன்றாவது அடியும் ஒன்று சேர்ந்து கொண்டது. 1912-ம் ஆண்டு வசந்தத்தில் பால்கான் நாடுகள், பிரிட்டனின் பூரண ஆதரவுடன் துருக்கியைத் தாக்கின. இந்திய முஸ்லிம்கள் திடுக்கிட்டனர். பிரிட்டனைக் கண்டனம் செய்யத் துணிந்தவர்களனைவரும் அதற்குத் தக்கவாறு கஷ்டப் படுத்தப்பட்டனர். முஸ்லிம்கள் இந்தத் திடுக்கத்திலிருந்து மீளா முன்னமே மற்றொரு இடியும அவர்கள் தலையில் வீழ்ந்தது. 1913-ல் கான்பூரில் ரஸ்தா நிர்மாணத் திட்டத்தை எதிர்த்ததற்காக மத்திய மாகாண லெப்டினன்ட் கவர்னர் சர்ஜேம்ஸ் மெஸ்டன், முஸ்லிம்கள் மீது படுகொலைப்படலத்தை நடத்தினர். இந்தச் சம்பவங்களெல்லாம் ஒன்றன் பின்னொன்றாக துரிதமாக நடந்ததன் காரணமாக முஸ்லிம்களின் ராஜ விஸ்வாசக் கொள்கை கொல்லப்பட்டது. சில மாதங்களுக்குப்பின் நடை பெற்ற அகில இந்திய முஸ்லிம்லீக் மகா நாட்டில் அதன் சட்ட திட்டங்களில் ஒரு அடிப்படையான மாறுதல் செய்யப்

பட்டு, பொறுப்பான சுயாட்சியை அடைவதே தன் அரசியல் இலட்சியமெனப் பிரகடனம் செய்தது.

முஸ்லிம் லீக்கின் கொள்கை இவ்வாறு மாறியதன் காரணமாக காங்கிரஸும், முஸ்லிம் லீக்கும் ஒரே கொள்கையுடைய ஸ்தாபனங்களாக விளங்கின. அது முதல் இருஸ்தாபனங்களின் வருஷாந்திர மகாநாடுகளும் ஒரே இடத்தில் நடைபெற்று வந்தன. இறுதியாக 1916-ம் ஆண்டில், காங்கிரஸுக்கும், முஸ்லிம் லீக்குக்குமிடையே புகழ் வாய்ந்த லக்னோ ஒப்பந்தம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தின் விதிகள் 1919 ஸு இந்திய சர்க்கார் சட்டத்தில் இணைக்கப்பட்டன. இவ்விஷயம் சரித்திரத்தில் புகுத்தப்பட்டுவிட்டதால், ஒப்பந்தத்தின் சாதகபாதகங்களைப் பற்றி விரிவாக விமரிசனம் செய்ய நாம் விரும்பவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனி சமுதாயத்தினர்களே என்பதையும், ஹிந்துக்களுக்குப் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக காங்கிரசும், முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக முஸ்லிம் லீகுக்கும் விளங்குகின்றனவென்பதையும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் இப்போது, தன் பழைய நிலைமையிலிருந்து மாறி, இந்தியா முழுமைக்கும் தானே பிரதிநிதி யென்று கூறிக்கொள்ளுகிறது. முஸ்லிம் லீக்கோவெனில் அன்று (அந்த 1916-ம் ஆண்டில்) தான் ஒப்புக்கொண்ட நிலைமையிலிருந்து மாறுபடாமல், காங்கிரஸ் ஒரு ஹிந்து ஸ்தாபனமே என்றும், முஸ்லிம் சமுதாயத்திற்குப் பிரதிநிதித்துவம் வகிக்க அதற்குரிமையில்லை யென்றும் கூறி வருகிறது. உண்மையும் அதுதானே? காங்கிரஸின் வரலாற்றைப் பற்றி இப்போது எழுதிவரும் ஹிந்து எழுத்

தாளர்களெல்லாம், 'லக்னோ ஒப்பந்தம் காங்கிரஸ் செய்துள்ளவைகளில் மிகமிகப் பெரிய தவறு'' என்று இப்போது கூறுகின்றனர். ஹிந்து ஏகாதிபத்தியம் ஏற்பட வேண்டுமெனக் கனுக் கண்டு கொண்டிருப்போருக்கு இது பெரும் தவறுகக் காணப்படலாம். ஆனால், அந்த ஒப்பந்தம் உண்மை நிலைமையை ஒளியாமற் கூறியது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஏதேனுமொரு சமரஸ உடன்பாட்டுக்கு எப்போதேனும் வருவதாயிருந்தால், அவ்விருசாராரும் வெவ்வேறு தனிச் சமுதாயத்தினரென்ற அடிப்படையில்தான் இது சாத்தியமாகும்.

அத்தியாயம் — 5

# ஹிந்து தேசிய சமுதாயம்

"வகுப்புப் பிரச்னே, வெளித் தோற்றத்திற்கு திடீரென ஏற்பட்டதாகக் காணப்படினும், தேசிய வளர்ச்சியினுல்தான் ஏற்பட்டதே யொழிய, முதலில் எந்த வகுப்புப் பிரச்னேயும் ஏற்பட்டதுமில்லே; அதனுல்தேசிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டதுமில்லே. முற்காலங்களில் இவ்விரு சமூகங்களும் தனித்தனி கால்வாயில் அடுத்தடுத்து ஓடும் இரு சிற்ருறுகள் போன்று இருந்துவந்தன. இரு சமூகங்களும், தங்களுக்கு பற்றுதலில்லாத மூன்ருவது ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தன. ஆதலால், இவை யிரண்டையும் பிரித்துவைக்கக் கூடியது எதுவுமிருந்ததில்லே; இதனுல் இரண்டு சமூகங்களுக்குமிடையே பொருமையோ, பகைமையோ ஏற்படவும் காரணம் ஒன்றுமில்லாமலிருந்தது. இப்போது சில வருஷங்களுக்கு முன்புகூட நகர்களே யடுத்த நாட்டுப்புறங்களிலும், பட்டிக்காடுகளிலும், குக்கிராமங்களிலும் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு, சமரஸமாக வாழ்ந்து வந்தனர். இருதரப்பாரும் ஒரே வகையான அடிமை நிலேயில் இருந்துவந்ததால் தான் இவ்வாறு வாழ்ந்தனர். அவர்களுக்கிடையே போரிட்டுக் கொள்ள எவ்வித காரணமும் ஏற்படவில்லே. அரசியல் விழிப்புணர்ச்சியின் தோற்றமும், ஓட்டுரிமைகள், பிரதிநிதிகள், பாத்தியதைகள் முதலிய ஜனநாயக விதிகள் புகுத்தப்பட்டதும், ஜனநாயகத்

தின் இதர சங்கங்கள் தலை தூக்கியதுமே அவவிரு சாராருக்கும் புதுப்புது அபிலாஷைகளையும், நோக்கங் களையும், தூண்டிவிட்டன. அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றிய காலத்து ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒரே மக்களாக ஒன்றி யிருந்திருப் பார்களாயின், இருவரும் ஒருடல்போன்று ஒன்று திரண்டு எழுந்திருப்பார்கள். ஆனால், ஜாதிப் பாகு பாடும், தீண்டாமை இலட்சியமும் மானிடத்துவத் தைத் தனி அறைகளில் பூட்டிவிட்டன. வகுப்பு ணர்ச்சி அப்போதுதான் தோன்றியது. அரசியல் உரிமைகள் பெறலாமென்ற புதிய நம்பிக்கைகள், அவர்களின் உள்ளங்களில் தீவிர பகைமைத் தீயை மூட்டி ஒருவர்மீதொருவர் சீறிவிழும்படி செய்துவிட் டன இன்றுங்கூட அரசியல் அபிலாஷைகள் நாச மாக்கப்பட்டு, எல்லா இந்தியர்களின் உள்ளங்களி லும் அரசியல் உணர்ச்சிகள் தணிக்கப்படுமாயின், வகுப்புப் பிரச்னையும் மறைந்தொழிந்துவிடும். அர சியல் விழிப்புணர்ச்சி வளர வளர வகுப்புப் பிரச்னை யும் வளருகிறது. அரசியல் விழிப்புணர்ச்சி வளர்ந் தால், தற்போதைய வகுப்பு வேற்றுமை மறைந்து விடுமென்றும், மானிட இயற்கையில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்றும் பரக்க பரக்க நம்மிடையே பிரசாரம் செய்துவருபவர்கள், உண்மை நிலை மையை உய்த்துணரத் தவறிவிட்டார்கள். மானிட இயற்கை எவ்வளவு புனிதத் தன்மை வாய்ந்ததோ, அவ்வளவுக்கு பைசாசத் தன்மையும் வாய்ந்தது. சுயப்பாதுகாப்பு என்று கூறிக்கொள்ளப்படும் சுய நலம், வாழ்க்கையின் அடிப்படையான ஒரு தோற்றம்.

இந்த தோற்றம்தான் இரு சமூகங்களையும் தனித்த னியே வெகுதூரம் பிரித்துவைத்து விட்டிருக்கிறது. வகுப்பு வாதமும், தேசியமும் விரோத பாவமுடைய இரு சக்திகள். ஆனால், ஹிந்து, முஸ்லிம் இரு சமூ கங்களைப் பொறுத்தவரையில், அவைகளின் நூதன மான அமைப்பின் காரணமாக இரண்டும் (தேசியமும் வகுப்பு வாதமும்) ஒன்றையொன்று பின் பற்றித் தொடருகின்றன.''

மேற் கூறப்பட்ட வார்த்தைகள் நான் 19:9 ஹூ பிப் ரவரி மாதத்தில் எழுதியவை. ஒரு வருஷத்திற்குப்பின் சைமன் கமிஷன் இதே கருத்தையே வெளியிட்டுக் கூறிய தாவது:-"அதிகாரம் பிரிட்டிஷார் வசம் உறுதியாக நிலைத் திருக்கும்வரை சுயாட்சி என்பது காணப்பட முடியாது; ஹிந்து—முஸ்லிம் மாச்சரியமும் சொற்ப அளவுக்குட் பட்டே நிற்கும். ஒரு நடுநிலை வாய்ந்த ஆட்சிவர்க்கம் வேறுபாட்டை வெறுக்கிறது என்பது இதற்குக் காரணமல்ல. ஒரு சமூகத்தினர், இன்னொரு சமூகத்தினர் தங்கள் மீது ஆட்சி புரிந்து, அதிகாரம் செலுத்துவரோ எனப் பயப்படுவதற்கு எவ்வித காரணமு மில்லையென்பதுதான் ஹிந்து—முஸ்லிம் மாச்சரியம் ஓரள வுக்குட்பட்டு நிற்பதற்குக் காரணம். இன்று இந்திய சமஸ்தானங்களில் வகுப்பு வேறுபாடே இல்லாமலிருப்ப தற்கும் இதுதான் காரணமெனக் கூறலாம். ஒரு தலை முறைக்கு முன்னிருந்த பிரிட்டிஷ் இந்தியாவின் நிலைமை யைப் பூரணமாக அறிந்திருப்பவர்கள், அக்காலத்தில் உள் நாட்டு அமைதிக்கு வகுப்பு விரோதம் ஒரு பயமுறுத்தலா யில்லாமலிருக்கும் அளவிற்கு இரு சமூகத்தினரிடையே யும் பரஸ்பர நல்லுணர்ச்சி 'வளர்ந்தோங்கி' வந்ததென்

பதை தெளிவாக அறிவார்கள். ஆனால், சீர்த்திருத்தங்கள் புகுத்தப்பட்டதும், அவைகளால் ஏற்படக்கூடிய லாபங்களும், ஹிந்து—முஸ்லிம் போட்டிக்குப் புதியதொரு காரணமாயமைந்து விட்டன. ஒரு சமூகம் தனது பெரும்பான்மையை முன்னிட்டு பெரும்பான்மையான உரிமைகள் வேண்டுமெனக் கோரி, தனது கல்வி வளர்ச்சியையும், செல்வ மிகைப்பையும் யோக்கியதாம்சங்களாகக் காட்டுகின்றது. மற்றொரு சமூகமோ வெனில், தன்னைச் சேர்ந்தோருக்கு உறுதியான பாதுகாப்புகள் வேண்டுமெனக் கோருகிறது. இச்சமூகம், தனது முன்னோர்கள், இந்நாட்டை ஆக்கிரமித்து அரசு நடத்தியவர்களென்பதை மறக்கவில்லை. அரசாங்கப் பதவிகளில் போதிய பிரதிநிதித்துவமும், பூரண பங்கும் தனக்கிருக்க வேண்டுமென இச்சமூகம் விரும்புகிறது.''

மேற்கண்ட ஸைமன் கமிஷன் கூற்றில் 'வளர்ந்தோங்கி' எனக் குறிப்பிடப்பட்ட வார்த்தை, பிரிட்டிஷ் ஆட்சியின் தஸ்தாவேஜில் புகுத்தப் பட்டிருப்பது பல காரணங்களை முன்னிட்டு மன்னிக்கத் தக்கதே எனினும், சரித்திர பூர்வமாக இது பொய்க் கூற்றேயாகும். இதற்குப்பதில் 'குறைந்து' என்ற வார்த்தை புகுத்தப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி ஹிந்து—முஸ்லிம் மாச்சர்யத்திற்கு இதைப் பிரதான காரணமாகக் காட்ட உத்தேசிக்கப்பட்டிருந்தால் இந்த அபிப்பிராயம் உண்மையானதே. இப்போதைய பிரசாரகர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பதுபோல், இந்த உண்மை புறக்கணிக்கப்படும் வரை ஹிந்து—முஸ்லிம் பிரச்னைககு உண்மையான நிகாரம் கண்டு பிடிக்கப் படுவத கு வழி யொன்றும் காணப்பட மாட்டாது.

இதில் முக்கிய விஷயம்: நாட்டின் அரசியல் விழிப்பு உணர்ச்சியால் இப்பிரச்னே நேரடியாக தோன்றியதேயாகும். இந்த விழிப்பு உணர்ச்சி முதன் முதலாக நம் ஹிந்து தேச பக்தர்களிடையே வளர்ந்தோங்கியது. மேனாட்டு அபிப்பி ராயத் தாக்குதலுக்கு முதன் முதலாக இலக்கானவையும் இவையே. ஹிந்துக்கள், தாங்கள் ஜாதியில் மிகைத்தவர் களெனக் கூறிக்கொண்டு தீண்டாமை, இனவேற்றுமை முத லியவைகளே அனுஷ்டித்தவர்களாய் அவர்கள் மேனாட்டுநாக ரிகத்தின் வசப்பட்டுவிட்டனர். ஹிந்து இந்தியாவின் தேசீய வளர்ச்சியால் ஏறபட்ட அருவருப்பான விஷயங்கள் வேறு எங்கும் காணப்பட முடியாது சுமார் 3000 ஆண்டுகளாக இந்த இன உணர்ச்சி ஹிந்துக்களிடையே ஊறிப் போய் விட்டதெனக் கூறலாம். சிப்பாய் கலகத்தால் பிரிட்டிஷா ருக்கு முஸ்லிம்கள்பால் ஏற்பட்ட கோபத்தைத் தணிக்க முஸ்லிம்கள் முயன்று கொண்டிருக்கையில், அரசியல் கிளர்ச்சியை ஆரம்பித்தது ஹிந்துக்களே. வந்தே மாதரப் பாடலே இயற்றி, அதை அடிப்படையாக வைத்து, முஸ் லிம்கள் மீது விரோதத்தைத் தூண்டிவிட ஒரு கதையை எழுதியவரும் ஒரு ஹிந்துதான். தேசீய உணர்ச்சி மேலீட் டால், சர்க்கார் காரியாலயங்களிலெல்லாம் உர்தூ மொழியை அகற்றி, ஹிந்தி மொழி புகுத்தப்பட வேண்டு மென நிர்ப்பந்தித்தவர்களும் ஹிந்துக்களே. தேசீய காங் கிரஸை நிறுவியவர்களும் ஹிந்துக்களே. காங்கிரஸின் பிறப்பே ஹிந்து தேசீயத்தின் பிறப்பைக் குறிக்கிறதென்ப தும் உண்மையே. ஒரு சிவாஜி கலா நிலயத்தை தோற்று வித்தவரும் பாலகங்காதர திலகர் என்ற ஒரு ஹிந்துத் தலே வர்தான். ஹிந்துக்களின் சர்க்கார் உத்தியோக ஏகபோ கத்தைக் குலேக்கக்கூடிய வங்கப் பிரிவினேயை எதிர்த்துப்

புரட்சி செய்தவர்களும் ஹிந்துக்களே. முஸ்லிம்கள் விஷயமுணராத் தன்மையால் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த காலத்து அரசியலில் கொலை, கொள்ளைகளை நடத்தியவர்கள் ஹிந்துக்களே. இறுதியாக இருசமுதாயத் தத்துவத்தைப் பிரகடனம் செய்தவர்களும் ஹிந்துக்களேயாவர். இதற்காக அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனுப் ஜின்னு அவர்களை ஹிந்துத் தலைவர்களும், ஹிந்து பத்திரிகைகளும் சமீப காலத்தில் வாய்க்கு வந்தவாறு வெட்கங்கெட்டதனமாகத் தூஷித்தனர்.

ஹிந்து—முஸ்லிம் வேற்றுமை வளர்ச்சிபற்றி நாம் ஏற்கெனவே சுருங்கக் கூறியிருக்கிறோம். இது வளர்ந்து கொண்டே போயிருக்கக் கூடும். அல்லது 1916-ல் லக்னோவில் செய்தது போன்று அவ்விரு சமூகத்தார்களும் பரஸ்பர ஒற்றுமைக்குரிய வழியொன்றைக் கண்டிருக்கலாம். ஆனால், முதலாவது உலக யுத்தம் இந்தியாவிற்குப் பாதகமான சக்திகளை ஏற்படுத்தி விட்டதுடன், இரண்டு சமூகங்களும் என்றென்றும் வெகு தூரத்தில் விலகி இருக்குமாறு செய்யக்கூடிய எதிர்ப்பு இனங்களையும் ஏற்படுத்தி விட்டது. தேசியத்தின் அபரிமிதத் தன்மையால்தான் யுத்தம் தோன்றியது. எனினும், இதுகாறுமில்லாத விதத்தில் மானிட இயல்பின்படி சுதந்திர உணர்ச்சியை அதிகமாகத் தூண்டிவிட்டது. அயல் நாட்டு ஆதிக்கத்திலிருந்து எவ்வாறேனும் விடுதலையடைய வேண்டுமென்ற உணர்ச்சியை இந்திய மக்களிடையே யுத்தம் ஏற்படுத்தி விட்டது. இந்த அதி தீவிர சுதந்திர வேட்கைதான் 1919-22-ஆம் காலத்தில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையைச் சாத்தியமாக்கியது. ஸ்ரீ. காந்தியார், காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ஏற்ற போதுதான் இந்த மனோ உணர்ச்சி ஏற்பட்டது. அவரு

டைய விருப்பத்தின்படி காங்கிரஸின் சட்ட திட்டம் மாற்றப்பட்டு, நான்கணு சந்தா செலுத்தும் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேர அனுமதிக்கப்பட்டது மகா யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட நாட்டுமக்களின் உணர்ச்சியும், ரவ்லத் சட்டத்தின் விளைவாக ஏற்பட்ட இரத்தக் களறி சம்பவங்களும் இதை இன்றியமையாதனவாகச் செய்து விட்டன. அரசியல் என்பது கல்வி கற்றுணர்ந்த பாரிஸ்டர்களுக்கும், ஓய்வுள்ள கலாவிற்பன்னருக்கும் உரிமையான தனிச் சொத்து என்ற காலம் மலையேறிவிட்டது. ஸ்ரீ. காந்தியாரின் தூண்டுதலும், அதற்குப்பின் நடைபெற்ற சம்பவங்களும் இதை—அரசியலை—பொதுமக்களின் சொத்தாக ஆக்கிவிட்டன. ஒரே ஜாதி, ஒரே இனம், ஒரே மதம் ஆகியவைகளையுடைய ஓரினத்தார் வாழும் நாட்டில் இந்த வளர்ச்சி மிக மிகப் போற்றக் கூடியதாக இருக்கும். ஆனால், ஸ்ரீ. காந்தியாரும், அவரது சகாக்களும், மேனாடுகளில் நல்ல முறையில் நடைபெற்றுவரும் பிரதேச தேசீயத்தின் மயக்கில் வீழ்ந்து விட்டனர். இந்தியா மேனாடுகளைப் போன்றதல்ல வென்பதையும், சரித்திர, கலாசார விஷயங்களில் அடியோடு வெவ்வேறான இரண்டு சமுதாயத்தினர் சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக தூரவிலகி நின்று வாழ்கின்றனரென்பதையும் காந்தியாரும், அவரது சகாக்களும் மறந்து விட்டனர். அவர்களுடைய கண்களுக்கு இந்நாட்டில் வாழுவோர் "சமூகத்தினர்கள்" ஆகவே காணப்பட்டனர். இது ஒரு அபசகுன வார்த்தை. இந்நாட்டில் ஒவ்வொரு இனத்தவரும் ஒவ்வொரு சமுதாயத்தின ரென்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டனர். பூகோள ரீதியாக இந்தியா ஒரே ஐக்கியத் தன்மை வாய்ந்த நாடென்பதும், ஆகவே இந்தியர்களனைவரும் ஒரே சமுதா

யததுக் குட்பட்டவர் களென்பதும் காங்கிரஸின் அபிப்பி ராயம். நாட்டில் மதவேறுபாடுகள் இருக்கின்றனவல்லவா? இதனால், அரசியலில் மதம் கலையிடுமாறு விட்டுவிடக் கூடாதெனக் காங்கிரஸ் பண்டிதர்கள் கூறினர். இந்த கோட்பாடு அடியோடு தவறானது. மனோ தத்துவ ரீதியின் படி இது பொருத்தமற்றது. "ஒரு சமுதாயத்தின் அந்த ரங்க அகவாழ்வு மதத்தைப் பொறுத்தே அமைந்திருக்கி றது'' என்று கூறுகிறார் மிஸ்டர் பிரைஸ். ஒரு சமுதாயம் அதன் முழு நடைமுறையையும், ஆத்மார்த்த, லௌகீக பலத்தையும், உள்ளுணர்ச்சியையும் மதத்திலிருந்தே பெறு கிறது. மதமே ஒரு சமுதாயத்தின் அந்தராத்மாவாக விளங்குகிறது. அதுவே சமுதாய வாழ்வின் ஜீவநாடி. நீங்கள் இந்த ஜீவநாடியைப் புறக்கணித்து விட்டால், சமு தாய வாழ்வே ஆட்டங்கொடுத்து, சீர்குலைந்து போய்விடும். இந்த அந்தராத்மாவின் மீது நிர்மாணிக்கப்படுகின்ற சமு தாயமும் உறுதியும், பலமும் வாய்ந்ததாக நிலைத்து நிற்கும். மேலும் மிஸ்டர் பிரைஸ் பின்வருமாறு கூறுகிறார்:— "ஒரு ஸ்தாபனத்தின் உறுதி, அதனை ஆதரிக்கும் உபகர ணங்களை மட்டும் பொறுத்ததாய் இல்லாமல், அந்த ஸ்தா பனம் எந்த மக்களுக்காக நிறுவப்பட்டதோ, அந்த மக்க ளின் ஆழ்ந்த உள்ளுணர்ச்சியின் பலத்தையும், தன்மையை யும் பொறுத்ததாயிருக்கிறது. அந்த மனோ உணர்ச்சியைத் தெளிவாகக் காட்டக்கூடிய ஸ்தாபனம் பலமுள்ளதாயிருக் குமென்பதில் சந்தேகமில்லை.'' மிஸ்டர் ரெனன் கூறுவதா வது:—"ஒரே நலன்களைக் கொண்ட சமூக ஏற்பாடு மக்க ளிடையேயுள்ள ஒரு சக்திவாய்ந்த இணைப்பாகும். ஆனால் வெறும் நலன்களால்மட்டும் ஒரு சமுதாயத்தை நிர்மா ணித்துவிட முடியுமா? எனக்கு அதில் நம்பிக்கையில்லை.

ஒரே நலன்களடங்கிய சமூகம் வர்த்தக உடன்பாடுகளைச் செய்து கொள்ள மட்டுமே உதவும். தேசியத்துக்கு ஒரு தனி மனோ உணர்ச்சியுண்டு. இந்த மனோ உணர்ச்சி (மத உணர்ச்சி) தான் அத்தேசியத்திற்கு உயிரும், உடலுமாகும்.';

இப்போது நாம் கவனிக்கவேண்டிய பிரச்னை இது தான். ஒரு சமுதாயத்தின் அஸ்திவாரம் மனிதர்களின் ஹிருதயங்களில் உண்மையில் புகுத்தப்பட்ட ஒரு சக்தியா, அல்லது ஒரு பிரதேசப் பழக்கமா என்பதே அப் பிரச்னை. காங்கிரஸ், ஒரு பிரதேச பழக்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டு, பூகோளம், அரசியல் பொருளாதாரம் முதலியவைகளின் அடிப்படையில் ஒரு ஐக்கிய சமுதாயத்தை நிர்மாணிக்க விரும்புகிறது. உண்மையில் ஒரு சமுதாயமென்பது ஏற்கெனவே இருப்பதாக அது அனுமானிக்கிறது. இந்த அனுமானம் முற்றிலும் உண்மையற்றது; அடிப்படையே தவறானதுதான். காங்கிரஸ், தேசீயத்தை நிர்மாணிக்கக்கருதிய அஸ்திவாரமே மூன்றாண்டுகளுக்குள் தகர்ந்து போய்விட்டது. கிலாபத் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டகாலத்தில் பல ஹிந்துக்கள், தங்கள் மனதில் ஏதோ ஓர் எண்ணங்கொண்டு கிலாபத் இயக்கத்தில் சேர்ந்தனர். மகாதமா சிறை சென்றார்; ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை நாடகம் தகர்ந்துவிட்டது. சுவாமி சிரத்தானந்தரும், பண்டித மதன் மோகன மாளவியாவும் சிறையிலிருந்து விடுதலையடைந்து வெளிவந்தவுடன், முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பகிரங்கமான வெட்கங்கெட்ட முறையில் பிரசாரத்தை ஆரம்பித்துக் கொண்டனர். அகில இந்திய ஹிந்து மகாசபை, 1928-ம் ஆண்டில், காசியில் பண்டித மதன் மோகன மாளவியா தலைமையில் புணருத்

தாரணம் செய்யப்பட்டது. இதர சமூகத்தினரின் நலன்களுக்குப் பாதகமில்லாத முறையில் ஹிந்து நலன்களைப் பாதுகாப்பது என்று 1907-ம் வருஷத்தில் வகுக்கப்பட்டு, 1915 வரை அனுஷ்டிக்கப்பட்டுவந்த ஹிந்து மகா சபையின் கொள்கை ஓரே கொடியில் தலை கீழாக மாறிவிட்டது. அதற்குப்பதில் ஒரு புதிய கொள்கை இடம் பெற்றது. "இந்தியா, ஹிந்துக்களுக்குச் சொந்தமான புனித பூமி. ஹிந்துக்கள் நாட்டின்மீது சொந்த உரிமை கொண்ட ஒரு சமுதாயத்தினர். இதில் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும், பார்ஸிகளுக்கும் இடமில்லை. ஹிந்துக்களின் அரசியல் இலட்சியம் ஹிந்து ராஜ்யமே" என்பது தான் ஹிந்து மகாசபையின் கொள்கையாக மாறிவிட்டது. ஹிந்து ஜாதியினர் ஒரு புதிய கனவைக்காண ஆரம்பித்தனர்; அவர்களின் அபிப்பிராயத்தில் ஒரு புதிய ஜீவன் உதயமாகியது. புதிதாகக்கிளைந்தெழுந்த தேசீயத்தின் மனோதத்துவம் அவர்களைப் பலமாகப் பற்றிக்கொண்டது. அன்று முதல் இன்றுவரை ஹிந்து ராஜ்யமே ஹிந்துமகா சபையின் அரசியல் இலட்சியமாக இருந்து வருகிறது.

இங்கு நான் ஒரு சிறிய விளக்கம் கூற வேண்டுவது அவசியமாகிறது. ஏனெனில், இப்பிரச்னை மிகமிக முக்கியமானது.கடந்த இருபதாண்டுகளாகப் பிரசாரகர்கள் பொது மக்களின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டனர். ஆதலின், இங்கு இதைப்பற்றி ஓரளவு சுருக்கமாக விளக்கி வைப்பது மிகைப்பட்டதல்ல. அரசியல் விழிப்புணர்ச்சி, ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் தனித்தனித் தன்மையை வற்புறுத்துமாறு எவ்வாறு தூண்டியது? இந்த இரண்டு சமூகத்தினர்களும் ஓரே சமுதாயமாக வளர்ந்தோங்குவது சாத்தியமில்லையா? என்ற கேள்விகளை நீங்கள் கேட்கலாம்.

இது ஒருக்காலும் சாத்தியமில்லை. தனித்தனித் தன்மை உணர்ச்சி ஏற்பட்டதற்குரிய பழியை எவர் மீதேனும் சுமத்தி, அவர்களை தூஷிப்பது அறிவீனமாகும். காங்கிரஸில் முஸ்லிம்கள் சேரலாகாதெனத் தடுத்துவிட்டதற்காக சர்சையத் அஹ்மத்கான் மீது காங்கிரஸ் பிரசாரகர்கள் பழிசாற்றினர். 1906-ல் நவ்வாப் மொஹ்ஸினுல் முல்க், ஒரு பிரபலமான தூதுக் கோஷ்டியை அழைத்துச் சென்று, முஸ்லிம்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவ உரிமையைக் கோரிப் பெற்றதற்காக அவரை பிரசாரகர்கள் பழி சாற்றினர்; இப்போது இறுதியாக அவர்கள், முஸ்லிம்களை ஒரே கட்டுப்பாட்டிலாக்கி, ஒரே கொடியின்கீழ் ஒன்றுபடுத்தி வைத்ததற்காக ஜனப் ஜின்னாமீது பழிசாற்றி வருகின்றனர். இதுபோன்றே முஸ்லிம்கள், சுவாமி தயானந்தர் மீதும், அவரால் ஸ்தாபிக்கப் பட்ட ஆரிய சமாஜத்தின் மீதும் பழி தூற்றினர். ஆரிய சமாஜம் இந்தியாவிலிருந்து இஸ்லாத்தை விரட்டி யடிப்பதையே பிரதான இலட்சியமாகக் கொண்டிருக்கிறது. சுமார் அறுபதாண்டுகளாக முஸ்லிம்களுக்கு விரோதமாக இந்த ஸ்தாபனம் பிரசாரம் செய்து வருகிறது. மேலும் முஸ்லிம்கள், சிவாஜி கலாசாரத்தையும், பசுகுர்பானி எதிர்ப்பு இயக்கத்தையும் தோற்றுவித்த திலகரையும், மற்றும் லாலா லஜபதிராய், பரமானந்தர், பண்டித மாளவியா, டாக்டர் மூன்ஜே, ஸ்ரீ. சவர்க்கார், முதலிய கணக்கற்ற ஹிந்துத் தலைவர்களையும் பழிசாற்றித் தூஷித்தனர். ஆனால், இவ்வித பழிசாற்றுதலும், தூஷணையும் தவறானது என்றே நான் கூறுகிறேன். பிரிட்டிஷார் இந்நாட்டில் பிரவேசித்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்தில், முஸ்லிம்கள் தற்காப்பில்தான் ஈடுபட்டிருந்தனர். இதைப்பற்றி பின்னொரு அத்தியா

யத்தில் விவரிக்கிறேன். ஹிந்துத் தலைவர்கள் ஹிந்து தேசீய இயக்கத்திற்கு இலக்கானவர்களே யொழிய அவ்வி யக்கத்தைத் தோற்றுவித்தவர்களல்ல. அவர்கள் பிறவியி லேயே அவ்வாறிருந்தவர்களேயன்றி, இயக்கத்தின் சிருஷ்டி கர்த்தாக்களல்ல. அவர்கள் மீது சாட்டப்படக்கூடிய ஒரே குற்றம் என்னவெனில், ஜாதித் தேசீய வேகத்தை அவர்கள் நேர்வழியில் கொண்டு செல்லாமல், அதன் சுய வேகத்திலேயே அவர்களும் ஐக்கியமாகி விட்டதுதான்.

ஹிந்துக்களும், முஸ்லிம்களும் எற்கெனவே தனித் தனிச் சமுதாயத்தினர்களாகப் பிரிந்து வாழ்கின்றவர் களென்றும், அவர்கள் எப்போதும் அவ்வாறே இருந்ததாக வும் நான் எற்கெனவே விளக்கிவிட்டிருக்கிறேன். இரு சாராரையும் தூரமாகப் பிரித்து வைத்த வஸ்து மிக பலமா னது. யூதர்களைத்தவிர வேறெந்த நாட்டு மக்களிடையேயும் இந்த வஸ்து காணப்பட முடியாது. யூதர்கள் மட்டும், தங்களைத் "தனி அந்தஸ்து"டைய மக்களாக கருதுகின்ற னர். அவர்கள் இரண்டாயிர ஆண்டுகளாக உலகில் வாழ்ந் திருந்தும், இந்த ஒரே காரணத்தால்தான், இதர எந்த ஜாதியினருடனும் கலக்க மறுத்து, தங்கள் தனித்தன்மை யைப் பாதுகாத்து வருகின்றனர். ஹிந்துக்களும் யூதர் களைப் போன்றே, தங்களைத் "தனி அந்தஸ்து"டைய மக்க ளாகக் கருதுகின்றனர். ஆதலால், மானிட வர்க்கத்தின் இதர எல்லா மக்களையும் தீண்டத் தகாதாராக அவர்கள் எப்போதும் மதித்து வருகின்றனர். ஹிந்துக்களும், முஸ் லிம்களும் சுமார் 700 ஆண்டுகளுக்குமேல் நெருக்கமாக வாழ்ந்து வந்தும், எவருடனும் கலவாத தனிப்பட்ட ஒரு சமுதாயத்தினரே எனக்கூறி தனித்திருக்கின்றனர். ஐரோப்

பாவில்கூட எந்த இருசமுதாயமும் இவ்வாறு பிரிந்திருந்த தில்லை. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் வெவ்வேறு உடை அணிபவர்கள். அவர்கள் வாழும் வீடுகளின் உட்புறமும், வசிக்கும் அறைகளும் வெவ்வேறு அமைப்பானவை. ஒரு ஹிந்து குடும்பத்திற்கெனக் கட்டப்பட்ட வீடு, ஒரு முஸ்லிம் குடும்பம் வசிப்பதற்கு வசதியாயிராது. அதுபோலவே ஒரு முஸ்லிம் குடும்பத்திற்கெனக் கட்டப்பட்ட காற்றோட்டமான விசால வீடு, ஹிந்துக்களுக்கு மிகவும் அருவருப்பாக காணப்படும். அவர்களின் உணவும் வெவ்வேறானவையே. அவர்கள் உணவுகளைச் சமைத்து உண்ணும் பாத்திரங்கள்கூட வெவ்வேறு உருவம் வாய்ந்தவை. இந்த பாத்திரங்களின் வேறுபாடே அவர்களின் கலாசார வேறுபாட்டைக் காட்டக் கூடியனவாக விளங்குகின்றன. ஹிந்துக்கள், நயமான விலையும், நீடித்த உழைப்பும் உள்ள பித்தளைப் பாத்திரங்களை உபயோகிக்கின்றனர். முஸ்லிம்களோ ஈயம் பூசப்பட்ட செப்பு பாத்திரங்களை உபயோகிக்கிறார்கள். இதனால் அவர்களின் உணவுச் சத்தும் மாறுதலடைகிறது. ஹுக்கா குடிக்கும் வழக்கம் இந்தியாவில் சமீபகாலத்தில்தான் தோன்றியது. அக்பரின் ஆட்சி காலத்தில்தான் புகையிலை இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்த ஹுக்கா பிடிக்கும் விஷயத்திலும் இவர்கள் வெவ்வேறாகக் காணப்படுகின்றனர். இருசாராரின் ஹுக்காக்களுடைய உருவமும், அவை செய்யப்படும் உலோகங்களும் வெவ்வேறானவையே. ஹுக்காவின் நீண்ட குழாய்கூட வெவ்வேறு நிறமுடையவைகள். முஸ்லிம்கள் நீலமான வர்ணத் துணியையும், ஹிந்துக்கள் செந்நிற துணியையும் ஹுக்காக் குழாயில் சுற்றிப் பிணைத்திருக்கின்றனர். இந்த விவரங்கள் எல்லாம் வேடிக்கை

யாக காணப்படலாம். ஆனால், ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரு ஆறுகளும் ஓரே கால்வாயில் பல நூற்றாண்டுகளாக ஓடியும், ஒன்றாகக் கலக்க மறுத்துவிட்டனவென்ற உண்மையை இவ்விவரங்கள் காட்டுகின்றன. மத்திய அசெம்பிளியின் தலைவர் சர் அப்துல் ரஹீம் ஒரு சமயம் ஹிந்து—முஸ்லிம் வேறுபாட்டின் தன்மை பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-

"இந்திய முஸ்லிம்களாகிய நம்மில் எவரும் ஆப்கானிஸ்தான், ஈரான், மத்திய ஆசியா, முதலிய நாடுகளுக்கும், சீன முஸ்லிம்கள், அராபியர், துருக்கியர் முதலிய மக்களிடமும் செல்வோமாயின், நமக்குப் பழக்கமில்லாத எந்தவிதப் பொருளேயும் அவர்களிடம் காணமுடியாது. ஆனால், இந்தியாவிலோ அதற்கு நேர்மாறாக, நாம் எந்த தெருவிலோ, நம் ஹிந்து சகோதரர்கள் வசிக்கும பகுதியிலோ புகுந்தால் எல்லா விஷயங்களிலும் நாம் அந்நியர்களாகவே காணப்படுகிறோம்.

ஒரு ஹிந்துவின் வீட்டிற்குள் முஸ்லிமொருவன் நுழைந்தால், ஹிந்துக்களிடையே காணப்படும் அநேக ஆசாரங்களின் காரணமாக முஸ்லிமின் மனதில் பெரும் அசௌகரியங்கள் தோன்றி விடுவதோடு, ஹிந்துக்களின் மனதிற்கு அருவருப்பைத் தரக்கூடிய பல குற்றங்களைச் செய்து விடுகிறான். இந்திய சமூகாசாரங்களைக் கவனித்து வரும் ஐரோப்பியரும்கூட இந்த வித்தியாசத்தைக் கவனித்துள்ளனர். ஒரு காலத்தில் அலிகர் முஸ்லிம் கல்லூரியின் பிரின்ஸிபாலாக இருந்த சர் தியோடார் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:-"ஒரு கிராமத்திலோ, ஒரு ஜில்லா

வில்லோ, ஒரே நகரிலோ வசிக்கும் ஹிந்துக்களும், முஸ்லிம் களும் இரண்டு ஐரோப்பிய நாடுகளில் வசியும் மக்களைக் காட்டிலும் அதிகமான லௌகீக, வைதீக வேறுபாடுகள் கொண்ட இரண்டு தனி சமுதாயத்தினராகவே வாழ்கின் றனர்.

இலௌகீகத்திலும், வைதீகத்திலும் வேறுபட்ட இரு சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு அரசியல் விருப் புணர்ச்சி ஏற்பட்டு விடுமாயின், அவர்கள் இயற்கையாகவே இரண்டு வெவ்வேறு தனித்தனி சமுதாயத்தினர்களாகப் பிரிந்து விடுகின்றனர். இதைத் தவிர வேறு மாறுதல் ஒன் றும் சாத்தியமில்லை. தனிப்பட்ட ஒரு மனிதர் அரசியல் விழிப்படைந்து விடுவாராயின், அவர் தன் இன மக்களு டன் ஒன்று சேர நாடுகிறார். உதாரணமாக ஒரு சீக்கியர், அரசியல் விழிப்புணர்ச்சியடைந்து விடுவாராயின், அவர் ஒரு முஸ்லிமுடன் அன்பாயிருக்கமாட்டார். இதற்குப் பதில் அவர் சீக்கியர்களுடன் ஒன்று சேர நாடுகிறார். அவருடைய அரசியல் விழிப்புணர்ச்சியினால் சீக்கிய சமூ கத்தில்தான் அவருக்கு அன்பு பெருகும். இதைத் தவிர வேறு ஒன்றும் நேரிடுமென்பது மனோதத்துவப்படி சாத்தி யமற்றது. மதத்தையும், அரசியலையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்ப்பவர்கள், இந்த தேசீய மனோதத்துவதத்தை உணரத் தவறிவிட்டனர். இந்த தேசீய மனோதத்துவம் தான், ஹிந்துக்களைத் தாங்கள் ஒரு சமுதாயத்தினரென் பதை யுணரச் செய்கிறது. 1909-ம் ஆண்டிலேயே லாலா லஜபதிராய், ராய்பகதூர் லால்சந்த் முதலிய ஹிந்துத் தலை வர்கள் காங்கிரஸின் கொள்கையைப் பலமாக ஆட்சேபித் திருக்கின்றனர். இந்தியா, ஹிந்துக்கள், முஸ்லிம்கள் முதலிய பல சமூகத்தினர்களடங்கிய ஒரு ஐக்கிய சமுதா

யமென்ற புதிய கொள்கையைக் காங்கிரஸ் கடைபிடித்து வருவதை அவர்கள் பலமாக ஆட்சேபித்தனர். ஹிந்துக்கள் தனிப்பட்ட முறையில், அவர்களின் சொந்த உரிமைகளின்படி, முஸ்லிம்கள் முதலிய இதர எல்லா சமூகத்தார்களைவிட வேறுபட்ட தனிச்சமுதாயத்தினரென அவர்கள் கூறுகின்றனர்.* அவர்கள் இன்னும் ஒருபடி முன்னேறிச் சென்று, ஹிந்துக்கள் தனிச்சமுதாயத்தினராக அபிவிருத்தியடைய வேண்டுமென்றும், முஸ்லிம்களைத் தங்க

---

* ஸ்ரீ. இந்திர பிரகாசரின் "நாம் எங்கு வேறுபடுகிறோம்" என்ற புத்தகத்தைப் பாருங்கள். அவர், தமது புத்தகம் 159-ம் பக்கத்தில் கையாண்டுள்ள ஆர். பி. லால் சந்தின் "அரசியலின் சுய அமைப்பு" என்ற கட்டுரைப் பகுதியைப் பாருங்கள்:- "தேசபக்தி யென்பது வகுப்பு மயமாக இருக்குமேயன்றி, பூகோளரீதியாக இராது. தேசபக்தி யென்பது, ஒருவருடைய நாட்டின் மீதுள்ள பக்தி யென்று வியாக்கியானம் கூறப்படினும், அந்த வார்த்தை சமூகப்பற்றை ஏற்படுத்துகிறதேயன்றி, பூகோளப் பற்றை ஏற்படுத்தவில்லை. இதற்கு உண்மையில் வமிச பரம்பரையாக ஏற்பட்ட ஒரு பக்தி யென்றுதான் அர்த்தம் கூறமுடியும். இந்த சமூக பக்தியும், விசுவாசமும் நாளடைவில் மாறுதலடைந்து, தேசபக்தியாகப் பரிணமிக்கிறதெனக் கூறுவது பொருந்தும். எவ்வாறிருப்பினும்சரி இவ்வார்த்தைக்கு ஒரு தனிப்பட்ட மனிதன் எந்த சமூகத்தினனாயிருக்கிறானோ அந்த சமூகத்தின் நலன்களைப் பொறுத்தே அளவான தேசபக்தி என்று விரிவுரை கூறுதல் பொருந்தும். எனவே, இந்த தேசபக்தி அல்லது விசுவாசம், சமூகத்தின் மீது காட்டப்படும் விசுவாசமேயன்றி நாட்டின்மீது காட்டப்படும் பற்றல்ல வென்பது தெளிவு." இந்த எழுத்தாளரின் கூற்று மழுப்பலாயிருப்பினும், அர்த்தமும், கருத்தும் தெளிவாகவும், தேசீய தத்துவத்திற்கு ஒத்ததாகவுமிருக்கிறது.

ளைச் சேர்ந்த அரசியல் சமுதாயத்தார்களாகக் கருதக் கூடாதென்றும் கூறினர்.

ஆனால், பிறகு தோன்றிய மகாயுத்தம் ஹிந்து—முஸ்லிம் பிரச்னையை இறுதியாகவும், மிக மிகத் தெளிவாகவும் மக்களின் மனதில் பதிய வைத்துவிட்டது. 1923-ல் பண்டித மாளவியாவின் தலைமையில், புதிய இலட்சியத்துடன் ஹிந்து மகாசபை புனருத்தாரணம் செய்யப்பட்ட வரலாற்றை மேலே விவரித்திருக்கிறேன். 1925-ம் ஆண்டில் "மேரி விசார்" என்ற ஹிந்தி கவிதையொன்று இந்தியாவிற்கு வந்து சேர்ந்தது. காலஞ்சென்ற லாலா ஹர்தயால் என்பவரால் இயற்றப்பட்ட இக்கவிதை நாடெங்கும் உள்ள இந்து பத்திரிகைகளால் வெளியிடப்பட்டது. இதனைத்தும் அரசியல் ஏற்பாடு எனக் கூறினார் ஹர்தயால். ஸ்ரீ. இந்திர பிரசாத், இக்கவிதையிலிருந்து பின் கண்ட இரண்டு அடிகளை ஒரு சமயம் உதாரணமாகக் கையாண்டிருக்கிறார்:—

"ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டுழைக்க ஏதேனும் சந்தர்ப்பம் வாய்க்குமானால், நாம் ஹிந்து சமஸ்தானங்களில் காண்பதுபோலவும், மகாராஜா ரஞ்சித்சிங்கின் காலத்தில் பழக்கத்திலிருந்தது போலவும் இது சாத்தியமாகும். அதாவது அரசாங்கம் ஹிந்துக்களுக்குச் சொந்தமானதா யிருக்கவேண்டும்; முஸ்லிம் வேண்டுமானால் அதில் வசிக்கலாம். ஆனால் அரசாங்கம் ஒரு முஸ்லிம் அரசாங்கமாகவோ, ஹிந்து—முஸ்லிம் கூட்டு நிர்வாகமுடைய அரசாங்கமாகவோ இருக்க முடியாது. இதற்குக் காரணம் என்னவெனில், ஒவ்வொரு அரசாங்கமும், அதன் பழக்க

வழக்கங்களையும், அதன் தேசிய மொழியையும், அதன் தேசிய சரித்திரத்தையுமே பொறுத்திருக்கிறது.

"இப்போது இந்தியாவில் இரண்டு வகையான பிரிவுகள் (அரசாங்கங்கள்) இருக்கின்றன. ஒன்று: முஸ்லிம் பிரிவுகள்; மற்றொன்று: ஹிந்து சமஸ்தானங்கள். முஸ்லிம் சமஸ்தானங்களில் ஹிந்துக்கள் வசிக்கிறார்கள்; இதுபோன்றே ஹிந்து பிரிவுகளில் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். ஹிந்து—முஸ்லிம் கூட்டு சமஸ்தானமென்பது ஒரு அபத்தக் கூற்று; எக்காரணம் கொண்டும் இத்தகைய சமஸ்தானமொன்று இருக்க முடியாது. ஆதலால், பரோடா, காஷ்மீர் போன்ற (ஹிந்து) சமஸ்தானங்களையே நாங்கள் நிறுவ விரும்புகிறோம். பகாவல்பூர், ஹைதராபாத் போன்ற (முஸ்லிம்) சமஸ்தானங்களை நிறுவுவதற்காக தியாகங்கள் செய்ய நாங்கள் தயாராக இல்லை. என்கோட்பாடு இப்போது தெளிவாக இருக்கிறது." (பக்கம்: 99) ஆம்; அது தெளிவாகவே இருக்கிறது. மீண்டும் அதே ஆசிரியர் கூறுவது வருமாறு:—

சுயராஜ்யத்தைப் பெறுவதற்கு முஸ்லிம்களின் உதவி நமக்குத் தேவையில்லை; ஒரு கூட்டு ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதும் நமது விருப்பமல்ல. ஹிந்துக்களல்லாத வட்டாரங்களை நீங்கள் கவனிக்க வேண்டாம். நீங்கள் முஸ்லிம்களின் உதவியால் சுயராஜ்யத்தைப் பெறுவீர்களாயின், நீங்கள் என்றென்றும் முஸ்லிம்களின் உதவியையே நம்பிக் கிடக்கவேண்டி நேரிடும். ஆதலால், அவர்களைத் தனியே விட்டுவிடுங்கள்." (பக்கம்:173)

டாக்டர் அம்பேத்கார், அதே ஏற்பாட்டிலிருந்து மற்ருெரு உதாரணம் (மேற்கோள்) எடுத்துக் கூறுகிருர்.* அவ்வுதாரணம் பின்வருமாறு:—

"ஹிந்து ஜாதி, ஹிந்துஸ்தான், பஞ்சாப் முதலியவைகளின் எதிர்காலம் பின்கண்ட நான்கு தூண்களின்மீது நிறுவப்படும் என நான் கூறுகிறேன்: (1) ஹிந்து சங்கடன்; (2) ஹிந்து ராஜ்யம்; (3) முஸ்லிம்கள் சுத்தி செய்யப்படல் (4) ஆப்கானிஸ்தானையும் எல்லைப்புறங்களையும் ஆக்கிரமித்து, சுத்திகரித்தல். இந்த நான்கு விஷயங்களையும் ஹிந்து சமுதாயத்தினர் நிறைவேற்ருதிருக்கும்வரை, நம் குழந்தைகளுடையவும், பேரன், பேத்திமார்களுடையவும். வமிசத்துடையவும் பாதுகாப்பு எப்போதும் அபாயமாகவே இருக்கும்; ஹிந்து ஜாதி பந்தோபஸ்தாயிருக்க முடியாது. ஹிந்து இனத்தார்களுக்கு ஒரே ஒரு சரித்திரம் தான் இருக்கிறது. அந்த இனத்தின் சட்டதிட்டங்களும் ஒரே தன்மை வாய்ந்தவை. ஆனல், முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும் ஹிந்துமத வட்டத்தை விட்டும் வெகு தூரம் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிருர்கள். ஏனெனில், அவர்களின் மதங்கள் வெவ்வேறு தன்மை வாய்ந்தவை. பாரசீகம், அரபி, ஐரோப்பிய விதிகளையே முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும் விரும்புகிருர்கள். ஆதலால், அன்னிய தன்மை முதலில் அகன்று விடுமாயின், இந்த இரு மதங்களிலும் சுத்தி செய்யப்படவேண்டும். ஆப்கானிஸ்தானும், எல்லைப்புறமலைப் பிரதேசங்களும் முன்னர் இந்தியாவுடன் சேர்ந்திருந்தன. ஆனல், இப்போது இஸ்லாத்தின் ஆதிக்கத்திலிருக்கின்றன..........................நேபாளத்தில் ஹிந்து

* "பாகிஸ்தான் பற்றிய நினைவுகள்", பக்கம்: 123.

மதம் இருந்து வருவதைப்போன்றே, ஆப்கானிஸ்தானி லும், எல்லைப் பிரதேசத்திலும் ஹிந்து சட்டதிட்டங்களும் இருக்க வேண்டும். அவ்வாறில்லையாயின், சுயராஜ்யம் பெறுவது பயனற்றது. ஏனெனில் மலைவாசிகள் எப்போ தும் யுத்தப் பிரியர்களாகவும், யுத்தப் பயிற்சியுடையோராக வும் இருப்பர் அவர்கள் நம் எதிரிகளாகி விட்டால் நாதிர்ஷா ஜமான்ஷா ஆகியவர்களின் காலம் மீண்டும் உயிர் பெற்று விடும். இப்போது ஆங்கில உத்தியோகஸ்தர்கள்தான் எல்லைப்புறத்தை பாதுகாத்து வருகிறார்கள்; இப்படியே எப்போதுமிருந்துவிடாது...............ஹிந்துக்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள விரும்பினால், ஆப்கானிஸ்தானையும், எல்லைப்புறங்களையும் கைப்பற்றி எல்லா மலை ஜாதியினரை யும் மதமாற்ற வேண்டும்.''*

1923-ம் ஆண்டுமுதல் நாளது வரை ஹிந்து மகா சபை கையாண்டு வரும் கொள்கை இதுதான். ''ஹிந்துக்

---

* லாலா ஹர்தயால், 1906-ம் ஆண்டில், இங்கிலாந்திலிருக் கையில், இந்திய விடுதலைக்காக ஊழியர்களைத் திரட்டும் திட்ட மொன்றை வகுத்து, பண்டித சியாம கிருஷ்ணவர்மாவின் ஆலோசனைக்கு அனுப்பியிருக்கிறார். அதில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

''இந்த ஊழியர் சங்கம் ஹிந்துக்கள் மட்டு மடங்கியதாக இருக்கவேண்டுமா? என் அபிப்பிராயத்தைப் பொறுத்த வரையில், ஆம் என்றுதான் கூறுகிறேன். ஏனெனில்:—

''(அ) பொது ஞாபகங்கள், பொதுவான கல்வி, பொது இலட்சியம் ஆகியவைகளை யடிப்படையாகக் கொண்ட ஒரேவகை யான உணர்ச்சி ஹிந்துக்களிடையே பூரணமாக ஏற்படுவது சாத்தியமாகும்,

''(ஆ) சங்கத்தில் ஹிந்துக்கள் மட்டும் இருப்பார்களாயின், விவசாயிகள் அதனைத் தங்கள் சொந்த ஸ்தாபனமாகப் பாவிப்பர்.

களுக்குமட்டுமே இந்தியாவை ஆள உரிமையுண்டென்றும், அவர்கள் இந்நாட்டில் ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்களென்றும் அன்று முதல் இன்றுவரை வருஷந்தோறும் தவறுமல் ஹிந்து மகாசபைத் தலைவர்கள் கூறிவருகின்றனர். சங்கராச்சாரியார் டாக்டர் குர்த்கோடி கூறிய மொழிகள் இன்னும் நம் காதுகளில் ரீங்காரம் செய்கின்றன." இந்தியா ஹிந்துக்களுக்கே சொந்தமானது; முஸ்லிம்கள் வெறும் விருந்தினர்களே. விருந்தினர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையையும் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்." என்று அவர் கூறியிருக்கிறார். இவ்விஷயத்தில் ஹிந்து தலைவர்களின் கூற்றுகளையும், விளாசங்களையும்

---

ஜாத் மக்கள், சீக்கியர், ரஜபுத்திரர் முதலிய ஹிந்து வமிசத்தினரை நோக்கவேண்டுமேயன்றி, நம் பரந்த மனப் போக்கிற்கு இடமளித்துவிடக் கூடாது. ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தையடைவதற்காகப் பொதுமக்களின் ஆவலை அதிகரிக்கும் கலையே அரசியல் எனப்படும்.

"(இ) ஹிந்துக்களும், முஹம்மதியர்களும் ஒன்று கலக்குமாறு செய்ய எவராலுமியலாது. ஹிந்துக்கள் மூலம் முஹம்மதியர்களை நடத்திச் செல்வது நன்மையாகும். முஹம்மதியர்களிடையே அரசியல் கட்டுப்பாட்டையும், தியாக உணர்ச்சியையும் நீங்கள் உண்டாக்கிவிடு விடுவீர்களாயின், ஒரு ஆங்கிலேயரின் எதிர்ப்பில் இவர்களெல்லாம் ஆங்கிலேயரின் ஆயுதங்களாக மாறிவிடக்கூடும். முகம்மதியர்கள் மதவெறி கொண்டவர்கள் அவர்களுக்குக் கட்டுப்பாடும், சமூக சேவை உணர்ச்சியும் தோன்றிவிட்டால், அதனுல், அவர்கள் ஒரு சங்கமாக மாறி, அச்சங்கம் ஹிந்து எதிர்ப்பாக ஆகிவிடும். ஹிந்துக்கள் மூலமாக முஸ்லிம்களைத் திரட்டுவது நன்மையானது. ஏனெனில், ஒரு முஹம்மதிய தொண்டர், தன் இனத்தவர்கள் சமுதாய ஒற்றுமையடைய வேண்டிக் கொண்டால், அவரது வார்த்தைகள் முஸ்லிம்களின் மதவெறியைக் கிளப்பிவிடும். அதற்குப்பின் ஹிந்து-முஸ்லிம்

ஒன்று திரட்டினல், அதுவே ஒரு பெரிய நூலாகிவிடும். ஆதலால் ஸ்ரீ. சவர்க்கார் ஒருவர் கூறிய வார்த்தைகளை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். ஹிந்து மகாசபையின் இலட்சியத்திற்கு இவரைவிட அதிக அதிகார பூர்வமான வர்கள் வேறெவருமில்லை. அவர் சிறையை விட்டு வெளி வந்தது முதல் ஆறுண்டுகள் வரை அதன் தலைவராக இருந்து வருகிறார். 1937-ம் ஆண்டில் அஹ்மதாபாத்தில் நடைபெற்ற ஹிந்து மகாசபை மகாநாட்டில் ஸ்ரீ. சவர்க்

---

ஒற்றுமை மந்திரக்கட்டு தகர்ந்து போகும். ஆதலால், ஹிந்துத் தொண்டர்கள் மூலம் முஸ்லிம்களை நம் முகாமிற்குள் அழைத்து வருவோம்.

"(ஈ) சுயராஜ்யம் என்ற வார்த்தையைக் கொண்டு நாம் மக்களிடையே விடுக்கும் வேண்டுகோளில், நாம் ஹிந்து சங்கங்களை எழும்புவோம், நம்மோடு சேரும்படி முஸ்லிம்களையும் அழைப்போம். ஆனல், அவர்களனைவரையும் ஹிந்துத் தலைமையின் கீழேயே வைப்போம். நீங்கள் அவர்களுக்கு முஸ்லிம் தலைவர்களைக் கொடுப்பீர்களாயின், நீங்கள் அபாய வழியை மிதிக்கிறீர்களென்றே அர்த்தமாகும்.

"(உ) தந்தையார் நாடு விடுதலை பெறவேண்டுமென வீறு கொண்ட அநேக இளைஞர்கள், முஸ்லிம்களை இதில் சேர்ப்பதால் பெருங் கஷ்டம் விளையுமெனக் கருதுகின்றனர். பஞ்சாபில் ஆறு, எழு இளைஞர்கள் எனக்குத தெரியும். அவர்கள் ஹிந்து சங்கத்திற்காகத் தங்கள் உலக ஆசையையும் துறக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனல், கூட்டு சங்கத்தை மட்டும் அவர்கள் சகித்திருக்க மாட்டார்கள். ஸ்ரீ. திலகரும், ஸ்ரீ. லஜபதிராயும் இவ்வபிப்பிராயத்தை எற்றுக் கொள்வார்களென நான் கருதுகிறேன்."

—"ஈஸ்டர்ன் டைம்ஸ்" (முன்னர் வாரப் பதிப்பு—இப்போது 1943-ல் தினசரியாக மாறியது. இது லாகூரிலிருந்து வெளியாகிறது. 1943 ஆகஸ்டு 1உ இதழ்)காந்தியார் காங்கிரஸைக் கைப்பற்றியதுமுதல், காங்கிரஸ் கொள்கையின் போக்கு எவ்வாறு மாறியதென்பது இதனல் தெளிவாக விளங்கும்.

கார், "இரு சமுதாயக் கோட்பாட்டைப்" பற்றி பின் வருமாறு கூறி யிருக்கிறார்:—

"இந்தியா ஏற்கெனவே ஓரே இனத்தவரடங்கிய ஓரே சமுதாய நடென்றோ அல்லது அதை ஓரே சமுதாய நாடாகச் செய்துவிடலாமென்றோ சில ஆரம்ப அரசியல் வாதிகள் கருதிவிடுகின்றனர். இது ஒரு மகத்தான தவறு. சிந்தனைசக்திபற்ற இந்த நண்பர்கள், தங்கள் மனக்கனவுகளை யெல்லாம் உண்மையென நம்பிவிடுகின்றனர். இதனால், வகுப்பு மாச்சரியங்களைக் கண்டு அவர்கள் கொதிப்படைந்து, வகுப்பு ஸ்தாபனங்கள் மீது குற்றங் கூறுகின்றனர். ஆனால் வகுப்பு பிரச்னைகள் எனக் கூறப்படுபவைகளெல்லாம், ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் தேசீய, கலாசார, மத வேற்றுமைகளின் காரணமாக ஏற்பட்டவைகளே. காலம் நேரிட்டால், இப்பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம். ஆனால், அவைகளை, உணர மறுத்துவிடுவதன் மூலம், அடக்கிவிட முடியாது நீண்டகால வியாதியை அனுவசியமாக அசட்டை செய்துவிடுவதைப் பார்க்கிலும் கொஞ்சம் கொஞ்சமாக மருந்து கொடுத்து நிவர்த்திப்பது நன்மையானது. வருத்தந் தரும் உண்மை விஷயங்களைத் தைரியத்துடன் உள்ளபடியே நோக்குவோம். இன்று இந்தியா ஐக்கியமான மக்கள் வாழும் நாடென்றோ, ஓரே இன மக்கள் வாழும் நாடென்றோ கருதப்பட முடியாது. ஆனால், இந்தியாவில் பிரதானமாக இரண்டு சமுதாயத்தினர் இருக்கின்றனர். அவர்கள் ஹிந்துக்களும் முஸ்லிம்களுமே."

1939-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற ஹிந்து மகாசபை மகாநாட்டில், ஸ்ரீ சவர்க்

கார், ஹிந்துக்கள் தனிப்பட்ட வேறு சமுதாயத்தின ரென்ற தமது கோட்பாட்டை விளக்கிப் பின் வருமாறு கூறினர் :—

"ஒரு சமுதாயத்திற்குப் பிரதேச ஒற்றுமையும் பொதுவான பழக்க வழக்கங்களும் மட்டு மிருந்தாலே போதுமானதென்ற அனுமானத்தின் மீதுதான் காங்கிர ஸின் இலட்சியம் முழுவதும் வகுக்கப் பட்டிருக்கிறது. இந்த பிரதேச ஒற்றுமை, இந்தியாவிற்கு இறக்குமதி செய் யப்பட்ட ஐரோப்பாவிலேயே நல்ல இடி யொன்றை அனு பவித்தது. தற்போதைய யுத்தம் இந்த குட்டை வெளிப் படுத்தி, என்னுடைய கூற்றை மெய்யென நிரூபிக்கும். வேறு பொதுவான பந்தம் எதுவுமின்றி வெறும் பிரதேச ஒற்றுமை மயமான நாடுகளெல்லாம், இப்போது சீரழிந்து, உளுத்துப்போன மாளிகை போல் தகர்ந்து தூளாகிவிட் டன. கலை, ஜாதி, சரித்திர பந்தங்களெதுவு மின்றி, எல் லோரும் ஒரே சமுதாயமாக ஒன்று திரள விரும்பாத பல வகையான மக்களை ஒரே சமுதாயத்தினராகச் செய்ய முயற்சிக்கப் படுவதெல்லாம் என்னகதி யடையுமென்ப தற்குப் போலந்தும், ஜெக்கோஸ்லோவேகியாவும் எச் சரிக்கையாக விளங்குகின்றன. இந்த ஒப்பந்த நாடுகளெல் லாம் முதல் சந்தர்ப்பத்திலேயே தகர்ந்துவிட்டன. இந்நாடு களின் ஜெர்மனிப் பகுதி ஜெர்மனிக்கும், ரஷ்யப் பகுதி ரஷ்யருக்கும், ஜெக்கியர் பகுதி ஜெக் மக்களுக்கும், போலந்திய பகுதி போலந்து மக்களுக்கும் பிரிந்து போய் விட்டன. கலை, மொழி, சரித்திரம் முதலியவைகளின் பந்தங்களை, பிரதேச ஒற்றுமையைவிட பலம் வாய்ந்தவை யென்பது நிரூபிக்கப்பட்டுப் போய்விட்டது. ஜாதி, கலை, மொழி முதலிய பந்தங்களின்படி ஒன்றுபட்ட நாடுகள்

மட்டுமே சென்ற மூன்று, நான்கு நூற்றாண்டுகளாக தங்கள் தேசிய ஐக்கியத்தையும், கட்டுப் பாட்டையும் பாது காப்பது சாத்தியமாயிற்று. உதாரணமாக இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, போர்த்துகல் முதலிய நாடுகளைக் கூறலாம். இந்தவித பந்தங்களை யெல்லாம் உற்று நோக்கு மிடத்து, இந்தியாவில் ஹிந்துக்களாகிய நாம் மட்டுமே ஒரு தனிச் சமுதாயத்தினராகக் காணப்படுகிறோம்........ ஹிந்துக்கள் ஒப்பந்த சமுதாயமல்ல; இயற்கைச் சமுதாயக் கட்டுப் பாடுடையவர்களாவர்.

"இங்கு ஹிந்துக்களையும், குறிப்பாக நம் காங்கிரஸ் ஹிந்து சகோதரர்களையும் தவறான வழியில் நடத்திச் செல்லும் மற்றுமொரு முக்கிய விஷயத்தை குறிப் பிடுதல் அவசியமெனக் கருதுகிறேன். ஒரு நாட்டு மக்களை ஒரு சமுதாயத்தினராக ஒன்றுபடுத்திவைக்கும் ஓரே இனத்தன்மை என்பது அந்த மக்களின் பல பிரிவினர் களிடையே மத, மொழி, ஜாதிச் சில்லறை வேறுபாடுகள் அடியோடில்லாமற்போய்விடுவதுதான் என்பது அர்த்தமல்ல. இதன் அர்த்த மென்னவெனில், அச்சமுதாய மக்கள் தங்களுக்கிடையே கொண்டுள்ள சில்லறை வேறுபாடுகளை விட அதிக விரிவான வேறுபாடுகளை இதர சமுதாயத்து டன் கொண்டுள்ளனரென்பதே. இன்று மிகமிக ஒற்றுமை வாய்ந்த நாடுகளாக இருந்து வருபவைகூட—உதாரணமாக பிரிட்டனையும் பிரான்சையும் எடுத்துக்கொள்ளுங்கள்—எந்த மத, மொழி, கலை, ஜாதி, இனவேறுபாடுகளுமின்றி இருக்க முடியாது.

"ஹிந்துக்களாகிய நம்மிடையே ஆயிரத்தொரு வேற் றுமைகளிருக்கின்றன. எனினும் மதம், கலை, சரித்திரம்,

மொழி, ஜாதி முதலிய பொது இணைப்புகளால் திட்டமான ஓரின மக்களாக வாழ்கிறோம். இதர ஹிந்துக்களல்லாத மக்களுக்கும்—உதாரணமாக ஆங்கிலேயர் அல்லது ஜப்பானியர்................என் இந்திய முஸ்லிம்கள் கூட்டத்தான்—நமக்குமுள்ள வேறுபாடுகள், நம்மிடையே யுள்ள வேறுபாடுகளைவிட மிக மிகப் பிரமாதமானவை. இன்று காஷ்மீரம் முதல் சென்னை வரையிலும், சிந்துமுதல் அஸ்ஸாம் வரையிலும் பரவி வசித்துவரும் ஹிந்துக்களாகிய நாம் நம்மை ஒரு தனிச் சமுதாயத்தினராகவே கருதுகிறோம்.'' ஸ்ரீ. சவர்க்கார் கூறும் இக்கூற்றின்படி "ஹிந்துக்கள்'' என்று கூறும்போது இந்திய மண்ணில் உதித்தவர்களான ஜெய்னர், பௌத்தர், சீக்கியர் முதலியோரை சேர்த்துக்கொண்டும், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், யூதர்கள் முதலியவர்களை விலக்கிக்கொண்டுமே பேசுகிறார்.

ஸ்ரீ. சவர்க்காரின் கோட்பாடு சரித்திரப் பூர்வமாகவும், அரசியல் இலட்சியப் பூர்வமாகவும் கலப்பற்ற உண்மையே. அதைப்பற்றி இங்கு விவாதிப்பது சாத்தியமில்லை. இரண்டு சமூகத்தினர், (இந்நாட்டில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இருப்பதுபோல்,) தனித் தனிச் சமுதாய உணர்ச்சியை வளர்த்துக் கொள்வார்களாயின், உள்நாட்டு குழப்பங்கள் முதலியவை ஏற்படாமல் தடுக்க, அவர்கள் தனியாகப் பிரிந்துகொண்டு, தங்கள் தாங்கள் சொந்த சர்க்கார்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அரசியல் ஆராய்ச்சியாளர் கூறுவர். இதுதான் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் கோட்பாடுமாகும். ஸ்ரீ. சவர்க்கார், ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் தனித்தனிச் சமுதாயத்தினரென ஒரு

புறம் கூறிக்கொண்டு, மற்ருெருபுறம் இந்தியா முழுவதும் ஹிந்துக்களின் 'புனித பூமி' என்று கூறி ஹிந்துக்களின் வமிசபரம்பரை உரிமையுள்ள சொத்தாக்கிவிடுகிருர். ஆதலால், அவர், இந்தியா முழுவதற்கும் ஹிந்துக்கள் மட்டுமே அடங்கிய ஒரு தனிச்சர்க்காரைக் கற்பிக்கிறா. இதில் முஸ்லிம்கள் அடிமை நிலையில் இருப்பர். சுருங்கக் கூறுமிடத்து ஹிந்துக்கள் ஆளும் மக்களாகவும், முஸ்லிம்கள் அடிமைமக்களாகவுமே இருப்பர். ஹிந்துமகா சபைத் தலைவர் அதே பிரசங்கத்தில் மேலும் கூறுவதாவது:-"ஹிந்துப் பெரும்பான்மையினர், எத்தகைய ஜனநாயக நியாயரீதியான அரசியலின்படியும் உரிமை பெற்றுள்ள ஆளும் அதிகாரத்தை விட்டுக்கொடுத்துவிட முடியாது. முஸ்லிம்கள் சிறுபான்மையினர்களாதலால், தங்களின் தற்போதைய அந்தஸ்தில் திருப்தியடைந்து, அவர்களின் விகிதாசாரப்படியான அரசியல், பிரிஜா உரிமைகளுடன் வாழலாம். ஹிந்துப் பெரும்பான்மை சமூகத்தினரின் நியாயமான உரிமைகள் மீதும் சலுகைகள் மீதும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு விசேஷாதிகாரங்களையளித்து, அவ்வித ஆட்சியை "சுயராஜ்யம்" என்று கூறுவது வீண்போலிக் கூற்ருகும். எஜமானர்கள் மாறுவதை ஹிந்துக்கள் விரும்பவில்லை. தங்கள் சொந்த மண்ணில் உதித்தவர் என்பதற்காக ஒரு அவ்ரங்கஜேப்பை ஒரு எட்வர்டுக்குப் பதிலாக நியமிப்பதற்காக ஹிந்துக்கள் போராடி மடியமாட்டார்கள். இனித் தங்கள் சொந்த நாட்டிற்குத் தாங்களே எஜமானர்களாக இருக்கவே ஹிந்துக்கள் விரும்புகின்றனர்."

ஹிந்து மகாசபைத் தலைவர் கூறும் சர்க்காரின் படி ஒருவருக்கு ஒரு ஓட்டு என்ற முறையிலும், சர்க்கார் உத்தி

யோகங்கள், மதிப்பை உத்தேசித்து மட்டுமே கொடுக்கப் படும் முறையிலும்தான் நிர்வாகம் நடைபெறும். 'ஒரு வருக்கு ஒரு ஓட்டு' என்பது பூரணப் பெரும்பான்மையை ஹிந்துக்களுக்கே அளிக்கும். ஸ்ரீ சவர்க்கார், ஹிந்துக் களின் பெரும்பான்மையின் மீதுதான் இதனை வற்புறுத்து கிறார். இதனை அவரே தெளிவுபடுத்துகிறார். ஹிந்துக் களே இந்நாட்டு மன்னர்களாகவும், சிறுபான்மையினர், அவர்களுடைய தயவை அண்டி முஸ்லிம்கள் வாழவேண்டு மென்றும் அவர் கூறுகிறார். 'மதிப்பு' என்பது என்ன? எல்லாவிதமான குயுக்திகள், அநீதி, இனபட்சபாதம், வகுப்புவாதம் முதலிய அநேக அருவருக்கத்தக்க அம்சங் களின் புரட்சிதான், 'மதிப்பு' எனக் கூறப்படுகிறதென் பதை சர்க்கார் உத்தியோகங்கள் பற்றி அறிந்தவர்கள் நன் குணர்வர். சர்க்கார் உத்தியோகங்களில் முஸ்லிம்களுக் குள்ள உரிமையை மறுத்து, ஹிந்துக்களுக்குப் பதவிகளும், பதவி உயர்வுகளும் கிடைக்குமாறு செய்ய என்ன தந்தி ரோபாயங்கள் செய்யப்பட்டு வருகின்றன வென்பதை அவர்கள் அறிவார்கள். சர்க்கார் உத்தியோகங்கள் கொடுக்கப்படும் முறைகளைப்பற்றி அறியாதவர்கள், இந்த மக்களால் கையாளப்படும் தந்திரோபாயங்களை அறியமாட் டார்கள். இனபட்சபாத மென்பது, ஹிந்துக் கூட்டுக் குடும்பத்திலும், ஜாதி முறைகளிலும் ஊறிப்போய் விட்ட விஷயம். ஒரு ஹிந்துவின் கண்களின்முன் ஹிந்துவல்லாத வனுக்கு எவ்வித மதிப்புமில்லை. ஸ்ரீ. சவர்க்காரின் மனோ ராஜ்யப்படியான புதிய சர்க்காரில் மதிப்பை நிர்ணயிக்கும் நீதிபதிகள் ஹிந்துக்களாகவே இருப்பர்.

ஒரே பூகோள அமைப்பின்படியான ஏகஇயற்கை வாசஸ்தலத்தில் இரண்டு சமுதாயத்தினர் வாழ்கின்றன

றென்ற உண்மையை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களாயின், இரண்டேமாற்று விஷயங்கள் தான் காணப்படும். ஒன்று: இந்த இரண்டு சமுதாயத்தினரும் பங்கு பிரித்துக்கொண்டு நாட்டைப் பிரித்து, தனித்தனி சுயேச்சை சர்க்கார்களை நிறுவிக்கொண்டு வாழவேண்டும். இன்றேல் ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தைத் தனக்குக் கீழ் அடிமைப் படுத்துவதற்காக அடக்கியாள வேண்டும்; குறைத்து, இறுதியாக நிர்மூலமாகச் செய்துவிட வேண்டும் இவைகளைத் தவிர மூன்றாவது வழியொன்றும் சரித்திரத்திலேயே காணப்பட முடியாது. ஸ்ரீ சவர்க்கார், முஸ்லிம்கள் ஒரு சமுதாயத்தினரென்பதை ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால், அவர்கள் தனிச் சமுதாயத்தினராக தனித்திருக்கும் முறையை மட்டும் அவர் மறுக்கிறார். இந்தியா முழுவதும் ஹிந்துக்களின் புனித பூமியென்றும், அதில் அவர்களே ஆட்சி செய்யவேண்டுமென்றும், பிரிக்கப்பட முடியாத தென்றும் அவர் கூறுகிறார். நவீன ஹிந்து மதத்திற்கு ஹிந்துக்களல்லாதாரைத் தங்களுடன் கலந்துகொள்ளும் சக்தி கிடையாது. 1938-ம் ஆண்டில் கோடை காலத்தில் பர்மாவில் இந்தியர் எதிர்ப்புக் கலவரம் உச்சநிலை அடைந்திருந்த காலத்தில், முஸ்லிம்களை அந்நாட்டைவிட்டு வெளியேற்றிவிடுமாறு பர்மிய பௌத்தர்களுக்கு ஸ்ரீ. சவர்க்கார் வேண்டுகோள் விடுத்தார். எனினும், இந்தியாவில் எவரும் முஸ்லிமல்லாதாரின் வெளியேற்றம் பற்றிப் பேசியதில்லை. இதற்குப் பதிலாக முஸ்லிம்களை அடிமை படுத்தி வைத்திருக்கவே ஹிந்து மகாசபை கருதியது இதன் விளைவுகளைப் பற்றி அவர்களுக்கு இலட்சியமில்லை. ஹிந்துக்களின் பண்டைச் சரித்திரம், பழக்க வழக்கங்கள், சமூகக் கட்டுப்பாடு முதலியவைகளை காணுமிடத்து, ஹிந்து

மகா சபையின மனேபீஷ்டப்படியான சர்க்காரில் முஸ்லிம்களுக்கு ஒரே ஒரு கதிமோட்சம்தான் இருக்கிறது. அதாவது முஸ்லிம்கள் சூத்திரர்களாகவும், தீண்டப்படாதாரகவும் தாழ்த்தி வைக்கப்பட்டிருப்பர். எவ்வாறிருப்பினும் ஹிந்துக்கள், தங்கள் முன் வகுத்துக்கொண்டுள்ள இலட்சியம் அதுதான்.

அத்தியாயம் 5

# காங்கிரசின் தேசியம்

ஹிந்துமகா சபையின் இலட்சியங்களையும் கோட்பாடு களையும் கண்டு சகித்துக்கொண்டே, கண்டனத்திற்குப் பதில் சிரித்துக் கொண்டிருப்பவர்களும் நம்மில் பலிருக் கின்றனர். இவர்களின் தொகை கரைந்து வருகிறது. இந்திய தேசிய காங்கிரஸின் மீது இவர்கள் பற்று கொண் டிருக்கிறார்கள். தேசிய காங்கிரஸ் வகுப்புவாதமற்ற தேசிய ஸ்தாபனமென்பது இவர்களின் கருத்து ஹிந்துக்களின் புனருத்தாரண இயக்கத்தின் விளைவாக காங்கிரஸ் பிறந்த தென்ற உண்மையை டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, டாக்டர் பேனி பிரசாத், பிரின்ஸிபால் நிஹால்சிங் முதலிய வர்களின் ஆதாரங்களுடன் முந்திய அத்தியாயமொன்றில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. உண்மை யில், ஹிந்து சமுதாயத்தின் பிறப்பையே காங்கிரஸ் குறிக் கிறது. காங்கிரஸின் ஆரம்ப நாட்களில் ஒருசில முஸ்லிம் களும் அதில் கலந்திருந்தன ரென்பது உண்மையே. ஆனால் ஒரு சிறிது காலம் தவிர மற்றெப்போதும் அதன் தன்மை மட்டும் மாறியதில்லை. அது எப்போதும் ஹிந்து ஸ்தாப னமாகவே இருந்துவந்தது. அதன் பிறப்பு அடையாளம் மட்டும் அன்று முதல் இன்றுவரை அப்படியேதானிருந்து வருகிறது. 1916-ம் ஆண்டில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் மூலம், காங்கிரஸ், தான் ஒரு ஹிந்துஸ்தாபனமே யென் பதையும், முஸ்லிம்கள் தனி அரசியல் கோஷ்டியின ரென் பதையும், அவர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் அ. இ. முஸ்லிம்லீக்கே என்பதையும் பகிரங்கமாக ஒப்புக் கொண்

டிருக்கிறது. இரு மக்களுடையவும் இத்தனித் தன்மை யுணர்ச்சிதான், 1919-21-ம் வருஷங்களில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு மூலகாரணமாயமைந்திருந்தது.

ஸ்ரீ. காந்தியாரும், ஜனுப்களான அலி சகோதரர்களும் தலைமை வகித்து, ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திய காலத்தில், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை (அப்போதைக்கு மட்டும) பூரணமானதாகக் காணப்பட்டது. அந்த இயக்கம் பெருந் தோல்வியடைந்து விட்டது. சிறைகளெல்லாம் நிரம்பி வழிந்தோடின. ஆனல், சர்க்கார் அலுவல்கள் மட்டும் ஒரு நாள்கூட ஸ்தம்பித்துவிடவில்லை. சர்க்காரிலிருந்து ஒருவர் ராஜிநாமா செய்துவிட்டால் போதும்; உடனே அந்த ஸ்தானத்தை நிரப்ப நூறுபேர் முன்வருவர். உணர்ச்சி வயப்பட்ட முஸ்லிம்கள் இதனல் பெரும் நஷ்டத்திற்குள்ளாயினர்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் தலைவாசலில் வெடிப்புகள் தோன்றலாயின. கிலாபத் கிளர்ச்சியின் காலத்தில் முஸ்லிம்களின் உண்மையான தேசபக்தியில் ஹிந்துக்களுக்கு உண்மையான அனுதாபம் ஏற்படவில்லை. ஏற்கெனவே வைதீகமும், புனிதமும் கற்பிக்கப்பட்ட ஸ்ரீ காந்தியாரின் சக்திவாய்ந்த மந்திரக் கட்டுதான் ஹிந்துப் பொதுமக்கள் மீது ஏற்பட்டு ஹிந்து முஸ்லிம் சமூகத்தினர்களை ஒன்றுபடுத்தி வைத்திருந்தது. ஒத்துழையாமை நாட்களிலிருந்து ஸ்ரீ காந்தியாரின் திருவிளையாடல்களைக் கவனித்த முஸ்லிம்களில் சிலர், அவர் அக்காலத்தில் ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமையை உண்மையாக நாடவில்லை யென்பதைத் தெரிந்து கொண்டிருக்கின்றனர். நான் இங்கு எழுதுவது காந்தியாரின் சுயசரிதையல்ல. ஆதலால்,

அவரது தனிப்பட்ட செயல்கள் பற்றிய பிரச்னையில் நாம் சர்ச்சை செய்ய விரும்பவில்லை. ஆனால், அவர்தம் செயல்களில் உண்மை இலட்சியங்களைக் கொண்டிருக்கவில்லையென்பதற்காகவே மேற்கண்ட சம்பவத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். ஹிந்துக்களின் மனம் எந்தெந்த வகையில் வேலை செய்யுமென்பதை ஸ்ரீ. காந்தியார் ஆழ்ந்து அறிந்திருக்கிறார். 1915-ம் ஆண்டில் அவர் இந்தியாவிற்கு திரும்பியபின் சில ஆண்டுகள் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஹிந்துக்களின் மனோபாவத்தை அறிந்தார். பொது மக்களின்மீது ஒரு சர்வாதிகாரத்தைக் கையாள அவருக்கு அதிகமான ஆவல் இருக்கிறது. பொது மக்களின் தப்பெண்ணங்களின் மீது நடந்தால்தான், தமது மதிப்பு குலையாமலிருக்குமென்பதை வெகுசீக்கிரத்திலேயே அறிந்திருந்தார். அவர், ஹிந்துப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை—அது வருகிறதெனக் தெரிந்தாலும்கூட—எதிர்க்க எப்போதும் துணிந்ததில்லை. பசு வணக்கம் போன்ற ஒரு பொது ஹிந்து நம்பிக்கையில் அவருக்கு உண்மையில் நம்பிக்கை எதுவுமில்லை. ஆனால், ஹிந்து பொதுமக்களின் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்றுக் கொள்வதற்காக, "பசுகுர்பானியைத் தடுக்காத சுயராஜ்யம் கிடைத்தும் பயனில்லை." என்று ஒரு முறைக்குப் பன்முறை கூறவேண்டியதாயிற்று. ஹிந்துக்களின் தப்பெண்ணத்திற்கு ஸ்ரீ. காந்தியார் பணிந்துவிடத் தயாராயிருப்பதே வகுப்பு ஒற்றுமைக்கும், பொது இந்திய சமுதாய வளர்ச்சிக்கும் பெரும் பாதகமாக முடிந்தது.

1922-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஸ்ரீ. காந்தியார் சிறை சென்றார். இரண்டாண்டுகள் சிறைவாசம் செய்து அவர் வெளிவருவதற்குள், இந்தியாவில் அரசியல் நிலைமை

அடியோடு மாறிவிட்டது; வகுப்பு ஒற்றுமை என்பது அடியோடு மறைந்துவிட்டது. மேற் கூறப்பட்டபடி 1922-ம் ஆண்டில் காந்தியாரும், மற்றும் செல்வாக்குள்ள காங்கிரஸ் தலைவர்களும் சிறைக் கம்பிகளுக்குள் இருக்கையில், பண்டித மதன்மோகன் மாளவியாவின் தலைமையில் ஹிந்து மகாசபை புனருத்தாரணம் செய்யப்பட்டது. அவருடன் சுவாமி சிரத்தானந்தர், லாலாலஜபதிராய், இதர ஆரிய சாமாஜத் தலைவர்கள் முதலியவர்களும் சேர்ந்து கொண்டனர். பண்டித மாளவியாவின் தூண்டுதலின்படி, ஒரு ஐக்கிய சமூதாய இலட்சியத்தை ஹிந்து மகாசபை அடியோடு களைந்தெறிந்து விட்டதுடன், இந்தியாவில் ஹிந்து ராஜ்ய மேற்படுவதே தனது இலட்சியமென அறிவித்தது. இந்த ஹிந்து ராஜ்யத்தில் முஸ்லிம்கள் அடிமை மக்களாக வாழ வேண்டுமென அது கூறியது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு மூன்று முறைகளடங்கிய ஒரு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படியான மூல மந்திரச் சுருக்கம் வருமாறு: சுத்தி, சங்கடன், ஹிந்துக்களை இராணுவ மயமாககுதல். இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் ஹிந்து ஜாதியைச் சேர்ந்தவர்களென்றும், ஆதலால், அவர்கள் ஹிந்து மதத்திற்கே மீண்டும் மாற்றப்படவேண்டுமென்றும் அவர்கள் விவாதித்தனர். இது வெறும் பைத்தியக்காரத்தனம். ஏனெனில், ஒருமுறை இஸ்லாத்தின் ஒளியை சிறிதளவேனும் அனுபவித்துப் பார்த்த எவரும் பல உயர்வு, தாழ்வுகள்கொண்ட ஹிந்து மதத்திற்கு மீண்டும் மாறுவரெனக கருதுவது தவறானது. ஆதலால், அந்த (ஹிந்து மகாசபையின்) திட்டம் தோல்வியடைந்தது. அதை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பிறகு ஒருவித முயற்சியும் செய்யப்படவில்லை. ஆனால், சுவாமி

சிரத்தானந்தரின் உத்திரவுகளின்படி நடந்து வந்த-ஆரிய சமாஜிகளால் கையாளப்பட்ட-முறைகள், ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தினரிடையே நிரந்தரப் பகைமையை ஏற்படுத்திவிட்டன.

சங்கடன் என்பது, ஹிந்து சமூகத்தை முஸ்லிம்களுக்கு விரோதமாக ஒன்று திரட்டுவதே. காங்கிரஸின் ஐக்கிய சமுதாய இலட்சியத்தை அது அடியோடு மறுத்து விட்டது. சென்ற 60 ஆண்டுகளுக்கு மேலாக ஹிந்து, முஸ்லிம்களுக்கிடையே வேறுபாடுகள் வளர்ந்துவந்துள்ளனவென்பதை நாம் முன் அத்தியாயங்களில் சுருக்கமாக விளக்கியிருக்கிறோம். இந்த நிலைமையில், ஹிந்துக்களிடையே ஜாதீய உணர்ச்சிவேண்டுகோள் விடுக்கப்படுமாயின், அது ஹிந்துக்களால் உடனே ஒப்புக்கொள்ளப்படுவது இயல்பேயாகும். காங்கிரஸின் இலட்சியம் விநோதமானது. இதற்கு சரித்திரத்தில் உதாரணமே கிடையாது. மக்களின் மனச்சாட்சிப்படி அது அந்நியத் தன்மைவாய்ந்தது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாகப் பழக ஆரம்பித்த காலம்முதல், அவர்கள் தங்கள்தங்களை ஹிந்துக்களென்றும், முஸ்லிம்களென்றும் தனித்தனி இனத்தவர்களாகப் பாவித்திருக்கின்றனரேயன்றி, எப்போதும் இந்தியர்களெனக் கருதியது கிடையாது. இந்தியா ஒரே அரசியல் அம்சம் என்பது உண்மையில் இல்லாத ஒரு கூற்று. அவர்கள், தங்களை எப்போதும் இரண்டு தனிச் சமுதாய மக்களாகக் கருதினரேயல்லாது, ஒரே பொதுவான சமுதாயத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதியதில்லை. பல நூற்றாண்டுகளாக ஒன்றிப் பழகியதன்மூலம் ஒப்புக்கொள்ள மறுத்ததை, எந்த மகாத்மாவின் சர்வாதிகார உத்தரவுக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் ஒப்புக்கொள்ளமுடியாது.

ஹிந்து மகாசபையின் இலட்சியமோ வெகு தெளிவானது; தைரியமானது; ஹிந்துக்களின் ஜாதிய மனப்போக்கிற்கு பூரணமாக இணங்கியது. அதன் இலட்சியமென்னவெனில்: "இந்தியா, ஹிந்துக்களுக்குச் சொந்தமான புனித பூமி. ஹிந்துக்கள் தனிச் சமுதாயத்தினர். அதற்காக அவர்கள் எல்லோருக்கும் எதிராக—குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக—ஒன்றுபடவேண்டும்" ஹிந்துமகா சபையின் இந்த இலட்சியம், ஹிந்துப் பொதுமக்களை, இதுகாறும் எந்த இலட்சியமும் பற்றாத அவ்வளவு பலமான முறையில் பற்றிக்கொண்டது.

முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், அவர்களின் இராணுவப் பராக்கிரமத்திற்காக அவர்களுக்கு எப்போதும் ஒரு தனி மதிப்பு இருந்தே வந்திருக்கிறது. ஹிந்துக்கள் பெருந்தொகையினராக இருந்தும் அவர்கள் முன் ஆட்டுமந்தைகளாகவே காணப்பட்டனர். இந்திய இராணுவத்தில் தங்களுக்கு ஜனத்தொகை விகிதாசாரப்படி பங்கு கொடுக்கப்படவேண்டுமென மத்திய அசெம்பிளியில் எல்லாக் கட்சி ஹிந்துக்களும் பல்லாண்டுகளாகப் போரிட்டனர். ஹிந்து மகாசபை, 1923-ம் வருஷத்தில் தனது புதிய இலட்சியத்தைத் தோற்றுவித்தபோது, ஹிந்துக்களிடையே ஆக்கிரமிப்புணர்ச்சியை உண்டாக்கவும், ஹிந்துக்களின் சார்பில் முஸ்லிம்களின் பெயரைக் கேட்டவுடன் தோன்றிய பயத்தைச் சொல்லவும் ஒரு நூதனமான திட்டத்தைத் தயாரித்தனர். நாட்டின் மூலைமுடுக்குகள் எங்கும் முன்னேற்பாடான கலவரங்களை வரிசையாக அது ஆரம்பித்துவிட்டது. நகரங்களின் வீதிகளெல்லாம் சிறியசிறிய யுத்தகளங்களாக ஆயின. இரத்த வெறியாட்டத்தில் முஸ்லிம்களை எவ்வாறு

சமாளிப்பதென்பதே ஹிந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இங்கு ஒரு சிறிய விஷயம் என் ஞாபகத்திற்கு வருகிறது. அந்த காலத்தில் நானும், என் நண்பரொருவரும் பெர்லினில் இருந்தோம். இந்தியாவில் அடிக்கடி வகுப்புக் கலவரங்கள் ஏற்படக் காரணமென்னவென்று நான் என் நண்பரைக் கேட்டேன். இதற்கு ஒரே ஒரு காரணம் தானுண்டென்றும், அது, முஸ்லிம்களைப்பற்றி ஹிந்துக்கள் கொண்டிருந்த பயம் அகன்றுவிட்டது தானென்றும் அவர் கூறினார். முஸ்லிமிடம் ஹிந்துக்கள் பயங்கொண்டிருந்தவரை கலவரங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. ஹிந்துக்கள் இராணுவ மயமாகச் செய்யப்படுவதற்குக் கலவரங்களே பயிற்சிக் களங்களாக விளங்கின.

அந்த நாட்களில் பண்டித மதன்மோகன் மாளவியா, இந்தியாவின் பல பாகங்களில் சுற்றுப் பிரயாணம் செய்த வரலாறுகளைப்பற்றிய விவரங்களைக் கவனிப்போமாயின், ஒரு ருசிகரமான முடிவைக் காணலாம். இது அக்காலத்திற்குப் பின்னால் கூறப்பட்டதல்ல நான் இந்த இரத்தக் களறி நாடகத்தை வாரக் கணக்கிலும், மாதக் கணக்கிலும், கவனித்த அக்காலத்திலேயே எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அந்த வருஷங்களில் வெளியான பத்திரிகைகளைப் பார்ப்பீர்களாயின் உங்களுக்கு ஓர் உண்மை விளங்கும். பண்டித மாளவியா ஒரு நகருக்கு விஜயம்செய்தால், சில வாரங்களுக்குள் அந்நகரில் இரத்தக் களறியான கலவரங்கள் ஏற்பட்டுவிடும். பண்டித மாளவியா ஏதேனும் ஒரு ஊருக்கு விஜயம் செய்தால் அவ்வூரின் அமைதிக்கு வியாதி ஏற்பட்டுவிடுகிறதென்பதை உணர்ந்த கல்கத்தா பிரதம மாகாண மாஜிஸ்திரேட் 1927-ம் ஆண்டு கோடையின்போது அவர் கல்கத்தாவுக்குள் நுழையக் கூடாதெனத் தடை

யுத்திரவு பிறப்பித்தார். பண்டிதர், தடையை மீறிக் கைதி யானார். சிம்லா தலையிட்டது; அவரும் விடுதலையானார். கிலாபத் கிளர்ச்சியின்போது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை யென்ற மந்திரக் கட்டு கடுமையாக பழி வாங்கப்பட்டது. கலவரம், வகுப்பு மாச்சரியம் முதலியவை நடைபெற்ற அந்த நாட்களை ஒருவர் கவனிப்பார்களாயின், இந்திய சர்க்கார் அமைப்பில் ஏதோ பைசாசத்தன்மை குடிகொண் டிருந்ததென்பதை அறிவர். இந்த விவகாரம்பற்றி, சர்க் காரின் ஆண்டு அறிக்கை—இது இப்போது மறுத்தப்பட்டு விட்டது—வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும் உத்தேசத் துடன் பக்குவப்படுத்தி வெளியிடப்பட்ட தஸ்தாவேஜாக இருந்தது. இது மிகவும் தவறான விஷயங்களும், தப்பான அர்த்தந்தரக்கூடிய விவரங்களுமடங்கியதாகவே இருக்கும்.

ஹிந்துக்கள் இரத்தம் உறைந்தவர்கள். ஆதலால், இரகசிய சங்கங்கள், இரகசிய சூழ்ச்சிகள், இரகசியக் குயுக்திகள் முதலியவைகளில் கைதேர்ந்தவர்களாயிருந் தனர். அவர்களின் சிருஷ்டிகளான கலவரங்களும் உறுதி யான திட்டங்களுடன் நடைபெற்றன. வீட்டுக் கூரை களின்மீது செங்கற்களும், அக்கினித் திராவகப் புட்டி களும், இதர மரணம் விளைவிக்கும் ஆயுதங்களும் குவிக்கப் பட்டன. பின்னால் நடைபெறக்கூடிய வழக்குகளுக்கும் முன்னதாகவே சாட்சியங்களும், ஆதாரங்களும் தயார் செய்யப்பட்டன. இவைகளெல்லாம் ஏற்பாடு செய்யப் பட்ட பிறகு ஒரு சிறு சமிக்ஞை செய்யப்பட்டதும், இவை களைப்பற்றி ஏதுமே அறியாத முஸ்லிம்கள்மீது அவர்கள் பாய்ந்துவிடுவர். எங்கு பார்த்தாலும் இக்கலவரங்கள் ஒரே மாதிரியான திட்டப்படி நடைபெற்றன.

ஸ்ரீ. காந்தியார், 1924-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிறையை விட்டு வெளிவந்தார். பண்டித மாளவியாவின் கபட நாடக அரசியல் பிடிப்பில் நாடு அகப்பட்டுக் கொண் டிருப்பதை அவர் பார்த்தார். எனினும், நாட்டின் நிலைமையை எதிர்த்து நிற்க அவருக்குத் துணிவு இல்லாது போய்விட்டது. ஒன்று அல்லது இரண்டு முறைகளிருக்கலாம்; அவர் மெதுவாகத் தம் ஆட்சேபக் குரலோசையை வெளியில் காட்டினார். ஆனால், ஹிந்துக்களிடையே அதற்கு எதிர்ப்பு தோன்ற ஆரம்பித்ததும் பேசாமல் மௌனமாயிருந்து விட்டார். பண்டிதமாளவியா, ஹிந்து வைதீகத்தின் சின்னமாகவும், ஹிந்துப் பொதுமக்களின் நம்பிக்கை, அபிலாஷைகளுக்கு பிரதிபிம்பமாகவும் விளங்கினார். மகாத்மாவோவெனில், ஹிந்துப் பொதுமக்களிடையே தம் செல்வாக்கைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின், ஹிந்து மகாசபையின் கொள்கையாகிய ஹிந்து தேசியத்தையும், ஹிந்து ராஜ்யத்தையும் ஒப்புக்கொண்டு பண்டிதமாளவியாவிடம் சரணமடைந்தே தீரவேண்டுமென்பதை அவர் உணர்ந்தார். வகுப்பு வேற்றுமை, கலவரங்கள் ஆகிய தீ நாட்டில் மண்டி எழுந்து தாண்டவமாடிக் கொண்டு இருக்கையில், அத்தீயை அணைக்க மகாத்மா ஒன்றும் செய்யாமல், 1923-27 வரை 5 ஆண்டுகளாக மாளவியாவின் பைசாசச் செயல்கள் ஹிந்து—இந்தியாவின் அரசியல் வாழ்வை நடத்திச் செல்லுமாறு விட்டுவிட்டார். 1927-ம் வருஷ இறுதியில் சைமன் கமிஷன் நியமனம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஹிந்து இந்தியா, தன் சொந்த நலன்களை முன்னிட்டு, சைமன்கமிஷனை பகிஷ்கரிப்பதென முடிவு செய்தது. இந்த பகிஷ்காரம் ஹிந்து-முஸ்லிம் கூட்டு பகிஷ்காரமாகத் தோற்றமளிக்க வேண்டு

மென்றும் ஹிந்துக்கள் விரும்பினர். இரண்டு சமூகத்தினர்களும் ஒற்றுமையாகவே இருப்பதாகவும், அவர்களுக்கிடையே எவ்விதத் தகராறும் இல்லையென்றும் சைமன் கமிஷன் மனதில் தோன்றவேண்டுமென அவர்கள் கருதினர். ஆதலால், ஹிந்துத் தலைவர்கள் இரகசியமாகக் கூடி ஆலோசனை செய்து, முஸ்லிம்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்டுவரும் பயங்கர இயக்கத்தை வாபஸ் பெறுவதென முடிவு செய்தனர். இந்த முடிவின்படி கலவரங்கள் திடீரென அடங்கிவிட்டன. சைமன்கமிஷன் இந்தியாவுக்கு வர ஏற்பாடு செய்யப்படாது போய்விட்டால், கலவரங்கள் அடங்கி இராது. 1929-ம் வருஷ ஆரம்பத்தில் சைமன் கமிஷன் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தது. அந்த சமயத்தில், புதிய அரசியல் அமுலுக்கு வர ஆரம்பிக்கும் வரை கலவரங்களே நடைபெறமாட்டாவென்று நான் லாகூர் சஞ்சிகையொன்றில் முன்னதாகவே எழுதியிருந்தேன். அரசியல் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது கலவரங்கள் நடத்துவது ஹிந்துக்களின் நலன்களுக்கு பாதகமாயிருக்குமாகையால் கலவரங்கள் ஒன்றும் நடைபெற மாட்டாவென நான் கூறினேன். நான் கூறியவாறே சைமன் கமிஷன் நியமிக்கப்பட்ட 1927-ம் ஆண்டின் இறுதிக்கும், புதிய அரசியல் புகுத்தப்பட்ட 1937-ம் வருஷ ஏப்ரல் மாதத்திற்குமிடையே மிகமிகச் சொற்ப கலவரங்கள் மட்டுமே நடைபெற்றன. பம்பாயிலும், கான்பூரிலும் மட்டும் இரத்தவெறி கலவரங்கள் இயற்கைக்கு மாறாக நடைபெற்றன. எனினும் மொத்தத்தில் மேற்குறிப்பிட்ட காலம் சமாதான காலமாகவே இருந்தது.

வகுப்புக் கலவரங்கள் பற்றி நான் சரித்திரம் எழுத இங்கு முற்படவில்லை. நான் இங்கு விளக்கிவைக்க விரும்

யெல்லாம் இதுதான். பண்டித மாளவியா, லாலாலஜ பதிராய், முதலிய ஹிந்து மகாசபையினரால் இந்தியா வெங்கும் நடிக்கப்பட்ட இரத்தவெறி நாடகத்தைத் தடுக்க காந்தியார், தம் சுண்டுவிரலைக்கூட அசைக்காமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார். 1928-ம் ஆண்டின் இறுதியில் அவர் மீண்டும் அரசியலில் பிரவேசித்தபோது அவர் இதனை ஆட்சேபித்தார். எனினும், அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கும், மீண்டும் பிரவேசிப்பதற்கும் முன்னர் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமாக அகில இந்தியத் தலைவராக இருந்தது போலில்லாமல், ஹிந்துச் சமூகத்திற்கு மட்டும் தலைவர் என்ற முறையில்தான் அவர் ஆட்சேபம் செய்தார் இவ்வாறு மாளவியாவின் ஹிந்து தேசீயம், ஹிந்து ராஜ்யம் ஆகிய இலட்சியங்களுக்கு மகாத்மா மாறியவுடன், பண்டித மாளவியா அரசியல் அரங்கத்தை விட்டு மெதுவாக நழுவி, அந்தரங்க வாழ்க்கையில் இறங்கிவிட்டார். அதுமுதல் ஸ்ரீ காந்தியார், ஹிந்து சமூகத்திற்கு மட்டுமே தலைவராக இருந்தார். இதை அவரே பலமுறைகளில் ஒப்புக்கொண்டிருக்கிறார். காங்கிரசும், அதன் இலட்சியத்திலும், அங்கத்தினர்களிலும் பூரணமாக ஒரு ஹிந்து தேசீய ஸ்தாபனமாகவே விளங்கியது. ஸ்ரீ. காந்தியாரின் அரசியல் ஓய்வின்போது நடைபெற்ற கடைசிப் பொதுத் தேர்தல்கள் 1926-ம் வருஷத்தில் நடைபெற்றதேயாகும். அந்தத் தேர்தல்களில் ஹிந்துமகாசபை மகத்தான வெற்றியும், காங்கிரஸ் படுதோல்வியும் அடைந்தன. காந்தியார் ஹிந்துமகாசபை இலட்சியங்களுக்கு மாறியதானது, காக்கிரஸின் பலக்குறைவை சரிப்படுத்திவிட்டது. காங்கிரஸ் ஹிந்துக்களின் அபிலாஷைகளுக்கு ஒத்தபடி ஆகிவிட்டது. அதுமுதல் இரா

ண்டு ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களும் ஒன்றாயினர். ஹிந்து மகாசபை அங்கத்தினர்கள், காங்கிரஸிலும் அங்கம் வகித்தனர். இன்று ஹிந்து மகாசபையில் ஒரு உத்தியோகம் வகித்தவர்கள், நாளை காங்கிரஸில் அதே உத்தியோகம் வகிப்பவர்களாக ஆயினர். இவ்வாறே காங்கிரஸ் உத்தியோகஸ்தர்களாயிருந்தோர் மறுநாள் ஹிந்து மகாசபை உத்தியோகஸ்தர்களாக மாறிவிடுவர். இந்த இருஸ்தாபனங்களின் இலட்சியங்களிலும் எவ்வித மாற்றமும் கிடையாது. சென்ற கோடையின்போது வடமேற்கெல்லைப்புற மாகாணத்தில் உபதேர்தல்கள் நடைபெற்றனவல்லவா? அத்தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களின் வெற்றிக்காக ஹிந்துமகாசபையினர், தங்கள் அபேட்சைகளை வாபஸ் பெற்றனர். எல்லைப்புற மாகாண ஹிந்துமகாசபைத் தலைவர் ராய்பகதூர் மெஹர்சந்த்கன்னா, ஹிந்து மகாசபையிலிருந்து ராஜிநாமா செய்யாமலும், காங்கிரஸில் பூர்வாங்கமாக அங்கம் வகிக்காமலும் ஒரு காங்கிரஸ் தலைவராக மாறிவிட்டார். இவைகளிலிருந்து காங்கிரஸ், ஹிந்து மகாசபைக் கொள்கைகள் ஒன்றாகிவிட்டன வென்பது தெளிவாக விளங்குகிறது. 1938-ம் ஆண்டில் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், ஒரு தீர்மானம் பிரேரணை செய்யப்பட்டது. அத்தீர்மானம்மட்டும் நிறைவேறியிருந்தால், காங்கிரஸ் அங்கத்தினர்கள், ஹிந்துமகா சபையில் அங்கத்தினராகாமலும், ஹிந்து மகா சபையினர், காங்கிரஸில் அங்கத்தினராகாமலும் தடுக்கப்பட்டு விட்டிருப்பார்கள். அந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. முஸ்லிம் லீக்குக்கு விரோதமாக விதிக்கப்பட்டிருந்த தடை மட்டும் கண்டிப்பான முறையில் அமுலில் இருந்துவந்தது.

காங்கிரஸ், ஹிந்து மகா சபை ஆகிய இரு ஸ்தாபனங்களின் கொள்கைகளும், நோக்கங்களும் அரசியல் இலட்சியங்களும் ஒன்றுயிருப்பதால், அவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசமென்ன* வென்றும், அவை யிரண்டும் ஏன் ஒன்ருகக் கலக்கவில்லையென்றும் சிலர் கேட்கலாம். காங்கிரஸ் மேடைகளிலிருந்து செய்யப்படும் பிரசங்கங்கள், சாதாரணமாகத் தாராள நோக்க முடையனவாகக் காணப்பட்டன. அவைகளைக் கோட்போர், காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் நேசஸ்தாபனங்களென்றும், இருஸ்தாபனங்களும் ஒரு சமரஸத்திற்கு வருவது கஷ்டமில்லையென்றும் கருதிவிடுவர். ஆனல், ஹிந்துமகாசபை மேடைகளிலிருந்து செய்யப்படும் பிரசங்கங்களோ, அதற்கும், முஸ்லிம் லீக்குக்குமிடையே சமரஸமே சாத்தியமில்லை எனக் கருதப்பட கூடியவாறு துவேஷமும், விரோதமும் உள்ளனவாகக் காணப்படும். இவ்வாறிருந்தும், ஹிந்துமகாசபை. அதன் சமரஸ மனேபாவமற்ற மூடக்கொள்கை, பிடிவாதங்களுடனிருந்த போதிலும், முஸ்லிம்

---

*டாக்டர் அம்பேத்கார் (பாகிஸ்தான் பற்றிய நினைவுகள் "என்ற புத்தகத்தின் 41-வது பக்கத்தில்) கூறுவதாவது:— "காங்கிரஸ், ஒரு ஹிந்து ஸ்தாபனமல்லவென்று கூறுவதில் பயனில்லை. அமைப்பில் ஹிந்து மயமாக உள்ள ஒரு ஸ்தாபனம், ஹிந்துக்களின் மனதைப் பிரதிபலிப்பதாயும், ஹிந்துக்களின் அபிலாஷைகளை ஆதரிப்பதாயுமே இருக்கும். காங்கிரஸுக்கும், ஹிந்து மகா சபைக்குமிடையே ஒரே ஒரு வித்தியாசம் தானிருக்கிறது. ஹிந்து மகா சபையின் மொழிகள் முரட்டுத் தன்மையாயும் செயல்கள் மிருகத்தன்மையாயு மிருக்கின்றன. காங்கிரஸின் சொல்செயல்கள் அமைதியாயும், மிருதுவாயுமிருக்கின்றன. இந்த ஒரு வேறுபாட்டைத் தவிர காங்கிரசுக்கும், ஹிந்து மகாசபைக்குமிடையே இதர வேறுபாடுகள் எவையுமில்லை."

களுடன் சேர்ந்து, மாகாண மந்திரிச் சபைகள் அமைக்கத் தயாராக இருந்தது. ஆனால், காங்கிரஸோ, தன்னை வகுப்புவாதமற்ற தேசீய தன்மையும், தாராளக் கொள்கையுமுடைய ஸ்தாபனமெனக் கூறிக்கொண்டபோதிலும் முஸ்லிம் லீக்குடன் சேர்ந்து மாகாண மந்திரிச் சபைகளமைக்க மறுத்துவிட்டது. இந்நாட்டில் தனக்கும் உரிமை பாராட்டிக் கொள்வதற்காகச் சில ஸ்தானங்களை ஏற்றுக் கொள்ள ஹிந்து மகாசபை தயாராக இருந்தது. ஆனால், காங்கிரஸோவெனில், தன்னைப்பற்றி பெருமையாக நினைத்துக்கொண்டு, ஹிந்து மகாசபை உட்பட இதர எந்த ஸ்தாபனத்துடனும் அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ளத் தயாராக இல்லை. *ஹிந்து சமூகத்தின் அரசியல் திறமை முழுவதும் ஏறக்குறைய காங்கிரஸைச் சார்ந்தே இருந்தது; ஹிந்து மகாசபையோவெனில் வெறும் மேற்பூச்சான ஸ்தாபனமாயிருந்தது. இதைத் தவிர இரண்டு ஸ்தாபனங்களுக்குமிடையே இலட்சியத்திலோ கொள்கையிலோ வேறு வித்தியாசமில்லை.

---

* இந்த விஷயம் வெகு முக்கியமானது. கூட்டுமந்திரிச் சபைகளில் ஒத்துழைக்க ஹிந்து மகாசபை தயாராயிருந்ததைக் கண்டு முஸ்லிம்லீக் ஏமாந்து விடவில்லை. ஹிந்து மகாசபை, இவ்வாறு ஒத்துழைக்க விரும்பியதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. ஹிந்து மகாசபை, இத்தகைய ஒத்துழைப்பை விரும்பியிராவிட்டால், எந்த மாகாணத்திலும் அதற்கு அதிகாரம் ஏற்பட வழியே கிடையாது. ஒரு மாகாணத்தில் ஒரு சர்க்காரைத் தானாகவே அமைக்க ஹிந்து மகாசபைக்குச் சக்தி வந்துவிட்டதென்றால் முஸ்லிம் லீக்குக்கு அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொடுக்க காங்கிரஸ் திட்டவட்டமாக மறுத்து விட்டதுபோன்றே ஹிந்து மகா சபையும் மறுத்து விட்டிருக்கும்.

இப்போது ஸ்ரீ. காந்தியாரைப்பற்றி கவனிப்போம். 1924-ம் ஆண்டுமுதல் 1928-ம் ஆண்டுவரை ஸ்ரீ. காந்தியாருக்கு அக்ஞாதவாச காலமாக இருந்தது. இதன் இறுதியில் ஸ்ரீ. காந்தியார் ஹிந்து சமூகத்தின் பூரண தலைவரென்ற முறையில் வெளிவந்தார். அதற்குள் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே பூரணமுறிவு ஏற்பட்டு விட்டிருந்தது. 1930-ம் ஆண்டில், ஸ்ரீ. காந்தியார், தமது சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தபோது, அவர் தமது ஹிந்து சிஷ்யகோஷ்டிகளை மட்டுமே நம்பவேண்டியிருந்தது. முஸ்லிம்கள், ஒரு சமூகத்தினரென்ற முறையில் ஒரே கட்டுப்பாடாக தூரவிலகி நின்றுவிட்டனர். *இதற்கிடையில் காங்கிரஸும் ஸ்ரீ. காந்தியாரின் பாட்டுக்குத் தாளம்போடும் ஸ்தாபனமாக ஆகிவிட்டது. ஸ்ரீ காந்தியாரோவெனில், முஸ்லிம்கள்மீது ஏகாதிபத்தியப் போக்கைக் கையாள முனைந்துவிட்டார். 1930—31—ம் வருஷத்திய மாரிக்காலத்தில் முதல் வட்டமேஜை மகாநாடு நடைபெற்றது. ஹிந்து—முஸ்லிம் சமரஸம் அவசியம் ஏற்படவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. கராச்சியில்

---

* இந்த சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தின்போதுதான், காங்கிரஸ், முஸ்லிம்களுக்கு விரோதமான மிக ஆட்சேபகர கோஷங்களை எழுப்பியது. இந்த இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னுள்ள ஐந்து வருஷங்களில் பயங்கரச் செயல்கள் அதிகமாயின. பண்டித மாளவியாவின் தலைமையின்கீழ் ஹிந்துக்கள், முஸ்லிம்களை நடுங்கச் செய்தனர். இரு சமூகத்தாரிடையேயும் ஏற்கெனவே போதுமான விரோத உணர்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. இதற்குப் பின், முஸ்லிம்கள்மீது காங்கிரஸால் அள்ளி வீசப்பட்ட துவேஷமய, ஆட்சேபகர எதிர்ப்புக் கோஷங்கள், (எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல) ஹிந்து-முஸ்லிம் விரோதத்திற்குத் தூபம் போட்டன.

நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் ஸ்ரீ. காந்தியார் முஸ்லிம்களுக்கு ஒரு 'பிளாங் செக்' (வெற்று செக்) விடுத்தார். ஆனால், அதில் கையொப்பமிடுவதற்கு முன்பே, அவர் அதைத் தமது பையில் போட்டுக் கொண்டார். அவர் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன், இரு சமூகத்தினரையும் ஓர் உடன்பாட்டுக்குக் கொண்டுவா ஒரு முயற்சி செய்யப்பட்டது. ஆனால், ஸ்ரீ. காந்தியார், ஏகமனதான ஒற்றுமை ஏற்பட வேண்டுமெனக்கூறி இந்த முயற்சியைத் தகர்த்துவிட்டார். "முஸ்லிம்கள் ஏகமனதான கோரிக்கையோடு வரட்டும்" என்று அவர் கூறி, விரல் விட்டெண்ணிவிடக் கூடிய அற்ப தொகையினரான "தேசீய முஸ்லிம்களை"ச் சுட்டிக் காட்டினர். அவர்கள் தமது கூற்றுக்குத் தாளம் போடுபவர்களென்பதையும், முஸ்லிம்களுடன் ஒருநாளும் ஒத்துப்போக மாட்டார்களென்பதையும் ஸ்ரீ. காந்தியார் தெளிவாக உணர்ந்திருந்தார். 1939-ம் ஆண்டில் காங்கிரஸ், சர்க்கார் பதவிகளைத் துறக்கும்வரை அடிக்கடி இந்தப் பழைய பல்லவியே திருப்பித் திருப்பி கூறப்பட்டது.

ஏகமனதான கோரிக்கை என்ற கோட்பாடு, முஸ்லிம்களைப் பிரித்தாள்வதற்காகப் பிரயோகிக்கப்பட்ட ஒரு ஏகாதிபத்திய ஆயுதம். ஏனெனில் ஒரு சில முஸ்லிம்களை விலைக்கு வாங்கி, எந்த விதமான கோரிக்கைகளையும் எப்போதும் தட்டிக் கழிப்பது சாத்தியமாக இருந்தது. இந்தியா, பிரிட்டிஷ் சர்க்கார்முன் ஏதேனும் சுதந்திரக் கோரிக்கையைச் சமர்ப்பித்தால், பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு ஏகமனதான கோரிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பதிலளிப்பது வழக்கமாகி விட்டது. இவ்வித ஏகமனதான ஒற்றுமை

எப்போதும் ஏற்படாதென்பதைப் பிரிட்டிஷ் சர்க்கார் தெளிவாக உணர்ந்திருந்தனர். எப்போதேனும் இருசமூகத்தினரும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதாகத் தோன்றினால், அதைத் தகர்த்துவிட ஏதாவது புதிய வழிகள் கண்டு பிடிக்கப்பட்டுவிடும். இதற்கு ஒரு உதாரணம் கூறுவோம். "இந்தியர்கள் ஏகமனதான அரசியல் ஒன்றைச் சமர்ப்பித்தால், பிரிட்டிஷ் சர்க்கார் அதை ஒப்புக் கொள்வர்" என்று இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி 1940-ம் ஆண்டில் கூறினார். மிஸ்டர் அமெரியின் கூற்று நியாயமாகவே இருந்தது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றுபடாமல் அடியோடு வெவ்வேறு கோரிக்கைகளையும், அபிலாஷைகளையும் கொண்டவர்களாயிருந்தனர். உண்மை இவ்வாறிருக்க மிஸ்டர் அமெரியின் கூற்றை ஹிந்துப் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான காங்கிரஸ் நிராகரித்து, அவரது கூற்று ஏகாதிபத்தியப் பிரித்தாளும் கூற்றாக இருப்பதாகக் கூறியது. ஸ்ரீ. காந்தியார் கோரிய, முஸ்லிம்களிடையே ஏகமனதான ஒற்றுமையோவெனில் நேர்மையற்றதாயிருந்தது. ஏனெனில், அவரது சொந்தப் பாட்டிற்கு தாளம்போடும் ஒருசில "தேசீய முஸ்லிம்களை"த் தவிர்த்து, ஏனையோரெல்லாம் ஏகமனதுடையவர்களே யென்பதை அவர் அறிவார். உண்மையில், இக்கூற்று முஸ்லிம்களிடையே பிளவேற்படுத்த செய்யப்பட்ட ஒரு சூழ்ச்சி. இதையே பின்னால், காங்கிரஸ் சர்க்கார்களும் கையாண்டு வந்தனர்.

1935-ம் ஆண்டில் அரசியல் சட்டம் நிறைவேற்றப் பட்டது. முஸ்லிம்கள் தனித் தொகுதி தேர்தல் முறையைப் பெற்றனர். அரசியல் சட்டத்தின் மாகாண சுயாட்சிப்பகுதி 1937-ம் ஆண்டில் அமுலுக்கு வந்தது. அந்த வருஷத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. அதற்கு

முந்திய வருஷத்தில் புதிய அரசியலை நடத்தி வைப்பதில் காங்கிரஸுடன் ஒத்துழைப்பதென்று முஸ்லிம் லீக் தீர்மானம் செய்தது. வாழ்நாள் முழுவதும் உண்மை தேசிய வாதியாகவே இருந்துவரும் முஸ்லிம் லீக் தலைவர் ஜனப் ஜின்னு அவர்கள், காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய இரு ஸ்தாபனங்களின் இலட்சியங்களும் ஒன்ருகவே இருப்பதை முன்னிட்டு, தேர்தல்களில் முஸ்லிம் லீக்கைக் காங்கிரஸ் எதிர்த்து நிற்காதென எதிர்பார்த்தார். ஆனுல் காங்கிரஸோவெனில், எதிர்ப்பு முறைகளைக் கையாண்டு முஸ்லிம் லீக்குக்கு எதிராக அபேட்சகர்களை நிறுத்தியது. இது ஜனப் ஜின்னு அவர்களின் கண்களைத் திறந்துவிட்டது. அவர் உடனே இதை ஆட்சேபித்தார். காங்கிரஸும், முஸ்லிம் லீக்கும் ஒரே இலட்சியங்களைக் கொண்டவைகளாகவும், ஒரே வேலைத் திட்டத்தைக் கொண்டவைகளாகவுமிருந்தால் முஸ்லிம் லீக்கைக் காங்கிரஸ் எதிர்க்கக் கூடாதெனக் கூறினுர் அவர். ஆனுல், அப்போது காங்கிரஸ் தலைவராயிருந்த பண்டித ஜவர்ஹர்லால் நேஹ்ரூ, நாட்டில் காங்கிரஸ், பிரிட்டிஷ்காரர் ஆகிய இரண்டு கட்சிகளே இருப்பதாகப் பதில் கூறினுர். நான் ஏற்கெனவே கூறிய படி காங்கிரஸ் அன்று, ஒரு சிலரைத் தவிர்த்து, பூரண ஹிந்து ஸ்தாபனமாகவே இருந்தது; இன்றும் அவ்வாறேதான் இருந்து வருகிறது. சில வாரங்களுக்குப்பின் முஸ்லிம் பொதுஜனத் தொடர்பு இயக்கத்தை ஆரம்பித்த போது பண்டித ஜவஹரே இந்த உண்மையை ஒப்புக் கொண்டார். முஸ்லிம்கள் ஒரு சமூகத்தினரென்ற முறையில் காங்கிரஸில் சேரவில்லையென்பதையும், காங்கிரஸுடன் அனுதாபம் கொள்ளவில்லையென்பதையும் நேருஜீ உணர்ந்துகொண்டார். உண்மை இவ்வாறிருப்பதால்,

பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரத்தைப்பெற ஹிந்துக்களே வாரிஸ் உரிமையுடையவர்களென்றும், முஸ்லிம்கள் உரு வற்றுப் போய்விடுவரென்றும் நேருஜீ கருதினர். இவ்வாறு முஸ்லிம்கள் அடியோடகற்றப்படுவதை ஏற்க ஜனுப் ஜின்னு அவர்கள் தயாராக இல்லை. இந்நாட்டில் இரு கட்சிகள் மட்டுமல்ல, முஸ்லிம்கள் என்ற மூன்றுவது கட்சியொன்று மிருப்பதாக அவர் கூறினர்.1 இதற்குப்பின் இவ்விஷயத் தில் காரசாரமான வாதங்கள் நடைபெற்றன. பல யாதங் கள்வரை இவ்விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. காங்கி ரஸ், அதுமுதல், தனது உயர்ந்த அந்தஸ்திலிருந்து கொஞ் சம், கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது என்றாலும், இன்றுவரைகூட ஜனுப் ஜின்னுவின் கோட்பாட்டை மட் டும் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரஸ் இதை ஒப்புக்கொள்ளும்வரை ஹிந்து—முஸ்லிம் பிரச்னை தீர்க்கப் படாமலேயே இருந்துவரும்.

1937-ம் ஆண்டில் தேர்தல்களில் காங்கிரஸ் அபார வெற்றி பெற்றது.2 காங்கிரஸின் அகம்பாவம் தலைக்கேறி

1. விவாதங்கள்பற்றி "டிரிபியூன்" எழுதியதாவது:—"காங்கி ரஸ் பிரிட்டிஷ் சர்க்கார் ஆகிய இரு கட்சிகளே இதற்குமுன் முஸ் லிம் சமூகத்தை "மூன்றுவது கட்சி"யாக நடத்தினவென்பதை எவரேனும் மறுக்க முடியுமா? லக்னேவில் காங்கிரஸ் முஸ்லிம் லீக்குடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டபோது அதைத் தனிப் பட்ட சுயேச்சைக் கட்சியெனக் கருதவில்லையா? அதற்குபின் முஸ்லிம் தலைவர்களுடன் காங்கிரஸ் நடத்திய சமரஸ சம்பாஷ ணைகளின்போது, அதையொரு தனிக்கட்சியாக மதிக்கவில் லையா?" (1937-ம் ஆண்டு மார்ச்சுமீ 16வ வெளியான "திட்ரூத்" பத்திரிகையில் கையாளப்பட்டது.)

2. காங்கிரஸின் வெற்றி ஹிந்துத் தொகுதிகளைப் பொறுத்த மட்டில்தான் ஏற்பட்டது. மொத்தம் 482 முஸ்லிம் ஸ்தானங்களில்

விட்டது. காங்கிரஸ் தலைவர்கள், தாங்கள் இப்போது பலம் பெற்று விட்டதாகவும், "மூன்றாவது கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு தங்களுக்கு தேவையில்லை" யென்றும் கூற ஆரம்பித்தனர். 1937-ம் ஆண்டு மார்ச்சு மீ 19-21 தேதிகளில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில், வகுப்புப் பிரச்னை சம்பந்தமாக காங்கிரஸின் எதிர்காலக் கொள்கையைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேஹ்ரு விளக்குகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—"நாம் நெடுங்காலமாக வகுப்புத் தலைவர்களிடம் சமரஸம் பேசி, ஒப்பந்தம் செய்து கொள்ளவே முயற்சித்து வந்தோமேயன்றி, அவர்களுக்கப் பாலுள்ள மக்களை நாம் கவனிக்கவேயில்லை. இது ஒரு தவறான கொள்கை. நாம் இதை மறைப்பதற்கில்லை. எனினும் ஒரு சிலர், முஸ்லிம்களும், ஹிந்துக்களும் தனிக் கோஷ்டியினரெனக் கருதுகின்றனர். நவயுகத்தில் இக் கோட்பாட்டுக்கு இடமில்லை."

காங்கிரஸ், இந்தக் கொள்கையின்படி முஸ்லிம்களின் எந்த கட்டுப்பாடான அரசியல் கட்சியையும் ஒப்புக் கொள்ளாமல், முஸ்லிம் லீக் கலைக்கப்பட்டு விடவேண்டுமென்றோ, அல்லது குறைந்த பட்சம் ஒரு அரசியல் ஸ்தாபனமாக நிலைத்திருக்கக் கூடாதென்றோ கோர ஆரம்பித்தது. முஸ்லிம்கள் காங்கிரஸில் ஒரு கட்டுப்பாடாகச் சேர்ந்து, அதைத் தங்கள் ஏக அரசியல் ஸ்தாபனமாகச் செய்து கொள்ள வேண்டுமென்றும் அது கூறியது.

---

காங்கிரஸ் 58 ஸ்தானங்களுக்கு மட்டுமே போட்டியிடத் துணிவு கொண்டது. இதில் 32 ஸ்தானங்களில் அது தோல்வியடைந்தது.

1923 முதல் 1927-ம் வருஷம்வரை இந்தியாவின் அரசியல் நிலைமையில் உலவிய வகுப்பு வேறுபாடுகளையும் அதற்குப் பின் ஏற்பட்ட காங்கிரஸின் செயல்களையும் நோக்குமிடத்து, இந்தக் கோரிக்கை அர்த்தமற்றதாகுமென்பது தெளிவாகிவிடும். சுமார் 15 ஆண்டுகளாக ஹிந்து மகாசபையின் மேடைகளில் இருந்து கிளம்பிய "ஹிந்து ராஜ்யக்" கூச்சலைக் கேட்டு அலுத்துப்போன முஸ்லிம்களுக்கு இந்த கோரிக்கை ஒரு ஏகாதிபத்தியக் கட்டளையைப் போன்று தோன்றியது. அதற்குப் பின் நடைபெற்ற சம்பவங்கள், முஸ்லிம்களின் அச்சம் நியாயமானது தான் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

முஸ்லிம் பொதுஜனத் தொடர்பு இயக்கததைக் காங்கிரஸ ஆரம்பிக்காம லிருந்திருக்குமாயின், ஹிந்து முஸ்லிம் வேற்றுமை உணர்ச்சி இவ்வளவு தூரம் அதிகரித்திராது. முஸ்லிம் லீக் தலைவர்கள் பெரும்பாலும் நிலச்சுவான்தாரர்களான செல்வச் சீமான்களேயென்றும், முஸ்லிம் பொதுமக்களிடையே அவர்களுக்குத் தொடர்பே கிடையாதென்றும் காங்கிரஸ் பிரசாரகர்கள் வாதம் செய்தனர்; முற்றும் அவ்வாறே வாதிக்கின்றனர். இவ்வாதம் பொருத்தமற்றது. முஸ்லிம்கள், தாங்கள் விரும்பியபோது தங்கள் தலைவர்களை நிராகரித்து விடுவர்; ஆனல், இதனல், அவர்கள் காங்கிரஸில் சேர்ந்துவிட உடன்பட்டு விட மாட்டார்கள். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் தங்கள் வகுப்பு மனோபாவங்களைத் தூர வீசி எறிந்துவிட்டு, தனிப்பட்டவர்கள் என்ற முறையில் காங்கிரஸில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் கூறிய கூற்று ஒரளவுக்கு 1937 மார்ச்சிலோ அல்லது அதற்கு முன்னரோ நியாயமாக இருக்கலாம்.

ஆனால், காங்கிரஸில் சேருவோர், அதனைத் தங்கள் ஏக அரசியல் ஸ்தாபனமாகச் செய்துகொள்ள வேண்டுமென்ற கோரிக்கை (காங்கிரஸால் விடுக்கப்பட்டது) முஸ்லிம் களுக்காக மட்டுமே கூறப்பட்டதாகும். காங்கிரஸிலும் ஹிந்து மகாசபையிலும் உடனே அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிடக்கூடிய ஹிந்துக்களுக்கு அது கூறப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் எங் தெந்த ஸ்தானங்கள் வகிக்க வேண்டுமென்பதை இது வேறுபடுத்திக் காட்டியது. ஹிந்துக்கள் ஒரு சமுதாயத் தினராகவும், முஸ்லிம்கள் அவர்களை நம்பி வாழும் ஓர் இனத்தவர்களாகவும் இருப்பரென்பதை இது தெளி வாக்கிவிட்டது. இந்தியாவில் எத்தகைய தேசியம் புகுத் தப்பட்டபோதிலும் சரி, ஹிந்துக்களின் கலாசார வாழ்வு சமூகப் பழக்கங்கள், ஜாதியபிமானம், உயர்ஜாதி-தாழ்ந்த ஜாதி-தீண்டப்படாதார் என்ற வேறுபாடுகள் முதலியவை யெல்லாம் அவர்களைத் தனி அரசியல் கோஷ்டியாகவே ஒதுக்கி வைத்துவிட்டது. ஹிந்துக்கள், இதர எந்த மக்க ளுடனும் சேர்ந்து வாழாமல் தடுக்கும் சுவர் இதுதான். ஆனால் இந்திய முஸ்லிம்களுக்கோவெனில், ஜாதியபிமான மென்பதே கிடையாது. பண்டித ஜவஹர்லால் விரும்பிய படி முஸ்லிம்கள் தங்களுக்கென ஒரு தனி அரசியல் ஸ்தா பனம் வைத்துக்கொள்ளாமல் எல்லோரும் காங்கிரஸில் சேர்ந்திருப்பாராயின், அவர்கள் அடியோடு எவ்வித அதி காரமும் அற்றவர்களாய், சுரண்டலுக்கும், அடிமைத் தனத்திற்கும் இலக்காகி விட்டிருப்பர். கட்டுப்பாடான அரசியல் ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களா யிருப்பதன் மூலமே தனிப்பட்ட நபர்கள் கௌரவமாக வாழ முடியும். இவ்வித கட்டுப்பாடான ஸ்தாபனமின்றி, தனிப்பட்டோர்

பலமில்லாதவராயிருப்பராயின், அவர்கள் கால்நடைகள் போன்று கண்டவர்களால் எல்லாம் மேய்க்கப்படக் கூடியவர்களாகவே இருப்பர். முஸ்லிம்களை இந்த நிலைமைக்குள்ளாக்குவதுதான் முஸ்லிம் பொதுஜனத் தொடர்பு (மாஸ் காண்டாக்ட்) இயக்கம். ஹிந்து ராஜ்யத்தை ஏற்படுத்தி, முஸ்லிம்களை அடிமைப்படுத்தும் திட்டம்தான் முஸ்லிம் பொதுஜனத் தொடர்பு (மாஸ் காண்டாக்ட்) இயக்கம் என்பது.

ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீஹார், ஒரிஸ்ஸா, பம்பாய், சென்னை ஆகிய ஆறு மாகாணங்களில் காங்கிரசுக்கு (பொதுத் தேர்தல்களில்) பெரும்பான்மை கிடைத்துவிட்டது. மாகாண கவர்னர்கள், சிறுபான்மையினர் முதலிய விசேஷ நலன்களுடையோரைப் பாதுகாப்பதற்காகத் தங்களுக்குப் புதிய அரசியலின்படி கொடுக்கப்பட்ட விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிப்பதில்லையென வாக்களிக்க வேண்டுமெனக் காங்கிரஸ் ஒரு நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனை ஒப்புக்கொள்ளப்பட்டாலல்லாது மேற்கண்ட மாகாணங்களில் சர்க்கார் அமைக்க காங்கிரஸ் மறுத்தது. 1935-ம் ஆண்டு முதல் ஐரோப்பாவில் யுத்த மேகம் பரவ ஆரம்பித்தது. அந்த வருஷ வசந்த ருதுவின்போது இத்தாலி, அபிஸீனியாமீது படையெடுத்து, ஆறே மாதங்களில் நாடு முழுமையையும் ஆக்கிரமித்து விட்டது. 1936-ம் ஆண்டு கோடையில் ஸ்பெயினில், இத்தாலி, ஜெர்மன் நாடுகளின் இராணுவ உதவியைக் கொண்டு ஒரு பாஸிஸப் புரட்சி நடைபெற்றது. பிரிட்டன் இவ்விஷயத்தில் தலையிட்டால் மத்தியதரைக் கடலில் உள்ள பிரிட்டிஷ் கடற்படையை நிர்மூலப்படுத்தி விடுவதாக முஸோலினி பயமுறுத்தினர். ஹிட்லர், ரைன்

லாந்தைக் கைப்பற்றி, வெர்ஸேல்ஸ் ஒப்பந்ததத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார். எந்த நிமிஷத்திலும் ஐரோப்பாவில் யுத்தம் மூளக்கூடுமென்ற பயம் தோன்றிய சமயத்தில், இந்தியாவில் தொல்லைகளைத் தேடிக்கொள்ள இங்கிலாந்து விரும்பவில்லை. ஆதலால் காங்கிரஸின் நிபந்தனைக்கு அது இணங்கியது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக காங்கிரசுக்குச் சர்க்கார் சரணடைந்து, காங்கிரஸ் கோரியபடி வாக்குறுதியளித்தது. முஸ்லிம்கள், மீண்டும் மற்றொருமுறை அவர்களின் பிரிட்டிஷ் நண்பர்களால் துரோகம் செய்யப்பட்டனர். அம்பேத்கார் கூறிய ஒரு விஷயம் இங்கு கவனிக்கத்தக்கது. டாக்டர் அம்பேத்கார் கூறியதாவது:— *“மாகாண மந்திரிச் சபைகளில் சிறுபான்மைப் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்வதென வட்டமேஜை மகாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வாறே சட்டத்தில் ஒரு விதி புகுத்தப்பட வேண்டுமெனச் சிறுபான்மையினர் வற்புறுத்தினர். ஆனால், ஹிந்துக்களோ இவ்விஷயம் அந்தந்த நிலைமைக்கேற்ப வாய்மொழியாகத் தீர்க்கப்பட வேண்டுமெனக் கூறினர். இந்த இரண்டு யோசனைகளுக்கும் மத்தியஸ்தமாக ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டது. மாகாண கவர்னர்களுக்கான விதிகளில், மந்திரிச் சபைகளின் அமைப்பில் இந்த வாய்மொழியான வாக்குறுதி நிறைவேற்றப்படுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தனி விதியும் புகுத்தப்பட்டது. முஸ்லிம்கள், அந்த சமயத்தில் ஹிந்துக்களின் நல்லெண்ணத்தை நம்பினராதலால் இந்த விதி சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென மேலும் நிர்ப்பந்திக்கவில்லை” இந்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கப்பட்டது.

---

* “பாகிஸ்தான் பற்றிய நினைவுகள்”, பக்கம்: 38.

கவர்னர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகார விதிகளில் பின் கண்ட விதியும் காணப்பட்டது:—"நமது கவர்னர், தனது மந்திரிச் சபை நியமனங்களைச் செய்வதில் பின்கண்ட முறையில் மந்திரிகளைப் பொறுக்கி எடுக்க தன்னால் சாத்தியமான அளவு முயலவேண்டும். அதாவது, சட்டசபையில் அதிகப் பெரும்பான்மை வகிக்கக்கூடிய கட்சியின் தலைவரைக் கலந்தாலோசித்துக்கொண்டு, (முக்கிய சிறுபான்மை சமூகத்தினர் உட்பட) சட்டசபையின் நம்பிக்கையைப் பெறக்கூடியவர்களை மந்திரி சபைக்குக் கவர்னர்கள் நியமிக்க வேண்டும்." இந்த விதியை வட்டமேஜை மகாநாட்டு விவாத விஷயங்களுடன் சேர்த்துப் பாருங்கள். மந்திரிச் சபைகளில் முஸ்லிம்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதும், தங்கள் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் மட்டுமே மந்திரிச் சபைகளில் சேர்க்கப்பட வேண்டுமென்பதுமே அந்த விதியின் அர்த்தமெனத் தெளிவாகிவிடும். ஆனால், அந்த விதியின் அமைப்பு திட்டமாக இல்லாததால், காங்கிரஸ் சர்க்கார் பொறுப்புகளை ஏற்றவுடன் தங்கள் மந்திரிச் சபைகளில் முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்வதற்கில்லையென அறிவித்துவிட்டது. இதன்படி ஒரிஸ்ஸா மந்திரி சபையில் முஸ்லிம் அங்கத்தினரே இல்லாமற் போய்விட்டது. மத்திய மாகாண மந்திரிச் சபையில் இருந்த முஸ்லிம் மந்திரியையும் ஒழித்துவிட ஒரு சந்தர்ப்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாவதாக: முஸ்லிம்கள், தங்கள் கட்சிகளை விட்டு ராஜிநாமா செய்து காங்கிரசின் பிரமாணப்பத்திரத்தில் கையொப்பமிட்டால் தனது மந்திரிச் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவரெனக் காங்கிரஸ் கூறியது. ஏகாதிபத்தியம், மக்களை விலைக்கு வாங்கி பொதுமக்களிடையே பிரிவுகளை ஏற்படுத்தும் வழி

இதுதான். தங்களை விற்றுக்கொள்ளும் மனிதர்களும் இல்லாமற் போகவில்லை. இவ்வாறு விலைக்கு வாங்கப் பட்ட மனிதர்களை சமூகத்தின் பிரதிநிதிகள் எனக் கூற முடியாது. ஏனெனில், சட்டசபைகளில் அத்தகையவர் களைப் பின்பற்றுவோர் எவருமில்லாதிருப்பர், அல்லது சொற்ப பேர்களே ஆதரவளிப்பர். ஏகாதிபத்திய வல்லர சால் நியமிக்கப்படும் ஒரு இந்தியன், இந்திய மக்களின் பிரதிநிதியாக அல்லாமல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டாக ஆகிவிடுவான். அதுபோன்றே காங்கிரஸால் நிய மிக்கப்பட்ட முஸ்லிம் மந்திரிகளும் காங்கிரஸ் ஏகாதிபத் தியத்தின் கருவியாக ஆகிவிட்டனர்; மேற்கண்ட விதியைப் பற்றியும் காங்கிரஸின் அறிக்கைபற்றியும் டாக்டர் அம்பேத்கார் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-"காங்கிரஸ் அனுசரித்த போக்கு இந்த விதிக்கு நேர்மாறானது. நாட் டின் இதர கட்சிகளையெல்லாம் நிர்மூலமாக்கி காங்கிரஸை நாட்டின் ஒரே அரசியல் கட்சியாகச் செய்வதற்கே, இந்த முறை கையாளப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிடுமாறு கோரப்படுவதற்கு இதை தவிர வேறு நோக்கமொன்றும் இருக்க முடியாது. ஒரு ஏகாதிபத்திய யதேச்சாதிகார அரசாங்கத்தை நிறுவ செய்யப்படும் இம்முயற்சியை ஹிந்துக்கள் ஒருக்கால் வர வேற்கலாம். ஆனல், இது சுதந்திர மக்களென்ற முறை யில் முஸ்லிம்களை அரசியலில் சாகடிப்பதாகும்."

முஸ்லிம் லீக்குடன் ஒத்துழைக்க காங்கிரஸ் மறுத் தது; எந்த முஸ்லிம் கட்சியுடனும் சேர்ந்து வேலைசெய்ய அது விரும்பவில்லை. தன் சுயநலக் காரியங்களுக்காக இங்குமங்குமாக ஒருசில தனிப்பட்ட நபர்களை அது விலைக்கு வாங்கியது. தவிர, உறுதிமொழிப் பத்திரத்தில்

கையொப்பமிட்டு, தனது சாம்ராஜ்யத்தை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்களை மட்டுமே தனது மந்திரிச் சபைகளில் சேர்த்துக்கொண்டது. இத்தகைய காரியங்களெல்லாம் திடீரென்று முஸ்லிம்களை அடிமை மக்களாகமாற்றி, ஹிந்துக்களை ஆளும் ஜாதியாராகச் செய்துவிட்டது. காங்கிரஸின் ஆட்சி நன்றாக இருந்ததோ, கெட்டதாக இருந்ததோ, அல்லது மாறுபட்டதாக இருந்ததோ அதைப்பற்றி இங்கு கூறுவது அவசியமில்லை. ஏனெனில் ஒரு நல்ல சர்க்கார், சுயாட்சி சர்க்காராக ஆகிவிட முடியாது. நல்ல சர்க்கார் ஏற்படுவதொன்றே இந்தியாவுக்குப் போதுமானதாயிருந்தால், எந்த இந்திய அரசியல் கட்சியும் சுய ஆட்சியையோ சுயராஜ்யத்தையோ கோருவதில் நியாயம் எதுவுமில்லை. தேசிய விடுதலையும், சுய அரசாதிபத்தியமும் நன்மை பொருந்தியவைகளே. இதற்குப் பதில் வேறு நல்ல சர்க்கார் ஏற்படுவது பொருத்தமற்றது. காங்கிரஸ் அல்லது ஹிந்துமகா சபையால் நிறுவப்படும் ஹிந்து ராஜ்யம், முஸ்லிம்களுக்கு ஒரு நல்ல சர்க்காராக இருக்கக்கூடுமேயன்றி சுயாட்சி சர்க்காராக ஆகிவிட முடியாது.

ஆனால், காங்கிரஸின் ஆட்சியோவெனில், முஸ்லிம்களுக்கு அநீதியாகவும், அடக்குமுறை நிறைந்ததாகவுமே இருந்தது. காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தவுடன், தாங்கள் பெரும்பான்மையினராக இருக்கும் மாகாணங்களிலுள்ள ஹிந்துக்கள், ஹிந்து ராஜ்யம் வந்துவிட்டதாகவே கருதி, அவ்வாறே நடக்கவும் தலைப்பட்டுவிட்டனர் இவ்வுண்மையைப் பலமுறைகளில் பிரிட்டிஷார் மட்டுமின்றி ஹிந்துக்களும் ஒப்புக்கொண்டனர். இதுமட்டுமல்ல; காங்கிரஸ் மந்திரி சபைகள் ஹிந்துக்களின் இவ்வுணர்ச்சியைத் தூண்டிவிட்டன. காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற

மாகாணங்களிலுள்ள ஜில்லா உத்திேயாகஸ்தர்கள், அந்தந்த ஸ்தல காங்கிரஸ் உத்திேயாகஸ்தர்களை (இவர்களனைவரும் ஹிந்துக்கள் தாமென்பதைக் கூறவேண்டுவதில்லை)க் கலந்துகொண்டே நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

எல்லா சர்க்கார் கட்டிடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் காங்கிரஸ் கொடி பறக்க விடப்பட வேண்டுமென காங்கிரஸ் மந்திரிகள் சுற்றறிக்கை அனுப்பினர். அநேக மந்திரிகள், ஏதேனும் முகாந்திரங்களும், சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக்கொண்டு கிராமாந்தரங்களில் காங்கிரஸ் கொடியை பறக்க விடுவதற்காக மாகாணமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தனர். முஸ்லிம்கள் மீது துவேஷமும், ஹிந்து ஆதிக்க வேகமும் அடங்கி வந்தேமாதரப் பாடலை எல்லாப் பொது விழாக்களிலும், விசேஷங்களிலும் பாடவேண்டுமென அவர்கள் உத்திரவிட்டனர்; அல்லது அனுமதித்தனர். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற மாகாணங்கள் சிலவற்றின் அசெம்பிளிச் (சட்ட) சபைகளில்கூட வந்தேமாதரப் பாடல்களுடன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வங்கமாஜி பிரதம மந்திரி ஜனாப் பஜ்லுல் ஹக் பின்வருமாறு கூறியிருக்கிறார்:- "காங்கிரஸ் கையாண்ட இவ்விதக் கொள்கை ஹிந்துப் பொதுமக்களை பெரும் அபாயச் செயல்களில் இறங்கவும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களை தவறான வழியில் நடக்கவும் செய்துவிட்டது. தங்கள் 'ராஜ்யம்' ஏற்பட்டுவிட்டதென்றும், தங்கள் விருப்பப்படியே இப்போது காரியங்கள் நடைபெற வேண்டுமென்றும் ஹிந்துக்கள் கருதினர். சர்க்கார் உத்தியோகஸ்தர்களோவெனில், தங்கள் புதிய எஜமானர்களை (மந்திரிச் சபையினரை)ப் பின்பற்றி, காங்கிரஸ் கமிட்டிகளின் உத்தி

யோகஸ்தர்களான மந்திரிச் சபையின் ஸ்தல ஏஜண்டுகளிடம் நல்ல பிள்ளைகளாக நடப்பதன் மூலமே தங்கள் ஜீவனத்தை நிலைத்திருக்குமாறு செய்ய முடியுமென்பதை உணர்ந்தனர். இதுகாறும் எந்த சர்க்காரிலும் நடைபெறாத முறையில் இராணுவமய ஹிந்துக்கள் இவ்வாறுதான் கட்டவிழ்த்துவிடப்பட்டனர். காங்கிரஸாரும், ஹிந்துமகா சபையினரும் ஒவ்வொரு நகர்களிலும், கிராமங்களிலும், தாசீல்களிலும், தாலுக்காக்களிலும் வந்தேமாதரப்பாடலின் உணர்ச்சியை அதன் ஆசிரியர் வரைந்த இலட்சியம் குன்றாமல் அப்படியே கையாண்டனர்.''

தொடர்ந்த அடக்கு முறைகள் மூலம் ஒரு மக்களை ஒரு சமுதாயமாக்கும் உணர்ச்சியை நாசமாக்கி விடலாமென்றும், ஒருமுறை இந்த உணர்ச்சி நசுக்கப்பட்டு விட்டால், உணர்ச்சி ஒழிந்த மக்களை அடிமைகளாக, அடக்கி, ஒடுக்கி, நசுக்கி எவ்வித புரட்சி பயமும், ஆட்சேப எதிர்ப்பு அபாயமுமில்லாமல் அடிமைப் படுத்தி, பூமியின் கீழ் ஆழ்த்திவிடலாமென்றும் இந்த புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறேன். (பக்கம் 23 பார்க்க) காங்கிரஸ் சர்க்கார்களின் கீழ் ஹிந்துக்கள் முஸ்லிமகளை இவ்வாறு செய்யவே முயன்றார்கள். 1929-ம் ஆண்டில் கூறப்பட்ட முன்னறிவிப்பு ஒரு பழிக்குப் பழியுடன் நிறைவேறியது 1923-27-ம் ஆண்டுகளில் பண்டித மாளவியா அதிதீவிரமாக நடத்திய முஸ்லிம்களை பயமுறுத்தும் பயங்கர இயக்கமும், கலவரங்களும் மீண்டும் ஆரம்பமாகிவிட்டன. எல்லாக் கட்டுப்பாடுகளும் மறைந்துவிட்டதாகவும், ஹிந்து ராஜ்யம் நேரடியாக ஏற்பட்டுவிட்டது போலவும் காணப்பட்டது. ஜனாப் பஸ்லுல் ஹக கூறுவதாவது :— *“இ

* “காங்கிரஸ் ஆட்சியில் முஸ்லிம் அவதி” என்ற புத்தகம்.

தியாவில் சில மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற குறுகிய இரண்டரை ஆண்டு காலத்தில் நடைபெற்றதைப் போன்ற அத்துணை உயிர், பொருள் சேதம் விளைவிக்கக்கூடிய கலவரங்கள் அதற்குமுன் இந்தியாவின் சரித்திரத்திலேயே நடைபெற்றது கிடையாது.'' ஜனாப் பஸ்லுல் ஹக், அக்காலத்தில் நடைபெற்ற கொள்ளை, தீ மூட்டல், தாக்குதல்கள், படுகொலை, பயமுறுத்தல் முதலியவைகளடங்கிய 150 சம்பவங்களின் ஜாபிதாவைக் கொடுத்திருக்கிறார். இதுவும் பூர்த்தியானதல்ல. இந்த சம்பவங்களின் சுருக்கத்தை வரையவும் இவ்வேடு இடந்தராது. சம்பவ விவரங்களை அறிந்துகொள்ள விரும்புவோர், ஷரீப் யாதாஸ்து இரண்டு பாகங்களில் காணலாம். ஜனாப் ஹக் விடுத்த அறிக்கை அடங்கிய இந்த யாதாஸ்து அ. இ. முஸ்லிம் லீக்கால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதுவன்றி ஜனாப் கே. எஸ். அப்துர் ரஹ்மான்கான் யாதாஸ்திலும் இவ்விவரங்களைக் காணலாம். நான் இங்கே கூற சாத்தியமாயிருப்பதெல்லாம் இதுதான். காங்கிரஸ் சர்க்கார்கள், ஹிந்துக்களின் பலாத்கார அடாச்செயல்களுக்குரிய விளைவுகளை அவர்கள் அனுபவிக்காமல் தடுக்கவும், துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்கப்படாமலும், பிரஜா உரிமைகள் அளிக்கப்படாமலும் மறுக்கவும் முற்பட்டனர் காங்கிரஸ் சர்க்கார்கள் இதற்காகக் கையாண்ட முறைகளைப்பற்றி ஜனாப் ஹக் பின் வருமாறு அறிவித்திருக்கிறார்:—“காங்கிரஸ் சர்க்கார்கள் இரண்டுவித முறைகளைக் கையாண்டனர். (1) ஒரு பிரதேசத்திய முஸ்லிம்கள் நசுக்கப்பட்டபின் காங்கிரஸ் சர்க்கார்களின் ஸ்தல உத்தியோகஸ்தர்கள், குறிப்பாகப் போலீசார், 'ஒரு சமரஸம்' செய்துவைக்குமாறு அனுமதிக்கப்பட்டனர்.

முஸ்லிம்கள், 'தாங்களாகவே' பசு மாமிசம் உண்பதில்லை யென்றும், குர்பானி செய்வதில்லையென்றும் வாக்களிக்க வேண்டும்; அல்லது அவர்கள், தங்களுக்கே தெரியாத குற்றங்களுக்காக மன்னிப்புக் கோரவேண்டும். இதுதான் 'சமரஸ' நிபந்தனையாக இருந்தது. (2) கைதுகள் செய்யப்படுவதிலும், சோதனையிடுவதிலும் தாமதம் காட்டப் போலீசார் அனுமதிக்கப்பட்டனர். முஸ்லிம்கள் மீது துன்புறுத்தப்பட்ட விஷயம் மறுக்கப்பட முடியாதெனினும் இத்தாமதத்தால் பல வழக்குகளில் குற்றவாளிகளைக் கைது செய்து தண்டனை விதிக்கப் போதுமான சாட்சியங்கள் இல்லாது போய்விட்டன." கலவர வரலாறுகளைப் படிப்போர், இவ்வித சமரஸங்களையும், கஷ்டமனுபவித்த முஸ்லிம்கள் போலீசாரால் கைது செயயப்பட்டு, துன்புறுத்தப்பட்டும், ஹிந்துக்கள் ஒன்றும் செய்யப்படாமலும் போய்விட்டதையும், முஸ்லிம் பிராந்தியங்களில் தண்டப் போலீஸும், ஹிந்துக்களின் பிராந்தியத்தில் சுதந்தரமும் நிலவியதையும் கவனிக்காமலிருக்க மாட்டார்கள். மாஜிஸ்திரேட்டுகள், சர்க்கார்களின் சொற்படி நடவாவிட்டால் எங்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டு விடுவோமோ அல்லது மாற்றப்பட்டு விடுவோமோ என்ற பயத்துடன் கடனாற்ற வேண்டி நேரிட்டது. இதைப்பற்றி ஒரு பிரிட்டிஷ் எழுத்தாளர் "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையில் (1939ஹு—தேதி ஞாபகமில்லை) வரைந்துள்ள கட்டுரையொன்றில், காங்கிரஸ் சர்க்காரின் இவ்விதப் போக்கைப்பற்றி விவரித்துவிட்டு, மாஜிஸ்திரேட்டுகள், சுயேச்சையாகவும், நல்லெண்ணத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமானல், மாஜிஸ்திரேட்டுகளை டிஸ்மிஸ் செய்யும் பொறுப்பும், மாற்றல் செய்யும் பொறுப்பும் மாகாண சர்க்கார்களிடமிருந்து

அகற்றப்பட்டு உயர்தர நீதிமன்றத்தின்வசம் ஒப்புவிக்கப் பட வேண்டுமெனக் கூறியிருக்கிறார்.

இங்கு உதாரணமாக ஒரே ஒரு வழக்கைமட்டும் கூற விரும்புகிறேன். அந்த வழக்கின் பெயர் சாண்டூர் பிஸ்வா கொலை வழக்கு. இந்த வழக்கு காங்கிரஸ் சர்க்கார்களின் மனோபாவத்தையும், முஸ்லிம்களை அவர்கள் நடத்திய முறைகளையும் ஒருவாறு தெளிவாக்குகிறது. சாண்டூர் பிஸ்வா என்பது பிராரில் ஒரு சிறிய கிராமம். அங்கு ஹிந்து-முஸ்லிம் கலவரமொன்று நடைபெற்றது. ஹிந்துக் களும், முஸ்லிம்களும் படுகாயமுண்டனர்; ஒரு ஹிந்து உயிரிழந்தார். இதைப்பற்றி விசாரணை ஒன்றும் நடை பெறுமுன்பே மாகாண அசெம்பிளிச் சபையில் கலவரம் பற்றி விவாதம் நடைபெற்றது. விவாதத்தின்போது இது ஒரு கலவரமல்லவென்றும், முன்னேற்பாட்டுடன் நடை பெற்ற படுகொலையென்றும் காங்கிரஸ் பிரதமர் கூறினார். கிராமத்திலுள்ள அத்தனை முஸ்லிம் பொது மக்களும் குற்றவாளிகளே என்று அவர் சொன்னார். இதற்கிணங்க எல்லா முஸ்லிம் ஆண்களும்—சிறுவர், வயோதிகர், நோயாளிகள் உட்பட அனைவரும்—கைது செய்யப்பட்டு, சிறையில் தள்ளி துன்புறுத்தப்பட்டனர். "கிராமத்தில் புகுந்து சோதனையிட்டு முஸ்லிம்களைக் கைது செய்தபோது போலீஸார் செய்த அட்டூழியங்கள் அபரிமிதமானவை" என்று ஜனாப் ஹக் கூறுகிறார் இறுதியாக 43 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. ஒரு கலவரத்தில் உயிரிழந்த தனியொரு ஹிந்துவுக்காக 6 பேர் மரண தண்டனையும், 24 பேர் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டனர்; 13 பேர் விடுதலை செய்யப்பட்டனர். ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றத்தினர் வழக்கின் விவ

ரங்களைத் தீர விசாரித்தபின், பிராஸிகியூஷன் தரப்பு சாட்சியங்கள் எல்லாம் பொய்யெனக் கூறி, எல்லோரையும் விடுதலை செய்தனர். தீர்ப்பின்போது பிரதம நீதிபதி பின் வருமாறு கூறினர் :—

"இது ஒரு சிக்கலான வழக்கு. இவ்வழக்கில் 43 பேர்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. வரிசையாக சாட்சியங்கள் கூறியவர்கள் எல்லாம், நன்ருகக் கற்றுக் கொடுக்கப்பட்ட பொய் சாட்சிகளாகவே இருந்தனர். சாட்சி கூறியவர்களில் 7 பேர் பொய் சாட்சியம் கற்றுக் கொடுக்கப்பட்ட சின்னஞ்சிறு பாலர்களாவர். இவ்வித வழக்கில் பொய் சாட்சி கூறுவதானது, சாட்சிகள் தாங்கள் செய்வதின்னதென்றே தெரியாமல், ஒரு உயிருக்கு உலை வைப்பதாகும், சிறு குழந்தைகளின் போதனைக் கூற்றுகளின் உதவியால் ஒருவருடைய எதிரியைக் கொல்ல முயற்சிப்பதை விட இழிவான மனிதச் செயல் வேறொன்றுமில்லை." உயர் நீதிமன்றம், தனது தீர்ப்பில் பின்கண்டவாறு குறிப்பிட்டது:—"இந்த வழக்கு ஒரு கட்டுக்கதை என்பதற்குப்போதிய காரணங்களிருக்கின்றன. (எதிரிகளில் ஒருவரான) இக்ராமுத்தீன், முஸ்லிம்களின் தலைவராவர். ஆதலால் அவரது உயிரை வாங்கிவிடுவதற்காக ஒரு பொய்க் கதையைத் தயாரித்து சாட்சியமாகக் கூற ஐந்து முக்கிய சாட்சிகள் முன் வந்தனர்........இதுமட்டும் கொலை வழக்காக இல்லாமலிருந்தால் இந்த சாட்சியங்களெல்லாம் வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கும். இந்த சதிச்செயலால் 6 பேர் தூக்குத் தண்டனையும், 24 பேர் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டனர்........இந்த வழக்கு, தாங்கள் எத்தனை பெயரைத் தூக்குக்கு அனுப்ப முடியுமென்பதற்குச் சாட்சிகளிடையே பந்தயம் நடைபெறும் ஒரு திரு

விழாவாகும். உண்மை, கௌரவம், மனித உயிரின் மதிப்பு, சாட்சி மேடையில் செய்யப்படும் சத்தியம் ஆகியவையெல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன...........இந்த சாட்சிகள் எல்லாம், ஒவ்வொரு முஸ்லிமின் மீதும், அவன் முஸ்லிம் என்ற காரணத்தை முன்னிட்டு அவனை ஒழித்துவிடுவதற்கே கூறப்பட்டன.''

உயர்நீதிமன்றத் தீர்ப்பு, நாட்டு மக்களைத் திடுக்கிடச் செய்துவிட்டிருக்கும். ஆனால், உண்மையில் இது நாட்டு மக்களைத் திடுக்கிடச் செய்துவிடவில்லை. ஏனெனில், விளம்பர சாதனங்கள் எல்லாம் ஹிந்துக்கள் வசமே இருந்தன. மத்திய மாகாணப் பிரதமருக்கு கொஞ்சமாவது வெட்கமிருந்திருந்தால், அவர் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும்; அல்லது நாட்டின் நன்மையை முன்னிட்டு அவர் பொதுவாழ்விலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏறக்குறைய தன் தண்டனையைப் பூரணமாக அனுபவித்த ஒரு கைதியை விடுதலை செய்ததற்காக ஜனாப் யூசுப் ஷரீப் (ஒரு மந்திரி) 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டார். நாட்டுப் பிரஜைகளின் உயிருக்கு உலைவைத்த இந்த சதிச்செயலுக்கு சமாதானங் கூறுமாறு காங்கிரஸ், பண்டித சுக்லாவைக் கேட்கவில்லை. ஹிந்துப் பத்திரிகைகளோ, ஹிந்துத் தலைவர்களோ இந்த சம்பவம்பற்றி ஒரு கண்டனவார்த்தை கூடச் சொல்லவில்லை. இவ்வளவிருந்தும் காங்கிரஸ் சர்வாதிகாரி காந்தியார் (பண்டித சுக்லாவின் போஷகர்) வானுலகத்தில் சஞ்சரித்துக்கொண்டு சத்தியம், அஹிம்ஸை அந்தராத்மா என்ற மந்திரங்களை முணுமுணுக்கினார். இவ்வித கபட நெஞ்சுடையவர்களிடம் எல்லாம்வல்ல இறைவன் ஒருக்காலும் பேசமாட்டானென்பது நிச்சயம். காந்தியாரின் அந்தராத்மா என்பது இதையல்லாத வேறென்

ருகவே யிருக்க வேண்டும். இத்துணை நீதியும், நன்மையும் வாய்ந்த சர்க்காரின் செயல்களைக் கண்ட இந்திய முஸ்லிம் கள், ஹிந்துக்களுக்கு அடிமையாக இருக்கும் நிலைமையை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

சர்க்காரின் ஆதரவுடனே அல்லது நேர்முக உதவி யுடனே நடைபெற்ற இக் கலவரங்களின் நோக்கம் முஸ்லிம்களின் கட்டுப் பாட்டைக் குலைத்து, பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் எத்தகைய பயத்தை எல்லா வகுப்பு இந்தியருக்கும் ஏற்படுத்த முயற்சித்ததோ, அத்தகைய பயத்தையே ஹிந்துக்கள் என்று கேட்டவுடன் முஸ்லிம்களி டையே ஏற்படுத்த வேண்டுமென்பதேயாகும். முஸ்லிம்கள் "அஸான்" (பாங்கு) கூறவும், பசுக்களைத் தங்கள் உணவுக்காகக் கொல்லவும் கூடாதெனத் தடை செய்யப் பட்டன. அவர்களின் மஸ்ஜிதுகளும், கப்ருகளும் அசுத்த மாக்கப்பட்டு சேதமாக்கப் பட்டன; இதற்கு நிவாரணம் ஒன்றும் காணப்படவில்லை, ஆனால், முஸ்லிம்களின் மத பக்தியை அடியோடொழிக்கவும், அவர்களின் கலாசார, சமூக ஒற்றுமையை நாசமாக்கவும், சமுதாயப் பெருமையை ஒழித்து, தாங்கள் ஒன்றுபட்ட மக்கள் என்ற உணர்ச்சியை சிதறடிப்பதற்காகவும் செய்யப் பட்ட முன்னேற்பாடான திட்டம் வார்தா கல்வித்திட்டமேயாகும். இந்தியாவின் எதிர் கால மத்திய காங்கிரஸ் சர்க்காரில் இக் கல்வித் திட்டத்தை எல்லோர்மீதும் கட்டாயமாகத்திணிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்முன் மாதிரியாக வித்யாமந்திரத் திட்டம் மாகாணத்தில் புகுத்தப்பட்டது. வார்தா கல்வித் திட்டப்படி காந்தியாரால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்தைத் தவிர இதர எல்லா மதங்களும் பள்ளிக் கூடத்

திலிருந்து விரட்டி யடிக்கப்படும். ஒவ்வொரு முஸ்லிமும், அவன் எங்கு இருப்பினும்சரி, நேர்முகமான கண்ணிய மளித்துப் போற்றி உபாசிக்கும் இஸ்லாத்தின் நபி (ஸல்) அவர்கள். அரேபியா நாட்டிற்குள்ளேயே அடைக்கப்பட்டுக் கிடக்குமாறு ஏற்பாடு செய்யப் பட்டது. அதாவது நாயகம் (ஸல்) அவர்கள் அரேபிய நாட்டுக்கு மட்டும் நபியென்று வரை யறுக்கப்பட்டு, கட்டுப்பாடுஏற்படுத்தப்பட இருந்தது. நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா முஸ்லிம்களாலும் பக்தி யும், அன்பும் செலுத்தப்பட வேண்டியவர்களாகவோ, அவர் இதுகாறும் கருதப்பட்டு வருவது போல் உலகபோதக ராகவோ, முஸ்லிம்களின் நம்பிக்கைப்படி இல்லாமல், அவர்கள் 7-ம் நூற்றூண்டின் அராபியவீரர் என்று மட்டுமே கருதப்பட வேண்டு மெனப் போதிக்கப்பட இருந்தது. பள்ளிக்கூட பாடங்களின் ஆரம்பப் பகுதிகளிலெல்லாம் இஸ்லாத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ள பாகங்கள் எல்லாம் அகற்றப்பட்டன. ஹிந்து தேசீயத்தை உறுதிப் படுத்தி, ஹிந்து மதத்துடன் கலக்க இயலாத ஹிந்துக்க ளல்லாத மக்களை யெல்லாம், இந் நாட்டின் தேசீய வாழ்வில் இடமளிக்கப்படாமல் விலக்கப்பட்டு தவிக்கும் சூத்திரர்களைப் போன்றே தனியே விலக்கி வைத்துவிடுவதே இக் கல்வித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக அமைந் துள்ளது.

மேற்கண்ட விவரங்களிலிருந்து, ஒரு ஹிந்து மகா சபை சர்க்கார், காங்கிரஸ் ரீதியான முறையில் வளர்ந் தோங்க முடியாதென்பது தெளிவாகிவிட்டது. காங்கிரசும், ஹிந்து மகா சபையும் இரண்டும் ஒரே ஹிந்து தேசீயத்திற் காகவும், ஹிந்து ராஜ்யத்திற்காகவும் போராடி வந்தன. காங்கிரஸ், கலப்பற்ற ஹிந்து ராஜ்யத்திற்காகவே போராடி

ஹிந்து இந்தியா முழுவதுடையவும் விஸ்வாசத்தையும், அபிமானத்தையும் பூரணமாகப் பெற்றுவிட்டது. ஹிந்து மகாசபைக்கப்பலின் பாய் மரத்திலிருந்த காற்றை காங்கிரஸ் அடியோடு அகற்றிவிட்டது. இதனால், காங்கிரஸ் அதிகாரத்திலிருக்கும் வரை ஹிந்து மகா சபை இந்திய அரசியல் ஒரு கட்சியாக இருந்த தோற்றம் மறைந்து விட்டது. ஏனெனில் ஹிந்து தேசியத்தையும், ஹிந்து சாம் ராஜ்யத்தையும் நிர்மாணிப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்த காரியங்களை யெல்லாம் காங்கிரஸே செய்துவிட்டது. காங்கிரஸ் ஸ்தாபனம் சன்னியாசம் வாங்கிக்கொண்டு, அதன் தலைவர்களெல்லாம் இரும்புக் கம்பிகளுக்குள் அடைக்கப் பட்ட பின்னர், ஹிந்து மகா சபை தலை தூக்க ஆரம்பித்து விட்டது.

காங்கிரஸ் விஷயத்தில் பல வருஷங்களாக இந்திய சர்க்கார் கையாண்டுவந்த விட்டுக் கொடுக்கும் கொள்கை முறையைக் கையாளுவதைக் கண்ட நம்மில் சிலர், யுத்தம் ஆரம்பமானவுடன் புது டில்லியில் காங்கிரசுக்கு முடி சூட்டப்பட்டு விடுமென்றும், ஹிந்து ராஜ்யத்தின் இடை வெளிக்கல் மூடப்பட்டு விடுமென்று கருதினோம். ஆனால், இதற்குள் காங்கிரஸின்மீது முஸ்லிம்களுக்கு அருவருப்பு ஏற்பட்டுவிட்டது. யுத்தம் ஆரம்பமானவுடன் சர்க்கார், காங்கிரசுக்குப் பணிந்து விட்டிருப்பாராயின், முஸ்லிம் இந்தியா புரட்சியை ஆரம்பித்திருக்கும், ஆனால், அதற்குப் பதிலாக சர்க்கார், இந்திய எல்லா சமூகத்தினருடையவும் ஒத்துழைப்பைக் காங்கிரசுடன் சம நிலையில் கோரியதோடு, அரசியலின் மத்திய பகுதியை அமுல் நடத்துவதை யுத்தத்திற்குப் பின்வரை ஒத்திவைத்துவிட்டது. என்றைக் கேனும் ஒரு நாள் பிரிட்டன் தனது ஒத்துழைப்பை நாடியே

தீரும் என்ற நம்பிக்கையுடன் காங்கிரஸ் சர்க்கார்கள் ராஜி நாமா செய்தனர். முஸ்லிம் பொது மக்கள் ஆறுத லடைந்தனர். சர்க்கார் காங்கிரஸின் ஒத்துழைப்பை நாடும்படி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் உலகம் தீயால் சூழப்பட்டுள்ள ஒரு சமயத்தில் "பேச்சு" ரிமையின் பெயரால் காந்தியார், தனிப்பட்டோர் சத்தியாக் கிரகத்தை ஆரம்பித்தார். நூற்றுக் கணக்கானவர்கள் சிறை சென்றனர். 1942-ம் வருஷ ஆரம்பத்தில் சர்க்கார், சிறை களைக் காலி செய்தனர். ஆனால், காந்தியாரோ மீண்டும் சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்தார். காங்கிரஸின் நண்பரும் அதன் நம்பிக்கைக்குரியவருமான சர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸ், யுத்தம் முடிந்தபின் உடனடியாக பூரண சுதந் தரமும், விடுதலையும் அளிக்கப்படுமென்று ஒரு வாக்குறுதி யைக் கொண்டு வந்தார். அவரது நிபந்தனைகள் தாராள மானவையாக இருந்தன. சுய ராஜ்யம் வந்து விட்டதாகவே பலர் கருதினர். காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாதே சுயராஜ்யம் வந்து விட்டதாக நம்பினு ரென்றால், பிறரைப்பற்றிக் கேட்பானேன்? மௌலானா ஆஸாத் லாகூர் ஜமீயத்துல் உலமா கூட்ட மொன்றுக்கு வந்த போது, "ஸ்வராஜ்யம் வருகிறது, தைரிய மிருப்போர் அதைத் தடுக்கட்டும்" என்று கூறியதாகத் தெரிகிறது.

இதில் ஒரே ஒரு தடை இருந்தது. முஸ்லிம் இந்தியா தனியே பிரிவினை அடைவது சாத்தியமாவதற்கும், ஒரு தனியாட்சியுள்ள முஸ்லிம் நாடு ஏற்படவும் கிரிப்ஸ் திட்டங்கள் இடமளித்தன. இந்த திரவப்பொருளை காங் கிரஸ் விழுங்க முடியாமல் போய்விட்டது. இது வன்றி ஒரு பூரண ஹிந்துராஜ்யம் நிறுவப்படுவதற்கான திட்ட

மொன்றையும் காந்தியார் தயாரித்திருந்தார். ஆதலால், காங்கிரஸ், உடனடியாக ஒப்புக் கொள்ளும்படி கோரி, சில அசாத்தியமான கோரிக்கைகளேச் சமர்ப்பித்து, இதையே காரணமாக வைத்து கிரிப்ஸ்திட்டத்தை நிரா கரிக்க ஏற்பாடு செய்தார். இத்துடன் கிரிப்ஸ் அத்தியாயம் முடிவு பெற்றது. டில்லி சம்பாஷணைகள் சம்பந்தமான தமதுகடைசி விமர்சனத்தின்போதும், இந்தியாவை விட்டுப் புறப்படும்போதும் சர்ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் பின்வருமாறு கூறினர்:—காங்கிரஸின் கோரிக்கைகள் ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தால், இந்திய சர்க்கார் ஹிந்துப் பெரும் பான்மையினரின் வசமாகிவிடும். காங்கிரஸ், விலக்கப்பட முடியாதபடி அதிகார நிலைமைக்குள்ளாகிவிடும். ஏப்ரல் மீ 13-உ யன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத் தில் ஜனப் ஜின்ன, "காங்கிரஸ் கோரிக்கைகள் ஒப்புக் கொள்ளப்பட்டால், முஸ்லிம்கள் காங்கிரஸ் ஆட்சியின் கருணை''யின் கீழ் வாழவேண்டி நேரிடும்'' என்று கூறினர். சர்ஸ்டாப் போர்டு கிரிப்ஸ், இந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற 15 நாட்களுக்குப்பின் அல்லாஹாபாத்தில் அ. இ. காங்கிரஸ் கமிட்டி கூட்டம்நடைபெற்றது. அக்கூட்டத்தில் ராஜகோபாலாச்சாரியார் பாகிஸ்தான் பிரச்னையில் காங்கிர சுக்கும், முஸ்லிம்லீக்குக்கும் மிடையே சமரஸமேற்படுத்த முயற்சியும் செய்தார். இதற்கு எதிர்ப்பு காணப்பட்டது. அ. இ. காங்கிரஸ் கமிட்டி, ஸ்ரீ. ராஜாஜியின் தீர்மானத்தை ஒப்புக் கொள்வதற்குப் பதிலாக, சமீப காலம்வரை ஹிந்து மகா சபையில் அங்கம்வகித்திருந்த ஒருவருடைய தீர் மானத்தை நிறைவேற்றியது. அ. இ. காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் பாகிஸ்தானை விவாதத்திற்குரிய பிரச்னையாகக் கருதக் கூடாது என்று கொண்டு வரப்பட்ட தீர்மானம்

நிறை வேற்றப்பட்டது. முஸ்லிம்களுடன் சமரஸக் கதவு மூடப்பட்டு விட்டது.

1942-ம் ஆண்டு ஆகஸ்டு 8வயன்று நடைபெற்ற அ.இ. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட "பகிரங்க உள்நாட்டுக் கலகத்" தீர்மானம், இந்தியாவுக்கே மகத்தான துரோகம் என்று சிலர் கருதினர். ஜப்பான் ரஷ்யாவை வீழ்த்தியது முதல் ஹிந்து இந்தியா, ஜப்பானே தன் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வல்லதெனக் கருதியது. தூரக் கிழக்குத்திசையிலும், சிங்கப்பூர், மலாயா, பர்மா பிரதேசங்களிலும் ஜப்பான் அடைந்த வெற்றியைக் கண்டு, பொதுவாக ஹிந்துக்களிடையே குதூகலமும், சந்தோஷமும் ஏற்பட்டன. காந்தியும் இதற்கு விலக்கானவரல்ல. மே மாதத்தில் அல்லாஹாபாத் காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து பல தஸ்தாவேஜுகள் கைப்பற்றப் பட்டன. அச்சு நாடுகள் யுத்தத்தில் வெற்றியடைய வேண்டுமென்று காந்திஜீ உட்பட பலகாங்கிரஸ்காரர்களின் கருத்தின்னதென்பது அந்த தஸ்தாவேஜுகளி லிருந்து தெளிவாகிறது. மேலும், அவர்கள் ஜப்பானின் விரோதத்தைப் பெற அஞ்சியிருந்ததுடன், அதனுடன் ஒரு சமரஸம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்தனர். "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற இறுதி எச்சரிக்கையைப் பிரிட்டன் நிராகரித்து விட்டால், இந் நாட்டில் அராஜகம் ஏற்படுமென ஸ்ரீ. காந்தியார். எதிர் பார்த்தார். இந்தியாவின் எல்லையில் காத்துக் கிடக்கும் ஜப்பான், இந் நாட்டில் நுழைந்து, இதனைக் கைப்பற்றிக் கொள்ள இந்தியாவில் எதிர்பார்க்கப்பட்ட அராஜகமே ஓர் அழைப்பாக அமைந்துவிடும். இந்த வகையில் ஆகஸ்ட்

தீர்மானம், இந்தியாவுக்கே பெரும் துரோகச் செயலும், அதிலும் குறிப்பாக ஜப்பானிடம் ஹிந்துக்களைப் போன்ற தொடர்பு எதுவுமின்றி வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்குத் துரோகம் செய்வதும் ஆகும்.

1942ஆம் கோடையின் போது யுத்த நிலைமை நேச நாடுகளுக்குச் சாதகமாக இல்லை. காந்தியார் இதை தமது அபிலாஷைக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளவும், உடனே இந்தியாவுக்கு விடுதலை தருமாறு பிரிட்டனை நிர்ப் பந்திக்க ஒரு சாதனமாகச் செய்து கொள்ளவும் விரும் பினார். உண்மையிலேயே அவர் இந்தியாவின் விடுதலையை விரும்பியவராயிருந்தால், நாட்டின் இதர கட்சியினரையும் நம்பி, அவர்களுடன் கலந்தாலோசித்து திட்டங்களையும், வேலை முறைகளையும் வகுத்திருக்க வேண்டும். ஏனெனில், காங்கிரஸோ அல்லது காந்தியாரோ இந்தியப் பொது மக்கள் எல்லோருடையவும் பிரதிநிதிகளாகி விடமாட்டார் கள். இன்னும் அவரது கட்சியை ஆதரிக்காத பல இனங் களும் இந் நாட்டில் இருந்தன. ஆனால், காந்தியாரோ இவ்வாறு ஒன்றும் செய்ய வில்லை. இந்தியா விடுதலை பெற வேண்டுமென அவர் உண்மையில் கருதி யிருந்தாரானால், அவர் தவறான வழியில் அதைத் தேடிச்சென்றவராவார். இதனால் அவர் மற்றொரு நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டார்.

அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள், ஆகஸ்ட் தீர்மானத்திற்கு அழகான வியாக் கியானம் கூறியிருக்கிறார். பிரிட்டிஷாரின் தன்மையையும், பிரிட்டிஷ் அரசியல் சரித்திரத்தையும் பூரணமாக அறியாத வராக இல்லாதிருப்போர்—காந்தியார் இதை யறியாதவ

ரெனக் கூறுவதற்கில்லை—காந்தியாரின் பயமுறுத்தலுக்கு பிரிட்டன் உடனே இணங்கி விடுமென எதிர்பார்ப்பது வெறும் பைத்தியக்காரத் தனமென்பதை அறிவார்கள். காந்தியார் தெளிவான மனதுடையவர். இதற்கு முன் பல முறைகளில் இந்திய சர்க்கார் அவருக்கும், காங்கிரஸுக்கும் இணக்கம் காட்டியிருப்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆதலால், இந்த முறையும் சர்க்கார், தமது பயமுறுத்தலுக்கு இணங்கி, சமரஸம் பேசி, 1937-ஆ செய்து கொள்ளப்பட்டது போன்ற "கனவான் ஒப்பந்தம்" செய்து கொண்டு, ஹிந்துக்களடங்கிய காங்கிரஸிடம் அதிகாரத்தை ஒப்புவித்து விடுவா ரென காந்தியார் எதிர்பார்த்தார். இவ்வாறு ஏற்பட்டிருந்தால் ஹிந்து ஆட்சி இந்தியா முழுமையிலும் ஏற்பட்டுவிட்டிருக்கும். உண்மையில் ஆகஸ்ட் தீர்மானம் பிரிட்டிஷாரைவிட முஸ்லிம்களுக்கே அதிக விரோதமாக ஏற்பட்டது. காந்தியார் வைசிராயுடன் சமரஸம் பேச அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அதிகாரமளித்தது. ஆனால், அதற்கு முன் பல வாரங்களாகக் காந்தியாரும், அவரது தளகர்த்தர்களும் கையாண்ட வார்த்தைகள் மிகவும் கடுமையானவையாக இருந்தன. லின்லித்கோ பிரபு சர்க்கார் இந்த சமயத்தில் தக்கவாறு நடந்து கொண்டார். காந்தியாரின் நாடகத் திரை விழுந்து போய் விட்டது. ஹிந்து ராஜ்ய அபாயத்திலிருந்து மீண்டு மொருமுறை முஸ்லிம் இந்தியா காப்பாற்றப் பட்டது.

மிகப் பிரமாதமாகப் பேசப்பட்டு வந்த காங்கிரஸின் வகுப்புவாத தேசீயத்தின் தன்மை இதுதான்.

அத்தியாயம் 7

# பாகிஸ்தான் விளக்கம்

ஹிந்து தேசியம் வளர்ந்த கதையை நாம் படித்து விட்டோம். முஸ்லிம்களின் மனோபாவம் இவ் விஷயத்தில் எவ்வாறிருந்தது என்பதைப்பற்றி இப்போது கவனிப்போம். இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களை விட்டுப் புறம்பான தனிச் சமுதாய உணர்ச்சியைப் பெற்றதில்லையென்பதை நான் ஏற்கெனவே விளக்கிக் கூறிவிட்டேன். ஆகவே, முஸ்லிம் சாம் ராஜ்யம் வீழ்ச்சியுற்றவுடன் அவர்கள் நம்பிக்கையும், எவ்வித அரசியல் இலட்சியமுமற்ற மக்களாய் சிதறிவிட்டனர். சிப்பாய் கலகத்திற்குப் பிறகும் இந்தியாவில் இஸ்லாம் முதலில் பிரிட்டிஷ் கோபத்திலிருந்தும், அடுத்தபடியாக ஹிந்துக்களின் ஆக்கிரமிப்பு தேசீயத்திலிருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டி நேரிட்டது. சர் சையத் அஹ்மத்கானின் செயல்களும், போக்கும் வெறும் எதிர்ப்புப் போக்கிலிருந்தன. இந்தியாவில் பொது ஜனப் பிரதி நிதித்துவ சர்க்கார் ஏற்படுவதை அவர் விரும்பவில்லை. இந்தியாவின் பலதிறப்பட்ட மக்களுக்கு அது பொருந்தாதென அவர் கருதினர். அவரது அபிப்பிராயம் உண்மைதான் என்பதை அதற்குப் பின் நடைபெற்ற சம்பவங்கள் ஊர்ஜிதம் செய்தன. இந்தியர்களுக்கும், பிரிட்டிஷாருக்கும் சமரஸம் ஏற்படுத்திவைக்கவே அவர் விரும்பினர். மொகலரய ஆட்சியின்படி ஒன்றுபட்ட அந்நியோன்னியம் ஏற்பட வேண்டுமென்பதே அவர் விருப்பம். அகில இந்திய முஸ்லிம் லீக்கை ஸ்தாபித்தவர்களுக்கோ, முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி உரிமை

வேண்டுமென்பதைத் தவிர வேறு அபிலாஷைகள் ஏற்பட வில்லை. முஸ்லிம்கள் தனிச் சமுதாயத்தினரென அவர்கள் வற்புறுத்தினரே யன்றி தங்களுக்கென சொந்தமான அரசுரிமைப் பிரதேசம் வேண்டுமென அவர்கள் கருத வில்லை. உண்மையில் பிரிட்டிஷ் ஆட்சியே நாட்டின் அரசியல் வாழ்வில் நிலைத்துவிட வேண்டுமென அவர்கள் விரும்பினர். 1911-13ம் வருஷச் சம்பவங்கள் முஸ்லிம் இந்தியாவின் மனோ உணர்ச்சியை ஆழத் தூண்டி விட்டது. பிரிட்டிஷாருக்கு உட்பட்டிருக்க விரும்பிய அகில இந்திய முஸ்லிம் லீக், தன் கொள்கையை மாற்றிக்கொண்டு இந்தியாவுக்கு பொறுப்புள்ள சுயாட்சியைத் தனது இலட்சியமாகக் கொண்டது. முஸ்லிம் பொது மக்களிடையே ஏற்பட்ட புரட்சி மனப்பான்மையும், காங்கிரஸையும், முஸ்லிம் லீக்கையும் 1916 ஆம் லக்னோ ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளுமாறு தூண்டிவிட்டன. ஹிந்துக்களுக்குப் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் காங்கிரஸ் தான் என்றும், முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவ ஸ்தாபனம் முஸ்லிம் லீக்தான் என்றும் லக்னோ ஒப்பந்தத்தின் மூலம் காங்கிரஸ் ஒப்புக் கொண்டது. இவ்வொப்பந்தம் இரண்டு சமுதாயங்களுக்கிடையே ஏற்பட்டதைப் போன்ற பந்தமாகும். ஆனால், அப்போதும் கூட முஸ்லிம்களுக்குத் தனிச் சமுதாயமாக வாழ வேண்டுமென்ற உணர்வு ஏற்பட வில்லை. முஸ்லிம் லீக்கும், காங்கிரசும் ஒரே இடங்களில் ஏறக்குறைய ஒரே தேதிகளில் தங்கள் வருஷாந்திர மகா நாடுகளை நடத்தினர். காங்கிரஸ், முஸ்லிம்லீக் ஆகிய இரு பிரதிநிதிகளும் இரண்டு மகா நாடுகளுக்கும் ஒருங்கே செல்லக் கூடியவாறு அவைகளின் நிகழ்ச்சி முறை வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. 1919-ம் ஆண்டில் இந்திய

சர்க்கார் சீர்திருத்த மசோதா சம்பந்தமாகப் பார்லிமெண்ட் சபை ஒரு கூட்டு பொறுக்குக் கமிட்டியை ஏற்படுத்தியது. இக் கமிட்டியின்முன் ஜனப் ஜின்னு சாட்சியம் கூறுகை யில், சட்ட சபைகளில் தனி வகுப்புப் பிரதி நிதித்துவ முறைகளும், நாட்டின் அரசியல் வாழ்வில் ஹிந்து,முஸ்லிம் என்ற வேறுபாடும் ஒழிந்து விடுமென நம்புவதாகக் கூறி ஞர். இதற்கு வெகு நாட்களுக்குப் பின், 1931-ம் வருஷத் தில்கூட "ஹிந்துக்கள், முஸ்லிம்களின் குறைந்த பட்ச கோரிக்கைகள் சிலவற்றை அங்கீகரிப்பார்களாயின், நம்மில் பலர் எதிர் பார்ப்பதைவிட சீக்கிரத்திலேயே தனி வாக் காளர் தொகுதி மறைந்தொழிந்து விடுமென நம்பு*"வதாக ஜனப் ஜின்னு கூறினர்.

ஆனல், நான் இப்போது வெறும் சம்பவங்களை மட் டும் விவரிக்க முற்படுகிறேன். 1920-22-ம் வருஷ கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவைக்குப் பிறகு பண்டித மாளவியாவின் தலைமையின் கீழ் ஐந்தாண்டு கள்வரை அரசியல் தகிடுதத்தங்கள் பல நடைபெற்றன. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, ஒத்துழையாமை, நம்பிக்கை யெல்லாம் இதனுல் அற்றுப் போய்விட்ட சமூக ஒற்று மைக்காக அநேக மகாநாடுகள் நடைபெற்றன. இவைகளா யெல்லாம் பயன் ஒன்றும் ஏற்படாது போய்விட்டது. அந்த நாட்கள் எல்லாம் முஸ்லிம்களுக்கு இருளடைந்த நாட்களாகவே காணப்பட்டன. ஸ்ரீ. காந்தியாருடன் சேர்ந்து வேலை செய்த அபுல்கலாம் அஸாத், அலி சகோத ரர்கள் போன்ற தலைவர்களெல்லாம், இன்னும் அவ

* 1931ஆ ஆகஸ்ட்மீ 8வ அல்லாஹாபாத்தில் நடை பெற்ற ஐக்கிய மாகாண முஸ்லிம் மகாநாட்டில் பிரசங்கம்.

ருடைய உத்திரவுகளைப் பின்பற்றியே நடக்கத் தலைப் பட்டனர். ஹிந்து மகாசபையைச் சேர்ந்த காடையர் களால் படுகொலை செய்யப்படும் தங்கள் மதத்தினருக்கு உதவி செய்யமறுத்து, அவர்கள் தனியே ஒதுங்கி நின்று விட்டனர். ஒரு தன்ஜீம் இயக்கம் ஆரம்பமாயிற்று. ஆனால் சொற்ப ஆர்ப்பாட்ட, அட்டகாசங்களுக்குப்பின் அவ் வியக்கம் மாயமாய் காற்றில் மறைந்து போய் விட்டது. காந்தியாரின் உபதேசங்களும், அஹிம்ஸையும், முஸ்லிம் களின் ஹிருதயங்களில் ஆழப்பதிந்து விட்டது போன்று காணப்பட்டது. இதனால் அந்த சமயத்தில் இஸ்லாத்தின் உயரிய போதனைகளை மறந்து விட்டனர். இஸ்லாத்தின் போதனைகள் அவர்களுக்கு வெட்கமாயிருந்தன. முஸ்லிம் களின் விரோதிகள் பத்திரிகைகள் மூலமும், வாய்மொழி யாகவும், இஸ்லாம் பலாத்காரத்தைப் போதிக்கும் மத மென்றும்; இந்தியாவில் நடைபெறும் குழப்பங்களுக்கும், பலாத்காரத்திற்கும் இஸ்லாமே காரணமென்றும், முஸ்லிம்களின் மூட பக்தியே கலவரங்களுக்குக் காரண மென்றும் பிரசாரம் செய்தனர். ஹிந்து மகாசபை, முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பலத்த பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. முஸ்லிம் பிரசாரகர்களும், எழுத் தாளர்களும் இதற்குப் பதில் கூறாமல் திகைப்புண்டு கிடந் தனர். ஹிந்துக்களின் பலாத்கார இயக்கங்களுக் கெல்லாம் இஸ்லாம் மதம் சாந்திமத மென்ற ஒரே பதில் மட்டுமே அவர்கள் கூறி வந்தனர். இந்த முஸ்லிம் பிரசாரகர்கள், எழுத்தாளர்கள் முதலியவர்களின் சொற்களும், எழுத்து களும் முஸ்லிம்களிடையே கோழைத்தனத்தையும், பிளவு மனப் பான்மையையும் ஏற்படுத்தி விட்டன. அந்த காலத் தில் வெளியான பத்திரிகைகளையும், துண்டுப் பிரசுரங்களை

யும் பார்க்குமிடத்து, நம் எழுத்தாளர்களும், பிரசாரகர்களும் மூளையற்றுப் போய் விட்டனரோ என்று கூடக் கருத இடமுண்டாகிறது. இவ்வுலகில் சமாதானமேற்பட வேண்டுமென்று தான் இஸ்லாம் போதிககிறது; ஆனால் அது எப்போதும் பாவலிச மதமாக இருந்தது கிடையாது. கோழைத்தனம், க்ஷீணம், சரணாகதி, கொடூரம், அநீதி முதலியவைகளெல்லாம் ஆண்டவன் முன்னிலையில் குற்றங்களென இஸ்லாம் போதிக்கிறது. இவ்வகைச் செயல்கள் நடை பெறுவதைத் தடை செய்யாமலிருப்பதும் மானிடத்துவத்துக்குச் செய்யப்படும் ஒரு குற்றமாகுமென இஸ்லாம் கூறுகிறது. எப்படியோ ஒன்று குற்றம் நடைபெற்று விட்டது. முஸ்லிம்கள் இதனால் பெருங்கஷ்டங்களும், துன்பங்களும் அனுபவித்தனர். அப்படியிருந்தும் முஸ்லிம்களுக்குத் தனிப் பிரிவினை விருப்பம் ஏற்படவில்லை. ஒரு நண்பர்—அவர் என்னுடைய பால்ய நண்பர்—இச்சமயத்தில் எனக்கு ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகிறார். நாங்களிருவரும் கல்லூரியில் வாசித்துக்கொண்டிருக்கும்போது நாட்டின் பிரிவினையைப்பற்றியும் ஜனங்களின் பிரதேசமாற்றங்கள் பற்றியும் விவாதிப்பது வழக்கம். அவையெல்லாம் அரசியல் தன்மையற்ற தனிப்பட்ட மனக் கனவுகள் ஆகும். இதை எதற்கு இங்கு குறிப்பிடுகிறேனென்றால், தனிப்பட்ட முஸ்லிம்களின் மனதில் ஏற்கெனவே சமுதாய உணர்ச்சி உதயமாகிவிட்டதைக் காண்பிக்க வேண்டுமென்பதற்கேயாகும்.

1929ஆம் ஜனவரிமீ 1உயன்று டில்லியில் நடைபெற்ற சர்வகட்சி முஸ்லிம் மகாநாட்டிற்குத் தலைமைவகித்த மே. த. ஆகாகான், தம் தலைமைப் பிரசங்கத்தில், முஸ்லிம்களை ஒரு சமூதாயம்' என்ற வார்த்தையால் குறிப்பிட்டு,

அவர்கள் சமூகத்தினரல்லவென்றும், சமுதாயத்தினரென்றும் தெளிவுபடுத்திக் காட்டினர். ஆனால், அவர் அது சமயம் முஸ்லிம்களின் எண்ணிக்கையையே குறிப்பிட்டார். இதைத்தவிர அவாது வார்த்தையில் அரசியல் முக்கியத்துவம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. சைமன் கமிஷன்முன முஸ்லிம்கள் என்னகொள்கையைக் கூறுவது என்ற விஷயத்தைமட்டுமே அம்மகாநாடு ஆலோசித்து, தனிவாக்காளர் தொகுதி முறையைப் பெறுவதென முடிவு செய்தது. அதுசமயம் தனிச்சமுதாயப் பிரச்னை எழவேயில்லை.

அடுத்த மாதமாகிய பிப்ரவரி மாதத்தில், ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இரண்டு சமூகத்தினர்களல்லவென்றும், தனித்த இரண்டு சமுதாயத்தினரெனறும் விளக்கி நான் ஒரு புத்தகத்தை வெளியிட்டேன்.* ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனிச்சமுதாயத்தினர்களாக இருப்பதால், அவர்களுக்கிடையே நடைபெறும் ஒப்பந்தம், இருசமுதாயத்தையும் ஒன்றாகச் சேர்த்துவிட முடியாதென்றும், ஒரு சமூகம், மற்றொரு சமூகத்தை மறைத்துவிட வேண்டும் அல்லது அப்பாவியாக்கிவிட வேண்டுமென்றும் அப்புத்தகத்தில் தெளிவாக விளக்கியிருக்கிறேன். நான் அவ்வாறு நினைத்ததற்குரிய காரணங்களை இப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் தெளிவாக விவரித்திருக்கிறேன். நான் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவனாதலால், முஸ்லிம்கள் இஸ்லாத்திற்காக மீண்டும் இந்தியாவை வெற்றி கொள்ள வேண்டுமென்றும், இதையே அவர்கள் இலட்சியமாக மேற்கொள்ள வேண்டு

*1929-ம் ஆு வெளியான "இந்தியாவில் இஸ்லாத்தின் எதிர்காலம்."

மென்றும் இயல்பாகவே கருதினேன். நான் இன்றும் அதே அபிப்பிராயமே கொண்டிருக்கிறேன். ஏனெனில், இந்தியாவின் இறுதியான அரசியல் கதிமோட்சம் இஸ்லாத்தின் வசமிருப்பதாகவே நான் நம்புகிறேன். ஆனால், இது நெடுங்காலத்தில் நிறைவேறும் இலட்சியம். நாம் இங்கே விவரித்து வருவது நிகழ்கால, சமீப வருங்கால விஷயங்களைப்பற்றியேயாகும்.

முஸ்லிம்களுக்கு அது ஒரு நெருக்கடியான காலமென்பதை நான் கூறியிருக்கிறேன். கிலாபத் இயக்கம் அடங்கியபிறகு முஸ்லிம்கள், தங்களுக்கென அரசியல் ஸ்தாபனம் ஏதுமில்லாதவர்களா யிருந்தனர். அப்போது முஸ்லிம் லீக் ஒரு அரை ஆட்டஸ்தாபனமாக இருந்ததேயன்றி, அம்பலத்திற்கு வரவில்லை.

1930 ஹூ டிசம்பர் மாதத்தில் அல்லாஹாபாத்தில் அ. இ. முஸ்லிம்லீக் வருஷாந்திர மகாநாடு நடைபெற்றது. டாக்டர் சர் முஹம்மத் இக்பால் (மர்ஹூம்) அவர்கள் தலைமை வகித்தார். அவர், வடமேற்கு இந்திய முஸ்லிம் பிரதேசத்தை தனியாட்சிப் பிரதேசமாகப் பிரிக்க வேண்டுமெனக் கூறினர். இந்தப்பிரதேசத்தில் பஞ்சாப், வடமேற்கெல்லைப்புறம், சிந்து, பலுசிஸ்தான் முதலிய மாகாணங்கள் அடங்கியதாக இருக்கும். இக்பாலின் கூற்று அந்த காலத்தில் விநோதமானதாகக் கருதப்பட்டது. ஒரு கவிஞனின் கனவுலகக் கூற்றுதான் இது எனக் கூறினர் பலர். கவிஞர் இக்பால் ஒரு பிரசாரகராகவோ, அல்லது ஒரு கட்சியின் தலைவராகவோ இல்லை. ஆனால், அதே இக்பாலின் திட்டமே இப்போது சில வருஷங்களுக்

குப்பிறகு பாகிஸ்தான் இலட்சியத்தை ஈன்றது. உண்மையில் இக்பாலே பாகிஸ்தானின் தந்தையாவர். 1930-ம் ஆண்டில் இக்பால் செய்த பிரசங்கம் முஸ்லிம் இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு மூலைக்கல்லாக அமைந்து விட்டது. அவரது பேனாவழியாகப் பிறந்தவற்றில் மதிப்பேறப்பெற்ற சில விஷயங்களை இப்புத்தகத்தின் இறுதியில் அனுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

பின்னர் லண்டன் வட்ட மேஜை மகாநாடு கூட்டப்பட்டது. இதனால், இதற்கு முன்னேற்படாத அவ்வளவு திடுக்கம் ஜனுப் ஜின்னாவுக்கு ஏற்பட்டது. அவர், தம் வாழ்நாளெல்லாம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்திருக்கிறார். ஆனால், வட்ட மேஜை மகா நாடு பயன் தராது என்பதை அவர் உணர்ந்தார். "நான் என் வாழ்க்கையில் அதிர்ச்சியை அடைந்தேன். வட்ட மேஜை மகா நாட்டில் நான் திடுக்கிட்டு விட்டேன். அங்கு சூழ்ந்துள்ள அபாயம், ஹிந்துக்களின் மனோ உணர்ச்சி, ஹிந்துக்களின் மனப்பான்மை, ஹிந்துக்களின் போக்கு ஆகியவைகளெல்லாம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுமென்ற நம்பிக்கையைக் குலைத்து விட்டன."* இரண்டாம் முறையாக லண்டன் வட்ட மேஜை மகாநாட்டுக்குப் புறப்படுவதற்கு முன் ஜனுப் ஜின்னா, 1931 ஹு ஆகஸ்ட் மீ 8வேயன்று அல்லாஹாபாத்தில் நடைபெற்ற ஐக்கியமாகாண முஸ்லிம் மகாநாட்டில் பேசுகையில் பின் வருமாறு கூறினார்:—

"நான் உங்களுக்குக் கூற விரும்பும் முதல் விஷயம், இப்போது முஸ்லிம்களனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டி

---

* "ஜனுப் ஜின்னாவின் சமீபப் பிரசங்கங்களும் அறிக்கைகளும்," பக்கம்: 37.

யது அவசியமும், அவசரமும், முக்கியமும் ஆகுமென்பதுதான்.''*

1937-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், புதிய அரசியல் சீர்திருத்தத்தின் மாகாண சுயாட்சிப்பகுதி இந்தியாவில் புகுத்தப்பட்டது. ஹிந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஆறு மாகாணங்களில் காங்கிரஸ், சர்க்கார் பதவிகளை ஏற்றது. ஜனுப் ஜின்ஞு கொண்டிருந்த அச்சம் உண்மையாகி விட்டது. காங்கிரஸ் ஆட்சி நடை பெற்ற 27 மாத காலத்தில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்ட கதைகளெல்லாம் ஏற்கெனவே கூறப்பட்டு விட்டன. முஸ்லிம்களின் தேசீய ஸ்தாபனமான அகில இந்திய முஸ்லிம்லீக் ஸ்தாபனத்தின் மூலம் முஸ்லிம்களுடன் நிர்வாக அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள காங்கிரஸ் மறுத்துவிட்டது. அக்பர் சக்ரவர்த்தியாரின் காலத்தில் ஜெய்ப்பூர் ராஜாக்கள் பதவி ஏற்க ஒப்புக்கொண்ட நிபந்தனை

---

* இப் பிரசங்கத்தின் பின்கண்ட பகுதி மிக முக்கியமானது. இரண்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களான ஜனுப் ஜின்ஞு, ஸ்ரீ காந்தியார் ஆகிய இருவருடைய மனோபாவத்தையும் இது விளக்குகிறது. ஸ்ரீ காந்தியார் வீரங்கள் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். ஜனுப் ஜின்ஞுவோ சாந்தமாக சமரஸ மனோபாவத்துடன் நடந்து கொள்ளுகிறார். இதில் அவரது அந்தரங்க உண்மை நோக்கம் தெளிவாகப் புலனாகிறது. ஜனுப் ஜின்ஞு கூறியதாவது:—"நான் இன்று காலைதான் ஸ்ரீ காந்தியாரின் பிரசங்கத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் ஒரு வகையில் அன்பு பாராட்டுவதாக அவர் கூறுகிறார். இரண்டு சமூகங்களுக்கு மிடையே பாரபட்சமற்ற சமத்துவ நடைமுறைகளே வேண்டுமென நான் கூறியிருக்கிறேன். நான் இதை உண்மையோடும், கௌரவ முறையிலும் கூறுகிறேன். அதையே மீண்டும் இந்த மேடையிலிருந்து இப்போதுக் கூறுகிறேன்."

களைப்போன்ற நிபந்தனைகளையே முஸ்லிம்களும் ஏற்றுக் கொண்டால், சிலரைத்தங்கள் மத்திரிச்சபைகளில்சேர்த்துக் கொள்ளகாங்கிரஸ்சம்மதித்தது. ஹிந்துக்களே ஆளப்பிறந்தவர்களென்றும், முஸ்லிம்கள் ஆளப்படும் அடிமை மக்களென்றும் காங்கிரஸ் கூறுவது தெளிவாக விளங்கியது. முஸலிம் சமுதாயத்தை அடியோடு நாசப்படுத்தி, அதை அடிமைச் சமூகமாகவும், தன்னுடைய சிஷ்யக் கூட்டமாகவும் ஆக்கிவிடுவதற்காக முஸ்லிம் பொது ஜனத் தொடர்பு (மாஸ்காண்டாக்ட்) இயக்கம், காங்கிரஸின் பதவி ஏற்புக்கு முன்னரே ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. வகுப்புச் சமரஸத்தை ஏற்படுத்துமாறு ஜனப் ஜின்னா, மீண்டும் காந்தியாரை வேண்டிக் கொண்டார். ஆனால், காந்தியாரோவெனில், சமரஸத்தின் ஒளி தமது கண்களுக்குப் புலனாகவில்லையெனக் கூறிவிட்டார். அவரது மனம் கண்ணுக்குத் தோற்றாத இருள் சூழ்ந்து காணப்பட்டது. காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேஹ்ரூ தீப் பொறி பறக்கப் பேசினார். ஆயிரம் ஜின்னாக்களைவிட ஒரு காங்கிரஸ் தொண்டர் மேலானவரென்று அவர் கூறினார். உண்மையில் பண்டிதரின் மொழிகளில் காணப் பட்ட விஷத்தன்மையும், தம்மை ஆதரியாதவர்கள் விஷயத்திலும், குறிப்பாக முஸ்லிம் சமூகத் தலைவர்கள் பாலும் அள்ளிவீசிய ஆட்சேபகரமான வார்த்தைகளும் வகுப்பு உறவை அதிகமாக வேறுபடுத்தி விட்டன. இவரைப் போன்ற ஆத்திரமும், அசட்டுத் தன்மையும் கொண்ட ஒரு மனிதர் இதற்கு முன் இந்திய அரசியல் வாழ்விலேயே இருந்ததுகிடையாது. அவர் அபேதவாத (சோஷியலிஸ்ட்) இலட்சியங்களைக்கொண்ட புத்தகங்களிலுள்ள விஷயங்களை அப்படியே மெல்லாமல் விழுங்கிவிட்டது போன்று தோன்

றகிறது. அதை அவர் அடிக்கடி எடுத்துவீசி, இந்தியாவில் சாவாதிகாரத்துவத்தைப் புகுத்த விரும்புகிறார். இந்தியாவைப்பற்றி அவர் சரியாக அறிந்து கொள்ளவில்லை. அதன் பண்டையப் பெருமைகள்பற்றியோ, அதில் வாழும் பல்வேறு சமூகத்தினர்களின் கலாசார அபிலாஷைகளைப் பற்றியோ அவருக்குக் கொஞ்சமும் அனுதாபமில்லை. மகாத்மாவின் விருப்பத்திற்கு ஒவ்வொரு இலட்சியத்தையும் அடிமைப் படுத்தவே அவர் எப்போதும் தயாராக இருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியின் கீழ் ஹிந்துக்கள் ஆரம்பித்து, தீவிரமாகவும், விஷத்தன்மையோடும் நடத்திய பொதுஜனப் பயங்கர இயக்க வேலைகளைப் பற்றிய கதையெல்லாம் ஏற்கெனவே தெளிவாகக் கூறப்பட்டுவிட்டது. இவைகளெல்லாம் சர்க்கார்களின் ஆதரவையும் தீவிரமான உதவியையும் கொண்டே செய்யப்பட்டன. காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற மாகாணங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவம், குறைக்கப்பட்டோ, நிர்மூலப்படுத்தப்பட்டோ போய்விட்டன. முஸ்லிம் பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார்,முனிசிபல் கிராண்ட் உதவித்தொகைகள் மறுக்கப்பட்டுவிட்டன. பள்ளிக்கூடங்களில்வாசிக்கும் முஸ்லிம் பெண்கள், இஸ்லாமிய வந்தன முறைகளை அனுசரிக்கக்கூடாதென்றும், "நமஸ்தே" என்று கூற வேண்டுமென்றும் உத்திரவிடப்பட்டது. பள்ளிக்கூட முஸ்லிம் மாணவர்கள் காந்தியாரின் படத்தை வணங்குமாறும், சரஸ்வதி தோத்திரப் பாடல்களையே தெய்வ வணக்கமாகப் பாட வேண்டுமென்றும் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இதற்கு முஸ்லிம்கள் செய்த ஆட்சேபங்கள் எல்லாம் செவிடன் காதில்

ஊதப்பெற்ற சங்கோசைக் கொப்பாகப் பயனற்றுப் போய் விட்டன.

ஜனநாயகம் என்றால் பெரும்பான்மை ஆட்சி என்று தான் அர்த்தம் என்ற இலட்சியம் இந்நாட்டில் தீவிரமாகப் பிரசாரம் செய்யப்பட்டது. ஒரே வகையான ஒரே இன மக்கள் வாழும் நாடுகளில் இக்கொள்கை உண்மையானதா யிருக்கலாம். ஏனெனில் அத்தகைய நாடுகளில் இன்று பெரும்பான்மைக் கட்சியினராக இருப்பவர்கள், நாளைய தினம் சிறு பான்மைக் கட்சியினராக ஆகிவிடுவர். உதாரண மாகப் பிரிட்டனை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு கன் சர்வேடிவ் கட்சியார் இன்று அதிகாரத்திலிருப்பர்; நாளை மிதவாதக்கட்சியார் அதிகாரத்திற்கு வருவார்கள்; நாளை மறுநாள் தொழில்கட்சியாரின் அதிகாரம் ஏற்படும். ஆனால் பெரும்பான்மையும், சிறுபான்மையும் நிரந்தரமாக ஏற்பட் டிருக்கும் இந்தியாவிற்கு இந்த நிலைமை பொருத்தமல்ல. இங்கு பெரும்பான்மை ஆட்சி என்றால் ஜனநாயகமாகி விடாது. இந்நாட்டில் பெரும்பான்மை ஆட்சி என்பது கலப்பற்ற அப்பட்ட சர்வாதிகார ஏகாதிபத்தியமென்று தான் அர்த்தம்.

அந்த ஜனநாயகத்தின் அர்த்தம் பெரும்பான்மை ஆட்சி தான் என்பது கூட பொய்த்துப் போய்விட்டது. ஜனநாய கம் என்பது பெரும்பான்மை ஆட்சியே எனக் கருதப்பட்ட நாடுகளில் அரசியல் சீக்கிரத்தில் முறிவடைந்து, ஏதேனு மொரு சர்வாதிகாரத்துவ ஆட்சியே நடைபெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஜனநாயகம் என்றால் என்ன? பரஸ்பர சமரஸம், பரஸ்பர நல்லுணர்ச்சி, பரஸ்பர இட மளித்தல் இவைகள்தான் உண்மையான ஜனநாயகம். சில

பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் கூறும் "எண்ணிக்கை ரீதியான ஜன நாயக" இலட்சியத்தையே ஹிந்து இந்தியா நம்பி வாழ்ந்தது. இத்தகைய "ஜனநாயகத்தை" தான் காங்கிரஸ் சர்க்கார்கள் அனுஷ்டித்தன. சமரஸமற்ற மனோபாவத்துடன் அவர்கள், தங்கள் பெரும்பான்மையை கருணையற்ற முறையில் பிரயோகித்தனர். "நியாயவாதத்திற்கு அவர்கள் செவிசாய்க்க மறுக்கிறார்கள். நாம் கூறுவதை அவர்கள் கேட்பதில்லை. எண்ணிக்கை பலத்தின் மீதே அவர்கள் யோசனைகளையும், ஆலோசனைக்கு வரும் விஷயங்களையும் அங்கீகரித்தோ நிராகரித்தோ முடிவு செய்கிறார்கள்" என்று பீஹார் எம். எல். ஏ. ஒருவர், அசெம்பிளி மண்டபத்திலிருந்து ஏமாற்றத்துடன் திரும்புகையில் கூறினார்.

பம்பாய் சர்க்காரில் காங்கிரஸ் மந்திரி சபையில் மாஜி அங்கத்தினராக இருந்த ஸ்ரீ கே. எம். முன்ஷியும், பாய் பரமானந்தரும் பாகிஸ்தான் இலட்சியத்தை யடியோடு இழிவு படுத்த முயற்சித்தனர். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு தெருவிலும் முஸ்லிம்கள் பாகிஸ்தானை ஏற்படுத்துவதென்று இவர்கள் பலமுறைகளில் கூறிவந்தனர். வீதிக்கு வீதி பாகிஸ்தான் முறை பல்லாண்டுகளுக்கு முன்னர் ஹிந்துக்களால் ஏற்படுத்தப் பட்டதே யொழிய முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. அந்த முறை இன்றும் அமுலிலிருக்கிறது. தினசரி இது வளர்ந்தோங்கி வருகிறது. ஒரு ஹிந்து மொஹல்லாவில் முஸ்லிம்களுக்கு வசிக்க இடமளிக்கப்படமாட்டாது. ஒரு ஹிந்து, தனது வீட்டை ஒரு முஸ்லிமுக்கு வாடகைக்கு விட மாட்டார். ஹிந்து சமூக, தர்ம, வர்த்தக ஸ்தாபனங்கள் முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்ளமாட்டா, சமூகத்

தீண்டாமை, ஹிந்து ஜாதித் துவேஷத்தினலும், புதிதாகக் கிளைத்தெழுந்த அரசியல் அபிலாஷைகளாலும் பொருளாதார பகிஷ்காரமாக மாறிவிட்டது. ஹிந்துக்கள், தங்கள் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவமுதலே முஸ்லிம்களை வெறுக்கவும், அவர்களை விட்டு தூர விலகிநிற்கவும் கற்றுக் கொடுத்தனர். அவர்களின் வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும்கூட இவ்வாறே போதிக்கப்படடது. நாங்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்து ஓரே சமுதாயமாக வாழ்வதா அல்லது தங்கள் சொந்த உரிமையின் மீது தனிச் சமுதாயமாகப் பிரிந்து வாழ்வதா என்ற விஷயத்தை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு இனி முஸ்லிம்களுக்கு கிடையாது. நாட்டின் பொருளாதார வாழ்விலிருந்து முஸ்லிம்களை ஹிந்துக்கள் வேறுபடுத்தி விடடனர். இதுபோன்ற ஜாதீயரீதியிலும் அவர்கள் வேறுபடுத்தப்பட்டுள்ளனர். இவைகள் மூலம் பிரிவுப் பிரச்னை ஹிந்துக்களால் முடிவு செய்யப்பட்டுவிட்டது. இப்போது முஸ்லிம்கள் செய்யவேண்டியதெல்லாம், தங்களைத் தனி சமுதாயமாகக் கருதி நடந்துகொள்ள வேண்டும்; இன்றேல் நாசத்தின் பால் சென்றுவிடவேண்டும். இவ்விரண்டைத்தவிர வேறு வழியில்லை.

ஹிந்துக்கள், இப்போது நாட்டின் மீது புதுமொழியொன்றைப் புகுத்துகின்றனர். சாதாரணமான ஒரு ஹிந்துவுக்கே அதன் அர்த்தம் புரியாது. அரபி, பாரசீகம், துருக்கி மொழிகளை யடிப்படையாகக் கொண்ட நமது மொழிகளை நாம் மறந்து விட வேண்டுமென அவர்கள் கோருகின்றனர். முஸ்லிம்கள் ஒரு காலத்தில் ஹிந்துக்களை ஆண்டுவந்தனரென்ற எண்ணமே ஹிந்துக்களிடையே ஏற்படக்கூடாதென்று அவர்கள் காரணம் கூறுகின்றனர். நாகரிகம் மிக்க எல்லா நாடுகளிலும் கோயில்கள் பள்ளிக்கூடங்

கள், ஆஸ்பத்திரிகள் முதலியவைகளைச் சுற்றிலும் அமைதி நிலவவேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது. ஆனல், ஹிந்துக்களோ, நமது மஸ்ஜிதுகளுக்குமுன் தம்பட்டம் அடிக்க உரிமையும், சுதந்திரமுமிருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். நம்முடைய ஆகாரமாக அனுமதிக்கப்பட்டுள்ள பசுவைப் புனிதமானதாக நாம் வணங்கவேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர். (இந்தப் பழைய கோட்பாடுகளை நாசமாக்குமாறு குர்ஆன்ஷரீப் நமக்குப் போதிக்கிறது. இஸ்லாம் மதம் அந்நிய நாட்டில் பிறந்ததாம்; ஒரு நல்ல இந்திய தேசாபிமானி இந்தியாவில் தோன்றிய மதத்தையே பின்பற்ற வேண்டுமாம். இதற்காக நாம் இஸ்லாம் மதத்தை விட்டுவிடுமாறு அவர்கள் கோருகிறர்கள். நம்முடைய தற்போதைய பெயர்களெல்லாம் அந்நிய நாட்டிற் பிறந்தவைகளாயிருப்பதால் நம்பெயர்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர். நாம் எங்கேதான் நிற்கவேண்டுமோ?

இப்போது இங்கு ஒரு "மொத்த" யுத்தம் நடைபெறுகிறது. பெருமையுள்ள முஸ்லிம் இதற்கு ஒரே ஒரு பதில்தான் தரமுடியும். அதுதான் புரட்சி. "காங்கிரஸ் சர்க்கார்கள் நம்மை இவ்வளவு மிருகத்தனமாக நடத்தியது நம் அதிர்ஷ்டந்தான். அவர்கள் மட்டும் நம்மை தாராளமாக நடத்தியிருந்தால், தாராளமனதும், சாந்தமும் நிரம்பிய முஸ்லிம்களாகிய நாம் நாசமாகி விட்டிருப்போம்" என்று பீஹார் முஸ்லிம் ஒருவர் என்னிடம் கூறினர். நாமனைவரும் காங்கிரஸில் ஒன்றுபட்டுவிட்டிருப்போமென்றும் அவர் கூறினர். முஸ்லிம்களை எதிர்த்து ஹிந்துக்கள் செய்து வந்த போரும், இப்போது செய்துவரும் போரும் "மொத்த" யுத்தமேயாகும். இந்த "மொத்த" யுத்தமே

முஸ்லிம்களை ஒன்றுபடுத்தி, ஒரே கட்டுப்பாட்டிலாக்கி, தங்களுக்கென தனி அரசுரிமைப் பிரதேசம் வேண்டுமெனக் கோரும்படி செய்தது. மாகாண சுயாட்சி நடைபெறும்போதே இந்த கதியாக இருக்கிறது. 1935ஆம் அரசியலின் சமஷ்டிப்பகுதி புகுத்தப்பட்டு, மத்திய நிர்வாகத்தில் ஹிந்துமய ஆட்சி ஏற்பட்டால் நம் கதி என்னவாகும்? இதுதான் முஸ்லிம்களின் கேள்வி. இன்று காங்கிரஸ் சர்க்கார்கள் நிர்வாகம் நடத்தும் மாகாணங்களில் நடைபெறுவதுபோன்றே சமஷ்டி அரசியலின் கீழுள்ள மத்திய ஹிந்து சர்க்காரும், நீதி, நேர்மையொன்றும் பாராமல், தன் எண்ணிக்கை பலத்தால் தன் அதிகாரத்தைக் கருணையற்ற முறையில் பிரயோகித்து, முஸ்லிம் மாகாண சர்க்கார்களை அடக்கிவிடும். மத்திய அசெம்பிளி காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேசாய், 1938ஆம் அக்டோபர்மீ 23வயன்று அசெம்பிளிக் கூட்டத்தில் லீக் அங்கத்தினர்கள் அமர்ந்திருந்த பகுதியைச் சுட்டிக் காட்டி, "அதோ அந்தப் பகுதி மறைந்துவிடக் கூடிய காலம் சீக்கிரத்தில் நெருங்கிவருகிறது" என்று கூறியிருக்கிறார்.

இஸ்லாம் மதம் அரசியலும், வைதீகமும் இரண்டறக் கலந்த மதமே. எனினும் இந்திய முஸ்லிம்கள் மட்டும் அரசியல் சிந்தனைசக்தி குறைந்தவர்களாகவே இருந்து வந்தனர். ஆனால், அவர்கள் வசித்துவந்த உலகம் அவர்களைச் சும்மாவிடவில்லை. முஸ்லிம்கள்மீது ஹிந்துக்கள் தொடுத்த "மொத்த" யுத்தம் அவர்களை அதிர்ச்சிக்குட்படுத்திவிட்டது. 1937-ம் வருஷத்தில் முஸ்லிம்கள் திகைப்பும், ஆச்சரியமும்கொண்டவர்களாக ஆயினர். 1938-ல் முஸ்லிம்கள் மனதில், தாங்கள் ஹிந்து முஸ்லிம்

பொதுச் சமுதாயத்தில் இடம்பெற முடியாதென்ற எண்ணம் தோன்றியது. அந்த ஆண்டின் இறுதிக் காலத்தில், இந்தியாவில் இரண்டு சமுதாயங்களிருக்கின்றனவென்ற கோஷம் நாடெங்கும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. எங்கு நோக்கினும் முஸ்லிம்கள் தனிச் சமுதாயத்தினரே என்ற கோஷம் தாண்டவமாடியது. இந்திய முஸ்லிம்களின் இந்த உணர்ச்சி அவர்களின் சரித்திரத்திலேயே ஒரு முக்கியாம்சமானது. ஒரு சமுதாயமென்பது ஒரு வெடி மருந்துச் சரக்கென்றும், வெடிக்காமல் இரு வெடிமருந்துச் சரக்குகளை ஒரே குழலில் போடுவது சாத்தியமில்லையென்றும் நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனிச் சமுதாய வெடிமருந்துகளாக வளர்ச்சியடைந்து விட்டனர். ஒவ்வொரு சமுதாயமும், பிற சமுதாயத் தலையீடும் முட்டுக்கட்டையும், தடங்கலுமின்றி சுயேச்சையாக வாழ விரும்புகிறது. இவ்விரண்டையும் ஒன்றாக ஒரே சமுதாயமாக நிர்ப்பந்தப்படுத்தி சேர்த்து விட்டால், நிச்சயம் வெடித்துவிடும். அதனால், நாடு ஆயிரம் சுக்கல்களாக சின்னாபின்னப் பட்டுவிடும். மிகப்பயங்கரமான இரத்தக் களறி நிரம்பிய உள்நாட்டு யுத்தம் ஒன்று ஏற்படும். ஆணை ஆண் எதிர்ப்பான்; பெண்ணைப் பெண் எதிர்ப்பாள்; குழந்தையைக் குழந்தை எதிர்க்கும். 1942 கோடை காலத்தில் இந்நாடு ஆண்டவன் வசமோ, அராஜகத்தின் வசமோ ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மகாத்மா கூறியதுபோன்ற தன்மையுடைய உள்நாட்டு யுத்தமே ஏற்படும்.

பாகிஸ்தான் விளக்கங்களில் இது ஒன்று. உலகிலேயே பூண்டற ஒழிக்கப்பட்டுவிட வேண்டுமென்று ஒரு சாரார் பயமுறுத்தப்படுகின்றனர். அவர்கள் தற்காப்பை முன்

விட்டு எழுந்துள்ளனர். நிர்மூலப்படுத்தப்படுவோம் என்ற அபாயமின்றி மற்றொரு சமுதாயத்துடன் ஓரே வீட்டில் வாழ அது சம்மதிக்கமுடியாது. இதுவரை தன்னுணர்வற்று வாழ்ந்து வந்த மக்கள், இப்போது அரசியலில் விழிப் புணர்ச்சியைப் பெற்றுவிட்டனர். இன்று அது ஒரு சமுதாயமாகிவிட்டது. "சமுதாய உணர்ச்சி" என்று கூறப்படும் உணர்ச்சியை அது வளர்த்துக்கொண்டு விட்டது. இந்தியாவின் மண்ணில் தனக்கும் ஒரு சொந்த இடம் வேண்டுமென்று அச்சமுதாயம் கோருகிறது. தனி சுயாட்சியும், பிறர் தலையீடும், தடங்கலும், முட்டுக்கட்டையு மில்லாத சுதந்தரம் வேண்டுமென அது கேட்கிறது.

பாகிஸ்தான் விளக்கங்களில் இதுவும் ஒன்று. ஆனால், இன்னும் இதைவிட உயர்ந்த அர்த்தமும் மற்றொன்றுண்டு.

சிப்பாய் கலகத்திற்குப் பின்னர், இந்தியாவில் இஸ்லாம் பாதுகாப்புத் தன்மைவாய்ந்ததாகிவிட்டதென் பதை நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அந்த சந்தர்ப் பத்தில் வெளியான இலக்கியங்களெல்லாம் பாதுகாப்புத் தன்மையும், மன்னிப்பும் பொதிந்தனவாய் காணப்பட்டன. அரசியல், மதம் முதலிய ஒவ்வொன்றிலும் அவர்கள் பாதுகாப்பு நிலைமையில்தான் இருந்தனர். சர் சையத் அகமதுகான், மௌலவி சராக்அலி, சையத் அமீர்அலி முதலியோரெல்லாம் மன்னிப்புக் கோரும் தன்மைவாய்ந் தோராகவே காணப்பட்டனர். இவர்கள் ஆக்கிரமிப்புத் தன்மையடைய ஒரு வழியும் காணப்படவில்லை நவீனகால முன்னேற்ற வாழ்விற்கு இஸ்லாம் முட்டுக்கட்டையாக இல்லை என்று கூறும் அளவோடு அவர்கள் நின்று விட்டனர். ஆனால், எல்லாம்வல்ல ஆண்டவன், தன்னருளை

நம்பால் சுரந்து நம்மிடையே டாக்டர் முஹம்மது இக்பால் என்ற ஒரு பூசுரரைத் தோற்றுவித்தான். அவர் மானிட ஆராய்ச்சியில் ஈடுபட்டு மனிதவாழ்வையும், அதன் பிரச்னை களையும் பூரணமாக நிதானிக்க முற்பட்டார். அவர் தம் கோட்பாடுகளுக்கு பரிசுத்த குர்ஆன்ஷரீபிலிருந்தும், இஸ்லாத்தின் பண்டைய சரித்திரங்களிலிருந்தும் ஆதா ரங்கள் திரட்டினர். இதர எல்லா தத்துவங்களைக் காட் டினும் இஸ்லாத்தின் தத்துவங்களே நிச்சயமானதும், புனிதமானதுமாகுமென அவர் கூறினர். அது ஒன்றே வாழ்வின் உண்மைத் தத்துவமென்றும், இஸ்லாமல்லாத இதர ஒவ்வொன்றும் பொய்யானதும், போலித்தன்மை யானதுயாகுமென்றும் அவர் சொன்னர். இஸ்லாத்தின் மதிப்பை 19-ம் நூற்றாண்டில் நிதானித்த அளவுகோல் தவருனது. இஸ்லாத்தின் மதிப்பு நிரந்தரத் தன்மை வாய்ந்தது. மேற்கு உலகம் பல முன்னேற்ற வளர்ச்சிகளை உடையதாயிருப்பினும், அது அழிந்துவிடும்; இஸ்லாம் ஒன்றே நிலைத்திருக்கும். இவ்வாறெல்லாம் டாக்டர் இக்பால் வெளியாக்கிய உண்மைகள் இஸ்லாத்திற்குத் தனி அரசியல் தத்துவமும், தனிச்சமுதாயத் தன்மையும் பொருந்தியதென்பதை அவர் போதனை செய்தார். இதர நாட்டு மக்கள் எல்லாம் ஜாதியையோ, பிரதேசத்தையோ அடிப்படையாகக்கொண்ட சமுதாயத்தினர்களாவர். இத ஞல்தான் அவர்களுக்கிடையே யுத்தங்களும், இரத்தக் களறிகளும் ஏற்பட்டன. இஸ்லாமியச் சமுதாயமோ வெனில் சர்வதேசத் தன்மைவாய்ந்த ஒரு இலட்சி யத்தையடிப்படையாகக் கொண்டதாகும். உலக மானிட வர்க்கத்திற்கு அதில் இடமிருந்தது. உலக சமாதானத் திற்கு இதுவே ஒரு அஸ்திவாரமாகவும் அமைந்திருக்

கிறது. ஆண்டவனும், சரித்திர தத்துவார்த்தங்களும் இஸ்லாமிய மக்கள்மீது பெரும் பொறுப்புவாய்ந்த கடமைகளை விதித்திருக்கின்றனர். அக்கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், தங்கள் சுய பாதுகாப்புக்காகவும் இந்திய முஸ்லிம்கள் தங்களின் தனிச் சமுதாயத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுவதும், இதர அரசியல் ஸ்தாபனங்களில் கலந்துகொள்ளாமல் விலகியிருப்பதும் அவசியமாகும்.

முதன் முதலாக தேசியம் என்பது தனிப்பட்ட ஓர் உள்ளத்தில் தோன்றி, நாளடைவில் எல்லோரிடையேயும் பரவி, "சமுதாய உணர்ச்சி"யாக மாறுகிறது. முஸ்லிம்களாகிய நம்மிடையே அது இக்பாலின் ஆன்மாவில் தோன்றியது. இதனுல்தான் நான் அவரைப் பாகிஸ்தானின் தந்தையென்று கூறியிருக்கிறேன்.

ஆனுல், முல்லாககள், சூபிகள் முதலியோரின் பழக்க வழக்கங்களிலேயே பல நூற்றுண்டுகளாக ஊறிப்போயிருந்த மக்கள், அவரைச்சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. அவரது மரண பரியந்தம் முப்பது ஆண்டுகளாக அவர் முஸ்லிம் சமுதாயத்திற்கு இடித்திடித்து அந்த உண்மையைக் கூறிக்கொண்டிருந்தார் முஸ்லிம்மக்களும் அவரது கூற்றுகளைக் கவனிக்க வேண்டிய சந்தர்ப்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1938-ம் வருஷத்தில் தனிசுயாட்சித்தாயகம் வேண்டுமென முஸ்லிம் சமுதாயத்தின் கொடியை உயர்த்தியவர்களெல்லாம் கவிஞர் இக்பாலின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டவர்களேயாவர். ஜனுப் ஜின்னு அவர்கள், 1940 ஜனவரி மாதத்தில் "டைம் அண்டுடைட்" பத்திரிகையின் விசேஷ வேண்டுகோளுக்கிணங்க அப்பத்திரிகைக்கு இந்தியாவின் அரசியல் தன்மை என்பது பற்றி ஒரு கட்டுரை

வரைந்திருந்தார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு தனித்தனி சமுதாயத்தினரென அவர் அதில் கூறிய வார்த்தைகள், இந்திய முஸ்லிம்கள் ஒரு தனிச்சமுதாய மாக ஒப்புக் கொள்ளப் படவேண்டுமென அரும்பாடு பட்டு வந்த நமக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தந்தது.

1940 ஹு மார்ச்சு மாதத்தில் அகில இந்திய முஸ்லிம் லீக் லாகூர் மகா நாட்டில் பாகிஸ்தான் தீர்மானம் நிறை வேற்றப் பட்டதல்லவா? இத்தீர்மானம் இந்திய முஸ்லிம் கள் மீது திணிக்கப்படுவதற்கான இலட்சியமல்ல. இது ஏற்கெனவே முஸ்லிம்களின் அரசியல் உணர்ச்சிக் கொள் கையாகப் போய் விட்டதை அறிவிக்கும் தீர்மானமே யாகும். அவ்வாறிருந்தும் அத்தீர்மானம் முஸ்லிம் இந்தியாவின் சரித்திரத்திலேயே ஒரு கலங்கரை விளக்காக நிலை பெற்று விடும். நீண்ட காலமாக வெறும் பகற்கன வாகவேயிருந்த ஒரு இலட்சியம் இப்போது திட்டவட்ட மான நிலைபெற்றதாகி விட்டது. திடீரென அரசியல் வானில் ஒரு ஒளி தோன்றி, மக்களின் இலட்சிய வழி காட்டியாக நிற்பது போல் காணப்பட்டது. இந்தியா வெங்கும் உள்ள முஸ்லிம்களின் உள்ளத்தில் ஒரு கிளர்ச் சியை ஏற்படுத்தியது அத்தீர்மானம். முஸ்லிம்லீக் இலட்சியத்தை ஆதரித்தவர்கள் மட்டுமின்றி, இதர முஸ்லிம்களும் கூட இத்தகைய மனக்கிளர்ச்சி பெற்றனர். இந்த இலட்சியத்தை ஒப்புக்கொள்ளாத அல்லது மறுக்கும் தைரியம் கொண்ட முஸ்லிம்கள் எவரும் இன்று இந்தியாவிலேயே கிடையாதெனக் கூறு வது பொருந்தும். முஸ்லிம்லீக்கைப் பலமாக எதிர்ப்பவர் களில் சிலருங்கூட லாகூர் தீர்மானத்தை ஆதரித்து நிற்கின்றனர்.

பாகிஸ்தான் இலட்சியம் முஸ்லிம்களின் மனக் கனவை கொழுந்து விட்டெரியச் செய்தது. அவர்கள், பாகிஸ்தானில் நூதனத்தையும் எல்லையற்ற சாத்தியத் தையும் கண்டனர். இக்பாலின் வார்த்தைகளால் தூண்டப்பட்ட முஸ்லிம்கள், நாயகம் (ஸல்) அவர்களை யும் ஹஜரத் அபூ பக்ர் (ரலி) அவர்களையும் ஹஜரத் உமர் (ரலி) அவர்களையும் நோக்க முற்பட்டனர். இக்பாலின் கருத்துக்கு புதியதோர் வியாக்கியானத்தைக் கண்டனர். பாகிஸ்தான் என்பது அடக்கு முறையற்ற சுதந்தரப்பிராந்தியமாகவும், அநீதி, சுரண்டல், சுய நலம், வறுமை, பொறுமை முதலிய எவையுமில்லாத புனித பூமியாகவுமிருக்குமென அவர்கள் கருதுகின்றனர். இதரர்களின் உழைப்பால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு தின்று கொழுக்காமல், இதரர்களின் நன்மைக் காகவே உழைக்கும் மக்களைக் கொண்டதாகவே இப்பூமி இருக்கும். பிறப்புக்கோ, செல்வதிற்கோ இதில் செல் வாக்கிராது. வறுமைக்கு இவ்விடத்தில் கேவலமில்லை. வறுமையும், பட்டினியும் பொதிந்த பரம ஏழையின் மகனுக்கு கல்விக்கான வசதிகள் எல்லாம் செய்து தரப் படும். அவனுடைய திறமைக்குத்தக்க முன்னேற்ற மளிக்கப்படும். வறுமை, அறியாமை, பட்டினி முதலி யவையெல்லாம் அடியோடு அகற்றப்படும். அஃது ஒரு இஸ்லாமிய அரசாங்கமாக இருப்பினும், பிரஜா உரிமை களிலோ, பொருளாதார சலுகைகளிலோ பிரஜை களிடையே முஸ்லிம், முஸ்லிமல்லாதார் என்ற வித்தி யாசம் பாராட்டப் படமாட்டாது. இந்த மகோன்னத மான அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் ஒரு புதுப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். "ஹுகுமத் -இ-இலாஹி" அல்லது

“ஆண்டவனின் அரசாங்கம்” என்பதுதான் அந்தப் பெயர். ஆங்கிலமறியாதாரும், அரசியல் கொள்கைகளைப்பற்றிய வரலாறுகளை உணராதவர்களும், இது போன்ற வார்த்தைகளின் பதவுரைகளால் தவறான வழியில் சென்றவர்களுமான சிலர் இப்பெயரைக்கண்டு “வைதீகம்” என்று கூறிவிடலாம். ஆனால், இஸ்லாமிய அரசாங்கம் ஒரு “வைதீகம்” ஆனதல்ல. நாயகம் (ஸல்) அவர்களுடையவும் அவர்களுடைய நான்கு கலீபாக்களுடையவும் தலைமையின் கீழ் நடை பெற்ற அரசாங்கம் ஜனநாயகமாக இருந்ததேயன்றி, வைதீகமானதாக இல்லை. அரசாங்கத்தில் வைதீக இலட்சியங்கள், இவர்களுக்குப் பின் வந்த அப்பாஸியர்களால், தங்கள் வமிசத்தினருக்கு லாபம் தேடிக் கொள்வதற்காகப் புகுத்தப்பட்டன. இது பரிசுத்த குர்ஆன் ஷரீபின் கட்டளைகளுக்கும், நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக்கும், கலீபாக்களான நால்வரின் நடைமுறைகளுக்கும் ஏற்றதாக இல்லாமையால், இஸ்லாத்தில் ஆழப்பதிந்து விடாமல் போய்விட்டது. நாளடைவில் இக்கொள்கை கொஞ்ச கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்தொழிந்தது. இப்போது சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் மௌலானா அபுல் ஆலா மவுதூதி இதை மீண்டும் புனருத்தாரணம் செய்தார். ஆனால், அவர் அப்போது முஸ்லிம்லீக்கின் பரம எதிரிகளில் ஒருவராக இருந்தார். இஸ்லாமிய அரசாங்கம் ஜன நாயகத் தன்மைவாய்ந்தது. அதன் பிரஜைகள் “நாமே அரசாங்கம்; நமதே அரசு” என்று கருதி, கூறும் உரிமையுள்ளவர்களாயிருப்பர்.

பாகிஸ்தான் என்பதன் இரண்டாவது விளக்க அர்த்தம் இதுதான்.

# அத்தியாயம் 8

## —சாதகபாதக விளக்கவுரை—

**நாம்** ஒரு தனிச் சமுதாயத்தினரே என்ற கோஷம் 1938-ம் ஆண்டில் நாடெங்குமுள்ள முஸ்லிம்களிடையே சங்கநாதம் செய்ததென்று சென்ற அத்தியாயத்தில் கூறியிருக்கிறேன். இவ்வாறு சங்கநாதம் எழுந்ததற்குப் பிரசாரம்தான் காரணம் என்றோ, யாரோ ஒரு சுயநலவாதியால் முஸ்லிம் சமூகத்தின்மீது ஏதோ ஒன்று திணிக்கப்பட்டதே காரணம் என்றோ கூறப்படுமாயின், அது சரித்திரப் பூர்வமான உண்மைக்கு முரணாகும். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் எப்போதும் தனித்தனிச் சமுதாயத்தினராகவே வாழ்ந்து வந்துள்ளனர். ஒரு ஹிந்து, தன் மதத்தைவிட்டு இஸ்லாம் மதத்தில் பிரவேசித்தால், அவன், தன் பூரண உணர்வுடனும், ஒரு சமுதாயத்தை உதறித்தள்ளி, வேறு புதிய சமுதாயத்தில் புகுகிறோமென்ற உணர்ச்சியுடனுமே சேருகிறான். நாம் தொடர்பு கொண்டுள்ள அந்த மேனாட்டுத் தொடர்பால் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சிதான், இந்த அமைதியான சமுதாய வாழ்க்கையைக் குலைத்து, தேசீய உணர்ச்சியை அளவுக்கதிமாகத் தூண்டி எழுப்பிவிட்டது. ஹிந்துக்களையே இந்த உணர்ச்சி முதலில் பற்றியது. அவர்கள், தங்கள் ஜாதி உயர்ந்ததென்றும், பழைய சமூக கலாசாரமுடையவர்களென்றும் கூறிக்கொண்டனர். பின்னர்தான் முஸ்லிம்களையும் இவ்வுணர்ச்சி பற்றிக்கொண்டது. 1938-ம் ஆண்டில் இந்த உணர்ச்சி, முஸ்லிம்களிடையே போதுமான அளவு

வேரூன்றிவிட்டது. இந்த தேசிய உணர்ச்சி, தனிச் சுதந்திர அரசியல் வாழ்வை அனுபவிக்க ஆவலாகப் பரிணமிப்பது இயற்கையேயாகும். திடீரென்று உடற்பூர்வமாக ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிப்பது சாத்தியமில்லை. 1939-ல் இதற்காகத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன. இவைகள் ஒரு தனி முஸ்லிம் அரசாங்கத்தை நிர்மாணிப்பதையோ, அல்லது முஸ்லிம்களை ஒரு தனியாட்சி சமுதாயமாகச் செய்வதற்கான அரசியல் ஏற்பாட்டையோ குறிக்கோளாகக் கொண்டிருந்தன. முஸ்லிம்கள் ஒரு தனிச் சமுதாயத்தினரென்ற அடிப்படையையே இந்த அரசியல் ஏற்பாடுகள் வற்புறுத்துவதாக இருந்தன. இத்தகைய திட்டங்களில் (இடமின்மையை முன்னிட்டு) ஒரு சிலவற்றைப்பற்றி மட்டும் இங்கு வெளியிட விரும்புகிறேன்.

முதன்முதலில் வெளியான திட்டம் டாக்டர் அப்துல் லத்தீபின் திட்டம். கலாசார பூர்வமாக தனியாகப் பிரிக்கப்பட்ட பல சுயாட்சிப் பிரதேசங்களடங்கிய சமஷ்டி அல்லது மகுடசமஷ்டி அரசியலை டாக்டரின் திட்டம் வற்புறுத்தியது. டாக்டர் அப்துல் லத்தீபின் திட்டம் இதுதான்: இந்நாடு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படவேண்டும். (1) வடமேற்குப் பகுதி; (2) கிழக்கு வங்காளப் பகுதி (3) தக்காணமும், ஹிந்துமதத்தினர் வாழும் பிராந்தியங்கள் சூழ்ந்த கடலில் உள்ள சிதறுண்ட சிறு தீவுகளுமடங்கிய பகுதி. நிர்வாக பூர்வமான பிரதான அதிகாரங்கள் எல்லாம் அந்தந்தப் பகுதியின் வசமேயிருக்கும். அயல்நாட்டு உறவுகள், வர்த்தகம், பாதுகாப்பு போன்ற குறைந்தபட்சமான விஷயங்கள் பற்றிய அதிகாரங்கள் மட்டுமே மத்திய நிர்வாகத்திலிருக்கும். ஒவ்வொரு சமஷ்டிப் பகுதியும் "மத்திய நிர்வாகத்தின் மேற்பார்வைக்

குட்பட்ட'' தங்கள் தங்கள் சொந்த இராணுவத்தை மட்டுமே கொண்டதாக இருக்கும்; ஆனால் கடற்படை மட்டும் மத்திய நிர்வாகத்தின் பூரண பொறுப்பின் கீழிருந்து வரும். முஸ்லிம்கள், தங்கள் கலாசாரப் பகுதிக்கும், ஹிந்துக்கள் தங்கள் கலாசாரப் பகுதிக்கும் மாறி வாழும்படி செய்வதற்கான பொதுஜன மாற்று ஏற்படும். வர்த்தகம், கைத்தொழில் முதலிய சில இன்றியமையாத காரணங்களை முன்னிட்டு, சில முஸ்லிம்கள் ஹிந்துப் பிராந்தியங்களிலும், சில ஹிந்துக்கள் முஸ்லிம் பிராந்தியத்திலும் வசிக்க விரும்பக்கூடும். ஆதலால், முஸ்லிம் பிராந்தியங்களிலுள்ள ஹிந்துக்களையும், ஹிந்துப் பிராந்தியங்களிலுள்ள முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக விசேஷ சட்டங்கள் இயற்றப்பட்டு, பிரத்தியேகமான பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்படுவர் இவ்வாறு செய்வதன் மூலம் பொதுஜன மாற்றம் அவசியமில்லாது போய்விடவும் கூடும்.* பிற மதத்திலிருந்து இஸ்லாம் மதத்தில் மாறுவதன் மூலம் இஸ்லாத்தை வளர்ச்சியுறச் செய்யவேண்டுவது இஸ்லாத்தின் கடமையாகும். இந்த மதமாற்ற வளர்ச்சிக்கு டாக்டர் லத்தீபின் திட்டத்தில் இடமில்லை. ஹிந்து, முஸ்லிம் இரு கலாசாரங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டால் மத மாற்றம் என்ற பிரச்னைக்கு இடமே ஏற்படவில்லை. தன் மதத்தை மாற்றிக்கொள்ள விரும்பும் ஒருவன் இத்திட்டப்படி ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்திற்குக் குடியேறவேண்டும். ஆதலால், மதமாற்றத்துக்கு இத்திட்டத்தில் வசதியில்லாமலிருந்தது. இதனால், இஸ்லாம்,

* டாக்டர் லத்தீபின் திட்டத்தில் பொதிந்துள்ள இம்முரண்பாட்டை டாக்டர் பேனிபிரசாத்கூட கவனித்திருக்கிறார். "ஹிந்து முஸ்லிம் பிரச்னைகள்", பக்கம் 82.

தன் கோட்பாடுகளில் ஒன்றை இழந்துவிடுகிறது. உண்மையில் இத்திட்டம் இஸ்லாத்தைச் சிறையில் அடைத்து விடுகிறது.

டாக்டர் லத்தீப் ஓர் இலக்கிய மாணவர்; ஆதலால், ஹிந்து முஸ்லிம் பிரச்னையை ஒரு கலாசாரப் பிரச்னையாக அவர் கருதுகிறார். இந்தத் தவறுதான் அவருடைய திட்டம் முழுவதையும் பழுதாக்கிவிடுகிறது. இரு கலாசாரங்களும் வேறுபட்டவையே. எனினும், இருவரும் தனித்தனியே பூமறைத்துக்கொண்டு வெவ்வேறாகப் பிரிந்து வாழக்கூடிய அவ்வளவு தூரம் பிரிந்து வாழவேண்டியவர்களல்ல. இவ்வாறு அதிக வேறுபாடுடையவைகளாய் அவை இருந்திருக்குமாயின், அவைகளில் ஒன்று இதுநாள்வரை நசித்துப்போயிருக்கும். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் வேறுபட்டவாகளாயிருப்பினும், பல நூற்றாண்டுகளாக பரஸ்பர அனுதாபமும், நல்லெண்ணமும் கொண்டு ஒருவருக்கொருவர் பக்கத்தில் வாழவைத்த ஆபூர்வசக்தி ஏதோ ஒன்று இருக்கவே செய்தது. இரண்டு சமுதாயத்தினருக்கும் பொதுவான ஒரு சகிப்புணர்ச்சி யிருந்தது. இவ்வுணர்ச்சி அவர்களுக்கு அத்தியாவசியமானது. இவ்வுணர்ச்சி இல்லையாயின், ஹிந்து கலாசாரம் உண்மையான ஹிந்துமயமாகவோ, முஸ்லிம் கலாசாரம் உண்மையான முஸ்லிம் மயமாகவோ இருந்திருக்க முடியாது. ஐரோப்பியர்கள் இதைத்தான் உணரமுடியவில்லை; அல்லது உணர விரும்பவில்லை. இவ்வாறிருக்கையில் நம் எழுத்தாளர்களும், அரசியல் அறிஞர்களும், தலைவர்களும் மேனாட்டு எழுத்தாளர்களிலிருந்து தங்களுக்கு ஆதாரங்கள் தேடிக்கொள்வது இந்நாட்டின் துரதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். ஹிந்து முஸ்லிம் பிரச்னை மதப்பூர்வமானதோ, அல்லது கலாசாரப்

பூர்வமானதோ அல்ல. அது அரசியல் பூர்வமானது. மேனாட்டு அரசியல் விஷயங்கள் ஊறிப்போய்விட்ட உள்ள முடையவர்களிடையேதான் இப்பிரச்னை அதிகமாகக் காணப்படுகிறது. கல்வியின்மையாலோ, சுத்தப்பட்டிக் காட்டுப் பிரதேசங்களில் வசிப்பதாலோ இந்த சாபத்திற்கு உட்படாதவர்களுக்கு ஹிந்து-முஸ்லிம் பிரச்னை ஒன்றிருப் பதாகவே தெரியாது. காங்கிரஸும், ஆரியசமாஜமும் தலை கீழாக நின்று, விரிவான பிரசாரங்கள் செய்துவந்தபோதி லும் இத்தகைய மக்கள் இன்னும் இருந்தே வருகிறார்கள்.

ஹிந்து முஸ்லிம் பிரச்னை பூரண அரசியல் தன்மை வாய்ந்தது. சுருக்கமாக இங்கு கூறுவோம். ஹிந்துக்கள் பெரும் பான்மை ஆட்சி உரிமையைக் கோருகின்றனர். முஸ்லிம்கள் அதை ஏற்க இயலாது. ஏனெனில், பெரும் பான்மை ஆட்சி என்பது ஹிந்து ராஜ்யமே. இந்த ஹிந்து ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காக ஹிந்துக்கள், முஸ்லிம் களுக்கு விரோதமாக ஒரு "பொது யுத்தம்" தொடர்ந் திருக்கின்றனர். முஸ்லிம்கள் இதனை எதிர்த்தேயாக வேண்டும். பெரும்பான்மைச் சமூகம் ஹிந்து ராஜ்யக் கனவை விட்டொழிக்கும்வரை ஹிந்து, முஸ்லிம் சமு தாயங்களுக்கிடையே சமாதானமோ, ஒப்பந்தமோ ஏற் படமுடியாது. முஸ்லிம்கள், தங்கள் கலாசாரத்திற்காகப் பயப்படவில்லை. கலாசாரப் பிரிவினை ஒரு ஹிந்துராஜ்யத்தில் பாதுகாப்பாக இருக்க முடியாது. ஆதலால் முஸ்லிம்கள் அரசியல் அடக்குமுறைக்காகவே அஞ்சுகின்றனர். டாக்டர் லத்தீப் பரஸ்பர நல்லெண்ணத்திற்கு அதிகமாக இட மளித்துவிடுகிறார். அடக்குமுறைத்தன்மை வாய்ந்த தேசீயம் நல்லெண்ணத்தை ஏற்படுத்திவிடாதென்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஹிந்து தேசீயம்

என்பது பாஸிஸ்ட் இத்தாலி அல்லது நாஜி ஜெர்மனி போன்றதாகுமென்பது நன்கு நிரூபிக்கப் பட்டுவிட்டது. ஹிந்து தேசீயத்தின் இந்த அடக்குமுறையை முன்னிட்டு, ஹிந்து முஸ்லிம் பிரச்னை என்பதே இல்லாமலிருக்க வேண்டும்; அல்லது தீர்க்கப்பட எளிதாகச் செய்யப்பட வேண்டும்.

ஹிந்துக்கள், தங்கள் மனப்பூர்வமாக பெரும்பான்மை உரிமையை விட்டுக் கொடுக்காதவரை ஒரு சமஷ்டிப் பூர்வ மான நிர்வாகம் ஹிந்து ராஜ்யமாகவே இருக்கும். ஹிந்துக் கள் இவ்வாறு விட்டுக்கொடுப்பார்களென்ற நம்பிக்கைக்கு இடமில்லை. இதனால், வெகு சீக்கிரத்தில் முஸ்லிம்களின் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும். நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்க வேண் டியதில்லை. ஹிந்து மகாசபையினர் இதை அழுத்தந் திருத்தமாக வீட்டுக் கூரைகள்மீதிருந்து கூறிவருகின்றனர். ஆறு மாகாணங்களில் 27 மாதங்களாக நடைபெற்ற காங் கிரஸ் ஆட்சி இவ்விஷயத்தைத் தெளிவாக நிரூபித்து, தங்கள் கனவு நினைவாவதற்கு என்ன முறைகளைக் கையாளுவதென்பதையும் பிரத்தியட்சமாகக் காட்டிவிட் டது. ஹிந்துக்களால் ஆக்கிரமிக்கப்படும் ஒரு மத்திய சமஷ்டி நிர்வாகம் தங்களை யொழித்துவிடுமென முஸ்லிம் கள் கருதுகின்றனர். டாக்டர் லத்தீபுக்கும் இந்த அச்சம் தோன்றியிருக்கிறது. இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்கு அவர் இரண்டு யோசனைகளைக் கூறியிருக்கிறார்: (1) சமஷ்டி இனப்பகுதிகள், தங்கள் சொந்த இராணுவங்களை வைத்துப் பராமரித்துக் கொள்ளலாம். (2) மத்திய நிர் வாக அதிகாரங்கள் மிகமிகக்குறைந்த பட்சமானவைகளாக இருக்கவேண்டும். மாகாண இராணுவங்கள் மத்திய நிர்

வாகத்தின் மேற்பார்வையின் கீழும், கடற்படை பூரணமாக மத்திய நிர்வாகத்தின் கீழுமிருக்குமாதலால், ஒரு அடக்கு முறைமயமான மத்திய நிர்வாகத்தின்கீழ் சமஷ்டிப் பிராந்தியங்கள் சுபிட்சமாக வாழுமெனக் கூறுவது வெறும் கேலிக்கூத்துதான்.

மத்திய சர்க்காரின் அதிகார வரம்புகள் சம்பந்தமாக சர் பெரோஸ்கான்நூன், 1942 ஆகஸ்ட் மாதத்தில் செய்த பிரசங்கத்தில் இதுபோன்ற திட்டமொன்றை வெளியிட்டார். இவ்விரண்டு திட்டங்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டு பரிசீலனை செய்வது நல்லதாகும். சர் பெரோஸ், இந்தியாவை 5 "டொமினியன்" (மாகாணங்கள்) களாகப் பிரிக்கவேண்டுமென யோசனை கூறியிருக்கிறார். அந்த ஐந்து மாகாணங்கள் வருமாறு:—(1) வங்காளமும் அஸ்ஸாமும். (2) மத்தியமாகாணம், ஐக்கிய மாகாணம், பீஹார். (3) சென்னை. (4) பம்பாய். (5) பஞ்சாப், சிந்து, பலூச்சிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புறம். பாதுகாப்பு, சுங்கம், அயல்நாட்டு உறவு, நாணயச் செலாவணி முதலிய சில விஷயங்களின் நிர்வாகப் பொறுப்பிற்காக இந்த "மாகாணங்களுக்கு" ஒரு மத்திய நிர்வாக சர்க்கார் இருக்கும். இந்த மத்திய நிர்வாகத்தில் ஐந்து "மாகாணங்களின்" சர்க்கார்களுடைய பிரதிநிதிகளுமிருப்பர். "மத்திய நிர்வாகத்தில் எப்போதேனும் ஒரு "மாகாணத்" திற்கு அதிருப்தி ஏற்பட்டால், அம் "மாகாணம்" உடனே நிர்வாகத்திலிருந்து விலகிவிட உரிமையுண்டு." என்று சர் பெரோஸ் கூறுகிறார். ஆனால் அவ்வாறு பிரிந்துகொள்ள மத்தியசர்க்கார் அனுமதிக்கவில்லையாயின், விலகிக்கொள்ளும் அதிகாரம் அதற்கு எங்கிருந்துவரும்? இந்த முறையில் அடக்கப்பட்ட "மாகா

ணம்'', தன் பிரிவினை உரிமைக்காக மத்திய சர்க்கார்மீது வழக்குதொடர எவ்வித நீதிமன்றமும் கிடையாது. இனி யாவது இந்நீதிமன்றம் ஏற்படுமென்று கூறுவதற்கு இட மில்லை. அவ்வாறு நேரிடும் காலத்தில் ஒரு உள்நாட்டுப் போர் ஏற்படுமா? அல்லது "வெளிநாடுகளிலிருந்து நம்மீது நேசமுறையான படையெடுப்பு" ஏற்படும்வரை நாம் காத் திருக்கவேண்டுமா?

சமஷ்டி சர்க்கார்கள் எல்லாம், தங்கள் நிர்வாக வட்டத்தின் கீழுள்ள பிராந்தியங்கள் அனுதரவான நிலை மையை அடையும்வரை அவைகளின் அதிகாரங்களையும், செல்வாக்குகளையும் சுரண்டி வந்துள்ளனவென்பதற்கு சமஷ்டி அரசியல் சரித்திரங்கள் சான்று பகருகின்றன. அமெரிக்கா, கானடா, தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் இவ்வாறுதான் நடைபெற்றுள்ளன. இந்தியாவில்மட்டும் வேறுவிதமாக நடைபெறுமென்று கருதுவதற்கு யாதொரு காரணமும் கிடையாது.

டாக்டர் பேனிபிரசாத் பின்வருமாறு கூறினார்:— "தற்போதைய இராணுவகேந்திர நிலையம, ஏகாதிபத்திய யுத்த நிலைமை ஆகியவைகளைக் கவனிக்குமிடத்து, ஒவ் வொருசமஷ்டியும், அயல்நாட்டு விவகாரங்கள், இராணுவம், கடற்படை, விமானப்படை, குடியேற்றம், வெளியேற்றம், தேசியம் முதலிய விஷயங்களை நடத்திவைக்கும் அதிகா ரங்கள் கொண்டதாய் இருக்கவேண்டும். இதிலிருந்து போக்குவாத்து, நாணயச்செலாவணி, மாற்றங்கள் முத லியவை யெல்லாம் மத்திய சமஷ்டியின் கீழிருக்கவேண்டு மென்பது தெளிவாகிறது. இந்தக் கடமைகளை நிறை வேற்றுவதற்காக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கான திட்டங்களை வகுத்துக்கொள்ள சமஷ்டி சர்க்கா

ருக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். ஆதலால், சுங்கம், வரிகள், இன்ஷியூரன்ஸ், சேமிப்பு முதலிய பொறுப்புகள் அதன் வசமிருக்கும். இதே இலட்சியப்படி தொழிலாளர், விவசாயிகள் முதலியவர்களின் சமூக பொருளாதார விஷயங்களை வகுத்து நிறைவேற்ற சட்டங்களை இயற்றவும் இந்த சர்க்காருக்கு அதிகாரங்களிருக்க வேண்டும். மேலும் இதே காரணத்தை முன்னிட்டு நாட்டின் அமைதி, பாதுகாப்புகளுக்கும் சமஷ்டி சர்க்காரே பொறுப்பு ஏற்க வேண்டி நேரிடும். நிர்வாகத்திற்கு ஏற்படும் கடன்கள், உத்தியோகச் செலவுகள், பென்ஷன்கள் முதலியவைகளும் சமஷ்டி அதிகாரத்தின் கீழ் வந்து விடும். கலியாணம், விவாகரத்து, ஸிவில், கிரிமினல் சட்டங்கள், முதலிய பல விஷயங்களில் குழப்பம் ஏற்படாமல் தடுப்பதற்காக மாகாணங்களுக்குப் பதிலாக மத்திய நிர்வாகமே இவைகளுக்கான சட்டங்களை இயற்ற வேண்டி நேரிடும். சர்வே, ஜனக்கணிதம், தொழிற்கல்வி காபிரைட்டுகள், முதலியவை போன்ற பல விஷயங்களில் ஒரே பொதுவான சட்டம் ஏற்பட வேண்டுவது அவசியமாகும்..................ஒவ்வொரு சமஷ்டி நிர்வாகமும், அதாவது பாதுகாப்பு உள்நாட்டு மாகாண ஒத்துழைப்பு முதலியவைகளுக்குப் பொறுப்பான ஒவ்வொரு சமஷ்டி அரசாங்கமும் பெற்றிருக்க வேண்டிய குறைந்த பட்ச அதிகாரங்கள் இவைதான்.''* இதற்குப்பின் அவர் வேறு பல விஷயங்களைக் கூறி, அவைகளும் மத்திய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் பெரும் நலமாயிருக்குமென விவரிக்கிறார். இவைகளின் மூலம் சுடுகாடுகள், தமாஷா

* ஹிந்து முஸ்லிம் பிரச்னைகள்; பக்கம் : 137.

கொட்டகைகள், சர்க்கஸ்கள் முதலியவைகள் மட்டுமே மாகாணங்களின் நிர்வாகங்களில் இருக்கும். உணவு விநியோகம், விலைக்கட்டுப்பாடு, உணவுப் பொருட்கள், கட்டுப்பாடு மற்ற இந்தியா உற்பத்திப் பொருள்கள் முதலி வைகளின் பொறுப்புகளை எல்லாம் இந்திய சர்க்கார் மேற் கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். உண்மையில் போக்குவரத்து சாதனங்களாலும், நவீன அபிவிருத்தி நிலைமைகளாலும் ஒன்றுக் கொன்று நெருக்கம் ஏற்பட் டுள்ள இந்த நவீன கால சர்க்கார்களுக்கு இத்துணை அதிகா ரங்கள் அளிக்கப்பட்டு விட்டால், தனிப்பட்டவர்களும், மாகாணங்களும் சுதந்தரமற்றுப் போய்விடும். ஹிந்துக் களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மத்திய சர்க்காரால் தங்கள் வாழ்வு நிர்ணயிக்கப் படுவதை முஸ்லிம்கள் விரும்ப மாட்டார்கள்.

ஒரு சமஷ்டி அரசியல் பரீட்சார்த்தமாக பத்து அல்லது இருபது வருஷங்களுக்கு அமுல் நடத்தப் பட வேண்டுமென்றும், அந்த கால முடிவில் அச்சமஷ்டியில் இருக்க முடியாதென முஸ்லிம்கள் கருதினால், முஸ்லிம் பெரும்பான்மை மாகாணங்கள் சமஷ்டியிலிருந்து விலகி விடலாமென்று பல்வேறு இடங்களிலிருந்து யோசனைகள் கிளம்பின. ஹிந்துப் பெரும்பான்மை ஆட்சி ஏற்கெனவே ஆறு மாகாணங்களில் பரீட்சை செய்யப் பட்டுவிட்டது. முஸ்லிம்களுக்கு இந்த சமயத்தில் பெரும் நாசகர பாதகங் கள் ஏற்பட்டுள்ளன. இந்த சோதனை மீண்டும் செய்யப் பட வேண்டிய அவசியமில்லை. இரண்டாவது: முஸ்லிம் மாகாணங்கள் ஒரு முறை சமஷ்டி நிர்வாகத்தில் பிர வேசித்து விட்டால், "நேச பூர்வமான வெளி நாடுகளின் தாக்குதல்" உதவியில்லாமல், அதிலிருந்து அவை மீட்சி

படைய முடியாது. பத்தே ஆண்டுகளில் மக்கள் நசுக்கப் பட்டு, மண்ணாக்கப் பட்டு விடுவார். இதுவே கத்தி, ஈட்டி களின் சகாப்தமாயிருந்தால், புரட்சியே ஏற்பட்டு விடும். ஆனால், அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. நவீன ஆயுதங்கள் இப்போது மிகவும் அதிகரித்து விட்டன. அவை, அடிமை மக்கள் புரட்சி செய்வதை அசாத்திய மாகச் செய்து விட்டன. நவீன யுத்த தளவாடங்களை வைத்துக் கொள்வதற்குப் போதிய அளவு பெரியதா யில்லாத சுதந்தர நாடுகள் கூட சக்தி வாய்ந்த தங்கள் அக்கம்பக்க நாடுகள் மீது படையெடுத்து விட்டால், தற் காத்துக் கொள்ளவும் சக்தி யில்லாதிருக்கின்றன. இந்த நிலைமையில், அடக்கு முறை செய்வோரை எதிர்ப் புரட்சி செய்து வெற்றி பெறுவது எங்ஙனம்? "என் வீட்டிற்கு வா" என்று சிலந்திப் பூச்சி ஈயை அழைக்கிறது. இந்த அழைப்பை ஈ ஏற்றுக் கொண்டால் என்ன கதி அதற் கேற்பட்டதென்பதை நாம் அறிவோம். ஈக்கு நேரிட்ட அதே கதி தங்களுக்கும் நேர இந்திய முஸ்லிம்கள் தயாராக இல்லை.

டாக்டர் லத்தீபின் திட்டத்திற்குப் பின், காலஞ் சென்ற சர் சிக்கந்தர் ஹயத்கான் மர்ஹூமின் திட்டம் வெளியிடப் பட்டது. இத்திட்டத்தில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்னையை விட 1935 ஆம் இந்திய சர்க்கார் சட்ட சமஷ்டிப் பிரிவு பற்றியே அதிகமாக விவரிக்கப் பட்டிருப்பதால் நம் முன் தற்போதுள்ள விஷயத்திற்கு இது அவசியமில்லை. எனினும், பிரிவினைத் திட்டங்கள் பல வெளியிடப்பட்ட சமயத்திலேயே இதுவும் வெளி யிடப்பட்டிருக்கிறது. இதனால் இத்திட்டம் பாகிஸ்தான் திட்டத்திற்கு ஒரு மாற்றுத் திட்டமென பொது மக்கள்

மனதில் ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டது. ஆதலால், இதனை சுருக்கமாக இங்கு ஆராய்தல் அவசிய மெனத் தோன்றுகிறது.

"ஜன நாயக அரசியல்" தான் இந்தியாவின் அரசியல் வளர்ச்சியின் உச்சி நிலை யென்றோ, அல்லது அதுதான் உசிதமான தென்றோ சர் சிக்கந்தர் கருதினார். ஆதலால், அவரது திட்டம் ஜன நாயக அரசியலுக்கு அப்பால் செல்ல வில்லை. அவர் இந்தியாவுக்கு ஒரு சமஷ்டி நிர்வா கத்தை அப்படியே ஒப்புக் கொண்டார். அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் அவர் கவலைப் படவில்லை. அவரது கவனமெல்லாம், மாகாணங்களுக்கு அதிகப் படியான அதிகாரங்களளித்து, சமஷ்டி சர்க்காரின் அதிகார வரம்பு களைக் குறைப்பதிலேயே சென்று விட்டது. இது ஒரு பிற்போக்கான கொள்கை. உதாரணமாக ஒரு விதியைக் கவனியுங்கள். ஏதேனும் ஒரு விஷயம், சமஷ்டியைச் சார்ந்ததா, சர்க்கார் தலைவரைச் சார்ந்ததா, பிரதேசத் தைச் சார்ந்ததா, அல்லது மாகாணத்தை (அல்லது சமஸ் தானத்தைச்) சார்ந்ததா என்று சந்தேகம் ஏற்படுமானால், அவ்விஷயம் வைசிராய், அல்லது கவர்னர் ஜெனரலின் முடிவுக்கு விடப்பட்டு, அதுவே இறுதியானதாக இருக் கும் என்று ஒரு விதி கூறுகிறது. இதனால் சமஷ்டி யூனிட் பிரதேசங்களெல்லாம் மத்திய நிர்வாகத்தின் கால் பெரு விரலின் கீழ் வந்து விடுகின்றன. அவர் இந்தியாவை ஏழு பிராந்தியங்களாகப் பிரித்திருக்கிறாரென்பது உண் மையே. ஆனால் அவை அமைக்கப் பட்ட விதம், வட மேற்கிலும், வட கிழக்கிலும் முஸ்லிம் பெரும்பான் மையை ஏற்படுத்தி விடுகிறதெனினும், ஹிந்துப் பெரும் பான்மை மாகாணங்களுடன் எவ்விதத் தொடர்பு மில்லா

மல் செய்து விடுகிறது. மத்திய நிர்வாக மந்திரிகளில் மூன்றிலொரு பகுதியார் முஸ்லிம்களாக இருக்க வேண்டு மென அவர் கூறுகிறார். இந்திய சமஸ்தானம் ஒன்றி லிருந்து ஒரு முஸ்லிம் பிரதிநிதி மந்திரியாக நியமிக்கப் படலாமென அவர் கூறினார். ஒரு நூரீ, ஒரு யூசுப் ஷரீப், ஒரு ஹாபிஸ் இப்ராஹீம், (சமஸ்தானத்திலிருந்து) ஒரு சர் மிர்ஸா இஸ்மாயில் ஆகியோர் நியமிக்கப் பட்டால், சர் சிக்கந்தரின் மனம் திருப்தி யடைந்து விடும். எனினும், இத்திட்டத்தால் ஹிந்து முஸ்லிம் பிரச்னை தீர்ந்து விடாது.

சர் சிக்கந்தரின் திட்டம் வெளியான அதே சமயத்தில் மற்றொரு திட்டமும் வெளியாகியது. புரொபஸர் டாக்டர் சையத் ஜபருல் ஹஸன், டாக்டர் எம். ஏ. எச். காதிரி ஆகியவர்களின் தலைமையின் கீழ் அலிகர் கோஷ்டி யார் இத்திட்டத்தை வெளியிட்டனர். பிரிட்டிஷ் இந்தியா மூன்று சுதந்தர அரசாதிபத்திய நாடுகளாகப் பிரிக்கப் படவேண்டுமென இத்திட்டம் கூறியது. அந்த மூன்று பிரிவுகள் வருமாறு:—

(1) பஞ்சாப், வட மேற்கெல்லைப்புற மாகாணம், சிந்து, பலுசிஸ்தான் ஆகியவை அடங்கிய வடமேற்கு இந்தியா, இத்துடன் காஷ்மீர் சேர்ந்து பாகிஸ்தான் என்று கூறப்படும்.

(2) பீஹார் மாகாணத்திலுள்ள பூர்ணியா ஜில்லாவும், அஸ்ஸாமிலுள்ள ஸில்ஹெட் பிரிவும் வங்காளமும். இதில் தென் மேற்குப் பிர தேசத்தி லுள்ள ஹௌரா, மிதுனபுரி பர்த்துவான் பகுதி களும், டார்ஜிலிங் வட மேற்கு ஜில்லாவும் சேர்க்கப் படவில்லை.

(3) பிரிட்டிஷ் இந்தியாவின் இதர பகுதிகள் கொண்ட ஹிந்துஸ்தான். ஹிந்துஸ்தானுக்குள் இரண்டு புதிய சுயாட்சி மாகாணங்கள் ஏற்பட வேண்டும். அவை வருமாறு:—

(அ) டில்லி மாகாணம்: டில்லி, மீரட் ஜில்லா, ரோஹில்கண்ட் பிரிவு, அலிகர் ஜில்லா, (ஆக்ரா பிரிவு)

(ஆ) மலையாள மாகாணம்: மலையாளமும், அதையடுத்த கரையோரப் பிரதேசங்களும் அடங்கியது.

இவ்வாறமைக்கப் பட்ட பாகிஸ்தானில் 60 சத விகிதமும், வங்காளத்தில் 57 சத விகிதமும் முஸ்லிம்களிருப்பர். இவையிரண்டும் முஸ்லிம் பிராந்தியங்களாக இருக்கும்.

மலையாளத்தில் 14 லட்சம் முஸ்லிம்கள் இருப்பர். இவர்கள் மொத்த ஜனத் தொகையில் 27 சத விகித்தினராவர். இவர்கள், தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் சக்தியும், தகுதியும் பெற்றவர்களாவர். புதிதாக அமைக்கப் படும் சுயாட்சியுடைய டில்லி மாகாணத்தில் 350 லட்சம் முஸ்லிம்களிருப்பர். இவர்கள் மொத்த ஜனத்தொகையில் 28 சத விகித்தினராவர்.

மேற் கண்டவாறு பிரிக்கப்பட்ட மூன்று பிரதேசங்களின் எல்லைக்குள்ளோ அல்லது ஏதேனுமொரு பிராந்தியத்தின் வெளி எல்லையிலோ இருக்கும் சமஸ்தானங்கள் அந்த பிரதேசத்துடன் சேர்க்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்தியங்களின எல்லைகளில் பொதுவாக உள்ள ஒரு சமஸ்தானம் அதன் உசிதப்படி அதற்கு விருப்பமான பிராந்தியத்தில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால், ஹைதராபாத் மட்டும், பிரார், கர்னாடகப்

பிராந்தியங்கள் அதனுடன் சேர்க்கப்பட்டு, தற்போதிருப் பதைப் போன்றே தனி அரசாதிபத்திய நாடாக இருக்கும்.

மேற் கூறப்பட்ட பாகிஸ்தான், ஹிந்துஸ்தான், வங்காளம் ஆகிய மூன்று தனித்தனி சுதந்தரப் பிரதேசங் களும் சமத்துவ அடிப்படையில் தங்களுக்குள் ஓர் உடன் பாடு செய்து கொள்ள வேண்டும். தவிர இவை ஒவ்வொன் றும் தனித்தனியே பிரிட்டனுடனோ, அல்லது தனி அரசப் பிரதிநிதிகளுடனோ நேச உறவு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். இந்த சுதந்தரப் பிர தேசங்களுக் கிடையிலோ, அல்லது இவைகளில் ஒன்றுக்கும், பிரிட்டிஷ் அரசாதிபத்தியத்திற்கு மிடையிலோ, தகராறு ஏற்பட்டால், அவைகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு கூட்டு மத்தியஸ்த சபை ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஹிந்துஸ்தான் அல்லது ஹிந்துப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் மொத்தம் 230 லட்சம் பேர்களிருப்பர். இவர் கள் மொத்த ஜனத் தொகையில் 10 சத விகிதத்தினராவர். அடுத்தபடியாக இத்திட்டத்தின் கர்த்தாக்களின் மனதில் இச்சிறுபான்மையினரின் பாதுகாப்பு விஷயம் தோன்றி யிருக்கிறது. இந்திய முஸ்லிம்கள் ஒரு சமுதாயத்தின ராதலால், ஹிந்துஸ்தானில் வதியும் முஸ்லிம்களை ஒரு சமுதாயத்தினராகவும், பாகிஸ்தான், வங்காளம் முதலிய பிராந்தியங்களில் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக தற்போதைய முஸ்லிம் லீக் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்றும் திட்டகர்த்தாக்கள் வற்புறுத்துகின்றனர். தவிர, ஹிந்து ஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பாலும் பட்டணங் களில் வசிப்பதால், இந்தியாவில் 50,000 மக்களுக்குமேற் பட்ட ஒவ்வொரு பட்டணமும் சுதந்தர நகரமாக அறிவிக்

கப்பட வேண்டுமென்றும், ஹிந்துஸ்தான் கிராமப் பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்கள் தற்போதிருப்பதைப்போல் சிதறுண்டிராமல், தங்கள் தங்கள் கலை, பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பெரிய பிராந்தியங்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு வற்புறுத்தப்படவேண்டுமென்றும் அவர்கள் கூறுகின்றனர். இறுதியில் அவர்கள் கூறும் யோசனை வருமாறு:—"ஹிந்துஸ்தானிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையினருக்கும், பாகிஸ்தான், வங்காளப் பிரதேசங்களில் உள்ள முஸ்லிமல்லாத சிறுபான்மையினருக்கும் (அ) ஜனத்தொகை விகிதாசாரப்படியான பிரதிநிதித்துவமும், (ஆ) தனிவாக்காளர் தனிப் பிரதிநிதித்துவமும், அரசியல், கலாசார, அரசியல் பாதுகாப்புகளும் அளிக்கப்படவேண்டும்."

ஹிந்துஸ்தானிலுள்ள முஸ்லிம் சிறுபான்மைப் பாதுகாப்புப் பிரச்னை மிகவும் சிக்கலானது. ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா ஆகிய இரண்டு பகுதிகளுக்குமிடையே இறுதியான ஏற்பாடுகள் பற்றிய விவரங்கள் கவனிக்கப்படும் காலத்தில் அவிகர் திட்ட கர்த்தாக்களின் யோசனைகள் ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டும்.

அம்பாலா ஜில்லாவை பஞ்சாபிலேயே சேர்த்துவைத்திருப்பதா, அல்லது வெளியே அகற்றிவிடுவதா என்ற விஷயம் பல்லாண்டுகளாக அரசியலில் விவாதிக்கப்பட்டு வந்த விஷயமாகும். "இந்தியாவின் மகுட சமஷ்டி" (Confederacy of India) *என்ற கட்டுரையின் ஆசிரியர் "ஒரு பஞ்சாபி" என்ற புனைப் பெயருடன், மேற்கண்ட விஷயத்தைச் சுருக்கமாகப் பின்வருமாறு விவாதிக்கிறார்:—

* "பிரிவினை": கண்டனக்காரர்களுக்குப் பதில்; பக்கம் 17—21.

"அம்பாலா ஜில்லாவையும், கிழக்கு பஞ்சாப் பிரதேச ஹிந்துப பிரிவுகளையும் பஞ்சாபிலேயே வைத்துவிடுவதால் இந்தப்பிரதேச முஸ்லிம் பெரும்பான்மை சிறுபான்மையாக ஆகிவிடும். இப்பிரதேசங்கள் அகற்றப்படுவதால் முஸ்லிம் களின் அளவு பெரிதாகிவிடும். அம்பாலா பிரதேசம் ஹிந்துப் பெரும்பான்மைப் பிரதேசமாகும். முஸ்லிம்கள் கோருவதைப்போன்ற அதே சுயநிர்ணய உரிமை ஹிந்துக் களுக்கும் உண்டு அவர்களின் கலை, மத நலன்கள் எல் லாம் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மையின ரைவிட வேறுபட்டவை. இவை யிரண்டு காரணங்களால் அம்பாலா ஜில்லா, பஞ்சாபிலிருந்து அகற்றப்பட வேண்டு வது அவசியமாகிறது. ஆனால் மற்றொரு புறத்தில், இந்தப் பிரதேசம் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியிருப் பதால், பஞ்சாபுடன் சேர்க்கப்படாமல் தன் பொருளா தாரத்தைக் கொண்டு தானே திருப்தியாக நிர்வகித்துக் கொள்ள இயலாததாகிவிடும். இதையும் ஒருபுறம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இதனால், இதற்குமாறான காரணங் களும், கோட்பாடுகளும் பறந்துதோடிவிடும்.

"ஒரு பஞ்சாபி" என்பார் மற்றொரு வகையான கோட்பாட்டையும் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அம் பாலா பிரிவில் 1921-31ஆம் பத்தாண்டில் ஹிந்துக்களின் ஜனத் தொகை 2·2 சதவிகிதமாகவும், முஸ்லிம்களின் தொகை 12·35 சதவிகிதமாகவும் அதிகரித்துவிட்டது. எதிர்காலத் தில் மட்டும் இத்தொகை குறைந்துவிடுமெனக் கூறுவதற் கில்லை. இந்த கணக்கின்படி பார்த்தால், 1981-ம் ஆண்டுக் குள் அம்பாலா ஜில்லாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராகவும், ஹிந்துக்கள் சிறுபான்மையினராகவும் ஆகி விடுவர். 2011-ம் வருஷத்தில் தற்போதைய விகிதாசாரம்

நேர் மாற்றமான முறையில் ஆகிவிடும். இதுபோன்றே டில்லியிலும், ஐ. மா. வின் மேற்கு ஜில்லாக்களிலும் மாறுதல்ஏற்படும். இந்த மாற்றம் ஏற்படும் 50 அல்லது 60 ஆண்டுகள், சமுதாய சரித்திரத்தில் ஒரு பெருங்காலமல்ல. இவ்வித மாறுதல் ஏற்படுமாயின் என்னவாகும்? மீண்டும் இப்பிரச்னை தோன்றுமா? எதிர்காலத்தில் இவ்வித சிக்கல் ஏதும் ஏற்படாமலிருப்பதற்காக இந்தப் பிரதேசங்களை ஒரு சுயாட்சி மாகாணமாக ஒன்று சேர்த்துவிட வேண்டுமென்று அவர் கூறுகிறார். அலிகர் திட்டம் இந்தப் பிரதேச விஷயங்களை அதில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது

இங்கு ஒரு எச்சரிக்கை மொழிகூற வேண்டுவது அவசியமாகிறது. சீக்கியர்கள், மத சகிப்புத்தன்மைவாய்ந்தவர்களல்ல. பஞ்சாபில் சொற்பகாலம் நடைபெற்ற சீக்கிய ஆட்சியில் முஸ்லிம்கள் பட்ட அவதியை நாம் மறக்கமுடியாது. இந்த ஆட்சிக்காலத்தில் ஏராளமான மஸ்ஜிதுகள் குர்த்துவாரங்களாகவும், குதிரை லாயங்களாகவும், சர்க்கார் கிடங்குகளாகவும் மாற்றப்பட்டன. சீக்கியர் பெரும்பான்மையாக உள்ள கிராமங்களில் முஸ்லிம்கள் தொழுகைக்காக அஸான் கூறுவதை சீக்கியர் ஆட்சேபித்ததன் காரணமாக வகுப்புக் கலவரங்கள் தோன்றுவது இன்றுங்கூட சர்வ சாதாரணமாகக் காணப்படும் விஷயமாகும். சீக்கியத் தலைவர்கள், தங்கள் மதத்தவர்களின் இவ்விழி செயலைப் பற்றி ஒன்றுங் கூறாமலும், கண்டனம் செய்யாமலுமிருந்தது மிகமிக வருந்தத்தக்க விஷயம். நவயுக ஹிந்து மதமோவெனில், தன்னுடைய பழங்கால மத சகிப்புத் தன்மையை உதறித் தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக ஜாதீய, அரசியல் அடக்குமுறைகளைக் கையாண்டுவரு

கிறது. ஆரியசமாஜம், ஹிந்துமகா சபை, காங்கிரஸ் ஆகிய மூன்று ஸ்தாபனங்களின் புதியமேவகம், ஹிந்து சமஸ்தானங்களில் நடைபெறும் நிர்வாகத்தை, அவர்களின் முஸ்லிம் பொதுமக்களுக்கு விரோதமாகத் தூண்டிவருகிறது. இதை நாம் சொற்பமானதென்று புறக்கணித்துவிடுவதற்கில்லை. காங்கிரசும், ஹிந்துமகா சபையும் சேர்ந்த ஒரு சமஷ்டி சர்க்கார் இந்தியாவில் நிறுவப்படுமாயின், இந்திய முஸ்லிம்கள் என்னகதிகுள்ளாவரென்பதற்கு இது ஒரு உதாரணமாகும். மாஸ்டர் தாராசிங் கோருகிறபடி கிழக்குப் பஞ்சாபில் ஒரு தனி அரசாங்கம் அமைக்கப்பட்டால், முஸலிம்களின் பூண்டை ஒழிப்பதோ அல்லது அதனை மிகமிகச்சிறிய வஸ்துவாக ஒடுக்கிவிடுவதோ அதன் முதல் வேலையாக இருக்கும்.

இதற்கு முன் பல இடங்களில் கோட்பாடு என்ற முறையில் குறிப்பிடப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்காரின் திட்டத்தைப் பற்றி ஒரு சிறிது கூறுவோம். அவர், தமது புத்தகத்தை 1940ஆம் மார்ச்சுமீ அகில இந்திய முஸ்லிம் லீக்கின் லாகூர் தீர்மானத்தின் காரணமாக வரைந்ததாகக் கூறிக் கொண்டபோதிலும், அதனை வெகு நாட்களுக்கு முன்னிருந்தே தயாரித்திருக்க வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து முஸ்லிம்கள் மிக மிகக் கொடியவர்களென்பதும்,*

---

* இந்தப் புத்தகத்தில் அம்பேத்கார் கக்கியுள்ள விஷம் எனக்கு ஓர் உண்மையைப் புலப்படுவதாக இருக்கிறது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் அவர் ஹிந்துக்களுடனும், சீக்கியர்களுடனும் முடிவு செய்துகொண்ட அந்த பேரத்தை இப்போது செய்திருக்கிறாரா? அவர் அதிகமாகப் படித்தவரென்று புகழ் பெற்றிருக்கிறார். அவரது பெயருக்குப் பின் அநேக கல்விப்பட்டங்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்திய சரித்திரத்தின் முஸ்

ஆதலால், அவர்கள் ஹிந்துக்களின் சமாதான நலன்களை முன்னிட்டு இந்தியாவிலிருந்து அடியோடு வெளியேற்றப் பட வேண்டுமென்பதும் டாக்டர் அம்பேத்காரின் கருத்தா கும். தம்மையும், தமது தாழ்த்தப்பட்ட சகோதரர்களை யும் ஹிந்துச் சமுதாயத்தின் ஒரு பகுதியாக இருப்பதாகக் கருதும் டாக்டர் அம்பேத்கார், முஸ்லிம்களாகிய இந்த 'கெட்ட சமூகத்தவர்கள்' நாட்டின் ஒரு மூலையில் கிழக்கு வங்காளத்திலும், வடமேற்கு இந்தியாவிலும் அடைக்கப் பட வேண்டுமெனக் கூறுகிறார். பாகிஸ்தானுக்கு அவர் கூறும் வியாக்கியானம் என்னவெனில், இந்தியாவிலிருந்து

---

லிம் காலம்பற்றி அவர் அறியாதிருப்பது விநோதமாகக் காணப்படு கிறது. அவர் ஒரு நீதவாதி. அவர், தம் வழியைவிட்டு தவறிச் சென்று, முஸ்லிம்கள்மீது குற்றங்கூறும் வாதியாகி விட்டிருக் கிறார். ஆனால், அவர் இவ்விஷயத்தில் ஒரு தவறைச் செய்து விட்டார். அவர் தம் கூற்றையெல்லாம் இஸ்லாமிய எதிர்ப்புப் பிரசாரகரின் அடிப்படையின்மீது ஆதாரமாக வைத்துக் கூறி யிருக்கிறார். இது மொத்தவழக்கிற்கே ஒரு பெரும் ஹானியை ஏற்படுத்தி விட்டது. ஏனெனில், எந்த நீதி மன்றத்திலும், பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விரோதியின் சாட்சியத் துக்கு இடமில்லை. ஒருசில வருஷங்களுக்கு முன் நான் கால்லூரி களின் உபயோகத்திற்காக இந்தியா தேச சரித்திரமொன்றை எழுதினேன். அப்போது நான் சரித்திர சம்பந்தமான பழைய நூற்களையும், புதிய நூற்களையும் ஆராய்ச்சி செய்தேன். திரு. அம்பேத்கார், ஆதாரங் காட்டும் கிறிஸ்துவ பிரசாரகர் டாக்டர் டிட்டஸின் பெயரை நான் எங்கும் கண்டதேயில்லை. அந்தோ, அவரது அறியாமையை என்னென்பது! முஸ்லிம்கள் இந்தி யாவில் அரசியல் சூதாட்டத்தைப் புகுத்தினரென அவர் குற்றஞ் சாட்டுகிறார். ஹிந்து மகாசபையினர், தாங்கள் கையாள வேண்டிய வார்த்தையை அம்பேத்கார் கையாண்டதற்காக அவர் மீது மான நஷ்ட தாவா செய்யக் கூடும்.

முஸ்லிம்களைத் தேசப் பிரஷ்டம் செய்யவேண்டும் என்பது தான். முஸ்லிம்களே கொடியவர்களென்பதும், ஹிந்து ஆட்சியில் முஸ்லிம் சிறுபான்மையிருக்கலாமென்பதும், ஆனால், முஸ்லிம் ஆட்சியில் ஹிந்து சிறுபான்மையிருக்க லாகாதென்பதும் அவரது கோட்பாடு. ஏதேனுமொரு பகுதியில் முஸ்லிம்கள் நேர் பகுதியினராகவும், மற் றெல்லா சமூகத்தினர்களும் மற்ற பகுதியினர்களாகவு மிருந்தால், அந்த முஸ்லிம்கள் மீது இதரர்களின் ஆதிக்கம் ஏற்பட வேண்டுமென அம்பேத்கார் விரும்புகிறார் உதா ரணமாக ஸயால் கோட் ஜில்லாவில் 1931ஆ ஜனக் கணிதப்படி முஸ்லிம்கள் 62 1 சத விகிதத்தினராக இருக் கின்றனர். அதை யடுத்துள்ள குர்தாஸ்பூர் ஜில்லாவில் முஸ்லிம்கள் 60 சத விகிதத்தினராகவும், இதர 50 சத விகிதத்தினர் ஹிந்து, சீக்கிய, தாழ்த்தப்பட்ட, கிறிஸ்தவ சமூகத்தினர்களாகவுமிருக்கின்றனர். அம்பேத்கார், இப் பிராந்தியத்தை முஸ்லிம் இந்தியாவான பாகிஸ்தானை விட்டுப் பிரித்து ஹிந்துஸ்தானுடன் சேர்த்து விடுகிறார். 1941ஆ ஜனக்கணித தொகை வெளியிடப்பட்டால், அதில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருக்கின்றன ரென்பது தெளிவாகிவிடும். ஒவ்வொரு ஜனக்கணிதத்திலும் ஹிந்துக்களின் ஜனத் தொகையை விட முஸ்லிம்களின் ஜனத்தொகை வளர்ந்தோங்கி வருகிறது. சுமார் 50 ஆண்டு களுக்கு முன் சிறுபான்மையினராயிருந்த முஸ்லிம்கள் இப்போது பெரும்பான்மையினராக ஆகி விட்டனர். எல்லாப் பிரதேச ஏற்பாடுகளிலும் இந்த ஜனப் பெருக்கம் கவனிக்கப்பட வேண்டுவது அவசியம். இந்த இயற்கை யான மாறுதலை அம்பேத்கார் கவனியாமலேயே எல்லா விஷயங்களையும் தீர்த்து விட்டார். இதை மட்டும் அவர்

கவனித்திருப்பாராயின், அமிர்தசரஸ், ஜல்லந்தர், பெரோஸ்பூர், ஹோஷியார்பூர், லூதியானா ஆகிய பிரதேசங்களை பாகிஸ்தானிலிருந்து பிரித்து விட முயன்றிருக்கமாட்டார். இந்த ஜில்லாக்களில் 1931ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் முறையே 46.9, 43, 44.8, 32.8, 35.1 சத விகிதத்தினராக இருந்தனர். டாக்டர் அப்துல்லதீபின் திட்டத்திலும் முஸ்லிம்களின் இயற்கை வளர்ச்சி கவனிக்கப்படவில்லையாதலால், அவர் ஜன மாற்றத்தைக் கூறியிருக்கிறார். இருவரும் முஸ்லிம் ஜனக்கணித வளர்ச்சியைக் கவனியாமல், ஹிந்து முஸ்லிம் ஜன விகிதத்தை நிரந்தரமானதெனக் கருதுகின்றனர்.

இதே காரணத்தால் 50.5 சத விகித முஸ்லிம்களுள்ள தினஜ்பூரையும், 49.3 சத விகித முஸ்லிம்களுள்ள குல்னாவையும் டாக்டர் அம்பேத்கார், ஹிந்து இந்தியாவில் சேர்த்து விடுகிறார்.

அஸ்ஸாமின் கிழக்கு வங்காளத்தில் தெளிவான முஸ்லிம் பெரும்பான்மையில்லாத ஜில்லாக்களையெல்லாம் எதிர் காலத்திய கிழக்கு வங்காள முஸ்லிம் பிரதேசத்திலிருந்து அகற்றி, ஹிந்து இந்தியாவுடன் அதை சேர்த்து விடுகிறார் அம்பேத்கார். இந்த ஜில்லாக்களில் வசிக்கும் முஸ்லிமல்லாத மக்களில் பெரும்பாலோர் மதத்திலோ, ஜாதியிலோ, கலையிலோ, மொழியிலோ ஹிந்துக்களுடன் சேராத ஒரு தனித் தன்மை வாய்ந்தவர்களாவர். இந்த மலை ஜாதி மக்கள் ஹிந்துக்களின் ஆளுகைக்குள் வைக்கப்பட வேண்டுமென்பதற்கான காரணம் ஒன்றும் காணப்படவில்லை. ஹிந்து மதம் ஜாதி உயர்வும், முதலாளித்துவ மனப்பான்மையும் கொண்டது. ஆதலால், இந்த மலை ஜாதி மக்களும், இந்தியாவில் ஹிந்து மதம் தோன்றிய

காலம் முதல் தாழ்த்தப்பட்டோர் அனுபவித்து வரும் அதே கஷ்டங்களையும், கொடுமைகளையும் ஹிந்து ஆட்சியில் அனுபவிப்பரென்பது நிச்சயம். இவர்களனைவரும் தீண்டப்படாத சூத்திரர்களெனக் கருதப்படுவர். ஆனால், அம்பேத்கார், தமது பிரிவினைத் திட்டத்தை வகுக்கும்போது முஸ்லிம்,முஸ்லிமல்லாதார் என்ற இரண்டு சமூகங்களை மட்டுமே மனதிற் கொண்டிருக்கிறார். அம்பேத்கார் ஒரு தீண்டப்படாதவர். ஹிந்துக்களிடம் தீண்டப்படாதார் அனுபவித்து வரும் கொடுமைகளை அவர் அறியாமலிருக்க முடியாது. அவ்வாறிருந்தும் அவருக்கு முஸ்லிம்கள் பால் இருந்து வரும் வெறுப்புணர்ச்சியால், ஹிந்துக்களின் முதல் மூன்று உயர்ந்த ஜாதிகளில் பிறவாதவருக்கு ஹிந்து மதத்தில் என்ன நிலைமை ஏற்படுமென்பதை அவர் மறந்து விட்டு, பிராமண, பனியா ஆட்சிக்கு அஸ்ஸாம் மலை ஜாதியினரைப் பலியிட்டு விடப் பார்க்கிறார்.

மேலும் அம்பேத்கார், முஸ்லிம், முஸ்லிமல்லாதார் என்ற பிரிவை அடிப்படையாகக் கொண்டே பிரிவினைத் திட்டத்தை வகுத்திருக்கிறாரேயன்றி, பொருளாதார விஷயத்தை அடியோடு மறந்து விட்டிருக்கிறார். ஜல்லந்தர், அம்பாலா, குர்தாஸ்பூர், அமிர்தசரஸ் ஜில்லாக்களை அவர் பாகிஸ்தானிலிருந்து அகற்றி விடுகிறார். இந்தப் பிரதேசங்கள் தாம் மாஸ்டர் தாராசிங் வகுத்த "ஆஸாத் பஞ்சாப்" வட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அமிர்தசரஸ், குர்தாஸ்பூர் ஜில்லாக்களும், ஜல்லந்தர் பிரிவும், அம்பாலா பிரிவின் சில ஜில்லாக்களும் மத்திய, மேற்கு பஞ்சாபுடன் பொருளாதாரத் துறையில் பிணைக்கப்பட்டுள்ளன. இவை பாகிஸ்தானிலிருந்து பிரிக்கப்பட்டால் பொருளாதாரத் துறையில் நாசமாடு விடும். இதே காரணத்தால்தான்

மாஸ்டர் தாராசிங்கின் "ஆஸாத் பஞ்சாப்" திட்டம்— இதைப் பற்றி முஸ்லிம்கள் எவ்வித அபிப்பிராயமும் கூற வில்லை—சீக்கியர்களாலேயே பலமாக எதிர்க்கப்பட்டது. ஹிந்துக்களும் இதை விரும்பவில்லை. முஸ்லிம்கள்பால் அம்பேத்காருக்குள்ள குரோதத்தை யடிப்படையாகக் கொண்டு அவரால் வகுக்கப்பட்ட திட்டம் அந்தப் பிராந்திய ஹிந்துக்களாலும், சீக்கியர்களாலும் நிராகரிக்கப் பட்டது.

அடுத்தபடியாக சர் அர்தேஷிர் தலாலின் திட்ட மொன்று இருக்கிறது.* இவர் ஒரு பம்பாய் கைத்தொழில் முதலாளி. இந்தியா ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென அவர் வேண்டிக் கொண்டிருக்கிறார். எதிர் காலத்தில் நடைபெற விருக்கும் எந்த சர்வதேச மகா நாட்டிலும். ஒரு பிரிவினை இந்தியாவை விட ஐக்கிய இந்தியாவே அதிக அதிகாரத்துடன் பேச முடியுமென அவர் கூறுகிறார். ஒரு சர்வதேச மகா நாட்டில், சிறு பான்மையினரை கருணை யற்ற முறையில் அடக்கி யாண்டு வரும் பெரும்பான்மை யினரடங்கிய இந்தியா, சக்தியோடு பேசுவதால் சிறு பான் மையினருக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை யென நான் கூறுகிறேன். தங்களுக்கு இடமோ, பங்கோ இல் லாத இந்தியாவில், ஹிந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நாட்டில் சிறுபான்மையினருக்கென்ன வந்து விடப்போகிறது? முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு உறுதி

* "பாகிஸ்தானுக்கு ஒரு மாற்றுத்திட்டம்" என்ற பெயர் கொண்ட இத்திட்டம் அந்தரங்கமாகவே விநியோகிக்கப்பட்டது. 1943ஆ ஜூன்மீ 12உ வெளியான "டைம்ஸ் ஆப் இந்தியா" அத்திட்டத்தை விமர்சனம் செய்திருக்கிறது. நான் அதிலிருந்து கோட்பாடுகளை இங்கு கையாண்டிருக்கிறேன்.

ஏற்படாதவரை இதர விஷயங்களெல்லாம் அவர்களுக்கு அவ்வளவு முக்கியமானவையல்ல.

சர். அர்தேஷிர், கானடா முறைப்படியான சமஷ்டி சர்க்காரே மத்தியிலிருக்க வேண்டுமெனக் கூறுகிறார். அவர் கூறுவது இதுதான் :—"பாதுகாப்பு, அயல்நாட்டு உறவு, நாணயச்செலாவணி, கடன், சுங்கம், போக்குவரத்து முதலியவைகள் உட்பட அத்தியவாசியக் குறைந்தபட்ச அதிகாரங்களே மத்திய சர்க்கார் வசம் இருந்துவரும் மத்தியிலும், மாகாணங்களிலும் கூட்டுசேர்க்கார்கள் இருந்து வரும். மத்திய சர்க்கார் மந்திரிகளில் மூன்றிலொரு பாகத்தினர் முஸ்லிம்களாக இருப்பர் இவர்கள் சட்டசபையிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்களால் தெரிவு செய்யப்படுவர். சிறுபான்மைப் பிரதிநிதித்துவம், குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச அளவைவிட அதிகமாகலாம். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் சிறுபான்மை மந்திரிகளின் மொத்த எண்ணிக்கை மொத்த மந்திரிச் சபையில் 50 சதவிகிதத்துக்குமேல் போகக்கூடாது. சமஷ்டி யூனிட்டுகளில் பரஸ்பர ஒப்பந்த பூர்வமாக நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்துக்கு மேற்பட்டவர்களாயுள்ள எல்லா சிறுபான்மையினருக்கும் மாகாண மந்திரிச் சபைகளில் அவர்களின் ஜனத்தொகை விகிதாசாரப்படி பதவிகள் அளிக்கப்படவேண்டும்."

மத்திய நிர்வாகத்தை முஸ்லிம்களல்லாதார் வசம் விட்டுவிட முஸ்லிம்கள் விரும்பவில்லை. ஆதலால், 50 சதத்துக்குக் குறைந்த எந்த பங்கையும் மத்திய நிர்வாகத்தில் பெற முஸ்லிம்கள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள். ஆதலால், இதை உடனடியாகவே ஆட்சேபித்துவிடலாம்.

ஹிந்துக்கள் பெரும்பான்மையாயுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கள் காங்கிரஸ் சர்க்கார்களிடம் அனுபவித்த கஷ்டங்களினுலும், ஹிந்துக்கள் முஸ்லிமகளைப் பொது வாக நடத்திவரும் முறைகளினுலும், இந்தியாவில் ஹிந்து ராஜ்யம் ஏற்படுத்திவிட வேண்டுமென ஹிந்துக்கள் அடிக்கடி வெளியிட்டுவரும் அபிலாஷைகளாலும், போதிய விவரமான பாதுகாப்புச் சட்டங்கள் எவையுமில்லாத நிலைமையில் கூட்டுமந்திரிச் சபைகள் முஸ்லிம் நலன்களைப் பாதுகாக்குமா என்பது சந்தேகமே

இந்தியப் பிரச்னை வெகு விநோதமானது. கானடாவைப்போன்ரே, வேறு நாடுகளைப்போன்ரே இந்தியப் பிரச்னை தீர்க்கப்பட முடியாது. எந்த அரசியலும், அது வகுக்கப்பட்ட பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்காவிடினும் சரி, பொதுமககள் அந்த அரசியலை நல்லுணர்ச்சியுடன் ஏற்று நடத்த விரும்பாவிடினும்சரி, அந்த அரசியல் வெற்றிபெற முடியாது. இந்நாட்டில் இவ்வித விருப்பம் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை கானடாவில் பிரிட்டிஷ் மாகாணங்களும், பிரெஞ்சு மாகாணங்களுமிருக்கின்றன மொழி ஒன்றைத்தவிர பிரிட்டிஷாருககும், பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே வித்தியாசம் என்ன? அவர்களின் கலாசாரங்களும், நடையுடை பாவனைகளும் ஒன்றே. அமெரிக்காவைப்போன்று ஓரே தலைமுறையில் ஜாதீய, சரித்திர வேறுபாடுகளெல்லாம் ஒழிந்துவிடும். பிரிட்டிஷ் கானடா மக்கள், பிரெஞ்சு கானடா மக்களின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு சமரஸமாகப் போகத்தயாராயிருந்தனர். இதனுல்தான் கானடா அரசியல் வெற்றிகரமாக நிறைவேறியது. ஆனுல், இந்தியாவிலோ பெரும்பான்மையினரான ஹிந்துக்கள் முஸ்லிம் சிறுபான்மையின

ரின் நிபந்தனைகளேயோ, கோரிக்கைகளேயோ ஒப்புக் கொள்ளத்தயாராக இல்லை. ஹிந்துக்கள், தங்களுக்கே இந் நாட்டை ஆள உரிமையுண்டென்றும், தங்கள் நிர்வாகமே ஏற்பட வேண்டுமென்றும் விரும்புகின்றனர். பெரும் பான்மை உரிமை ஆட்சியென்பது ஹிந்துராஜ்யமே. முஸ் லிம்கள் இதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்தியாவி லிருப்பதுபோன்ற வகுப்புப் பிரச்னை ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ கிடையாது. ஆதலால் அவர்கள் இப்பிரச்னையை உணர முடியவில்லை. ஆனால் அந்த நாடுகளில் யூதர்கள் இருக்கின்றனர். யூதர்கள், தாங்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்த நாட்டு மக்களுடன் கலக்கவிரும்பவில்லை. இந்தியாவில் பார்ஸி வகுப்பார் இருப்பதைப்போல் அந்த யூதர்களும் எங்கும் சொற்ப சிறுபான்மையினராகவே இருந்து வருகின்றனர். இந்தியாவில் பார்ஸிகளைப்போன்றே அந்த யூதர்களும் அந் நாடுகளில் புறக்கணிக்கப்படுகிறார்கள். எந்த நாட்டிலாவது யூதர்கள் பெரும்பான்மையினராக இருந்திருப்பாராயின், அங்கு இந்த வகுப்புப் பிரச்னை ஏற்பட்டிருக்கும். ஆனால், நம்நாட்டு யூதர்கள், ஜாதித் திமிரில் அமெரிக்கா, ஐரோப்பா கண்டங்களின் யூதர்களைவிட அதிகமானவர்கள். ஹிந் துக்களின் ஜாதீயப்பற்றும், விடாப்பிடியும் இந்தியப் பிரச்னையை அதிக சிக்கலானதாகச் செய்துவிட்டிருக் கின்றன. ஹிந்துமதம் ஜாதி வேறுபாட்டின் உச்சநிலையைப் பிரதிபலிக்கிறது. இது இந்தியாவின் அரசியலைப் பெரும் சிக்கலாக்கிவிட்டது ஹிந்துக்களின் சக்தி திடுக்கிட்டு விட்டதாகக் கூறிக் கொள்ளலாம். உண்மையை யுணர விரும்பாத ஐரோப்பியர் பலவிதமாகக் கூறிக் கொள்ளலாம். என்றாலும் ஒரு ஹிந்துவின் மன

துடன் ஒரு முஸ்லிமின் மனம் ஒன்று பட முடியாதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஹிந்துக்கள் ஒரு விஷயத்தைக் கூறி அதற்கு வேருெரு அர்த்தத்தைக் கற்பிக்கிருர்கள். ஹிந்து தன் ஜாதி நலன்களைப் பாதுகாப்பதற்காக எல்லா வித பொய், தந்திரம், தகிடுதத்தம் முதலியவைகளைக் கையாளுகிருர். இந்த காரணங்களை முன்னிட்டு இந்தியாவில் வகுப்புப் பிரச்னை தீர்க்கப்பட முடியாத நிலைமையிலிருக்கிறது. கானடா அரசியலின் வெற்றிக்குக் காரணமாயிருந்தவைகள் இந்தியாவில் இல்லை.

எல்லா நவீன கால சர்க்கார்களும் யதேச்சாதிகாரமாயிருக்கவே விரும்புகின்றன எல்லா சமஷ்டி அரசாங்கங்களும் தங்கள் ஆதிக்கத்திலுள்ள சமஷ்டி யூனியனின் அதிகாரங்களைக் கவர்ந்து கொள்ள விரும்புகின்றன. மூன்ருவது ஒரு சக்தி, உதாரணமாக பிரிட்டிஷ் என்று வைத்துக் கொள்ளுங்கள், மத்திய நிர்வாக அரசியலின் மீது தொடர்ந்து கட்டுப்பாடுகள் செய்வதுடன், எந்த பெரும்பான்மையும், மாகாணங்களிலுள்ள எந்த சிறு பான்மையினருடைய நலன்களுக்கும் விரோதமாகத் தன் அதிகாரத்தைச் செலுத்தாமல் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறினல், ஒரு வேளை இந்த சமஷ்டி அரசியல் முறை சாத்தியமாக இருக்கலாம். பிரிட்டிஷார், தர்ம தேவதைகளெனத் தங்களைக் கூறிக் கொண்ட போதிலும் தர்ம தேவதைகளல்ல. அவர்கள் இங்கு தங்கியிருப்பார்களாயின், தங்கள் சுய நன்மையை நாடுவதிலும், ஒருவருக்கொருவர் மூட்டி விடுவதன் மூலம் தங்களை அரசியல் பீடத்தில் உறுதிப் படுத்திக் கொள்வதிலுமே கண்ணும் கருத்துமாயிருப்பர். அவர்களின் கொள்கையே பிரித்தாளும் கொள்கைதானே. தற்போதுள்ள மாகாண சுயாட்சி சட்

டம், சிறு பான்மையினர்களைக் கவர்னர்கள் பாதுகாக்க வேண்டுமென விதித்திருக்கிறது. ஆனால் 2. மாத காலம் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியில் கவர்னர்கள் இக் கடமையைச் செய்யத் தவறி விட்டனர். இவ்வாறே மீண்டும் அவர்கள் செய்யமாட்டார்களெனக் கூறுவதற்கில்லை.

ஒரு சாரார், ஒரு காகித அளவான பாதுகாப்புகளையோ, சட்ட பூர்வமான பாதுகாப்புகளையோ மதிக்க விரும்பாது போய் விட்டால், எந்த பாதுகாப்புகளும் அவர்களிடமிருந்து மற்ற சாராரைப் பாதுகாத்து விட முடியாது எந்த மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு பாதுகாப்பு வாக்குறுதிகள் இயற்றப்பட்டனவோ, அந்த மக்களே அப் பாதுகாப்பைப் புகுத்தினால்தான் பாதுகாப்பு வாக்குறுதிகள் வெற்றிகரமாக நிறைவேறும். இதுதான் பாகிஸ்தான் கோரிக்கையின் விளக்கம். முஸ்லிம்களை இரண்டாந்தரமாக வைக்கக் கூடிய எந்த அரசியலும் இதற்கு மாற்றுத் திட்டமாக அமைய முடியாது. ஹிந்துத் தலைவர்களும், ஹிந்துக் கல்வி யறிஞர்களும் ஹிந்து ஜாதியினரின் உள்ளங்களிலிருந்து ஜாதிப் பற்றைத் துடைத்தெறிய கங்கணம் கட்டி, அதற்காக இரண்டு அல்லது மூன்று தலைமுறைகள் வரை வேலை செய்தாலல்லாமல், சர் ஆர் திஷார் தலாலின் திட்டம் முஸ்லிம்களால் ஏற்கப்பட இயலாததாகவே இருக்கும். இவ்வாறு அவர்கள் செய்வதும் சாத்தியமில்லை.

கடைசியாக பாகிஸ்தான் தீர்மானமென்று பிரபலமாகக் கூறப்படும் 1940ஹூ மார்ச்சுமீ 26உ யன்று அகில இந்திய முஸ்லிம் லீக்கால் நிறைவேற்றப்பட்ட தீர்

மானத்தைப் பற்றிக் கவனிப்போம். இத் தீர்மானத்தின் முக்கிய பகுதி வருமாறு:—

"பின்கண்ட அடிப்படையின் கீழ் வகுக்கப் படாத எந்த அரசியல் திட்டமும் இந் நாட்டில் அனுஷ்டான சாத்தியமற்றதென்றும், முஸ்லிம்களால் ஒப்புக் கொள்ளப்பட முடியாததென்றும் அ. இ. முஸ்லிம் லீக்கின் இந்த மகாநாடு அபிப்பிராயப்படுவதாகத் தீர்மானிக்கிறது:—

(1) பூகோள ரீதியாக இப்போது அமைந்துள்ள யூனிட்டுகள், அவசியமான மாறுதல்களுடன் பல பிரிவுகளாக வகுக்கப்பட வேண்டும்.

(2) இந்தியாவின் வடமேற்கு, வட கிழக்குப் பிராந்தியங்களைப் போல் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்கள், 'தனி சுயேச்சை நாடுகளாக' ஒன்று சேர்க்கப்பட வேண்டும் இவ்வாறு சேர்க்கப்படும் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் சுயாட்சியும், அரசாதிபத்தியமும் வாய்ந்தவைகளாக இருக்கும்."

மேற்கண்ட தீர்மானத்தில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள 'அரசாதிபத்தியம்' என்ற வார்த்தை தவறான இடத்தில் புகுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில், மற்றொரு அரசாதிபத்திய நாட்டுடன் இணைக்கப்படப் போகும் யூனிட்டுகள் சுயாட்சி வாய்ந்தவையாக இருக்குமேயன்றி அரசாதிபத்தியம் வாய்ந்தவைகளாக இருக்கமாட்டா. கடைசி விதியே இங்கு அவசியமில்லை. எனினும், சிந்து, பலுச்சிஸ்தான், வடமேற்கெல்லைப்புற மாகாணங்களின் பிரதிநிதிகளுக்கு அவர்களின் சுயாட்சியை உறுதிப்

படுத்துவதற்காகவே இந்தக் கடைசி விதி சேர்க்கப்பட்டுள்ளது. ஹிந்துஸ்தானிலிருந்து பாகிஸ்தானை வேறு படுத்துவதற்காகவே இத்தீர்மானம் வகுக்கப்பட்டதே யொழிய அந்த சமயத்தில் பாகிஸ்தானின் உட்புற அமைப்பைப் பற்றி தீர்மானத்தில் விவரிக்கப்படவில்லை.

முஸ்லிம் லீக்கின் தீர்மானத்தில் காணப்படும் திட்டம் பயனற்றதென்றும், பொருத்தமில்லாததென்றும் ஹிந்துப் பத்திரிகைகள் கூறின. ஹிந்து இந்தியாவிலிருந்து பிரிக்கப்படவேண்டிய பகுதிகளை முஸ்லிம் லீக் தெளிவாக விளக்குகிறதென்பது பூகோள அமைப்பை யறிந்த எவரும் உணர்ந்து கொள்ளலாம். இத்தீர்மானத்தில் பிரிக்கப்படவேண்டிய பிரதேச எல்லைகள் வகுக்கப்படவோ, வரையறுக்கப்படவோ இல்லை. இவையெல்லாம் ஒரு மகாநாட்டில் சமரஸமாகத் தீர்க்கப்படவேண்டிய விஷயங்களே யன்றி இதுபோன்ற தீர்மானங்களில் குறிப்பிடப்படக்கூடியவை யல்ல. இவ்வித சமரஸப் பேச்சுகளுக்குத் தீர்மானம் இடமளிக்கிறது. சமரஸ சம்பாஷணைகள் நடைபெறுவதற்கு முன் பூர்வாங்கமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒரு லட்சியத்தை மட்டுமே இத்தீர்மானம் விளக்குகிறது. சமரஸம் செய்துக்கொள்ள ஹிந்து இந்தியாவின் மனம் இடமளிக்கும்வரை இந்தியா இன்றுள்ள நிலையிலேயே இருந்து வரும்.

## அத்தியாயம் 10

## —ஆட்சேபங்கள்—

**பா**கிஸ்தான திட்டத்திற்கு ஹிந்துக்கள் கூறும் ஆட்சேபங்களைச் சுருக்கமாக இப்போது கவனிப்போம். பெரும்பாலும் அதிகப்படியாகக் கூறப்படும் ஆட்சேபங்கள் வரிசைக்கிரமமாகப் பின் வருமாறு:—

(1) ஜனுப் ஜின்னு மிகப் பொல்லாத மனிதர்.

(2) முஸ்லிம்லீக், இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதித்துவஸ்தாபனமல்ல.

(3) பாகிஸ்தான், இந்தியப்பாதுகாப்புகளை க்ஷீணப் படுத்தி விடும்.

(4) ஒரு சுயேச்சை அரசாதிபத்திய நாட்டின் பொருளாதார வாழ்வு வறுமை மிக்கதாக இருக்கும்.

ஹிந்துக்கள் பாகிஸ்தான் திட்டத்தைப் பலமாகக் கண்டனம் செய்திருக்கின்றனர். ஆனால், அவர்களின் ஏச்சுப் பேச்சுகள் எல்லாம் ஜனுப் ஜின்னுவின் மீதே விழுந்திருக்கின்றன. இது மிகவும் தீங்கான போக்கு. ஒரு சாதாரண அரசியல் கட்சியைவிட மகத்தான சக்தி வாய்ந்த ஒரு கட்சியின் தலைவரைத் தூஷிப்பது, அந்த கட்சியினரை நண்பர்களாகச் செய்து கொள்வதற்குரிய சரியான வழியல்ல. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதுதான் ஹிந்துக்களின் இயல்பான எதிர்ப்பு வழியாகி விட்டது. தங்களிடமிருந்து வேறுபட்ட அபிப்பிராயமுடையவர்களின் நல்லெண்ண நம்பிக்கையை மறுத்து, அவர்கள்மீது தூஷணைகளை அள்ளிவீசி, தங்கள் அரசியல் எதிரிகள்மீது வெற்றி

பெற முயற்சிக்கின்றனர். ஹிந்து இந்தியா, இவ்வித தந்திரோபாயத்தைக் கையாண்டு, சுமார் இரண்டு தலைமுறைகளாக வெட்கங் கெட்டதனமாக அதையே பின்பற்றி வருகின்றது. இதனால் பிரச்னை நல்ல முறையில் தீர்க்கப்படவில்லை; தீர்க்கப்படவும் முடியாது. இதனால் விரோதமும், மாச்சரியமும் தான் வளர்ந்தோங்கும். ஹிந்துக்கள், ஜனாப் ஜின்னாவைத் தூஷிப்பது ஒவ்வொரு முஸ்லிமின் ஹிருதயத்தையும் பாதிக்கிறது. சர் சையத் அஹ்மத்கானுக்குப் பின்னர் அவரையே தங்கள் உண்மைத் தலைவரென முஸ்லிம்கள் கருதுகின்றனர். அவரது தளராத உறுதியிலும், தெளிவான சிந்தையிலும், அரசியலில் ஆற்றலிலும் முஸ்லிம்களுக்கு அபார நம்பிக்கையிருக்கிறது. அம்பேத்கார் முஸ்லிம்களின் நண்பரோ, ஜனாப் ஜின்னாவின் மீது பற்றுள்ளவரோ அல்ல. அவர் கூறுவதைக் கவனியுங்கள். "இந்த புதிய கொள்கையை (முஸ்லிம்கள் தனிச்சமுதாயமென்ற இலட்சியத்தை)ப் பிரதிபலிக்கும் ஜனாப். ஜின்னா, பிரிட்டிஷாரின் கையாயுதமாயிருப்பதாக அவரது பரம விரோதிகள் கூட சந்தேகிக்க முடியாது............குழப்பமேயில்லாதவர் என்று கூறப்படக் கூடிய ஒரு அரசியல்வாதி அவரைத் தவிர வேறு யாரேனுமிருப்பார்களா என்பதும் சந்தேகமே. பிரிட்டிஷ் சர்க்காருடன் அவருடைய உறவு எத்தன்மையதாயிருந்த தென்பதை அறிந்திருப்பவர்கள், அவர் எப்போதும் அவர்களைக் கண்டனம் செய்தே வந்திருக்கிறாரென்பதையும், அவர்களின் கையாளாக எப்போதுமிருந்ததில்லையென்பதையும் அறிவார்கள். அவரை எவரும் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. ஏனெனில் அவர் எந்தகாளிலும் அதிர்ஷ்ட வேட்டைக்காரராக இருந்ததேயில்லை." பொதுஜனப் பாராட்டைப் பெறுவது அர

சியல் தலைவர்களுக்கே கூீணமானது. காந்தியார், 'பொது மக்களின் கண் முன்பு அடிக்கடி அடிபடக் கூடிய நிலைமையை அடிக்கடி உண்டாக்கிக் கொள்ளாமலிருப்பாராயின், அவர் இதுகாறும் உருவற்றுப் போய் விட்டிருப்பார். இவ்வித விளம்பரத்திற்கு ஜனாப் ஜின்னா எப்போதும் கவலைப்பட்டதுமில்லை; பகிரங்க கரகோஷத்தை நாடியதுமில்லை. அதுதான் நம் தலைவரின் விசேஷ குணாம்சம்.

ஜனாப் ஜின்னா மீது செய்யப்படும் தூஷணையும் இங்கு கவனிக்கத்தக்கது. பாகிஸ்தான் கோரிக்கையாக உருவடைந்த இரு சமுதாயக் கோட்பாட்டைச் சிருஷ்டித்தவர் அவரல்ல. அவர் அக்கொள்கைக்குப் புதிதாக மாறியவர். அவர் அனுஷ்டிக்கும் மிகச் சிறந்த போக்கு இதுதான். 1937-ம் ஆண்டில் அவர் முஸ்லிம் சமுதாயத்தின் தலைவராக ஆனது முதல் முஸ்லிம்களின் அபிப்பிராயங்களையும், உணர்ச்சிகளையும், அமைப்பு அபிலாஷைகளையும் நெருங்கி அறிந்து கொண்டு, அவைகளையே தமது கொள்கைகளாக ஏற்று, அதையே வற்புறுத்துவதும் அவரது வழக்கமாகி விட்டது. ஆதலால், ஜனாப் ஜின்னாமீது கூறப்படும் எந்த தூஷணையும், முஸ்லிம் சமூகத்தின்மீதும், அவர்களின் கொள்கைகளுக்கு மூலகாரணமா யமைந்த இஸ்லாத்தின் மீதும செய்யப்படும் தூஷணையாகும்.

ஜனாப் ஜின்னா நம்பிக்கையான தலைவர்தானா, முஸ்லிம் லீக் ஸ்தாபனம் முஸ்லிம் பொது மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த சபைதானா என்ற விஷயங்களை முடிவு செய்ய வேண்டியவர்கள் முஸ்லிம்களே யாவர். இந்த விஷயங்களில் ஹிந்துக்கள் கண்டனம் எழுப்புவது பொருத்த மற்றது. ஹிந்துக்களின் கண்டனத்தால் விரோதமும், வெறுப்

பும்தான் அதிகரிக்கும். இதைத்தான் ஹிந்துக்கள் செய்திருக்கிறார்கள். உண்மையை நோக்குமிடத்து முஸ்லிம் லீக், தனது ஸ்தாபனத்தைப் பலப் படுத்திக் கொள்ளவும், இந்திய முஸ்லிம்களைத் தன் கொடியின் கீழ் ஏராளமாகச் சேர்த்து ஐக்கியப் படுத்தவும் பேருதவியாக இருந்தவை ஜனுப் ஜின்னுமீதும், முஸ்லிம் லீக் மீதும் ஹிந்துப் பத்திரிகைகளால் அள்ளிவீசப்பட்ட அந்தத் தூஷணை மொழிகளேயாகும்.

பாகிஸ்தான் உற்பத்தியானல், இந்தியாவின் பாதுகாப்பு க்ஷீணித்து விடுமெனக் கூறப்படுவது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். ஹிந்துஸ்தானைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கவனிக்க வேண்டுவது பாகிஸ்தான் பிரதேசத்தின் வேலையல்ல. நாம் இங்கிருப்பதால்தான் இந் நாட்டின் விதியில் அக்கரை கொண்டிருக்கிறோம். நாம் இங் இல்லாது போய்விட்டால், இந்நாட்டிற்கு என்ன நேரிட்டாலும அதைப் பற்றிய கவலை நமக்கில்லை. உதாரணமாக மெக்ஸிகோவாசிகளுக்கு இந்நாட்டைப்பற்றி அக்கரை என்ன? இப்போதுள்ள நிலைமையில் நாமே இந்தயாவாகவும், இந்தியாவே நாமாகவுமிருக்கிறோம். இந்நாட்டிலுள்ள இரண்டு சமுதாயத்தினரும் பாகிஸ்தான் மூலம் தனித்தனி நாட்டினராகிவிடுவர். அவ்வாறு ஏற்படுமாயின், ஒவ்வொரு சமுதாயத்தினரும் அவரவர் பிரதேசப் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ளவேண்டுமே யல்லாது, மற்றவரின் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ள இயலாது. உதாரணமாக பிரான்ஸ் நாடு, தன் பிரதேசப் பாதுகாப்பை மட்டும் கவனித்துக்கொள்ள முடியுமேயன்றி, எந்த காரணத்தை முன்னிட்டும் இத்தாலியின் பாதுகாப்பையும் ஒருங்கே சேர்த்

யைப் பார்த்துக் கொள்ள முடியாது. ஆகலால், மேலே சொன்ன ஆட்சேபம் பொருத்தமற்றது.

இரண்டாவதாக, நவீன ஆயுதங்கள் மிகைத்துள்ள இந்நவயுகத்தில் மலை எல்லைகள், நாட்டின் பாதுகாப்பில் இரண்டாந்தரமாகவே இருக்கும். இந்நவயுகத்தில் ஒரு நாட்டின் பாதுகாப்பு, அந்நாட்டு மக்களின் மன உறுதியையே பொறுத்திருக்கிற தென்பது சமீப யுத்தத்தால் தெளிவாக நிரூபிக்கப்பட்டுப் போய்விட்டது உதாரணமாக இந்தியாவில் ஒரு சமஷ்டி சர்க்கார் நிறுவப்பட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். வடமேற்குப் பகுதியிலுள்ள முஸ்லிம் பிராந்தியம் மத்திய சமஷ்டியின் ஒரு பகுதியாகவே இருக்குமல்லவா? மத்திய சமஷ்டி நிர்வாகத்தில் இந்தப் பிரதேச மக்களுக்குத் திருப்தியில்லை யென்று வைத்துக் கொள்வோம். இந்த நிலைமையில் வடமேற்கு திசை வழியாக ஒரு அயல் நாட்டார் இந்தியாவின் மீது படையெடுத்தால் என்ன நேரிடுமென நினைக்கிறீர்கள்? இந்தியாவின் கிழக்கு எல்லைகளை ஜப்பானியப்படைகள் கடந்த சமயம் 1942ஆம் கோடையின்போது ஹிந்து இந்தியா ஜப்பானுடன் தனி ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றதைப் போலவே, வடமேற்குப் பிராந்திய மக்களனைவரும் மத்திய சமஷ்டியை எதிர்த்துப் புரட்சி செய்ய முற்பட்டு, படையெடுப்பாளர்களுடன் சேர்ந்து கொள்வர். விஸ்வாசத்தைப் பற்றிய பேச்சுக்கு இங்கு இடமில்லை. ஏதேனும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டாலொழிய எந்த சமுதாயமும் வேறு சமுதாயத்திடம் விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டுமென்ற கட்டுப்பாடு ஒன்றும் கிடையாது. அதிலும் மத்திய சமஷ்டியிலுள்ள ஹிந்து ஆதிக்கம் 'முஸ்லிம்களைச் செய்

யக்கூடிய துன்புறுத்தலை அனுபவிக்கும் எந்த சமுதாய மும், தன்னை அடக்கியாளும் வேறொரு சமுதாயத்திடம் விசுவாசமாக இருப்பதற்கில்லை. பாகிஸ்தான் என்று ஏற்பட்டு, அதற்கு ஹிந்துஸ்தானின் போக்கு பிடிக்கவில்லை யென்றாலும் இதே கதிதான் நேரிடும்.

ஆதலால், பாகிஸ்தான் சிருஷ்டி செய்யப்படுவதோ, அல்லவோ—இதற்கும் பாதுகாப்புக்கும் ஒருவிதசம்பந்தமு மில்லை—வடமேற்குப் பாதுகாப்பு பின்கண்ட இரு வழி களில் ஏதேனும் ஒன்றின்மூலம் நிறைவேற்றப்படலாம்.

(1) ஹிந்து இந்தியா, தனது தாராளப் போக்கின் மூலம் வடமேற்கு முஸ்லிம் பொது மக்களின் உள்ளங்களை வசப்படுத்தி, அந்த முஸ்லிம்கள் மனமுவந்து ஹிந்து இந்தி யாவுடன் தோளோடுதோள் சேர்ந்துநின்று அயலார்களுக் கிடங்கொடாதவர்களாகத் திகழும்படி செய்யவேண்டும்— அல்லது,

(2) வடமேற்குப் பிரதேச முஸ்லிம்கள் அடியோடு அழித்து நாசமாக்கப்பட்டு, ஹிந்து இந்தியாவின் ஆபத் துக்கு அவர்கள் என்றென்றும் மூலகாரணர்களாக இல்லா மல் செய்யப்படவேண்டும்.

ஹிந்து ஜாதியினரின் மனப்பான்மையும், குணமும் அற்புதமாகத் திடீரென மாறினாலொழிய முதலாவது கூறப் பட்ட வழி சாத்தியமானதல்ல. இவ்வித அற்புதங்கள் ஒரு நாளும் ஏற்படாது. ஹிந்துக்களின் மனோபாவத் திலோ, குணத்திலோ மாறுதல் ஏற்படக் கூடிய அறிகுறி யொன்றும் காணப்படவில்லை. ஜாதியைப் பொறுத்தவரை ஒவ்வொரு விஷயமும் தன்மனப்படியே நடக்க வேண்டு

மென்றும், இதரர்களுக்குச் சாதகமாக ஏதுவு மிருக்கக் கூடாதென்றும் பனியா வகுப்பு கருதுகிறது. இரண்டாவது வழியை 1923ஆம் முதல் ஹிந்து இந்தியா கடைப் பிடித்து வருகிறது. இதையே முஸ்லிம் இந்தியா பலமாக எதிர்த்துப் போராடுகிறது. ஹிந்து இந்தியா விதிக்கும் தலையெழுத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பாகிஸ்தானை ஓர் கருவியாக முஸ்லிம்கள் மதிக்கின்றனர். ஹிந்து இந்தியாவோ, மஹ்மூத் கஜினி இந்தியா மீது படையெடுத்து வந்த அந்தப் பழைய நாட்களுக்குப் பின்னோக்கிச் செல்ல விரும்புகிறது. இதுதான் அவர்களின் அபிலாஷை. அவர்களின் உள்ளங்களில் நெடுங்காலமாக நிரம்பியிருந்து வரும் இலட்சியமும் இதுவே. அவர்களைப் பொறுத்த வரை இந்தப்போக்கு அவர்களுக்கு நேர்மையாக இருக்கலாம். ஆனால், முஸ்லிம் இந்தியாவுக்கு இது சற்றும் பொருந்தாது.

கடைசியாக நம் முன் எதிர்பட்டு நிற்பது பொருளாதாரப் பிரச்னை. பாகிஸ்தான் கண்டனக்காரர்கள் இதைப் பற்றி ஏராளமாக எழுதித் தள்ளிவிட்டார்கள். ஆரம்பமாக உலகில் எந்த நாடும் போதிய பொருளாதார பலம் வாய்ந்ததல்லவெனக்கூறி விடுதல் நன்மையாம் இதுதான் பொதுவாக உலக நாடுகள் இருந்துவரும் நிலைமை. உலக நாடுகள் பொருளாதாரப் பலத்தைப் போதிய அளவு பெற்றிருக்குமானால் சர்வதேச ஒத்துழைப்புக்கு சந்தர்ப்பமும் ஏற்படாது; ஏற்படவேண்டிய அவசியமுமில்லை. சமுதாயங்கள் வளர்ந்து, பலகாரணங்களைக்கொண்டு நாடுகள் அமைக்கப் படுகின்றன. இவ்வாறமைக்கப்பட்ட நாடுகள், தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சுற்றுப் புறங்களை நோக்குகின்றன. அதற்குப்பின்னர், தங்கள் சக்திக்கும்,

தேவைகளுக்கும் ஏற்றபடி நிர்வாக அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. வடமேற்குப் பிராந்தியத்திலடங்கிய மாகாணங்கள் எல்லாம் வருமானக் குறைவுள்ள மாகாணங்களென அடிக்கடி கூறப்பட்டு வருகிறது. டாக்டர் அம்பேத்கார், இப்பிரதேசங்களின் தற்போதைய வரவு செலவுகளைக் கணக்கிட்டு பாகிஸ்தான் பிரதேசம் வருஷத்தில் 6 கோடி உபரியுள்ள பிராந்தியமாக இருக்குமென முடிவு கூறியிருக்கிறார். ஆனால், இந்த செலவினங்களில் இராணுவச் செலவுகள் சேர்க்கப்படவில்லை. நவீன ஆயுதங்கள் மிகுந்துள்ள இக்காலத்தில் இராணுவச் செலவு மேற்கண்ட உபரித் தொகையைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகரிக்கலாமென்று அவர் கூறுகிறார். எனவே, இதிலிருந்து பாகிஸ்தானின் வருமானம் நவீன கால நாட்டின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதுமானதாயிராதென அவர் முடிவு கட்டியிருக்கிறார்.

மேற்கூறியவாறு தற்போதைய புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, பாகிஸ்தான் பொருளாதார நிலைபற்றி விவாதிப்பது அடியோடு தவறானதாகும். இவையெல்லாம் இங்கு அவசியமில்லையாதலால், இங்கு அதைப்பற்றி ஒன்றுங் கூறப்போவதில்லை. நாம் இப்போது அயல் நாட்டு ஆட்சியில் வாழ்ந்து வருகிறோம். ஒரு அயல் நாட்டு மன்னரின் நிர்வாகமே இப்போது நடைபெறுகிறது. அந்த மன்னர் திடீரென ஒரு தர்ம தேவதையாக மாறுதிருந்தால், எல்லா நிர்வாகத்தைவிட அவாது நிர்வாகம் மிகமிக வீண் செலவுள்ளதாகவே இருக்கும். அவர் தம் விருப்பப்படி தமது காரியங்களை நடத்தி வருவதற்காக ஒரு மக்கள் இனத்தை உயிர், உடல், திறமை, குணம், விசுவாசம் முதலிய எல்லாவற்றுடன் விலைகொடுத்து வாங்க வேண்டியிருக்-

கிறது. பொதுஜன வேலைகளுக்காக ஒரு தேசீய சர்க்கா எவ்வளவு செலவிடுமோ அதைவிட இரண்டு, மூன்று சிற் சில சமயங்களில் நான்கைந்து மடங்குகள் கூட அந்த அந்நிய மன்னர் செலவிட வேண்டி ஏற்படுகிறது. வரி கொடுப்போரின் முதலீட்டு வருமானத்தைக் கவனிக்குமிடத்து இந்திய நிர்வாகமே உலகில் எல்லா நாடுகளைவிட அதிக செலவுள்ளதாகும்.

மேலும் அந்நிய மன்னரின் ஆட்சி, அது எத்துணைத் திறமை வாய்ந்ததாயிருப்பினும சரி, நாட்டின் நன்மையைப் பொறுத்தவரை திறமையில் குறைந்ததும், வீணானதுமே யாகும். ஒரு தனி உத்தியோகஸ்தன் தன் முன்னேற்றத்துக்கு அந்நிய மன்னரை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த அந்நிய மன்னரின் நிர்வாகமோ ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிறது. ஆகவே அந்த உத்தியோகஸ்தன், தான் பிறந்த நாட்டில் தனக்கு ஒரு உரிமையுமில்லையென்ற உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவருடைய சொந்த அபிலாஷை, நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி, அவருடைய நன்னடத்தையையும், தேசபக்தியையும் போக்கி விடுகிறது. இந்நாட்டில் பணமூலமும், இதர பல வழிகளிலும் லஞ்சப் பேய் தாண்டவமாடுவதற்கு இது தான் காரணம்.

பாகிஸ்தான் தேசீய சர்க்கார் ஒன்று ஏற்படுமாயின், அந்த சர்க்காரின் கீழ் இந்த நிலைமையெல்லாம் அடியோடு மாறிவிடும். நாம் நமது வேலைகளுக்காக ஆட்களை விலை கொடுத்து வாங்க வேண்டுவதில்லை. அந்த வேலைகளைச் செய்வோருக்கு நாட்டின் வருமானத்திலிருந்து எவ்வளவு கொடுக்க இயலுமோ அவ்வளவுதான் கொடுக்கப்படும்.

பொதுஜன ஒழுக்கத்தைக் கெடுத்து, நாட்டையே குட்டிச் சுவராக அடிக்கக் கூடிய அதிக சம்பளங்கள் அப்போது இருக்கமாட்டா. நாட்டின் பொருளாதாரம் தேசிய அடிப் படையில் தான் நிர்மாணிக்கப்படுமேயன்றி, அயல் நாட்டு ஏகாதிபத்தியத்தின முதலாளித்துவ அடிப்படையில் நிர் மாணிக்கப்பட மாட்டாது.

அரசாங்க உத்தியோகங்களுக்காகத் தெரிவு செய்யப் படுவோர், திறமையுள்ளவர்களாக மட்டுமன்றி, எந்த அந் நியஆட்சியின் நல்லபிமானத்தைப் பெறுவதற்காகவும் அல் லாமல் நாட்டு மக்களுக்கு உண்மையான சேவை செய்யக் கூடிய தேசபக்தர்களாகவும் பயிற்சியளிக்கப்படுவர். அவர் கள் தறபோதிருப்பதைப்போல் பொது மக்களின் எஜமா னர்களாயிராமல், பொதுஜன ஊழியர்களாகவேயிருப்பர். இங்கிலாந்தில் பொது மக்களில் ஒருவர் சர்க்கார் ஊழியரை நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் சந்திப்பர். அவர் களும் அவரைக் கௌரவத்துடன் நடத்துவர். இந்தியா விலோ பொது மக்களில் ஒருவர் சர்க்கார் ஊழியரை அணு கும்போது பயப்படுகிறார். அவரும் கோபத்தினால் வீசும் வெறுப்புப் பார்வையுடன் நோக்கப்படுகிறார். இங்கி லாந்தில் போலீசார் பொதுஜன நண்பர்களாக இருக்கின்ற னர். இந்தியாவிலோ அந்தப் போலீசார் எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தராயிருப்பினும் மக்களின் வெறுப்புக் குள்ளாகிறார். பாகிஸ்தான் தேசிய சர்க்கார் ஏற்பட்டு விட் டால் இவையெல்லாம் மாறிவிடும். இன்றிருப்பது போன் றில்லாமல் வேறு பட்ட உணர்ச்சியுடனும், வேறான இலட்சியங்களுடனும் நாட்டின் நிர்வாகம் நடைபெறும். இது போன்றே நாட்டின் பொருளாதாரமும் வேறுபட்ட அடிப்படையின் மீதே நிர்மாணிக்கப்படும். இப்போதைய

வடமேற்குப் பிரதேச வரவு செலவு புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, பாகிஸ்தானின் எதிர்காலப் பொருளாதார நிலைபற்றி விவாதிப்பது கொஞ்சமும் பொருத்தமற்றது. அதிகாரமும், சுதந்திரமும் நமக்களிக்கப்பட்டு விட்டதாயின், நம் பொருளாதாரத்தை எவ்வாறு சமாளித்து, நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதை நாமறிவோம்.

ஹிந்து இந்தியா விளைபொருள்களில் செல்வம் கொழிக்கும் நாடாக இருக்கையில், வட மேற்குப் பிராந்தியம் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டபின், ஒன்றுமில்லாமல் எளிய நிலைமையிலேயே இருக்கும். வேலையிலிருந்து விலகிய பஞ்சாப் சிவில் உத்தியோகஸ்தரான மிஸ்டர் கால்வெர்ட்* இதையே பாகிஸ்தானுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கிறார். அவர் கூறுவதாவது:— "தென்னிந்தியா கைத்தொழிலில் மிகைத்திருப்பது போன்றே முஸ்லிம் வடமேற்குப் பிராந்தியம், வட இந்தியாவின இதர பகுதிகளைப் போல விவசாயத்தில் மிக்க நாடாக இருக்கும். உலகின் இதர பாகங்களிருப்பதைப் போன்றே விவசாய நலனகளே மிகவும் செல்வாக்கானவையாக இருக்கும். இவ்வித நலன்களுடையவர்கள், லஞ்சம் கொடுத்து சட்ட சபையினரைத் தங்கள் வசப்படுத்தி, தங்களுக்கு நன்மையான சட்டங்களையும், ஏற்பாடுகளையும் செய்து கொள்வர். செல்வ மிக்க முதலாளியின்கீழ் உள்ள சர்க்கார், அயல் நாட்டிலிருந்து, உள் நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கும்

* "பஞ்சாபின் செல்வமும் முன்னேற்றமும்". இதிலிருந்து "ஒரு பஞ்சாபி", தமது "பிரிவினை: கண்டனங்களுக்குப் பதில்" என்ற கட்டுரை 11ம் பக்கத்தில் சில கோட்பாடுகளைக் கூறியிருக்கிறார்.

இதனல் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சரக்குகள் பெருவாரியாக செலவாகிவிடும் (அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் நடை பெற்றதைப் போல்) இந்த மாதிரியான நிலைமை இந்தியாவிலும் ஏற்பட்டால்,—அவ்வாறு ஏற்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன — விவசாய மிகைத்த வட மேற்குப் பிரதேசம், தன்னைப் பலியிட்டு தென்னட்டு கைத்தொழில் ஆதிக்கம் பெறுவதாகக் கருதும். பாதுகாப்பு என்பது இந்தியாவிலிருக்கும் கைத்தொழில் முதலாளிகளுக்கு நன்மையளிப்பதாக இருக்குமே யன்றி, விவசாய நலன்களுக்கு தங்கள் கச்சாப் பொருள் விற்பனை கட்டுப்பாடு செய்யப்படுவதாகவே காணப்படும்.''

ஆனல், பாகிஸ்தான் பிரதேசம் எப்போதும் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் பிரதேசமாக இராது. அதன் செல்வமும், வருமானமும் இன்னும் திறக்கப்படாமலிருக்கின்றன. எப்போதும் இப்படியே இருந்து விடுமெனக் கூறப்பட முடியாது. மேலும் ஜப்பானை நாம் மறந்து விடுவதற்கில்லை. பாகிஸ்தானைவிட ஜப்பான் செல்வத்தில் மிகைத்த நாடல்ல. எனினும், அது ஒரு முதல்தர கைத்தொழில் நாடாகவும், ஒரு முதல்தர இராணுவ சக்தி வாய்ந்த நாடாகவும் திகழ்ந்தது. அது எல்லா அயல் நாடுகளிலிருந்தும் கச்சாப் பொருட்களையும் இறக்குமதி செய்கிறது. சர்வதேசவர்த்தகம் அதிகரித்துள்ள இக் காட்களில் ஒரு நாட்டின் விவசாய, கைத்தொழில் செல்வ வளர்ச்சி அந்நாட்டின் தொழிலாளர்களுடைய திறமையைப் பொறுத்தே நிற்கிறது. பாகிஸ்தான் தொழிலாளியும் உலகெங்கிலும் உள்ள தொழிலாளியைப் போன்ற திறமை வாய்ந்தவர் தான்.

காலஞ்சென்ற புரொபஸர் குல்ஷன்ராய், ஹிந்து இந்தியாவின் செல்வ நிலை பற்றியும், பாகிஸ்தானின் பஞ்சம் பற்றியும் அடிக்கடி பேசிக் கொண்டேயிருப்பது வழக்கமாக இருந்தது. ஹிந்து இந்தியா செல்வ மிக்க நாடாக இருக்கு மென்பது நிச்சயம். உண்மையில் அதைக் காண்பவர்கள் நாவில் நீரூற்றுப் பெருகும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு ஆங்கிலச் செய்யுள் இப்போது நம் கவனத்துக்கு வருகிறது.

"இனிமை மிக்கது மலை ஆடே—ஆனால்
செழுமை மிகைத்தது பள்ள ஆடு. கனிவுடனிதனை
நாம் எடுத்து—கடிதில் செல்வோம் விரைந்தோடி."

ஹிந்து இந்தியாவில் ஏராளமான பொன்னும் வெள்ளியும் மண்டிக்கிடக்கலாம். ஆனால், பாகிஸ்தான் நிலங்களிலோ இந்தியாவிலேயே செழித்து வளர்ந்த மக்கள் இருக்கின்றனர். அவர்கள் இந்தியாவில் வசிக்கும் இதர மக்களைக் காட்டிலும் நன்றாக உண்டு, நல்ல உடையணிந்து நல்ல வசதியான இடங்களில் வசிக்கின்றனர். செல்வம் என்பதற்கு நல்வாழ்வும், வசதியுமே முக்கியாம்சமென இருக்குமாயின், நாம் வெட்கித்தலை குனியக்கூடிய விஷயம் ஒன்றும் கிடையாது.

லாகூர் கல்லூரியொன்றில் சரித்திர போதித்து வந்த புரொபஸர் குல்ஷன்ராய், இப்போது அயோத்தி, பீஹார் மாகாணப் பிரதேசங்களாயிருக்கும் நிலங்கள் இதற்கு முன் வடமேற்குப் பிரதேசத்தின்மீது ஆதிக்கங் கொண்டு ஆட்சி செய்து வந்ததாகவும், அது, தன் அபரிமித செல்வத்தால் மீண்டும் அப்பிரதேசத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்யுமென்றும் கூறுகிறார். இவ்விஷயம் பாகிஸ்தான் ஆதிக்க

வர்க்கத்தாரின் விஷயம். எந்த எதிர்ப்பாளரும், பாவம், தம் தேகசுகத்தை இதன்மீது செலவிட வேண்டிய அவசிய மில்லை. என்றாலும் இவ்வித விவாதம் வெகு அற்பமானது. புரொபஸர் கூறும் காலத்தில் வடமேற் கெல்லைப் புறம், ஒருவரு கொருவர் சம்பந்த மில்லாத தனி சுதந்தர மலைநாட்டுப் பிரிவினர் வசிக்கும் பிரதேசமாக இருந்தது. மௌரியர்கள் நிரம்பிய பாடலீபுரம் போன்ற கட்டுப்பாடான அரசாங்கம் அவைகளை ஒவ்வொன்றாக வெற்றி கொண்டு அடிமைப் படுத்துவது சாத்தியமாக இருந்தது. இப்போது அந்த காலம் பழங்காலமாகி விட்டது. வடமேற்குப் பிரதேசம் பல மலை ஜாதியார் வாழும் நாடாக இப்போதில்லை. பாகிஸ்தான் நாடு கட்டுப்பாடும், பலமும் வாய்ந்த நவீன அரசாங்கமாக விளங்கும். இப்பகுதியிலிருந்து எவரேனும் படையெடுத்து வந்தால், கட்டுப் பாடாக எதிர்க்கும் திறமையும் அதற்கிருக்கும். ஹிந்து இந்தியா, தன்மீது ஏற்படக்கூடிய கடற்படை யெடுப்பையோ, தரைப்புற படையெடுப்பையோ எதிர்த்து நின்று தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியாது. அந்தப்பகுதி நம்முடன் ஆயுத சோதனையில் இறங்கி விட்டால், நாம் மூன்றே மாதங்களில் இறுதிவரை போராடி வெற்றி பெற்று விடுவோம். அந்த வகையில் பாகிஸ்தான் பகுதி எவ்வகையான பயமுங் கொள்ள வேண்டுவதில்லை. இந்திய சாம்ராஜ்யத்தின் திறவுகோல் என்றென்றும் பாகிஸ்தான் வசமே யிருந்துவரும்.

முஸ்லிம் பிரதேசங்கள் ஹிந்துப் பிரதேசங்களிலிருந்து ஏன் பிரிந்திருக்கவேண்டு மென்பதற்கு இருதாப்பு பொருளாதார வேறுபாடுகளே காரணங்களாக அமைந்துள்ளன. முதலாவது உலக யுத்தத்துக்கு முன் ஹிந்து-முஸ்லிம்களிடையே பொருளாதாரத் துறையில் வித்தியாசமில்லாம

விருந்தது. அவ்வாறே ஏதேனும் இருப்பினும் அது அற்ப மானதாகவேயிருந்தது. யுத்தம் ஏற்பட்டவுடன் இந்த நிலையைத் தலைகீழாகப் புரட்டிவிட்டது. இதற்கான காரணங்களை விவரிக்கப் புகுந்தால் அது வேறு விஷயமாக முடியும். இவ்வித வேறுபட்ட நிலைமை இருமக்களுக்கிடையே நிரந்தர ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திவிட்டது. அதற்குப் பிந்திய வருஷங்களில் இந்த ஏற்றத்தாழ்வு முற்றிக் கொண்டே வந்துவிட்டது. பின்னர் சமீப காலயுத்தம் இவ்வேற்றத் தாழ்வை அளவு மீறச் செய்துவிட்டது. முஸ்லிம்கள் இன்னும் ஒரு நூற்றாண்டுவரை விடாமல் போரிட்டாலும் ஹிந்துக்களைப் போன்ற சம நிலையை அடைய முடியாது. இருமக்களின் ஏற்றத்தாழ்வு நிலையையும் தம் அவகேடாக்கிவிட்டது. செல்வந்தர்களைச் செல்வ மிக்கவர்களாகவும், ஏழைகளை இன்னும் அதிக வறியர்களாகவும் யுத்தம் செய்துவிட்டது. நாணய அதிகரிப்பு, கொழுத்த வியாபாரிகளுடையவும், கைத்தொழில் முதலாளிகளுடையவும் வங்கி சேமிப்பு இருப்புகளைப் பெருக்கிவிட்டது. இவர்களில் பெரும்பாலோர் ஹிந்துக்களே. முதலாளிகள் செல்வச் சீமான்களாகப் பெருகுகையில் தொழிலாளர் முன்பிருந்ததைவிட அதிக வறிஞர்களாகிவிட்டனர். முஸ்லிம்கள் பொதுவாகத் தொழிலாளர் சமூகமேயென்பதைக் கூறவேண்டுவதில்லை. சுமார் முப்பதாண்டுகளுக்கு முன் இந்தியாவில் முதலாளி-தொழிலாளர் பிரச்னையே இருந்ததில்லை. ஆனால், எதிர் கால இந்தியாவில் இப்பிரச்னையே பிரதான பிரச்னையாக இருக்கும். யுத்தமும், திடீரென ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சியும் ஒரு சமூகப் பிரச்னையைக் கிளபபிவிட்டு விட்டன. இப்பிரச்னை வளர்ந்துஒருஇரத்தக்களறியும்,பலாத்கார

மும் கிராமிய புரட்சி ஏற்படாமல் தீர்க்கப்படுவது சாத்தியமில்லை. பாகிஸ்தான் தோற்றம் ஒரு பாதுகாப்புக் கதவாக இருக்கும்; இரத்தக்களறி நேரிடாமல் தடுப்பதில் அது வெகுதூரம் உதவி செய்யும். மேலும் நாளை ஒருநாள் ஒரு அயல்நாட்டுப் படையெடுப்பு ஏற்பட்டால், அத்தியாவசியமாகத் தேவைபடக் கூடிய ஐக்கியத்தையும், உள்நாட்டுக் கட்டுப்பாட்டையும் பாகிஸ்தான் ஏற்படுத்திவிடும்.

சென்ற இரண்டு யுத்தங்களாலும், குழப்பங்களாலும் ஏற்பட்ட நிலைமை, முஸ்லிம்களின் பொருளாதார வாழ்க்கை நல்லவிதமாக நடைபெறுவதை சாத்தியமில்லாமற் செய்துவிட்டது. ஹிந்துக்களும், அவர்களுடைய பிரிட்டிஷ் நண்பர்களும் கூறுகிறபடி எதிர்காலத்தில் ஒரு சமஷ்டி இந்தியா ஏற்பட்டால், நாட்டின் வர்த்தகம், கைத்தொழில் முழுவதும் ஹிந்துக்களின் வசமாகிவிடும். முஸ்லிம்களோ, கைத்தொழிலில் வேலை தேடிக்கொள்ள ஹிந்துக்களின் தயவுக்காக ஏங்கி நிற்கும் தொழிலாளர் சமூகமாகிவிடும். ஹிந்துக்கள் பொருளாதாரத் துறையில் முஸ்லிம்களை எப்போதும் பகிஷ்கரித்து வருகின்றனரென்பதையும், அவர்கள், தங்களாதிக்கத்திலுள்ள எந்த ஸ்தாபனத்திலும் முஸ்லிம்களை நியமித்துக்கொள்ள மாட்டார்களென்பதையும் நாம் ஏற்கெனவே தெளிவாக விளக்கியிருக்கிறோம். உண்மையில் ஹிந்துக்கள் கோரும் சுதந்தரம், பிரிட்டிஷாரோ, முஸ்லிம்களோ தங்கள் விஷயத்தில் தலையிடாமல் இந்திய செல்வத்தை யெல்லாம் சுரண்ட வேண்டுமெனக் கோரும் சுதந்தரமே யாகும். முஸ்லிம்களின் கோட்பாடோவெனில் நேர்மையானது; பொருளாதார சுரண்டல் நோக்கமே அவர்களுக்கில்லை.

இது ஒரு முக்கியமான விஷயம். இருசாராரின் கலாசார, குணோபாவ நோக்கங்களின் வேறுபாட்டை இது பிரதி பலிக்கிறது. ஹிந்து-முஸ்லிம் பொருளாதார வித்தியாசத்திற்கு இதுவும் ஒரு காரணமாகும். என்றேனும் ஒரு நாள் இந்தியாவின் செல்வமனைத்தும் திரட்டப்பட்டு, ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே சமத்துவமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டால் வெகு சொற்பகாலத்திற்குள் இந்த சம நிலைமை மாறி மீண்டும் பொருளாதார வேறுபாடு தோன்றிவிடுமென நான் நிச்சயமாக நம்புகிறேன். ஹிந்துக்கள் முன்போன்றே செல்வமிக்கோராகவும், முஸ்லிம் வறிஞர்களாகவும் மாறிவிடுவர். முஸ்லிம்கள் ஊதாறிச் செலவு செய்வரென்பது இதன் அர்த்தமல்ல. ஆங்கிலேயரைப் போலவோ அல்லது ஒரு அமெரிக்கரைப் போலவோ இந்திய முஸ்லிம், தன் பணத்தின்மீது சுதந்தரமுடையவரல்ல. இதற்குக் காரணம் என்னவெனில்: ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித் தனிக் கலாசார இலட்சியங்களும், தனித்தனி பொருளாதார நலன்களுமுடைய தனிச் சமுதாயத்தினராவர், ஹிந்து, பணத்தைச் சம்பாதித்து, சேமித்து வைக்கவே வாழ்கிறான்; முஸ்லிமோ, வாழ்க்கை நடத்தவும், செலவிடவுமே பணத்தை சம்பாதிக்கிறான். ஒரு ஹிந்துவின் அளவிலா பணத்தாசையோ செப்புந்தரமல்ல. பணமே அவருடைய முழு வாழ்க்கையையும் சிந்தனையையும் கவர்ந்து, மரணபரியந்தம் மனதை விட்டகலாப் பொருளாக விளங்குகிறது. அவர் உண்ணும் உணவு மட்டரகமானது. அவர் உண்பது உணவிலேயே சேர்க்கப்படாதது என்றுகூடச் சொல்லிவிடலாம். மற்றொருபுறம் முஸ்லிம் ஒருவர் உண்பதற்குப் பெயர் போனவராக இருக்கிறார். அவர், தமக்குக் கலியாண

மானவுடன், எல்லா வசதிகளும் ஒருங்கே அமையப்பட்ட வீட்டில் தனி வாழ்க்கை நடத்துகிறார். இந்த முஸ்லிமை விட நல்ல வருமானம் வரக்கூடிய ஹிந்து கீழ்த்தரமான இடத்தில் வசிக்கிறார். 50 அறைகளுள்ள ஒரு கட்டிடத்தில் 50 குடும்பங்கள் வசிக்கும். ஹிந்துக்களின் வீடுகளிலுள்ள அறைகள் மிகச் சிறியனவாக இருக்கும். சுருங்கச் சொன்னால் ஹிந்துக்கள் வாழ்க்கை நடத்தவில்லை; அவர்கள் சம்பாதித்து, சேமித்து வைத்துவிட்டு, இறந்துவிடுகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். பணத்தாசை இவ்வளவு அதிகமாகப் பிடித்திருப்பது ஒரு சாபக்கேடு. தனிப்பட்டோருக்கும், சமுதாயத்திற்கும். அது ஒரு சாபத்தீட்டு என்று கூறலாம். இதனால் பொருளாதார ஏற்றத்தாழ்வு உண்டாகிறது. பின்னர் அநேக சமூக அவகேடுகளுக்கும் இதுவே காரணமாக அமைந்துவிடுகிறது. ஹிந்துக்களுக்கு பணத்தாசையின் காரணமாக ஒரு விநோதமான குணமேற்படுகிறது; ஒரு விநோதமான மனப்பான்மை ஏற்படுகிறது. வட இந்தியாவில் வசிக்கும் முஸ்லிம்களுக்கோ வெனில் இது இன்னதென்றே தெரியாது. இந்தியாவின் இதர பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்களின் நிலைமையும் இதுதான். ஐரோப்பியரும், அமெரிக்கரும் கூட இதைப்பற்றியறியார்கள். ஏனெனில் இந்தியாவைப் போன்ற நிலைமை அந்த நாடுகளில் யூதர்கள் தவிர வேறெவரிடையேயும் கிடையாது. ஆனால், ஐரோப்பாவில் வதியும் யூதர்கள் மிகச் சொற்ப சிறுபான்மையினர்கள்; நம் நாட்டு யூதர்களே மிகப் பெரும்பான்மையினர் ஆவர்.

யூதர்களைத் தவிர எந்த ஐரோப்பியரும், அமெரிக்கரும் ஹிந்துக்களுடன் சம நிலைமை பாராட்ட முடியாது.

முஸ்லிம்கள் மட்டும் இதற்கு விலக்கல்ல. முஸ்லிம்களின் தாழ்ந்த செல்வ நிலைமையில் அவர்கள் ஹிந்துக்களைவிட வறியவர்களாகவே இருக்கின்றனர். இத்தகைய இருசாராரும் ஒரே சமஷ்டியிலோ அல்லது வேறு வகையான அரசாங்கத்திலோ பிணைக்கப்பட்டால், முஸ்லிம்கள் பெரிதும் துன்புறுவரென்பது நிச்சயம். பழங்கால மரம் வெட்டிகளாகவும், தண்ணீர் சுமப்போராகவுமே முஸ்லிம்கள் ஆகவேண்டி நேரிடும். ஹிந்து-முஸ்லிம் சமுதாயத்தினர், வெவ்வேறான பொருளாதாரங்கள், வெவ்வேறான இனமனப்பான்மை, வெவ்வேறான நடைமுறைப் பழக்கங்கள்முதலியவைகளால் ஒருவருக்கொருவர்நிரந்தரமாகவேறு பட்டே இருப்பர். அவர்களிருசாராரும் எப்போதும் சமாதானமாகவோ, ஒன்றுபட்ட மக்களாகவோ ஆக முடியாது.

ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தவிர்க்கப்பட இயலாத சிக்கல் தன்மைவாய்ந்தது. இதைப்போன்ற ஒரு பிரச்னை உலகின் எந்தப் பகுதியிலும் கிடையாது. ஹிந்து, முஸ்லிம் இருதரப்பாரின் கலைகள் வேறானவை; நாகரிகங்கள் வேறானவை; சமூகப் பழக்கவழக்கங்கள் வேறானவை; பொருளாதார நிலைமையும் வேறானவை. இதற்கு ஒரேஒரு பரிகாரம்தான் இருக்கிறது. இருவரும் பங்கு போட்டுக் கொண்டு வாழ அனுமதிக்கப்படவேண்டும். அப்போது தான் ஒவ்வொருதரப்பாரும் தங்கள் தங்கள் கலாசாரப் போக்கின்படி, தங்கள் மனம்போல் பொருளாதார நிர்வாகங்களை ஏற்படுத்திக்கொண்டு, பிறர் தலையீடில்லாமல் வாழ முடியும். சுருங்கக் கூறுமிடத்து, பாகிஸ்தான் ஒன்றே முஸ்லிம்களின் இறுதியான கதிமோட்சமும், இந்தியாவின் பல முரண்பட்ட சமுதாயத்தனரின் பிரச்னைகளுக்குரிய ஒரே பரிகாரமும் ஆகும்.

# அனுபந்தம்

---

## 1930-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அல்லஹாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லீம் லீக் மகாநாட்டில்

## டாக்டர் சர் முஹம்மத் இக்பால்

### அவர்கள் செய்த

## தலைமைப் பேருரை

கனவான்களே,

இந்தியாவின் முஸ்லிம் அரசியல் சரித்திரமும், செயல்களும் மிக மிக நெருக்கடியை அடைந்துள்ள கட்டமொன்றில் அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அழைத்து என்னைக் கௌரவப்படுத்தியதற்கு நான் மனமுவந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மாபெருங் கூட்டத்தில் என்னைவிட அரசியல் அனுபவம் மிகைத்தவர்கள் பலரிருக்கின்றனரென்பதில் சந்தேகமில்லை. அவர்களின் விவகார ஞானத்தில் எனக்குப் பெரிதும் மதிப்புண்டு. ஆதலால் இத்தகைய அறிவாளிகளடங்கிய கூட்டத்தை இன்றைய அவசியமான அரசியல் இலட்சியங்களை நாடி தலைமை வகித்து நடத்த நானே தக்கவன் எனக் கூறுவது மிகைபடக் கூறுவதாகும். நான் எந்தக் கட்சியையும் தலைமை வகித்து நடத்தவில்லை; எந்த தலைவரையும் நான் பின்பற்றவில்லை. இஸ்லாத்தின் சட்டம், கொள்கை, கலை, சரித்திரம், சாஸ்திரம் முதலியவை ஒவ்வொன்றையும் ஆழ்ந்து வாசிப்ப

தில் என் வாழ்வில் பெரும்பாகத்தை செலவழித்திருக்கிறேன். இஸ்லாத்தின் இவ்வித ஆராய்ச்சி, என்னை உலக விவகாரங்களுடன் இணைந்து நோக்கும்படி செய்தது. இதை மனதிற்கொண்டுதான் நான் உங்களிடம் பேச முன் வந்திருக்கிறேன். இந்திய முஸ்லிம்கள், இஸ்லாத்தின் உண்மை உணர்ச்சியின்படி நடக்க உறுதி பூண்டவர்கள். ஆதலின் உங்கள் முடிவுகளை உருவாக்குவதில் நான் முன் நின்று தலைமையாக நடத்திச் செல்ல உத்தேசிக்கவில்லை. ஆனால், அந்த முடிவின் பொதுவான தன்மைகளை நீங்கள் நிர்ணயிக்கக்கூடிய பிரதான இலட்சியத்தை உங்கள் மனதில் தெளிவாகப் பதியுமாறு விளக்கவே நான் முயற்சிக்கிறேன்.

இஸ்லாம் மதம் வைதீகமும், ஓரளவு அரசியலும் கலந்த மதமாகும். நான் கூறுவதின் அர்த்தம்: சட்ட முறைகளும், வைதீகக் கடமைகளும் அடங்கிய ஒரு சமூக அமைப்பே இஸ்லாமாகுமென்பதுதான். இந்திய முஸ்லிம்

### இஸ்லாமும் தேசீயமும்

களின் வாழ்க்கைச் சரித்திரத்தில் இஸ்லாமே பிரதான பகுதியாக இருந்து வருகிறது. சிதறுண்டு கிடக்கும் தனிப்பட்டவர்களையும், கூட்டத்தாரையும் ஒன்றுபடுத்தி, இறுதியில் அவர்களை, சொந்த மனோ உணர்ச்சியுடையவர்களாகச் செய்யக்கூடிய விசுவாசத்தையும், தத்துவங்களையும் இஸ்லாம் அளித்திருக்கிறது. உலகிலேயே இந்தியாவில்தான் இஸ்லாம் மதம், மக்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் சக்தியாக அதிக உதவி செய்திருக்கிறதெனக் கூறுவது மிகைபடக் கூறியதாகாது. இஸ்லாம் மதம் லௌகிக, வைதீக கோட்பாடுகள் ஒருங்கே அமையப் பெற்ற ஒருகலை என்ற முறையில் உலக நாடு

களில் உன்னத இடம் பெற்றதைப் போன்றே இந்தியாவி லும் உன்னத இடம் பெற்றுள்ளது. நான் கூறுவதன் அர்த்தம் இதுதான். முஸ்லிம் சமூகம், இஸ்லாமிய கலை யில் பிணைந்துள்ள சட்டப, ஒழுங்குகளைக் கொண்டு ஒன்றுபட்டுவிட்டிருக்கிறது. ஐரோப்பிய அரசியல் சிந்தனை யாளர்களால் வெளியிடப்பட்ட கொள்கைகள், இந்தியா விலும், வெளிநாடுகளிலும் முஸ்லிம் இளைஞர்களின் போக்கைத் தீவிரமாக மாற்றிவருகிறது. இக்கொள்கைகளைக் கண்ட நம் இளைஞர்கள், தங்கள் நாடுகளில் இவைகளை யனுஷ்டிக்க முற்படுகின்றனா. ஐரோப்பாவில் கிறிஸ்துவ மதம் பரிசுத்த ஆட்சி சட்டமாக இருப்பதாகக் கருதப் பட்டது. ஆனல் நாளடைவில் அது வைதீக சட்ட திட்டங் களாக மாறியது. இந்த ஸ்தாபனத்தை லூதர் எதிர்த்தார். அதில் அரசியல் சம்பந்தமில்லையென்பதே அவரது ஆட் சேபம். * * * * * கிறிஸ்துவ மதம் ஐரோப்பாவில் பரவிய சமயம் மதமென்பது ஒரு தனிப் பட்ட நபரின் ஆத்மார்த்த விவகார மென்றும், அவனது லௌகிக வாழ்விற்கும் அதற்கும் ஒருவித சம்பந்தமு மில்லை யென்றும் ஐரோப்பிய மக்கள் கருதினர். இஸ்லாம் மதமோவெனில் மனிதனில் பொதிந்து கிடக்கும் வைதீக, லௌகிக விஷயங்களைத் தனித்தனியே துண்டித்து வைககை வில்லை. இஸ்லாத்தில் ஆண்டவனும்-உலகமும், உணர்ச்சி யும்-செயலும், கோயிலும்-அரசாங்கமும் ஒன்றைவிட் டொன்று விலக்க முடியாத பிணைப்பும் தொடர்பும் வாய்ந் தவை யெனக் கருதப்படுகிறது மனிதனென்பவன் உணர்ச்சி உலகிலிருந்து அடியோடகற்றப்படக்கூடியவனாக உலகில் சஞ்சரிப்பவனல்ல. இஸ்லாத்தில் உணர்ச்சியும், செயலும் சம்பந்தப்பட்டு உணர்ச்சியே செயலாகப் பரிண

மிப்பதாகக் கருதப்படுகிறது ஐரோப்பாவில் இந்த விஷயம் உணரப்படவில்லை. இன்று அவர்கள் தங்கள் தவறை உணர ஆரம்பித்துள்ளனர். ஐரோப்பிய மதங்களிலும், அரசியல் விஷயங்களிலும் லௌகீக-வைதீக வேறுபாடு இருக்கிறது. இதனால் ஐரோப்பிய அரசாங்க நிர்வாக வாழ்விலிருந்து கிறிஸ்துவ மதம் தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஐரோப்பாவில் நாடுகளெல்லாம் மானிடத்துவ நலன்களை கொண்டல்லாமற் தேசிய நலன்களை யடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக இதுகாறும் பிரிந்திருந்த நாடுகளெல்லாம் இன்று ஒரு சமஷ்டி ஐரோப்பா நிறுவப்படவேண்டுமென விரும்புகின்றன. அதாவது கிறிஸ்துவ மதம் போதித்த மானிட ஒற்றுமையின் அவசியத்தை அந்நாடுகள் உணர ஆரம்பித்திருக்கின்றன. ஆனால் உண்மையில் அவர்கள் கிறிஸ்துவின் மானிட சகோதரத்துவ கோட்பாட்டைப் புனருத்தாரணம் செய்வதை விடுத்து, லூதரின தூண்டுதலின் மீது அதை நாசப்படுத்திவிட்டது. இஸ்லாம் மதத்திலோ வெனில் ஒரு லூதர் இருபபது அசாத்தியம். ஏனெனில், மத்திம கால கிறிஸ்துவ மதத்தில் இருந்தது போன்ற தேவாலய ஆதிக்க ஸ்தாபனங்கள் இஸ்லாத்தில் கிடையா. இஸ்லாமிய உலகில் உலக அரசாட்சி முறையடங்கியிருக்கிறது. இதன் தத்துவங்கள் எல்லாம் ஆண்டவனால் அருளப்பட்டவை யென்பது மத நம்பிக்கை. நமது பிரதிநிதிகள் இன்று நவீன உலகில் தொடர்பு கொள்ளவேண்டுமென்பதற்காக இதில் சிறிதளவு மாற்றம் செய்ய விரும்புவதாகத் தெரிகிறது. இஸ்லாமிய உலகில் தேசிய இலட்சியத்தின் முடிவு என்னவாகுமோ வென்பது எனக்குத் தெரியாது. இன்றைய நவயுகத்தை இஸ்லாம்,

தன் வழிக்கு மாற்றுமா, அல்லது நவயுகத்திற்கேற்ப இஸ்லாம் மாற்றப்படுமா என்பது பொறுத்துப் பார்க்கவேண்டிய விஷயம். பேராசிரியர் வென்சின்க் (லீடன்-ஹாலந்து) எனக்கு வரைந்துள்ள கடிதமொன்றில் பின்வருமாறு வரைந்திருக்கிறார் :—"சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக கிறிஸ்துவ மதம் அனுபவித்து வரும் அதேவிதமான நெருக்கடிகள் இஸ்லாத்தையும் தொடர ஆரம்பித்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. பல கோட்பாடுகளை விட்டுக்கொடுக்கவேண்டிய இந்த சமயத்தில், மதத்தின் அடிப்படைகளை எவ்வாறு காப்பாற்றுவது என்பதே பெருங் கஷ்டமாக இருக்கும் விஷயம். இன்றைய நிலைமையில் இஸ்லாத்திற்கு என்ன நேரிடு மென்பதைக் கூறுவதே கஷ்டமாக இருக்கிறது". தற்சமயம் தேசீய இலட்சியம் முஸ்லிம்களின் மதக் கொள்கைகளுடன் போட்டியிட்டு வேகமாகச் செல்லுகிறது. இதனால், இஸ்லாத்தின் மானிடத்துவ வேலைகளெல்லாம் எதிர்க்கப்படுகின்றன. ஜாதிய உணர்ச்சி வேகமாக வளர்ந்து வருவதால், தரவேறுபாடுகள் அதிகரித்து வருவதுடன், இஸ்லாத்தின் தரத்தையே எதிர்ப்பதாகவும் ஏற்படுகிறது.

நான் இந்த விவாதத்தில் இறங்கிவிட்டதற்கு நீங்கள் என்னை மன்னிப்பீர்களென நம்புகிறேன். மனிதனின் அபிப்பிராயம், அதன் பூகோள வரம்பைக்கொண்டு உருவாவதிலிருந்து விடுதலை செய்யும் சக்தி இஸ்லாத்திற்கு உண்டு என்பது நம்பிக்கை. தனிப்பட்டவர்களுடையவும், அரசாங்கங்களுடையவும் வாழ்வில் மதமே மிகமிகச் சக்தி வாய்ந்ததென்று நம்புபவன் நான். இறுதிக் கதிமோட்ச முடிவே இஸ்லாம்; அதற்கு வேறொரு முடிவும் கிடையாது என்பது என் திட நம்பிக்கை. இத்தகைய மனப்பான்மை

யுடைய ஒருவனை நீங்கள் அ. இ. முஸ்லிம் லீக்கின் இம் மகாநாட்டுத் தலைமையை தாங்கும்படி தெரிவு செய்திருக்கிறீர்கள். இத்தகைய ஒருவன், தன் சொந்த நோக்கின்படி விஷயங்களைப் பரிசீலனை செய்வானேயல்லாமல், வேறு வகையில் பரிசிலனை செய்ய முடியாது. நான் இப்போது கூறிவரும் பிரச்னை வெறும் வாய் மொழியான-அனுஷ்டான சாத்தியமற்ற பிரச்னையெனக் கருதிவிடவேண்டாம். உயிருள்ளதும் அனுஷ்டான சாத்தியமானதுமான பிரச்னை தான் அது. இந்த பிரச்னைக்குரிய சரியான பரிகாரத்தின் மீதுதான், இந்தியாவில் ஒரு தனிக் கலாசாரப் பிரிவாக நீங்கள் எதிர்காலத்தில் வாழ்க்கை நடத்துவது பொதிந்திருக்கிறது. இன்று இஸ்லாத்தின் முன் எதிர்பட்டுநிற்கும் அத்துணை கடுமையான சோதனை இதற்கு முன் எப்போதும் நம் சரித்திரத்திலேயே ஏற்பட்டது கிடையாது. தங்கள் சமூக அமைப்பின் அடிப்படை இலட்சியங்களை மாற்றம் செய்யவோ, திருத்தவோ, அடியோடு நிராகரித்து விடவோ, எந்த மக்களுக்கும் உரிமையுண்டு. ஆனால், அவர்கள் புதிய சோதனையொன்றை ஆரம்பிப்பதற்கு முன் தாங்கள் செய்யவிருப்பது இன்னதெனத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். நான் என அபிப்பிராயத்திற்கு மாறாக இருப்போரிடம் தகராறு செய்துகொள்ள விரும்புவதாக எவரும் கருதிவிடக் கூடாது. இது ஒரு முஸ்லிம் சபை. இங்குள்ளாரனைவரும் இஸ்லாத்தின் உணர்ச்சிக்கும், இலட்சியங்களுக்கும் உண்மையாக நடந்துகொள்ள ஆவல் கொண்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். ஆதலால் இன்றைய உண்மை எதுவென நான் கருதுகிறேனோ அதையே உங்களிடம் ஸ்பஷ்டமாகக் கூறிவிடவேண்டுவது என்கடமையெனக் கருதுகிறேன். இந்தவகையில்

தான் உங்கள் அரசியல் செயல்களை நான் உருவாக்குவது சாத்தியமாகும்.

இப்போது பிரச்னையென்ன? அதன் தன்மை எத்தகையது? மதம் ஒரு தனிப்பட்ட விவகாரமா? ஐரோப்பாவில் கிறிஸ்துவ மதம் அனுபவித்த அதே கஷ்ட நெருக்கடி இஸ்லாத்திற்கும் ஏற்படவேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களா? இஸ்லாம் மதத்தை வெறும் வைதீகக் கோட்பாடுகளாக வைத்துக் கொண்டு, அதன் அரசியல் இலட்சியங்களை அகற்றி அதற்கு பதிலாக தேசிய இலட்சியங்களுக்கு இடமளிப்பது சாத்தியமா? இந்த தேசிய இலட்சியங்களில் மதச் செயல்கள் தலையிட அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். ஆதலால் இந்நாட்டில் மேற்கண்ட பிரச்னைகள் அதிக முக்கியாம்சம் வகிக்கின்றன. மதமென்பது தனிப்பட்ட நபரின் அந்தரங்க விஷயமென ஐரோப்பியர் கூறுவது ஆச்சரியமல்ல. ஐரோப்பாவில் கிறிஸ்துவ மதம் இந்த மனப்பான்மையைத்தான் பரவச் செய்தது ஆனால், பரிசுத்த குர்ஆன் ஷரீபில் அருளப்பட்டபடி நாயகம் (ஸல்) அவர்களின் மத போதனைகளின் தன்மை முற்றிலும் மாறுனவை. அது வைதீகக் கோட்பாடுகளை மட்டும் கொண்டதல்ல. அரசியலும் சட்ட கோட்பாடுகளும் இஸ்லாம் மதத்தின் அடிப்படைகளாக விளங்குகின்றன. ஆதலால் இஸ்லாத்தின் மத இலட்சியம், அதனுல் ஏற்படுத்தப்பட்ட சமூக ஒழுக்க வாழ்வில் தீவிர சம்பந்தங் கொண்டுள்ளது. தேசிய அடிப்படையில் நிறுவப்படும் அரசியல் இலட்சியம், இஸ்லாத்தின் கட்டுப்பாட்டுத் தன்மையை அகற்றுவதா

ஒரு இந்திய சமுதாய ஐக்கியம்

யிருப்பின், அதை முஸ்லிம் ஏற்றுக்கொள்வதற்கில்லை இவ்விஷயம் இப்போது இந்திய முஸ்லிம்களைப் பொறுத்த விஷயமாகும்.

''மனிதன், அவன் ஜாதியைக் கொண்டோ, மதத்தைக் கொண்டோ, ஆறுகளின் போக்கைக் கொண்டோ, மலைகள் ஓடும் வகைகளைக் கொண்டோ அடிமையாக்கப்படவில்லை. நல்ல தெளிவான மனமும், நல்லுணர்ச்சியான ஹிருதயமும் கொண்ட மக்களின் ஒரு பெருங் கூட்டமே சமுதாய மெனப்படும்.'' என்று ரெனன் கூறுகிறார். இவ்வாறமைவதற்கு காலம் அதிகமாகுமே யொழிய சாத்தியமில்லாது போய்விடாது. இந்தியாவிலுள்ள பல் வேறு ஜாதி இனங்களும், மத இனங்களும் தங்கள் தங்கள் வேறுபாடுகளை அகற்றிக்கொள்ள விரும்பவில்லை யென்பது அனுபவப்பூர்வமான உண்மை. ஒவ்வொரு கூட்டமும் தன்னைப்பற்றியே உயர்வாகக் கருதிக்கொள்கிறது. ரெனன் கூறியதுபோன்ற சமுதாய அமைப்புக்குத் தேவையான மனோ உணர்ச்சியை இந்தியமக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஆதலால் ஒரு இந்திய சமுதாய ஐக்கியம் ஒரு கோட்பாட்டினால் ஏற்படாமல் பரஸ்பர ஒத்துழைப்பு, நட்பு ஆகியவைகளின் மூலமே ஏற்படும். உண்மை விஷயங்கள் எத்தனை அதிருப்திகரமா யிருப்பினும் உய்த்துணர்வதுதான் உண்மையான அரசியல் வீரம். இப்போதில்லாத விஷயங்களை இருப்பதாக அனுமானித்து நடப்பது உசிதமல்ல. உண்மை விஷயங்களை உள்ளபடி ஒப்புக்கொண்டு அதை நமது முன்னேற்றத்திற்கான வழியில் பயன்படுத்திக்கொள்வதுதான் சிறப்புடையது. இந்தவகையில் ஏற்படும் இந்திய ஒற்றுமையில்தான் இந்தியாவின் இறுதியான கதிமோட்சமட்டுமின்றி முழு

உலக கதிமோட்சமே பொருந்தியிருக்கிறது. ஆசியாவின் ஒரு திரட்டுதான் இந்தியா. இந்திய மக்களில் ஒருபகுதியார், கீழ்நாட்டு மக்களுடன் கலாசாரத்தைத் தொடர்பு கொண்டவர்களாயும், மற்றும் சில பகுதியார் மத்திய, மேற்கு ஆசியப்பிரதேச மக்களுடன் கலாசாரத் தொடர்பு கொண்டவர்களாகவுமிருக்கின்றனர். இந்தியாவில் மகோன்னதமான ஓர் ஒத்துழைப்புணர்ச்சி காணப்படுமாயின், அதனால் இப்பண்டைப் பெருமைவாய்ந்த நாட்டில் சமாதானமும், பரஸ்பர நல்லுணர்வும் ஏற்படும். ஆசியாவின் அரசியல் பிரச்னை முழுவதையும் இது தீர்த்துவைக்கும்.

இவ்விதமான மகோன்னத ஒத்துழைப்புணர்ச்சிக்கான வழிகளை கண்டுபிடிக்க நாம் செய்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போய்விட்டன. இத்தோல்விக்குக் காரணம் என்ன? ஒருக்கால் நாம் ஒருவரது இலட்சியங்களை மற்றொருவர் சந்தேகிப்பதும், ஒருவர் மீது மற்றொருவர் ஆதிக்கம் வகிக்க எண்ணங்கொள்வதும் காரணமாயிருக்கலாம். அல்லது ஒருக்கால் பரஸ்பர ஒத்துழைப்பு நலன்களுக்காக நம்வசமிருக்கும் பாக்கியத்தைவிட்டுக் கொடுக்க மனமில்லாமல், தேசியமென்னும் போர்வையால் நம் மனதை மறைத்து, உள் அந்தரங்க எண்ணத்தில் ஜாதி, சமூக குறுகிய மனப்பான்மையைக் கொண்டிருப்பதும் காரணமாயிருக்கலாம். அல்லது ஒருவேளை, ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் சொந்த கலாசார வழக்கப்படி சுதந்தரமாக வளர்ச்சியடைய இருக்கும் உரிமையை ஒப்புக்கொள்ள நாம் விரும்பாததும் காரணமாக இருக்கலாம். ஆனால், நாம் தோல்வியடைந்ததற்குக் காரணம் எதுவாயிருப்பினும் சரி, நம் முயற்சிகள் வெற்றியைத்தருமென்ற நம்பிக்கைமட்டும் எனக்கு இருக்கிறது. ஏதோ

ஒருவகை உள்நாட்டு ஒற்றுமை ஏற்படுவதற்கான சம்பவங்களும், அறிகுறிகளும் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் அபிப்பிராயத்தை நான் அறிந்தவரை, ஒரு விஷயத்தைமட்டும் நான் கூறுகிறேன். இந்திய முஸ்லிம்களுக்கு தங்கள் சொந்த இந்தியத் தாயகங்களில் தங்கள் சொந்த கலாசாரப்படி பூரண சுதந்தர வளர்ச்சியடைய உரிமையுண்டு. ஒரு நிரந்தர வகுப்புச் சமரஸத்துக்கு இந்த இலட்சியத்தை அடிப்படையாக ஒப்புக்கொள்ளப் பட்டால், எந்த முஸ்லிமும் இந்திய விடுதலைக்காகத் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறான். ஒவ்வொரு சமூகமும், தன் சொந்த போக்கின்படி சுதந்திர வளர்ச்சியடையவேண்டுமென்ற கோரிக்கை குறுகிய வகுப்புவாத உணர்ச்சியால் ஏற்பட்டதல்ல. பிற சமூகத்தின் பால் வேற்றுமை விரோத உணர்ச்சியை ஒரு சமூகம் பெற்றதாயிருப்பின், அது வெகு தாழ்வானது. இந்த சமூகத்தினர்களின் நடை முறைகள், சட்டங்கள், மத, சமூகக் கடமைகள் முதலியவைகளை நான் பெரிதும் மதிக்கிறேன். ஏன்......அவசியமேற்பட்டால் அவர்களுடைய வணக்க ஸ்தலங்களைக்கூட, பரிசுத்த குர் ஆன் ஷரீபின் ஆணைகளின்படி, பாதுகாக்க வேண்டுவது என் கடமை. இவ்வாறிருந்தும் நான் சமூகக் கோஷ்டியையே பெரிதும் விரும்புகிறேன். அதுவே என் வாழ்விற்கும், நடைமுறைக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. அந்த சமூகமே தனது மதம், மொழி, விவேகம், கலை முதலியவைகளை எனக்களித்து நான் இன்றுள்ள நிலைமையை எனக்களித்து என் மனோ உணர்ச்சியின் ஜீவனாகவும் விளங்குகிறது. நேஹ்ரு யாதாஸ்தைத் தயாரித்தவர்கள் கூட இந்த உயர்தர வகுப்புணர்ச்சியை ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

சிந்துப் பிரிவினை பற்றி அவர்கள் பின் வருமாறு கூறியிருக்கின்றனர்:—"வகுப்பு மாகாணங்கள் ஏற்படுத்தப்படக்கூடாதெனப் பரந்த நோக்கத்துடன நாம் கூறுவதன் அர்த்தமென்ன? சர்வ தேச அபிப்பிராயப்படி தனிச் சமுதாயங்களிருக்கக் கூடாதென்பதுதான் ஆனால் பூரணமான தேசிய சுயாட்சி யில்லாமல், சர்வதேசமயமான அரசாங்கம் ஒன்றை அமைப்பது சாத்தியமில்லை. ஆதலால் பூரண கலாசார சுயாட்சி உரிமையும், கலைப்பூர்வமான வகுப்புப் பிரிவும் இல்லையாயின் ஒன்றுபட்ட சமுதாயத்தை சிருஷடிப்பது கஷ்டமானது"

இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஒன்றுபட்ட ஐக்கியத்தை அமைக்க வேண்டுமானால் பரந்த நோக்குடைய வகுப்பு மனப்பான்மை இருந்தே தீரவேண்டுவது அவசியம். இந்திய சமூகத்தில் உள்ள இனங்கள், ஐரோப்பிய நாடுகளிலிருப்பதைப் போல் பிரதேச வாரியான இனங்களல்ல. பல்வேறு பாஷைகளையும், பல்வேறு ஜாதிகளையும் கொண்ட ஒரு கண்டம் தான் இந்தியா. அவர்களின் நடவடிக்கைகள் ஒரே பொதுவான ஜாதியாசாரத்தால் நிர்ணயம் செய்யப்பட்டதல்ல. ஹிந்துக்கள் கூட ஒரே இனத்தையோ, ஒரே ஜாதியையோ சேர்ந்த மக்களல்ல. இந்த வகுப்பு பிரிவினங்களையெல்லாம் புறக்கணித்து விட்டு, ஐரோப்பிய ஜனநாயக இலட்சியத்தை இந்தியாவில் அனுஷ்டிப்பதென்பது இயலாத காரியம். ஆதலால் இந்தியாவில் முஸ்லிம் இந்தியா ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற முஸ்லிம் கோரிக்கை நியாயமானதே. டில்லியில் நடைபெற்ற அகில கட்சி முஸ்லிம் மகாநாடு இந்த மகோன்னதமான இலட்சியத்தை கொண்டு

இந்தியாவில் முஸ்லிம் இந்தியா

தான் தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதாக என் மனதிற் குப் படுகிறது. இத் தீர்மானத்தில் பொதிந்துள்ள முஸ்லிம் கோரிக்கைகளை இம்மகாநாடு அழுத்தமாக வற்புறுத்து மென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. என்னைப் பொறுத்த வரை தனிப்பட்ட முறையில் அத் தீர்மானத்திற்கதிகமாகவே நான் செல்ல விரும்புகிறேன்.

பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, பலுசிஸ்தான் முதலிய மாகாணங்கள் ஒரே நாடாக இணைக்கப் படுவதைப் பார்க்க விரும்புகிறேன். இந்த பிரதேசம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளோ அல்லது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேராமலோ சுயாட்சியுடைய தாயிருக்க வேண்டும். வடமேற்கு இந்திய முஸ்லிம் நாடு அமைக்கப்படுவதுதான் முஸலிம்களின் இறுதி லட்சியம்—குறைந்த பட்சம் வடமேற்கிந்திய முஸ்லிம்களின் ஜீவ நாடியான கோள்கை—என்று எனக்கு தோன்றுகிறது.

இந்த யோசனை நேஹ்ரு கமிட்டிமுன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. கமிட்டியார் இதை நிராகரித்து விட்டனர். இந்த யோசனைப்படி அமைக்கப்பட்டால், மிக பலஹீனமான அரசாங்க மேற்படுமென அவர்கள் காரணம் கூறினர். அந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை நிராகரிப்பு நியாயமானதே. ஜனத்தொகையைப் பொறுத்தவரை மேற்கூறப்பட்ட யோசனைப்படியான அரசாங்கத்தில் தற்போதைய இந்திய மாகாணங்கள் சிலவற்றிலிருப்பதைக் காட்டிலும் குறைவான மக்களே இதில் இருப்பர். அம்பாலா ஜில்லாவும் மற்றும் முஸ்லிமல்லாதார் பெரும்பான்மையாக உள்ள வேறு சில ஜில்லாக்களும் இந்தப் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டால், பிரதேசக் குறைவும், முஸ்லிம் ஜனத்

தொகை அதிகரிப்பும் ஏற்படும். இவ்வாறுபிரிக்கப்படுவதால் முஸ்லிமல்லாத சிறுபான்மையினருக்குப் பலமான பாது காப்பு ஏற்படுவது சாத்தியமாகும். இந்த புதிய யோசனை யால் ஹிந்துக்களோ, பிரிட்டிஷாரோ பீதி கொள்ள வேண்டு வதில்லை. உலகிலேயே பெரிய முஸ்லிம் நாடு இந்தியா தான். இந்நாட்டில் ஒரு கலைச் சக்தி என்ற முறையில் இஸ்லாத்தின் வாழ்வு, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை உரு வாக்குவதில்தான் பொதிந்திருக்கிறது. இந்திய முஸ்லிம் கள் பெரும்பான்மையாக உள்ள பகுதியை இவ்வாறு உரு வாக்குவது இந்தியப் பிரச்னையை மட்டுமின்றி, ஆசியப் பிரச்னையையும் தீர்த்துவைக்கும். இதனால் முஸ்லிம்களின் பொறுப்புணர்ச்சியும், தேச பக்தியும் அதிகரிக்கும். வட மேற்கிந்திய முஸ்லிம்கள் இவ்வாறு சுயமே வளர்ச்சி யடைய பூரண சந்தர்ப்பமளிக்கப்பட்டால் அயல் நாட்டி லிருந்து வரும் எவ்வித பேச்சு அல்லது துப்பாக்கிப் போர் களையும் எதிர்த்து நின்று நாட்டைத் தற்காத்துக் கொள்ள தங்களுக்கு வல்லமையுண்டென்பதை அவர்கள் மெய்ப் பித்துக் காண்பிப்பர். முஸ்லிம் ஜனத்தொகையை 56 சத விகிதம் பெரும்பான்மையாகக் கொண்ட பஞ்சாப், இந்திய இராணுவத்தின் 54 சதவிகித வீரர்களை அளிக்கிறது. இந் திய இராணுவத்தில் நேபாளத்திருந்து சேர்க்கப்பட்ட 19000 கூர்க்கப் பிரிவினரை நீக்கி விட்டுக் கணக்கெடுத்தால் மொத்த இராணுவத்தில் 62 சத விகிதத்தைப் பஞ்சாப் கொடுத்திருக்கிறதென்பது தெளிவாகிவிடும். இந்த விகிதா சாரத்தில் எல்லைப்புறம், பஞ்சாப் ஆகிய மாகாணங்களிலி ருந்து சேர்ந்திருக்கும் 6000 வீரர்கள் சேர்க்கப்படவில்லை. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து, அயல் நாட்டு ஆக்கிர மிப்பு ஏற்பட்டால் இந்தியாவைப் பாதுகாக்க வடமேற்

கெல்லைப்புற முஸ்லிம்களால் சாத்தியப்படுமா, முடியாதா என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். "அவசர சந்தர்ப்பங்களில் இந்திய சர்க்கார் மீது நிர்ப்பந்தத்தை பிரயோகிக்கும் சக்தியைப் பெறுவதற்காகவே" வடமேற் கெல்லையில் சுயாட்சி முஸ்லிம் பிராந்தியங்கள் ஏற்பட வேண்டுமென முஸ்லிம்கள் விரும்புவதாக மகாகனம் சீனுவாச சாஸ்திரியார் கருதுகிறார். முஸ்லிம்கள் விரும்புவதன் காரணம் இதுவல்ல; சுதந்தர வளர்ச்சி பெற வேண்டுமென்ற ஆவலே முஸ்லிம்களை இவ்வாறு விருப்பங்கொள்ளுமாறு செய்கிறது. இந்தியா முழுவதிலும் நிரந்தர வகுப்பு ஆதிக்கம் கொள்ள விரும்பும் தேசிய ஹிந்து அரசியல் வாதிகள் கூறுகிறபடியான ஐக்கிய சர்க்காரில் முஸ்லிம்கள் சுதந்தர வளர்ச்சி பெறுவது சாத்தியமில்லை.

முஸ்லிம் சுயாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்படுமாயின் அங்கு (அந்தப் பிரதேசங்களில்) இஸ்லாம் மதப் பூர்வமான ஆட்சி முறை ஏற்பட்டு விடுமென்று ஹிந்துக்கள் பயப்பட வேண்டுவதில்லை இஸ்லாம் மதம் இன்னதென்பதை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இஸ்லாம் மதம் கிறிஸ்துவ மதத்தைப்போல் நாட்டின் ஆட்சி மீது ஆதிக்கங் கொண்டு விடாது. சில நாட்களுக்கு முன் இந்திய வங்கி விசாரணைக் கமிட்டி சம்பந்தமாக "டைம்ஸ் ஆப் இந்தியா', வரைந்திருந்த தலையங்க மொன்றிலிருந்து முஸ்லிம் அரசாங்கத்தின் தன்மை ஒருவாறு நிதானிக்கப்படலாம். அப்பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—

"பண்டைய இந்தியாவில் அரசாங்கமே வட்டி விகிதச் சட்டத்தை வகுத்தது. ஆனால், முஸ்லிம் ஆட்சிக்காலத்தில், கடன் கொடுக்கப்பட்ட பணத்

திற்கு வட்டி வாங்குதல் கூடாதென இஸ்லாம் மதத்தில் தடை செய்யப்பட்டிருப்பினும், இவ்வித வட்டி விகிதத்தின் மீது அரசாங்கம் எவ்விதத் தடையும் விதிக்கவில்லை.''

ஆதலால், இந்தியாவின் கலையையும், இஸ்லாத்தின் கலையையும் முன்னிட்டு, ஒரு கட்டுப்பாடான முஸ்லிம் நாடு அமைக்கப்படவேண்டுமென நான் கோருகிறேன். இந்தியாவைப் பொறுத்தவரை இவ்வித முஸ்லிம் நாடு ஒன்றேற்படுவது உள்நாட்டு சமத்துவ சக்தியால் ஏற்படும் அமைதியின் மூலம் பாதுகாப்பு ஏற்படுவதாகும். இஸ்லாத்தைப் பொறுத்த அளவில் இவ்வித முஸ்லிம் நாடு ஏற்படுவதானது, அதன் இயல்பின்படியான கலாசாரம், சட்டம், கல்வி முதலியவைகளை நவீனமயமாக்கி வளர்ச்சியடையச் செய்வதாகும்.

**சமஷ்டி அரசாங்கங்கள்**

சீதோஷ்ணம், ஜாதிகள், மொழிகள், இலட்சியங்கள், பழக்க வழக்கங்கள் முதலிய எல்லாவகைகளிலும் இந்தியாவில் வேறுபாடுகள் இருக்கின்றன. மொழி, ஜாதி, சரித்திரம், பொருளாதார நலன்கள் முதலியவைகளில் ஒன்றுபட்டுள்ள இனங்களைப் பிரித்து, சுயாட்சி அரசாங்கங்கள் ஏற்படுவதொன்றுதான் இந்தியாவின் உறுதியான அரசியல் அமைப்பு ஏற்படுத்தும் வழியாகும். சைமன் யாதாஸ்தில் காணப்படும் சமஷ்டி அமைப்பு, மத்திய அசெம்பிளியை ஒழித்து, அதற்குப் பதிலாக சமஷ்டி நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சபையை ஏற்படுத்தும். மேலும் நான் மேலே சுட்டிக் காட்டியிருக்கும் முறையில் பிரதேசப் பிரிவினையை அந்த

யாதாஸ்து வற்புறுத்துகிறது. சைமன் யாதாஸ்தில் இந்த இரண்டு விஷயங்களையும் நிறைவேற்றி வைக்கிறது. நான் இந்த விஷயத்திற்கு மனப்பூர்வமான ஆதரவளிக்கிறேன். சைமன் யாதாஸ்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ள பிரிவினை, இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். புதிய அரசியல் புகுத்தப்படுவதற்கு முன் இந்தப்பிரிவினை ஏற்பட்டுவிடவேண்டும். இறுதியான வகுப்புப் பிரச்னையைத் தீர்க்க கூடியவாறு இந்த பிரிவினை இருக்கவேண்டும். பிரிவினை முறை ஒழுங்கான ரீதியில் செய்யப்பட்டால், இந்தியாவின் அரசியல் சர்ச்சையிலிருந்து கூட்டுத் தொகுதி, தனித் தொகுதிப் பிரச்னைகள் தானாகவே மறைந்தொழிந்துவிடும். இந்தவகையான சர்ச்சை ஏற்படுவதற்கு தற்போதைய மாகாணங்கள் அமைக்கப்பட்டுள்ள முறையே காரணமாகும். தனிவாக்காளர் முறை உண்மையான தேசியத்திற்கு விரோதமானதென ஹிந்துக்கள் கருதுகின்றனர். ஏனெனில், ஒரு சமுதாயமென்பது எந்த வகுப்பும் தனியே பிரிந்திருக்க முடியாத உலக இணைப்பே என்று அவர்கள் கருதுகின்றனர். இந்தவகையான கருத்து ஆதாரமற்றது. இந்தியா பல ஜாதிகளும் ஒருங்கே கொண்டுள்ள ஒரு நாடு இதுவன்றி முஸ்லிம்கள் பொருளாதாரத் துறையில் பிற்போக்காக இருக்கின்றனர். அவர்கள் நாடெங்கும் குறிப்பாக பஞ்சாபிலும் பெருங் கடனாளிகளாக இருக்கின்றனர். தற்போது சில மாகாணங்களில் அவர்கள் மிகக் குறைந்த பெரும்பான்மையினராக இருக்கின்றனர். இவைகளிலிருந்து தனி வாக்காளர் தொகுதிகளே எங்களுக்கிருக்க வேண்டுமென நாங்கள் ஆவல்படுவதன் அர்த்தம் இப்போது உங்களுக்குத் தெளிவாக விளங்கும்.

மத்திய சமஷ்டி அரசாங்க அதிகாரங்கள் சம்பந்தமான பிரச்னையைப் பொறுத்த வரை இந்திய பண்டிதர்கள் கூறிய அரசியல் யோசனைக்கும், இங்கிலாந்து பண்டிதர்கள் கூறிய அரசியல் யோசனைக்கும், தனித்தனி வகையான இலட்சியங்கள் காணப்படுகின்றன. தற்போதுள்ளது

**சைமன் யாதாஸதின் சமஷ்டி**

போன்ற மத்திய அதிகாரத்தை இந்திய பண்டிதர்கள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் இந்த மத்திய அதிகாரம் மத்திய சட்ட சபைக்கு பொறுப்புள்ளதாக இருக்க வேண்டுமென்பதுதான். இந்த மத்திய சட்ட சபையில் நியமன அங்கத்தினர்கள் இல்லாதொழிந்து விடுவாராயின் ஹிந்துக்கள் தான் பெரும்பான்மையாக இருப்பரென்பதை இந்த இந்திய பண்டிதர்களறிவார்கள். மத்திய நிர்வாகத்தில் ஏற்படும் ஜன நாயக மயமான அதிகாரங்கள், பிரிட்டிஷ் நலன்களுக்கு மாறாக நடைபெறுமென்று இங்கிலாந்து பண்டிதர்கள் கருதுகின்றனர். இத்தகைய ஒரு மத்திய நிர்வாகம் தங்கள் அதிகாரங்களை யெல்லாம் நாளடைவில் கைப்பற்றி விடுமென அவர்கள் எண்ணுகின்றனர். இதனால் மத்திய நிர்வாக அதிகாரங்களை மாகாணங்களுக்கு மாற்றி விட்டனர். இங்கிலாந்து பண்டிதர்கள், சமஷ்டி இலட்சியத்தைப் புகுத்தி, ஒரு சில யோசனைகளைக் கூறி, சமஷ்டியை ஆரம்பித்து வைத்தனர். எனினும் அவர்களின் இந்த இலட்சியப், முஸ்லிம் இந்தியாவின் இலட்சியத்திற்கு மாறானதாகும். இந்தியாவின் மிகச் சிக்கலான வகுப்புப் பிரச்னைக்குப் பரிகாரமென்ற முறையில்தான் முஸ்லிம்கள் சமஷ்டியைக் கோருகின்றனர். ராயல் கமிஷனின் சமஷ்டி யோசனை இலட்சிய அளவில் மகோன்னதமாகக் காணப்

படுகின்றது. ஆயினும் இந்த யோசனை, சமஷ்டி அரசாங்கங் களுக்குப் பொறுப்பாட்சி வழங்குவதாகக் காணப்பட வில்லை. வகுப்புப் பிரச்னையையும் இந்த யோசனை தீர்ப்ப தாக இல்லை. பிரிட்டிஷாருக்கு இந்தியாவின் ஜனநாகத்தின் மூலம் ஏற்பட்டுள்ள நிலைமையை இது எவ்வகையிலும் மாற்றுவதாயில்லை.

மேற் கூறப்பட்ட விவரங்களிலிருந்து உண்மையான சமஷ்டியைப் பொறுத்தவரையில் சைமன் யாதாஸ்து, சமஷ்டி இலட்சியத்தின் உண்மைத்துவத்தை மாற்றி யமைத்துவிடுகிறது. நேஹ்ரூ யாதாஸ்து மத்திய அசெம் பிளியில் ஹிந்துப் பெரும்பான்மையை ஏற்படுத்தியபின் ஒரு ஐக்கிய சர்க்கார் முறையை சிருஷ்டிக்கிறது ஏனெனில் இவ்வித அமைப்பால் இந்தியாவெங்கும் ஹிந்துக்களின் ஆதிக்கம் ஏற்படும். சைமன் யாதாஸ்தோவெனில் பொய் மயமான ஒரு சமஷ்டியின் மூலம் தற்போதைய பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைபெறச்செய்துவிடுகிறது. இதற்கு காரணங் கள் இரண்டு. முதலாவது, பிரிட்டிஷார் இவ்வளவு நெடுங் காலமாக அனுபவித்து வரும் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. இரண்டாவது, இந்தியாவில் உள் நாட்டு சமூக ஒற்றுமையின்மையால், தங்கள்வசமே அதி காரத்தை வைத்துக்கொள்ள இது ஒரு சாக்காக இருக்கி றது. என்னைப் பொறுத்தவரையில் ஒரு சுயாட்சி இந்தியா வில் ஐக்கிய முறையான சர்க்கார் என்பது சாத்தியமில்லை யென்று தான் தோன்றுகிறது. உள் நாட்டு அதிகாரங்கள் என்று கூறப்படுவதெல்லாம் சுயாட்சியுடைய மாகாணங் களுக்கே இருக்கவேண்டும். இந்த சுயாட்சி பெற்ற சமஷ்டி நாடுகளின் விருப்பப்படியான அதிகாரங்கள் மட்டுமே

மத்திய சமஷ்டி இலட்சியத்தை மறுக்க கூடியதும், இந்திய முஸ்லிம்களைத் தனி அரசியல் இனமாக ஒப்புக்கொள்ளாததுமான எந்த அரசியல் முறையையும்—அது பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப்பட்டதாயிருப்பினும் சரி, இந்தியரால் சிருஷ்டிக்கப்பட்டதாயிருப்பினும் சரி—இந்திய முஸ்லிம்கள் ஏற்கவேண்டுமென ஒருக்காலும் யோசனை கூறமாட்டேன்.

மத்திய சர்க்காரில் மாற்றப்படுவதற்கான வழி முறைகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் கண்டுபிடிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே இவ்வித மாறுதல் இருக்கவேண்டுவது அவசியமென உணரப்பட்டது. இதே காரணத்தைக் கொண்டுதான் வட்ட மேஜை மகாநாட்டில் இந்திய சமஸ்தானங்கள் கலந்துகொள்ள வேண்டுவது அவசியமென பிந்திய நிலைமையில் அறிவிக்கப்பட்டது. வட்டமேஜை மகாநாட்டில் இந்திய சமஸ்தான மன்னர்கள் தாங்கள் ஒரு அகில இந்திய சமஷ்டியில் சேர விரும்புவதாகத் திடீரென அறிவித்ததைக் கண்டு இந்திய மக்களும் குறிப்பாகச் சிறுபான்மையினரும் பெரிதும ஆச்சரியம் கொண்டனர். இவ்வாறு சமஸ்தான மக்கள் அறிவித்துவிட்டதால், ஐக்கிய சர்க்கார் வேண்டுமென வற்புறுத்திவரும் ஹிந்துப் பிரதிநிதிகள், ஒரு சமஷ்டி திட்டம் எற்படுவதற்கு ஒப்புக்கொண்டனர். இந்தியாவுக்கு ஒரு சமஷ்டி திட்டம் ஏற்படவேண்டுமெனச் சிபார்சு செய்த சர் ஜான் சைமனை சிலநாட்களுக்கு முன் கண்டனம் செய்த திரு சாஸ்திரியார்கூட திடீரென மாறி, தம் அபிப்பிராய மாற்றத்தையும் வட்டமேஜை மகாநாட்டில் தெளிவாகக் கூறிவிட்டார். இவைகளால் எல்லாம், இந்திய சமஸ்தான மன்னர்கள் சேர்ந்துகொள்ளவேண்டு

மென ஆவல் கொண்ட பிரிட்டிஷாருக்கும், ஒரு அகில இந்திய சமஷ்டி ஏற்படவேண்டுமென ஒப்புக்கொண்ட ஹிந்துக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். இந்திய சமஸ்தான மன்னர்கள்—இவர்களில் ஒரு சிலரே முஸ்லிம்களாவர்—இந்த மகாநாட்டில் கலந்துகொள்வதால் இரண்டு காரியங்கள் நிறைவேறுகின்றன. ஒன்று இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தை இன்றிருப்பது போன்றே நிலை நிறுத்த ஒரு முக்கிய காரணமாக அது உதவுகிறது. இரண்டாவது: அகில இந்திய சமஷ்டி அசெம்பிளியில் ஹிந்துக்களுக்கு அபரிமிதப் பெரும்பான்மையைக் கொடுக்கிறது. இந்திய சமஸ்தானாதிபதிகள் சமஷ்டி திட்டத்தில் தங்கள் யதேச்சாதிகாரம் பாதுகாக்கப்படுவதைக் காணுகின்றனர். மத்திய சர்க்காரின் இறுதியான அமைப்பு சம்பந்தமாக ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையேயுள்ள வேறுபாடுகளைப் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் இந்த சமஸ்தானாதிபதிகள் மூலம் வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொள்ளுகின்றனரென்று தான் என் மனத்தில் தோன்றுகிறது. முஸ்லிம்கள் இவ்வித திட்டத்தை மௌனமாக ஏற்றுக்கொள்வார்களாயின், இந்தியாவில் அரசியல் இனமாக அவர்களிருந்து வருவது மறைந்தொழிந்து போய்விடும். இந்த முறையில் அமைக்கப்படும் ஒரு இந்திய சமஷ்டியின் கொள்கை, மத்திய சமஷ்டி அசெம்பிளியில் பெரும்பாலாக இருக்கும் ஹிந்து மன்னர்களாலே நடத்தப்பட்டுவரும். இவர்கள் ஏகாதிபத்திய சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் பிரிட்டனையே ஆதரித்து நிற்பர். நாட்டின் உள்நாட்டு நிர்வாகத்தைப் பொறுத்தவரை இவர்கள், ஹிந்துக்களின் ஆதிக்கத்தை வலுப்படுத்

*வட்டமேஜை மகாநாட்டில் சமஷ்டி*

துவதிலும், பாதுகாப்பதிலுமே கண்ணும் கருத்துமாயிருப்பர். சுருங்கக் கூறமிடத்து, இத்திட்டம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும், ஹிந்து இந்தியாவுக்கு மிடையே ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது போன்றே இருக்கும். "நீ என்னை இந்தியாவில் நிலைத்து நிற்கச் செய்துவிடு, அதற்குப் பதிலாக இதர சமூகத்தினரை யெல்லாம் ஹிந்து ஆட்சிக்கு அடிமைப்படுத்திவிடுகிறேன்" என்பதுதான். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், உண்மையில் சுயாட்சியுடைய நா களாகச் செய்யப்படவில்லையானல், இத்திட்டப்படி பிரிட்டிஷார் வசமிருந்து அதிகாரம் ஒருபோதும் மாறாது. முஸ்லிம்கள் சமஷ்டிகள் என்ற வார்த்தையுடன் திருப்தியடையவேண்டிய நிலைமை ஏற்படும்; மத்திய நிர்வாகத்தில் ஹிந்துக்களுக்குப் பெரும்பான்மை இருக்கும்; ஆனல் உண்மையான அதிகாரத்தின முக்கிய அம்சங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வசமே இருக்கும்.

இந்தியாவில் முஸ்லிம் சமஸ்தானங்களைவிட ஹிந்து சமஸ்தானங்களே அதிகமாக இருக்கின்றன. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், இந்திய சமஸ்தானங்கள் ஆகியவைகளின் பிரதிநிதிகளடங்கிய மத்திய சமஷ்டி அசெம்பிளியில் 33 சதவிகித ஸ்தானங்கள் வேண்டுமென்ற முஸ்லிம் கோரிக்கை எவ்வாறு நிறைவேற்றப்படு மென்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயம்தான். வட்டமேஜை மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது போன்ற சமஷ்டி திட்டத்தின் சாதக பாதகங்களை முஸ்லிம் பிரதிநிதிகள் பூரணமாக உணர்வரென நான் நம்புகிறேன். அகில இந்திய சமஷ்டியில் முஸ்லிம் பிரதிநிதித்துவப் பிரச்னை இன்னும் விவாதிக்கப்படவில்லை. ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம்

அனுப்பிய செய்திச் சுருக்கம் பின்வருமாறு கூறுகிறது:—
"இடைக்கால யாதாஸ்துப்படி மத்திய சமஷ்டி சட்டசபையில் இரண்டு சபைகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும், சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுமிருப்பர். இவைகளின் விகிதாசார விஷயம் இனி சப் கமிட்டியில் ஆலோசிக்கப்படவேண்டிய விஷயம்." என்னைப் பொறுத்தவரை விகிதாசாரப் பிரச்னையே மிக மிக முக்கியமானதும், சமஷ்டி அசெம்பிளி அமைப்புப் பிரதான பிரச்னையுடன் ஒருங்கே ஆலோசிக்கப்படவேண்டியதுமாகுமென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன்.

முதலில் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இந்திய சமஷ்டி இருப்பது தான் சிறப்புடையதென நான் நினைக்கிறேன். ஜனநாயகத்திற்கும், யதேச்சைக்குமிடையே ஒரு சமஷ்டித் திட்டம், ஒரு ஐக்கிய மத்திய சர்க்காராகவே வந்து முடியும். இத்தகைய ஐக்கிய முறை பிரிட்டிஷாருக்குப் பெரும் பயன் தரலாம்; பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கும் பெரும் பான்மைச் சமூகத்தினருக்குப் பயனளிக்கலாம்; இந்திய சமஸ்தான மன்னருக்குப் பயனுள்ளதா யிருக்கலாம். ஆனல், முஸ்லிம்களுக்கு இந்திய மாகாணங்கள் பதினென்றினுள் ஐக்கிய பூரண சுயாட்சி அதிகாரப் பெரும்பான்மை உரிமைகளும், சமஷ்டி அசெம்பிளியின் மொத்த ஸ்தானங்களில் மூன்றிலொரு பகுதியும் கிடைக்கா விட்டால் இந்த ஐக்கியமுறையால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் அரசாதிபத்திய அதிகாரங்களைப் பொறுத்தவரை போபால் மன்னர், சர் அக்பர் ஹைதரீ, ஜனப் ஜின்ன ஆகியவர்களின் நிலைமை அசைக்கப்பட முடியாததாகிவிடும் இந்திய சமஷ்டியில சமஸ்தான மன்னர்கள் பங்கு பற்றுவதைப் பொறுத்த

அளவில், நம் கோரிக்கை புதுமை யடைந்து விடுகிறது. பிரிட்டிஷ் இந்திய அசெம்பிளிச் சபையில் முஸ்லீம்களின் பங்கு என்பது இப்போதைய பிரச்னையல்ல. அகில இந்திய சமஷ்டி அசெம்பிளியில் பிரிட்டிஷ் இந்திய முஸ்லிம்களின் பங்கு என்ன என்பதே இப்போதைய விஷயம். நமது கோரிக்கையாகிய 33 சதவிகிதமென்பது, சமஷ்டியில் சேரக் கூடிய முஸ்லிம் சமஸ்தானங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்கள் நீங்கலாக அகில இந்திய சமஷ்டி அசெம்பிளியில் மிகுதியாக உள்ள ஸ்தானங்களில் 33 சதவிகிதமே யாகும்.

இந்திய சமஷ்டி முறை வெற்றிகரமாக வேலை செய்வதற்கு குறுக்கிடும் மற்றொரு சிக்கலான பிரச்னை இந்தியாவின் பாதுகாப்புப் பிரச்னையே. ராயல் கமிஷன் கோஷ்டியார் இந்தப் பிரச்னையைப் பற்றி தங்கள் வாதத்தில், இராணுவத்தை ஏகாதிபத்தியத்தின் வசம் வைத்துக் கொள்ள வேண்டிய காரணங்களையே எடுத்துக் காட்டாகக் கையாண்டிருக்கின்றனர். "இப்போதோ, அல்லது சமீபகாலத்திலோ இந்தியப் பாதுகாப்பு விஷயம் பூரணமாக இந்தியாவைப் பொறுத்த விஷயமென கருதப்படக் கூடாத வகையில் இந்தியாவும் பிரிட்டனும் உறவு கொண்டுள்ளன. இந்த இராணுவத்தின் ஆதிக்க, ஆதிகாரமெல்லாம் ஏகாதிபத்திய சர்க்கார் ஏஜண்டுகள் வசமேயிருக்கவேண்டும் என்று ராயல் கமிஷன் கோஷ்டியார் கூறுகின்றனர். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள், பிரிட்டிஷ் இராணுவம் முதலியவைகளின் உதவியின்றி நாட்டின்பாதுகாப்பு வேலை சரிவர நடக்கும் நிலைமை ஏற்படும்வரை. பிரிட்டிஷ் இந்தியாவில் பொறுப்பாட்சி விஷயத்தில் முன்

பாதுகாப்புப் பிரச்னை

னேற்றம் ஏற்படுவது தடைப்பட்டு விடுமென்பது இதனுல் தெளிவாக விளங்கக் கிடக்கிறது. இதுதான் அரசியல் முன்னேற்றத்தில் ஒரு முட்டுக்கட்டையாகக் காணப்படு கிறது. எதிர்காலத்தில் ஏற்படும் அரசியலில், இராணுவ நிர்வாகம் தேர்தல் மூலமான இந்திய சட்டசபை வசமே இருக்குமென நேஹ்ரு ரிப்போர்ட்டு கூறுகிறது. இந்த நிலைமை ஏற்பட்டால், 1927ஞு ஆகஸ்டுமீ 20உயன்று வெளியான பிரகடனத்தின்படியுள்ள இறுதி இலட்சியம் காலவரம்பின்றி தடைபட்டுக் கொண்டே நிற்கும். மேலும் ராயல் கமிஷன் கோஷ்டியார், இந்தியாவில் இருந்துவரும் முரண்பட்ட ஜாதி, மத, வேறுபாடுகளைத் தங்கள் கூற் றுக்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர் அயல் நாட்டுப் படையெடுப்பிலிருந்து மட்டுமின்றி, உள்நாட்டுப் பாது காப்பு விஷயத்திலும் தாங்களே பிரதானமானவர்களெனக் காண்பிப்பதற்காக இந்த வாதங்கள் எல்லாம் செய்யப்படு கின்றன. எது எவ்வாறிருப்பினும் சரி, சமஷ்டி அரசியலை நான் ஆராய்ந்த அளவில் ஒரு சமஷ்டி இந்தியாவில் பாது காப்புப் பிரச்னை ஒரே—அதாவது வெளிநாட்டுப் பாது காப்பு—விஷயமாகவே இருக்கும். இது தவிர வடமேற் கெல்லைப்புறத்தில் இந்திய எல்லா சமூகத்தினரினின்றும் பொறுக்கி எடுக்கப்பட்ட அனுபவசாலிகளான இராணுவ உத்தியோகஸ்தர்களில்லையென்பதை நானறிவேன். இந்த விஷயம் ஏகாதிபத்திய நிர்வாகம் இங்கு நிலைத்திருக்க வேண்டுமென்பதற்கு ஆதாரமாக ராயல் கமிஷனரால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனுல், அவர்களின் யாதாஸ் திலேயே இதற்கு நேர்முரண்பட்ட கூற்றிருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த யாதாஸ்தில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

"தற்போது மன்னரின் கமிஷன் அதிகாரம் பெற்றுள்ள (அதாவது கே. ஸி) எந்த இந்தியரும், இராணுவத்தில் காப்டனுக்கு மேல் உயர்ந்த பதவியை வகிக்கவில்லை. மொத்தம் 39 காப்டன்களிருக்கின்றனர் இவர்களில் 25 பேர் சாதாரண இராணுவ சேவையிலிருந்து வருகின்றனர். இந்த காப்டன்களில் சிலர், தாங்கள் வேலையை விட்டு விலகுவதற்கு முன் அவசியமான பரீட்சைகளில் தேறிவிட்டாலுங்கூட உயர்பதவி வகிக்கக்கூடிய வயதுடையவர்களாக இல்லை. இவர்களில் பெரும்பாலார் சாண்டர்ஸ்ட் மூலம் கே. ஸி. யாகிவிடாமல், மகா யுத்த காலத்தில் அப்பட்டத்தைப் பெற்றவர்களாவர். * * * ஓரளவு குறிப்பிட்ட பயிற்சியும், கீழ்த்தரப்பதவிப் பொறுப்புள்ள இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்களிலிருந்து வெகு குறுகிய காலத்திற்குள் ஒரு உயர்தரத் திறமை வாய்ந்த தலைமைப் பதவியாளரை எடுக்க முடியாது. உத்தியோகஸ்தர் வகுப்புக்கு தகுதியான பல இந்தியர்கள் பெருவாரியாகச் சேரும்வரையிலும், உத்தியோகஸ்தர்களுக்கான அனுபவமும், பயிற்சியும் போதிய அளவு இந்தியர்களுக்கு ஏற்படும் வரையிலும், இவ்விதப் பயிற்சியுள்ள இராணுவம் சோதனையைச் சமாளித்து வெற்றி பெறும் வகையிலும், இந்திய உத்தியோகஸ்தர்கள் உயர்தரப் பதவிக்குரிய பயிற்சியைப் பெறும்வரையிலும், இராணுவம் இந்திய மயமாக்கப்படுவதென்பது சாத்தியமில்லாத விஷயம். அவ்வாறே எல்லா அம்சங்களும் பொருந்தியிருந்தாலுங்கூட இந்த மாறுதல் ஏற்படப் பல வருஷங்கள் பிடிக்கும்."

தற்போதைய இழிவான நிலைமைக்கு யார் பொறுப்பாளி என நான் கேட்கிறேன். இதற்குக் காரணம் நம்

இராணுவ வகுப்பு மக்களுக்குத் திறமையில்லாமையா? அல்லது இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதில் ஏற்படும் தாமதமா? நம் இராணுவ வகுப்பினரான மக்களுக்கு இராணுவத் திறமை பூரணமாயிருப்பதை எவரும் மறுக்க முடியாது. இராணுவப் பயிற்சியளிக்கப்படுவது தாமதமாயிருக்கலாம். இந்த விஷயத்தில் தீர்ப்பு கூற நான் ஒரு இராணுவ நிபுணனல்ல. ஆனால், ஒரு அரசியல் மாணவன் என்ற முறையில் மேலே கூறப்பட்ட வாதம் அர்த்தமில்லாதது என்றுதான் நான் கருதுகிறேன். இந்தியா நிரந்தர அடிமைத்தளையோடு இருக்க வேண்டுமென்பது தான் இதன் அர்த்தம். இதனால், நேஹ்ரு யாதாஸ்தில் கூறப்பட்டிருப்பதுபோல் எல்லைப்புற இராணுவம் ஒரு பாதுகாப்புக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட வேண்டுவது அவசியமாகிறது. இந்தக் கமிட்டி பரஸ்பர உடன்பாட்டின்மூலம் அமைக்கப்பட வேண்டும்.

சைமன் யாதாஸ்து, இந்தியாவின் நில எல்லைப் பிரச்னைக்கு அசாதாரணமான அபார முக்கியாம்சம் அளித்திருப்பது கவனிக்கத் தக்கது இந்தியாவின் கடற்புற நிலைமையை அது மேலெழுந்தவாரியாகக் கவனித்திருக்கிறது. இந்தியா, கடற்புறமாகவும், நிலப்புறமாகவும் ஏற்படக்கூடிய இருவித தாக்குதல்களையும் சமாளித்தாக வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. கடற்புறப் பாதுகாப்பின்மையின் காரணத்தாலேயே இந்தியாவைத் தற்போது ஆண்டுவரும் எஜமானர்கள் கைப்பற்றினரென்பது ஆழ்ந்து கவனிக்க வேண்டிய விஷயம். ஆனால், இன்றைய நாட்களில் ஒரு சுயாட்சி பெற்ற சுதந்தர இந்தியா, தன் நில எல்லைப்புறங்களை விட கரையைப்பற்றியே அதிக அக்கறைகொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு சமஷ்டி சர்க்கார் அமைக்கப்பட்டால் இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு நடுநிலைப் பொதுவான இராணுவத் தரைப்படையையும், கடற்படையையும், அமைக்க முஸ்லிம் சமஷ்டி நாடுகள் மனமுவந்து ஒப்புக்கொள்ளுமென்பதுபற்றி எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. மொகலாய ஆட்சி நடைபெற்ற நாட்களில் இந்தியப் பாதுகாப்புக்கு இவ்வித ஒரு நடுநிலைப் பொது இராணுவமிருந்து வந்திருக்கிறது. அக்பர் மன்னரின் ஆட்சியின்போது இந்திய எல்லை முழுவதும், ஹிந்து தளபதிகளின் கீழிருந்த பெரும் இராணுவங்களால்தான் பாதுகாக்கப்பட்டது. இவ்வாறு ஒரு சமஷ்டி இந்தியாவின் அடிப்படையில் வகுக்கபபடும் நடுநிலைப் பொதுவான இந்திய இராணுவ அமைப்புத் திட்டம், முஸ்லிம்களின் தேசபக்தியைப் பெருக்கி விடுவதுடன், அந்நிய நாட்டுப் படையெடுப்பு ஏதேனும் ஏற்பட்டால் இந்திய முஸ்லிம்கள் தங்கள் நாட்டின் எல்லைகளுக்கப்பாலுள்ள முஸ்லிம்களுடன் சேர்ந்துவிடுவரோ என்ற சந்தேகத்தையும் போக்கி விடுமென்பது நிச்சயம்.

இந்தியாவின் இரண்டு முக்கியமான பிரச்னைகளை இந்திய முஸ்லிம்கள் எவ்வாறு நோக்க வேண்டுமென்பதை சுருக்கமாக விளக்கி விட்டேனென்று நான் கருதுகிறேன். வகுப்புப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் ஏற்படக்கூடிய வகையில் இந்தியா மாற்றி வகுக்கப்பட வேண்டுமென்பது தான் இந்திய முஸ்லிம்களின் பிரதான கோரிக்கையாகும். வகுப்புப் பிரச்னைக்குப் பிரதேசப் பரிகாரமாகிய முஸ்லிம்களின் கோரிக்கை புறக்கணிக்கப்படுமாயின், அகில இந்திய முஸ்லிம் லீக், அகில இந்திய முஸ்லிம் மகாநாடு ஆகிய ஸ்தாபனங்களால் அடிக்கடி வற்

புறக்கப்பட்டு வரும் முஸ்லிம் கோரிக்கைகளை சாத்திய மானவரை அழுத்தமாக நான் ஆதரிக்கிறேன். தனித் தொகுதி தேர்தல்முறை மூலம் பஞ்சாபிலும், வங்காளத் திலும் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பெரும்பான்மை உரிமைகளை மாற்றக்கூடிய-அல்லது, எந்த மத்திய சட்ட சபையிலும் தங்களுக்கு 33 சத விகிதப் பிரதிநிதித்து வத்தை உறுதியளிக்கத்தவறிய—எந்த அரசியல் மாறுதலை யும் இந்திய முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ள முடியாது. முஸ்லிம் அரசி யல் தலைவர்கள் இதுகாறும் இரண்டு படுகுழிகளில் விழுந்து விட்டார்கள்.

மாற்று யோசனைகள்

முதலாவது: லக்னோ ஒப்பந்தம். இந்திய தேசீயம் என்ற போலிப் போர்வையில் இது ஏற்பட்டது. இந்தியாவில் முஸ்லிம்கள் எந்த அரசியல் அதிகாரத்தையும் பெற முடி யாமல் தடைப்படுத்தி விட்டதும் இதுதான். இரண்டா வது: பஞ்சாப கிராமிய வாழ்வுக்கு இஸ்லாமியக் கட்டுப் பாட்டைப் பலி கொடுத்தது. இதனால் பஞ்சாப் முஸ்லிம் கள் மிகச் சிறுபான்மை அந்தஸ்தை அடைந்து விட் டனர். லக்னோ ஒப்பந்தத்தையும், கிராமிய வாழ்வு யோசனையையும் பலமாகக் கண்டனம் செய்யவேண்டுவது முஸ்லிம் லீக் கடமையாகும்.

பஞ்சாபுக்கும், வங்காளத்திற்கும் பெரும்பான்மை யளிக்கப்படுமாறு சைமன் யாதாஸ்து சிபார்சு செய்யவில்லை. இது முஸ்லிம்களுக்குப் பெரும் அநீதியாகும். இவ்வா றிருப்பது முஸ்லிம்களை லக்னோ ஒப்பந்தத்திற்கு இணங்கி யிருக்கும்படியோ, அல்லது கூட்டுத் தொகுதி தேர்தல் முறைத்திட்டத்தை ஒப்புக் கொள்ளும்படியோ செய்து விடும். சைமன் யாதாஸ்து சம்பந்தமாக இந்திய சர்க்கார்

அனுப்பியுள்ள தகவலில், இந்த யாதாஸ்து வெளியிடப்பட்டது முதல், யாதாஸ்தால் சிபார்சு செய்யப்பட்ட இரண்டுமாற்று யோசனைகளில் ஒன்றைக்கூட முஸ்லிம்கள் விரும்புவதாக அறிவிக்கவில்லையெனக் கூறப்பட்டிருக்கிறது. பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களின் முஸ்லிம்களுக்கு சட்டசபைகளில் அவர்களின் ஜனத்தொகை விகிதாசாரப்படி ஸ்தானங்கள் அளிக்க மறுத்திருப்பது பற்றி அவர்கள் குறைபட்டுக் கொள்வது நியாயமாகவே யிருக்கலாமென்று இந்திய சர்க்கார் தகவல் ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால் சைமன் யாதாஸ்து இழைத்துள்ள தவறை இந்திய சர்க்காரின் தகவல் திருத்துவதற்குத் தவறிவிட்டது. பஞ்சாபைப் பொறுத்தவரையில்—இந்த விஷயம்தான் மிகவும் முக்கியமானது—பஞ்சாப் சர்க்கார் அங்கத்தினர்களால் வகுக்கப்பட்ட திட்டத்தை சைமன் யாதாஸ்து அங்கீகரிக்கிறது. இந்த திட்டம் ஹிந்துக்களையும், சீக்கியர்களையும் ஒன்றுபடுத்தி, முஸ்லிம்கள் இரண்டு பேர்களே பெரும்பான்மையினரா யிருப்பதாயும், மொத்த சட்டசபையில் 49 சதவிகித ஸ்தானங்களிருப்பதாயும் காண்பிக்கிறது. ஆனால், மொத்த சட்டசபையில் ஒரு தெளிவான பெரும்பான்மைக்குக் குறைந்த எதிலும் பஞ்சாப் முஸ்லிம்கள் திருப்தியடைந்து விடமுடியாது. வாக்களிப்பு முறையை விஸ்தரித்து, முஸ்லிம் வாக்காளரின் பலம், முஸ்லிம் பொது மக்களின் ஜனத்தொகையைப் பிரதிபிம்பிப்பதாகச் செய்யப்படும்வரை பெரும்பான்மைச் சமூகங்களுக்குவகுப்புவாரித் தேர்தல்முறை நியாயமானதே என இர்வின் பிரபுவும், அவரது சர்க்காரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். மேலும், ஒரு மாகாண சட்டசபையில் மூன்றிலிருபாகப் பெரும்பான்மையான முஸ்

லிம் அங்கத்தினர்கள் தனிப் பிரதிநிதித்துவ உரிமையை விட்டுக்கொடுக்கும் வரையிலும் இது நியாயமானதுதான் என்று அவர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். முஸ்லிம்களின் குறைகள் நியாயமானதே என ஒப்புக்கொண்டுள்ள இந்திய சர்க்கார், பஞ்சாப், வங்காள மாகாண முஸ்லிம்களுக்கு அரசியல் பூர்வமான பெரும்பான்மை யளிக்கப்படவேண்டு மென சிபார்சு செய்யத் துணிவு கொள்ளாமற் போய்விட்ட தன் காரணம் எனக்குப் புரியவில்லை.

சிந்துவை ஒரு தனிமாகாணமாகச் சிருஷ்டிக்கத்தவறக் கூடியதோ அல்லது வடமேற்கெல்லைப்புற மாகாணத்தை தாழ்ந்த அரசியல் அந்தஸ்துள்ள மாகாணமெனப் பாவிக் கக்கூடியதோ ஆன எத்தகைய அரசியல் மாறுதலையும் இந்திய முஸ்லிம்கள் அங்கீகரிக்க இயலாது. சிந்துப் பிர தேசம் பலுச்சிஸ்தானுடன் இணைக்கப்பெற்று, ஒரு தனி மாகாணமாக ஏன் செய்யப் படக்கூடாதென்பது எனக்கு விளங்கவில்லை. சிந்துப் பிரதேசத்திற்கு பம்பாய் மாகாணத் துடன் எந்தவிஷயத்திலும் பொதுத்தொடர்புங்கிடையாது, வாழ்க்கையிலும், நாகரிகத்திலும் சிந்து மாகாணம் இந்தி யாவைவிட மெஸபொடேமியாவையும், அரேபியாவையுமே அதிகமாக ஒத்திருப்பதாக ராயல் கமிஷன் கோஷ்டியார் கூறுகின்றனர். இந்த தொடர்பை நெடுங் காலத்திற்கு முன்னரே பிரபல முஸ்லிம் பூகோள அறிஞரான மஸ் ஊதி கவனித்து விட்டார். “சிந்துப் பிரதேசம், இஸ்லா மிய அரசாங்கங்களுக்கு வெகு சமீபமாக உள்ள ஒரு நாடு” என்று அவர் கூறியிருக்கிறார். முதலாவது உமய்யது மன் னர் எகிப்தைப்பற்றி விவரிக்கையில், “எகிப்தின் முதுகு ஆப்ரிக்காவின் பக்கமும், அதன் முகம் அரேபியாவின் பக்க மும் இருக்கிறது” என்று கூறியிருக்கிறார். இதே வார்த்

ளைகளில் சிறிய மாறுதலுடன் சிந்து விஷயத்தில் கூறுவது பொருந்தும். சிந்துவின் முதுகுப்புறம் இந்தியா பக்கமும் அதன் முகம் மத்திய ஆசியா பக்கமும் இருக்கிறது. மேலும் இந்தப் பிரதேசத்தின் விவசாயப் பிரச்னைகளையும், இந்தியாவிலேயே இரண்டாவது பெரும் நகரமாக வளர்ந் தோங்கிவரும் காராச்சியின் வளர்ச்சியையும் கவனிக்கு மிடத்து, அதனை பம்பாய் மாகாணத்துடன் சேர்த்தே வைத்திருப்பது விவேகமானதல்ல. பம்பாய் மாகாணம் இன்று நேச பாவனையிலிருக்கலாம்; ஆனல், சீக்கிரமே அது விரோத பாவமாக மாறி விட்டாலும் மாறக் கூடும். பம்பாய்—சிந்து தனியாகப் பிரிக்கப் படுவதற்குப் பொரு ளாதாரக் கஷ்டங்கள் குறுக்கிடுவதாக நமக்குக் கூறப்படு கிறது. இந்த விஷயத்தில் அதிகார பூர்வமான அறிக்கை எதுவும் திட்டமாக வெளிவரவில்லை. இவ்வித கஷ்டங் கள் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் கூட, விடு தலைப் போராட்டத்தில் முன்னேறிவரும் ஒரு மாகாணத் திற்கு இந்திய சர்க்கார் தற்காலிக மாகப் பொருளுதவி ஏன் அளிக்கக் கூடாதென்பதற்கான காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

வடமேற்கெல்லைப்புற மாகாணத்தைப் பொறுத்தவரை மாகாண மக்களுக்கு சீர்திருத்தம் பெறும் உரிமைகளை ராயல் கமிஷன் கோஷ்டியார் மறுத்திருக்கின்றனர். பிர தான கமிஷனரின் அட்டகாச நிர்வாகத்தை மறைப்பதற் காகவே அங்கு சட்டசபை ஏற்பாடு செய்யப் பட்டிருக் கிறது. ஆப்கன் மக்கள், வெடிமருந்து வீட்டிலிருப்பதால் சிகரெட் புகைக்க உரிமையளிக்கப் படக் கூடா தெனக் காரணம் கூறப்படுகிறது. ராயல் கமிஷன் யாதாஸ்து விவா தத்தின் வார்த்தைகள் அலங்காரங்களாகக் காணப்படுகின்

றன. ஆனால், மனதைத் திருப்திப் படுத்தக் கூடிய விஷயங்கள் அதில் ஒன்றுங் காணோம். அரசியல் சீர்திருத்தமென்பது தீயல்ல, ஒரு தீபம். எந்த மனிதனும், அவன் வெடி மருந்து வீட்டிலிருப்பினும் சரி, நிலக்கரிச் சுரங்கத்திலிருப்பினும் சரி, தீபம் ஏற்றிக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறான். ஒவ்வொரு ஆப்கனும், தன் நியாயமான அபிலாஷைகளுக்காக எதையும் சமாளிக்கத் தைரியமும், துணிவும் கொண்டிருக்கிறான். பூரண சுயாட்சி உரிமைக்கான சந்தர்ப்பங்களை மறுக்கக் கூடிய எந்த முயற்சியையும் அவன் எதிர்ப்பானென்று நிச்சயம். இவ்வித மக்களை மன திருப்திக்கொள்ளும்படி செய்வது, இங்கிலாந்து இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலன்களுக்கும் மிகவும் பயன் படக்கூடியதாகும். இந்தியாவில் இதரபகுதிகளுக்குசுயாட்சி இலட்சியம் புகுத்தப் பட்டது முதல், இந்த மாகாணம் மாற்றாந்தாயின் அனுசரணைக்குட்பட்டதாக ஆகிவிட்டது.

இந்திய சர்க்கார் தகவலறிப்பில் வடமேற்கெல்லைப் புறத்திற்கு ஓரளவு சீர்திருத்தம் வழங்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப் பட்டிருப்பதும் அதிருப்திகரமானதே. இந்திய சர்க்கார், ஒருவித சட்ட சபையையும், அரைப்பிரதிநிதித்துவ மந்திரிச் சபையையும் சிபார்சு செய்திருப்பது சைமன் யாதாஸ்தைவிட சற்று முற்போக்கானது தானென்பதில் சந்தேக மில்லை. ஆனால், அது இந்த முக்கியமான முஸ்லிம் மாகாணத்தை இந்தியாவின் இதர மாகாணங்களுடன் சமநிலையில் வைத்துப் பாவிக்கத் தவறி விட்டது. ஆப்கன் மக்கள் இதர மக்களைப் போன்றே ஜனநாயக உரிமைகளைப் பெறத் தகுதி யுடையவர்கள் தானென்பதில் சந்தேகமில்லை.

நான் இப்போது வட்டமேஜை மகாநாடு பற்றிச் சில விஷயங்கள் கூறுவது அவசியமென நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை மகாநாடு எவ்வாறு முடியுமென நான் முற்கூட்டிக் கூற இயலாது. பரஸ்பர நல்லெண்ண மேற்பட்டு, இந்தியாவின் இரு பெரும் சமூகங்களிடையே இருந்துவரும் மன மாறுதல்கள் நீங்கி, இந்திய விடுதலை சமீபிக்கலாமெனப் பொதுவாக நம்பப் படுகிறது. ஆனால்; நிகழ்ச்சிகள் வேறு வகையாக

வட்ட மேஜை
— மகாநாடு —

இருக்கின்றன. லண்டனில் நடைபெற்றுவரும் வகுப்புப் பிரச்னை பேச்சுகள், இந்திய இரு பெரும் சமூகத்தின் வேறுபாட்டை மிக மிகத் தெளிவாக விளக்கிக் காட்டி விட்டன. அவ்வாறிருந்தும் இந்தியப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை யல்ல வென்பதையும், சர்வ தேசப் பிரச்னை என்பதையும் இங்கிலாந்து பிரதமர் அறியமறுத்து விட்டார் "கூட்டுத் தொகுதி தேர்தல் முறைகள் பெரும்பாலும் பிரிட்டிஷ் ஜனநாயகக் கொள்கைக்கு ஏற்றதா யிருப்பதால், தனித்தொகுதி தேர்தல் முறைப் பாதுகாப்பு வேண்டுமெனப் பார்லிமெண்டு சபைக்கு என் சர்க்கார் யோசனை சமர்ப்பிப்பது கஷ்டமாகவே காணப்படுகிறது" என்று பிரிட்டிஷ் பிரதமர் கூறியதாக அறிவிக்கப் பட்டது. பல சமுதாயங்கள் வாழும் ஒரு நாட்டில் பிரிட்டிஷ் ஜனநாயக முறை எவ்வித பயனையும் தராதென்பதை அவர் உணரவில்லை. பார்லிமெண்டு சபைப் பிரதிநிதிகள் இவ்விஷயங்களை யெல்லாம் நுணுக்கமாகக் கூர்ந்தறிந்து, இந்தியாவின் பாதுகாப்புக்குரிய உண்மை அடிப்படை விஷயங்களை அறிவாரென நான் நம்புகிறேன். ஒரே இன இந்தியா என்ற அடிப்படையின் மீதோ, பிரிட்டிஷ் ஜனநாயக இலட்சியங்

களின் படியோ இந்திய அரசியல் வகுக்கப்பட்டால், அது உள் நாட்டுப் போருக்கு இந்தியாவைத் தயாரா யிருக்கு மாறு கூறுவதற் கொப்பாகும். இந்தியாவில் வாழும் பல் வேறு இன மக்களுக்கும், நவீன முறையில் தங்கள் சுதந் தர சுய வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்கன் அளிக்கப்படா திருக்கும் வரையில், நாட்டில் அமைதி என்பதே ஏற்படா தென நான் கருதுகிறேன்.

நான் சர்வதேசப் பிரச்னையெனக் கூறும் இந்தியப் பிரச்னைக்குச் சரியான பரிகாரமொன்றைக் காணவேண்டிய முக்கியாம்சத்தை நமது முஸ்லிம் பிரதிநிதிகள் உணர்ந் திருக்கின்றனர். மத்திய சர்க்கார் பொறுப்புப் பிரச்னை இறுதியாகத் தீர்க்கப்படுவதற்கு முன் வகுப்புப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென முஸ்லிம்கள் கோரு வது நியாயமே. வகுப்புவாதம் என் பது வெறும் பிரசாரத்திற்காக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு வார்த்தை. பிரிட்டிஷ் பிரதமர் ஜனநாயகமெனக் கூறிக் கொள்ளும் கொள்கைகளுக்கும், இந்தியாவில் உண்மை யாக இல்லாத ஒரு விஷயத்தை இருக்கிறதென இங்கி லாந்து மக்களை நம்பும்படி செய்யவும் சாதகமாக இந்த வார்த்தை பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. பெரிய மகத் தான நலன்களெல்லாம் அபாய நிலையிலிருக்கின்றன. நாம் இந்நாட்டில் 7 கோடி (இப்பொது 10 கோடி) யாக வசிக்கி றோம். இந்தியாவின் வேறெந்த மக்களுமில்லாத விதத்தில் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். இந்தியாவில் வசிக்கும் மக் களில் ஒரு சமுதாயம் எனக் கூறக்கூடிய அந்தஸ்து இந்திய முஸ்லிம்களுக்குமட்டுமே உள்ளதென்பதில் சந்தேகமில்லை. ஹிந்துக்கள், நம்மைக்காட்டிலும் அநேக துறைகளில் முன் னேற்றமடைந்திருப்பினும், ஒரு சமுதாயமென்பதற் கவ

சியமாக இருப்பதும், இஸ்லாம் மதம் உங்களுக்குப் பரிசாக அளித்திருப்பதுமான ஒருமைப் பாட்டை அடைய இயலவில்லை. ஹிந்துக்கள் ஒரு சமுதாயமாகிவிட ஆவற்படுகின்றனரென்பதில் சந்தேகமில்லை. ஆனால், சமுதாயமாக மாறுவதென்பது பெருங் கஷ்டமான காரியமாகும். ஹிந்து இந்தியா ஒரு சமுதாயமாக மாறவேண்டுமானால், அதன் சமூக அமைப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்பட வேண்டுவதவசியம். துருக்கியும், இதர முஸ்லிம் நாடுகளும் தேசியத் துறையில், அதாவது பிரதேசக் கட்டுப்பாட்டு வகையில், முன்னேறி வருவதாகக் கூறப்படும் கூற்றில் முஸ்லிம் தலைவர்களும், அரசியல் வாதிகளும் ஏமாந்துவிடக் கூடாது. இந்திய முஸ்லிம்களின் நிலைமை வேறு வகையானது. இந்தியாவுக்கு அப்பாற்பட்ட இஸ்லாமிய நாடுகளெல்லாம் முழுவதும் முஸ்லிம் பொது மக்கள் வசிக்கும் நாடுகளாகும். குர்ஆனின் ஆயத்துகளின்படி அங்குள்ள சிறுபான்மையினரெல்லாம் "வேத மக்கள்" ஆவர். இந்த 'வேதமக்களு'க்கும், முஸ்லிம்களுக்குமிடையே சமூகத் தடைகள் எதுவுங்கிடையாது. ஒரு யூதரோ, அல்லது ஒரு ஜோரோஸ்திரியரோ ஒரு முஸ்லிமின் உணவைத் தொட்டுவிட்டால் தீட்டாகிவிடாது. 'வேத மக்களு'டன் கலப்பு மணம் செய்துகொள்ளவும் இஸ்லாத்தின் சட்டம் அனுமதியளிக்கிறது. இஸ்லாம் மதம், மானிடவர்க்கத்தாரையெல்லாம் "சேரவாரும ஜெகத்தீரே" என்று ஒன்று படுத்துவதற்காக எடுத்துக்கொண்டுள்ள முதல் நடவடிக்கை; உலகில் ஒரே இலட்சியமுடையவர்களை யெல்லாம் ஒன்றுபட்டு நிற்க முன் வருமாறு அழைத்திருப்பதுதான். "ஓ, வேதநூல்கொண்ட மக்களே! வாருங்கள்; நம்மனைவருக்கும் பொதுவாயுள்ள 'வார்த்தை' (ஆண்டவனின்

ஒற்றுமை)யின மீது ஒன்றுபடுவோம்.'' இஸ்லாம், கிறிஸ் துவ மத யுத்தங்களும், மற்றும் ஐரோப்பிய யுத்தங்களும் இந்த வார்த்தைகளை இஸ்லாமிய உலகில் இழிவாகப் பிரயோகிக்கப்பட அனுமதிக்கவில்லை. இன்று இதே வார்த்தை இஸ்லாமிய நாடுகளில் முஸ்லிம் தேசியம் என்ற உருவத்தில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

டில்லியில் நாம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் காணப்படும் நமது கோரிக்கைகளை மகாநாட்டின் முஸ்லி மல்லாத பிரதிநிதிகளை அங்கீகரிக்குமாறு செய்வதுதான் நமது பிரதிநிதிகளின் வெற்றிக்குரிய சோதனையாகும். இந் தக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டால், சமூகத்திற்கு முக்கியமான பிரச்னையொன்று தோன்றிவிடும். இந்திய முஸ்லிம்களின் சுதந்தரச் செயலுக்கான சந்தர்ப்பம் அப் போது ஏற்பட்டுவிடும். நீங்கள் உங்கள் இலட்சியங்களை யும், அபிலாஷைகளையும் தீவிரமாக மதித்தால், நீங்கள் இவ்வித செயலுக்குத் தயாராக இருக்கவேண்டும். நம் தலைவர்கள், அரசியல் துறையில் பெரும் வேலைகள் செய் திருக்கின்றனர். இந்தியாவிலும், இந்தியாவுக்கு வெளியி லும் உள்ள மக்களின் கதிமோட்சத்தை இப்போது உரு வாக்கிவரும் சக்திகளை நாம் உணரும்படி அவர்கள் செய்து விட்டனர். ஆனால், தலைவர்களின் வேலைகள், சமீபத்தில் ஏற்படவிருக்கும் நிலைமைக்கேற்ற செயலில் இறங்க நம் மைத் தயார்படுத்தி யிருக்கிறதா எனக் கேட்கிறேன். நான் தெளிவாக கூறிவிடுகிறேன். இந்த சமயத்தில் இந்திய முஸ்லிம்கள் இரண்டுவித தீச்செயல்களால் கஷ்டப்படுகின் றனர். முதலாவது நமக்குப்போதுமான தலைவர்கள் இல்லை. சர் மால்காம் ஹெய்லீ, இர்வின் பிரபு ஆகிய இருவரும் அலிகர் சர்வ கலாசாலையில் பேசுகையில் நம்

சமூகம் தலைவர்களை உற்பத்தி செய்யத்தவறி விட்டதெனக் கூறியிருக்கின்றனர். இது மிகவும் நியாயமே. நான் தலைவர்கள் எனக் குறிப்பிடுவதன் கருத்து இதுதான். இஸ்லாத்தின் இலட்சியம், உணர்ச்சி முதலியவைகளைப் பூரணமாக உணர்ந்து, அத்துடன் நவீன சரித்திரத்துறையில் ஆழ்ந்த ஞானம் பெற்றிருப்பவர்களையே நான் தலைவர்கள் எனக் குறிப்பிடுகிறேன். இத்தகையவர்கள்தான் உண்மையில் மக்களை இயக்கும் சக்திகளாவர். இவர்கள் ஆண்டவனின் அருட்கொடையாக அருளப்பட்டவர்களேயன்றி, நம்பிக்கைக்கு ஏற்ப செய்யப்பட முடியாதவர்களாவர். இரண்டாவதாக முஸ்லிம்கள்—ஆம், இந்திய முஸ்லிம்கள்தான்—அனுபவிக்கும் தீங்கு என்னவெனில், சமூகம், தனது கட்டுப்பாட்டை லேசாகத் தளர்த்திக் கொண்டே செல்வதுதான். இதனால் தனிப்பட்ட நபர்களும், தனிப்பட்ட கூட்டத்தினரும் சமூகப் பொதுச்செயல்களையும் காரியங்களையும் கவனியாமல், தங்கள் தங்கள் சொந்த வாழ்க்கைப் பாதையில் இறங்கி விடுகின்றனர். நாம் பல நூற்றாண்டுகளாக மத வட்டத்தில் என்ன செய்துகொண்டிருந்தோமோ, அதையே இப்போது அரசியல் வட்டத்திலும் செய்து கொண்டிருக்கிறோம். மதத்தில் காணப்படும் இன வேற்றுமைகள், நம் கட்டுப் பாட்டிற்குப் பிரமாதமான இடையூறை ஏற்படுத்தி விடவில்லை. ஒரு மக்கள் என்ற நமது அமைப்பின் இலட்சியத்தில் நாம் ஊன்றி நிற்பதற்காகவேதான் இந்த அற்ப வேற்றுமைகள் பயன் படுகின்றன. மேலும் இவைகளால் எவரும் இஸ்லாத்தின் பொது வாழ்விலிருந்து புரட்சி செய்து வெளியேறி விடுவதென்பதும் அசாத்தியமே. ஆனால், நம் வாழ்வின் நலன்களுக்குக் கட்டுப்பாடான செயல்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அரசியல் செயலில்

மாறுவது பெரும் அபாயகரமாக இருக்கலாம். இவ்வாறிருக்கையில் நான் மேற் கூறப்பட்ட இருவித தீங்குகளையும் களைவது எங்ஙனம்? முதல் தீங்கிற்கான சிகிச்சை நம் வசமில்லை. இரண்டாவது தீங்கைப் பொறுத்தவரை நாம் ஏதேனுமொரு சிகிச்சை முறையைக் கண்டுபிடிப்பது சாத்தியமே. இந்த விஷயத்தில் என் வசம் திடமான அபிப்பிராயங்களும், யோசனைகளும் இருக்கின்றன. ஆனால், சரியான சந்தர்ப்பம் வரும் வரையில், அவைகளை வெளியிடுவதை ஒத்தி வைப்பது அவசியமென நான் கருதுகிறேன். இத்தகைய ஒரு சந்தர்ப்பம் நேரிட்டால் முஸ்லிம்களனைவரும் ஒன்று கூட வேண்டும். ஏன்? வெறும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவல்ல; முஸ்லிம்களின் செயல்களை நிர்ணயித்துக் கொண்டு, இறுதி கதி மோட்சத்தையடைவதற்கான பாதையைக் காண்பிப்பதற்காகத்தான். என்னுடைய இந்தப் பிரசங்கத்தில் ஒரு உபசாந்தியாகவே இதைக் கூறியிருக்கிறேன. நீங்கள் இதனை மனதில் பதிய வைத்துக் கொண்டு, காலக் கிரமத்தில் அதைப் பற்றிச் சிந்தனை செய்ய வேண்டுமென்பதே என் விருப்பம்.

கனவான்களே, நான் முடித்து விட்டேன். கடைசியாக, இந்திய சரித்திரத்தின் தற்போதைய நெருக்கடியான கட்டத்தில், உங்கள் சமூக நன்மையை முன்னிட்டும் நீங்களனைவரும் பூரண கட்டுப்பாடாகவும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டுவ தவசியமென நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தியாவின் அரசியல் அடிமைத்தனம், ஆசியா முழுமைக்கும் வறுமையின் தளிராக விளங்கி வந்தது; இப்போதும் விளங்கி வருகிறது; கீழ்த்திசையின் மனோவேக உணர்ச்சியையே அது நாசப்

படுத்தி விட்டது. ஒரு கீழ்த்திசையை மகத்தான, புகழ் வாய்ந்த கலைக் களஞ்சியமாகச் செய்த பேச்சுரிமையை இந்த அடிமைத்தனம் பறித்து விட்டது. நம் வாழ்வை நடத்தி, மரித்தாக வேண்டிய இந்தியாவுக்கு நாம் தொண்டாற்றக் கடமைப்பட்டுள்ளோம். ஆசியாவுக்கும், குறிப்பாக முஸ்லிம் ஆசியாவுக்கும் நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஒரே நாட்டில் 7 கோடி மக்களாக (இப்போது 10 கோடி) வாழ்ந்திருப்பது, முஸ்லிம்களனைத்தும் ஒன்று சேர்க்கப் படுவதை விட இஸ்லாத்திற்கு அதிகமான பாக்கியமாகும். ஆதலால், நாம் முஸ்லிம்களின் நோக்கத்துடன் மட்டுமின்றி, இந்திய முஸ்லிம் என்ற முறையிலும் இந்தியப் பிரச்னையை சீர் தூக்கிப் பார்க்கக் கடமைப், பட்டுள்ளோம். ஒரு திடமான இலட்சியத்தில் கட்டுப்பாடான விஸ்வாசமும், விருப்பமும் வைக்காமல் நாம் ஆசியாவின் பாலும், இந்தியாவின் பாலும் நமக்குள்ள கடமைகளை விஸ்வாச பூர்வமாக நிறைவேற்றி வைக்க முடியாது. இந்தியாவின் இதர அரசியல் இனங்களுடன் நீங்களும் ஓர் அரசியல் இனமாக இருக்க வேண்டுமானல், உங்கள் சொந்த நலன்களை முன்னிட்டு, இவ்வித ஆயுதங்கள் உங்களுக்கு அவசியம் இருந்தே யாக வேண்டும். ஏற்கெனவே நாம் இருந்து வரும் சிதைந்த நிலையானது சமூக வாழ்விற் கவசிமான அரசியல் பிரச்னைகளை குழப்பி விட்டிருக்கிறது. பரஸ்பர வகுப்பு ஒற்றுமை ஏற்படுமென்ற நம்பிக்கை எனக்கில்லாமல் போய் விடவில்லை. ஆனல், சமீப காலத்தில் நமது தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க சுதந்தர செயல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் நேரிடலா மென்பதை நான் மறைக்க விரும்பவில்லை. இவ்வித நெருக்கடியான நிலைமை

யைச் சமாளிப்பதற்காக அரசியல் சுதந்தர செயல் முறைகளைக் கடைப்பிடிக்க நான் மேற் கூறியவாறு ஒரே திட இலட்சியத்தில் கட்டுப்பாடான விஸ்வாசமும், ஆழ்ந்த விருப்பமு முள்ள மக்களுக்குத்தான் சாத்தியமாகும், இத்தகைய கட்டுப்பாடான ஐக்கிய விருப்பத்தை ஏற்படுத்துவது உங்களுக்குச் சாத்தியமா? ஆம்; சாத்தியந்தான். பிரிவு நலன்களை உதறித் தள்ளுங்கள்; சொந்த அபிலாஷைகளை அடித்து விரட்டுங்கள்; வீறிட்டெழுங்கள். உங்கள் இலட்சியங்களை மனதில் வைத்து உங்களுடைய தனிப்பட்ட செயல்களுடையவும், கூட்டுச் செயல்களுடையவும் மதிப்பை உறுதிப் படுத்த பயிற்சி செய்து கொள்ளுங்கள். சொல்லிலிருந்து உணர்ச்சிக்கு மாறுங்கள். சொல் என்பது அனுமானம்; உணர்ச்சி என்பது தீபம், வாழ்வு, ஐக்கியம் எல்லாம். நான் முஸ்லிம்களின் சரித்திரத்திலிருந்து ஒரே ஒரு படிப்பினையைத் கற்றிருக்கிறேன். முஸ்லிம்களின் சரித்திரத்தில் நெருக்கடியான சமயங்களில் இஸ்லாம் தான் முஸ்லிம்களைக் காப்பாற்றியிருக்கிறதே தவிர, முஸ்லிம்கள் இஸ்லாத்தைக் காப்பாற்றி விடவில்லை. இன்று நீங்கள் இஸ்லாத்தின் பக்கல் உங்கள் கண்ணோட்டத்தைத் திருப்பி, அதில் காணப்படும் முக்கியத்துவ இலட்சியங்களிலிருந்து ஏதேனும் உணர்ந்து கொள்ள விரும்பினால் சிதறுண்டு இருக்கும் உங்கள் சக்திகளை ஒன்று படுத்திபவர்களாவீர்கள்; இழந்து போன உங்கள் சக்தியைப் பெற்றவர்களாவீர்கள்; இதனால் படுமோசமாகப் போய் விடுவதினின்றும் உங்களைத் தற்காத்துக் கொள்ளுகிறீர்கள். மானிடவர்க்கத்தின் தோற்றமும், மறு பிறவியும் தனிப்பட்ட நபரின் தோற்றத்தையும், மறு பிறவியையும் ஒத்திருப்பதாகப் பரிசுத்த குர்ஆன்ஷரீப்

நமக்குப் போதிக்கிறது. நீங்கள் தான் இந்த இலட்சியத்தை முதன் முதலாக அனுஷ்டித்துக் காட்டி, ஒரு தனிப்பட்டவரைப் போல் தாராள வாழ்வில் இறங்க ஏன் முற்படக் கூடாது? இந்தியாவில் வெளித் தோற்றத்தில் காணப் படுவதைப் போன்ற உண்மை விஷயங்களில்லை யென நான் கூறுகையில் எவரையும் புண்படுத்த வேண்டு மென்ற நோக்கம் எனக்கில்லை. நீங்கள் ஒரு கட்டுப் பாடான இலட்சியத்தை ஏற்படுத்தி உறுதிப் பட்டு விட் டால் தான் உங்களுக்கு இதன் கருத்து உதயமாகும். குர் ஆன் ஷரீப் கூறுவதைக் கவனியுங்கள்:

> "உங்களையே பற்றி உறுதியாக இருங்கள்; நீங்கள் நேர் வழியில் நடத்தப் படுவீர்களானால் தவறிழைக்கும் எவரும் உங்களுக்குத் தீங்கு செய்ய முடியாது." (அல்குர்ஆன், 5: 104)

(முற்றும்)